உ

ஓம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சற்குருவே நம

ஞானப்பிரகாசதீபிகை.

பிரம்மாண்டபுவன சரீரகடாதி பிரபஞ்சோதய

சிருஷ்டிக்கிரம அத்தியாரோப அபவாத

விளக்கப்படத்தின் சாராமசங்களைத்

தெளிவாகச்சொல்ல

பஞ்சீகரணப்படமும்

அதை ஆடும்

சதுர்வேத மஹாவாக்கிய தத்துவக்கட்டளையும்

இஃது

தத்துவவிஜாநு போகசார பிரம்மசபையார்

கேட்டுக்கொண்டபடி

மூலவர்க்கம் கயிலாயவர்க்கம் ஆநந்தவர்க்கம்

இம்மூன்றுமொருதிருமேனியாகக்கொண்ட

தியாகீசசுவாமிகள்

சிஷ்யராகிய

ஸ்ரீகயிலாசபதிமடம்

அகிலாண்டஸ்வரூபாநந்தர்

வேதமுதலிய பலசாஸ்திரங்களைக்கொண்டு

ஸ்தி... பெரியவாள்முன்னிலையில்

பரிசோதிப்பித்து,

ம-ா-ா-ஸ்ரீ கொண்ணூர்- மாணிக்கமுதலியார்

" காணியம்பாக்கம்-முருகேசமுதலியார்

இவர்கள் கேட்டுக்கொண்டபடி

சென்னை பாபுலர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

...ர்வதாரிஹூ ஆனிமீ

...gistered, Copyright.

5019
4155

விளம்பரம்.

இந்தப்பட மிரண்டையும் இந்த சாஸ்திரத்தையும் இந்த கிரந்தஞ் செய்தவருடைய அநுமதியில்லாமல் அச்சிடக் கூடாது. அச்சிடுவார்களாகில் கெவரன்மெண்டு சட்டப்படி நஷ்டத்துக் குள்ளாவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

பிரபஞ்சத்திற்கோர்கடவுளுண்டென்கிற நிச்சயத்தை வேதமுதலாகியசுருதிகளினால் சித்தாந்தப்படுத்தல்.

பிரமாண்டபுவன சரீரகடாதி பிரபஞ்சோதய சிருஷ்டிக்கிரம
அத்தியாரோப அபவாதவிளக்கப்படத்துக்கு

ஞானப்பிரகாச தீபிகை.

ஜெகத்கர்த்தானுபவங்கூறல்.

பிரகிருதி பரமாணு காலகர்ம்மாதிகளே ஜெகத்கர்த்தா, ஈஸ்வரன் அல்லவென்பையானால், பிரகிருதி முதலான வெல்லாஞ் சடரூபமாகையால் சைதன்னியாதிஷ்டானமில்லாமல் தாமே ஜகம் நிர்மிக்கமாட்டாதென்பது சத்தியம். ஆனால் சேதனனான ஜீவனே ஜெகத்கர்த்தனென்றால் அவனுக்குக் கிஞ்சிஞ்ஞத்துவாதிஷ்டானபாதந்திரத்துவஅநீஸ்வரத்துவாதிதோஷமுண்டாகையால்அவன் ஜகத்துக்குக் கர்த்தனாகவேமாட்டான். பாரிசேஷநியாயத்தால் ஈஸ்வரனே கர்த்தனென்று நிச்சயிக்கப்படும், ஜெகத்ரூபம் மஹாகாரியமாகையால், ரதத்தைச்செய்வாரைப்போல வெகு கர்த்தத்துவமுண்டென்பையானால், அது ரதசாரதியென்னும் ஒருவன் சூஸ்திரத்தாலாவதல்லது மற்றவர்களாலல்ல. அவரவர்கள் அபிமானத்தால் தங்களுக்குத்தாங்களே ரக்ஷித்துக்[illegible]காரியமானால் அநேக கர்த்தவ்வியத்தால் ஒருகாரியமுமாகாது. ஆகையால் ஜகத்துக்கு ஈஸ்வரனொருவனே கர்த்தனாகவேண்டும். அந்த ஒருவனாகிய ஈஸ்வரனுக்கே எக்காலத்திலும் எத்தேசத்திலும் காரியோதயமுண்டாகையால், நித்தியத்துவமும் வியாபகத்துவமும் சகலகாரியமும் அறிவதற்கும் செய்வதற்கும் சமர்த்தனாகையால் சர்வஞ்ஞத்துவமும் சர்வசத்தித்துவமும் காலமானது தான் அமிர்தமயப் பல்லவ குசுமாதிகளை யுண்டாக்குமாபோலச் சகல காரியோற்பாதகனாகையால் நிஷ்களத்துவமும் சர்வாத்மாக்களிருதயத்திலும் அந்தரியாமியாகிப் புறம்பே சுருதி ஸ்மிருதிரூபமான ஆக்கினையால் நியாமகனாகையால், சர்வபிரேரகத்துவமும் குலாலாதி கர்த்ருத்துவத்தால் அந்நியமான கடபடாதியை. [illegible]பிக்கிறதெப்படியோ அப்படி அந்நிய சரீராதியை நியமிக்கையாலும் விசு

வமெல்லாம் விஸ்வேஸ்வ ... ஜதென்று சுருதியுண்டாகையாலு
சர்வாத்மகத்துவமும் தனக் ... ர்த்தரின்றி அத்துவிதீயனாகையா
சர்வசுதந்திரத்துவமும் ஆத்ம ... ந கர்ம்மத்துக்கேதுவான சுகது
கங்கொடுக்கையால் ராகத் ... த்துவமும் தன்னால் சிருஷ்டிய
ன வியோமாதி விஸ்வத்ன ... பிரகாரமாகச் சிருஷ்டிசெய்ய தற்கு
பிரதிசமர்த்தரில்லாமையால் சர்வேஸ்வரத்துவமும் உண்டென்பது நிச்

ஜெகத்காரணங்கூறல்.

பிரதமத்திற் சட்சுராதி பாகியேந்திரிய கோசரமாய்க்காணுஞ் ச
க்கு வெவ்வேறு புத்திகுண அவயவாகாரமாகையால், கடம்போலக்
மாய்க் குலாலனைப்போல நிமித்தியகாரணனான ஈஸ்வரனால் சக்கரத
போலப் புண்ணியாபுண்ணியமான சககாரி காரணத்தால், மிருத்திகை
லைப் பிந்து மாயையான சுத்தாசுத்த மாயாவுபாதானகாரணத்தாற் க
மன சுகதுக்காதியனேக விவகாரபேதங்களோடு பின்னரான ஆத்மா
போக மோக்ஷார்த்தமாய்ச் சனித்தனவென்றறிக. அன்றியும்,—

மஹாரிஷிகள் வேதத்தை அநுசரித்து கடவுள் லட்சணத்தை விசாரித்த சித்தாந்தப்படி சற்று விவகரித்தல்.

ஈஸ்வரன் பிரபுத்வசாமர்த்திய குணத்திரயம்—கர்த்துருத்துவம், அக
த்துருத்துவம், அந்நியதாகர்த்துருத்துவம் என மூன்றும்.

ஈஸ்வரன் பஞ்சகிருத்தியம்.

சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபாவம், அநுக்கிரஹமென பஞ்ச
தியமுண்டு. ஆனால் நிர்விகாரத்துவிதீயபிரம்மசொரூபனான ஈஸ்வரனிடத்
ல் சிருஷ்டியாதி வியாபார வெகு கிர்த்தியங்கள் எந்தப்பிரகாரத்தாலாமெ
ன்றால், எப்படி சூரியன் இச்சா எத்தனமில்லாமல் தன் வருஷகிரணத்த
ல் விருஷ்டிரூபமான ஜலத்தைவிட்டுப் பின்னந்த சலத்திற்றானே பிரதிபி
பித்து மேகாதிகளால் அதனைமறைத்து இமகிரணத்தால் அதனைத்தடுத்து உ
ஷ்ணகிரணத்தால் அந்த ஜலத்தைத் திரும்ப வாங்கிக்கொண்டு அந்தப் பி
திபிம்பத்தைத் தன்னுடன் கூட்டிக்கொள்ளுமோ (அப்படியே ஈஸ்வரனு
தன் மாயாசத்தியுடனேகூடி) சித்துப்பிரதானத்தால் நிமித்தியகாரணனு
ம் ஜடப்பிரதானத்தால் உபாதானகாரணமாயும் புத்தியாதிகாரியங்களை
சிருஷ்டித்து ஜீவரூபத்தாற்றானே பிரவேசித்துக் கர்மத்தால் போக்துருவெ
ன்றும் நியாமகசத்தியால் போக்கிய போக்துருக்களென்றும் நியமித்து ருத்
திரரூபத்தால் அந்தக்காரியரூபங்களை சங்கரித்துப் பின் சுருதி ரூரூபத்தா
அந்தச்சீவனை தன்னுடனே ஐக்கியஞ் செய்துக்கொள்ளுவன். அன்றியும்

மாயாவிர்த்தித்திரயம்.

விசுத்த சத்துவரூபமாயை, மலினசத்துவரூபமவித்தை, தமப்பிரதா
ரூபப்பிரகிருதியென மாயாவிர்த்தித்திரயமுண்டு. அவற்றுள் (மாயை) சு

திலயங்களிலே பிரம்மத்துடனே அக்கபடி பாசமாயிருந்த பின் சாக்கிரசிருஷ்டியில் கிஞ்சித்து பேதாவஸ்தை வக்கிர அந்தப் பிரம்ம சைதன்னியந் தன்னிடத்திற் பிரதிபலித்துத் தன் நிர்மலனீ வஞ்சுத்தவாதிகுண விசிஷ்ட சைதன்னியனுன ஈஸ்வரனென்றும் பிரீதார்த்தமென்றும் பிரகவிதுருவென்றும் கொள்வதினுல் அந்த ஈஸ்வரனுக்கு உபாதியாகி அ... க காரணியென்றும் சொல்லப்படும். அவித்தை தன்னிடத்திற் பிரதிபி...த்து நாநாத்வத்தால் போக்துருக்களான பசுபதார்த்த ஜீவருக்கு உபா...ாகி மோககாரணியென்றுஞ் சொல்லப்படும். பிரகிருதி போக்கியாத்மக...வத்தால் பாசபதார்த்தமென்றும் குணத்திரய சாமான்யாவஸ்தையால் ...த அவித்தையிற் பிரதிபிம்பித்த ஜீவருடைய போகார்த்தமாய்ச் சகலகர...முமாகவேண்டி ஈஸ்வரன் சந்நிதான லட்சண வீக்ஷணமாத்திரத்தால் விரிந்து முதற் காலதத்துவமுண்டாய் மேற்காலவசத்தாற் பரிணமித்து மஹதத்துவமாம். அந்த மஹதத்துவமானது விதைத்துத் தண்ணீர்வார்க்க அங்குரமுமாகாமல் பீஜசியாயமுங்காட்டாமல் உற்பின்னவஸ்தையைய டைந்த பீஜம்போலக் காரணப்பிரகிருதியுமல்லாமல் காரியகங்காரமுமல் லாமல் மித்தியாக்ஞான நிர்விகற்பசொருபத்தால் மத்தியாவஸ்தையாம், பின்னும் அந்த மஹதத்துவத்திற் குணபேதமாய் மித்தியாக்ஞான சவிகற்ப சொருபமான பிரதமாத்தியாசமென்னப்படுகிற மூலாகங்காரமுற்பத்தியாம். அன்றியும்,—

பிரகிருதிகாரியோதயதுவயம்.

அவை கிரமசிருஷ்டியென்றும்யுகபத் சிருஷ்டியென்று மிரண்டுவகை. அவற்றுள் மூலப்பிரகிருதியில்மஹதத்துவமும்அஹமும்தன்மாத்திர பஞ்சகமென ச் சப்தப்பிரகிருதியுண்டு. அவற்றுள் பஞ்சபூதம் அதிற் பிரம்மாண் டபுவன சரீரகடாதி பிரபஞ்சோதயமே கிரமசிருஷ்டியாம். (விஸ்தரங்க சமுத்திரத்துள் ஏககாலத்தில் மாயாமய நாமரூபப் பிரசாரணையே யுகபத்சிருஷ்டியாம். இந்த இரண்டு பிரகாரமும் சுருதிசித்தமாகையால் அங்கீகாரமாம். அவற்றுள் (அதிரோஹித பிரம்மஸ்வருபமான விகாரமில்லாத ஈஸ்வரனுல்) ஜடப்பிரகிருதியில் காரியோதய மெப்படியென்றுல், இச்சாதிகமில்லாத சூரியனுல் எத்தனுதிகமில்லாத சூரியகாந்தத்தில் அக்கினி ஜொலிக்குமாபோல ஈஸ்வரனுல் பிரகிருதியில் மஹதாதிகாரியோதயத்துக்கு விரோதமில்லை. அன்றியும்,—

சுருதிசாரவஸ்து நிச்சயலட்சணர்த்தங்கூறல்.

விசாரஞானத்தால் வஸ்துநிர்ணயம் பண்ணுவதெப்படியெனில்.

ஷட்லிங்க தாத்பரியங்கொண்டு வேதாந்தவிசாரம்பண்ணின சிரவணபலத்தினுல் வஸ்துநிர்ணயம்பண்ணவேண்டும். அதெப்படியெனில் உபக்கிரமம், உபசங்காரமென்றென்று, அப்பியாசம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உற்பத்தியென்று றுவகைகளாம்.

...ணப்பிரக... ாவதேதெனில்.

அகண்டபரிபூ... தாநந்தபிரம்மத்தினிடத்தில் ரச்சுவிற் சர்ப்... தோன்றினதுபோல, ச... பிரம்மாண்டபிண்டங்களாகிய செகத்துண்... மிற்று. இந்தச் சிருஷ்டிக்குமுன் பிரம்மஞ் சத்தாமாத்திரமாயிருந்ததென்... பிரதிவாதிக்கப்படுவதே உபக்கிரமம்.

உபசங்காரமாவதேதெனில்.

உற்பத்தியான சகலசெகத்தும் அபவாதக்கிரமமா யொடுங்குகை... ல் பிரம்மாண்டபிண்டங்களென்றும் உபாதியிற் கூடஸ்தருக்கும் பிரம்... தக்குமுள்ள வுபாதிகளை யொழித்து ஏகத்துவ அயிக்கியத்தைக் கூறப்... வதே உபசங்காரம்.

அப்பியாசமாவதேதெனில்.

பிரத்தியேகான்மாவாகியநீயே பிரம்மமென்றென்பது பிரகாரமாக... தேசிப்பது. அவ்வுபதேசம் சேதனனைக்கூட்டிச்சொல்வதினாலும் சேதன... க்கே அத்தொய்த ஆத்மதத்துவம் போதிப்பதினாலும் அஃதே அப்பியா...

அபூர்வதையாவதேதெனில்.

அஷ்டப்பிரமாணங்களினுள் உபநிஷத்பிரமாணத்தினாற் பிரத்தியேக... த்மலட்சணத்தை யறியப்படுவ தன்றி மற்றைப்பிரமாணங்களினா லறிய... டாதென்பது அபூர்வதை.

பலமாவதேதெனில்.

ஆத்மஞானிக்கு இந்தத் தேகேந்திரியாதி சகலஜெகத்தும் பிராரத்... முள்ளமட்டு மித்தையாய்த் தோற்றப்படுகின்றது. பிராரத்தநாசத்தில் ச... வாத்மனாய்த்தோற்றாமல் அத்தொய்த சொரூபமாத்திரமாய்ப் பிரகாசிக்... மென்று பிரதிபாதிக்கப்படுகிறதே பலம்.

அர்த்தவாதமாவதேதெனில்.

எந்தவஸ்துவைக்கேட்டமாத்திரத்தில் கேட்கப்படாதவஸ்து கேட்கப்... படுகின்றது. எந்தவஸ்துவை மனனம்பண்ணினமாத்திரத்தில் மனனம் பண்... ணப்படாதவஸ்து மனனம்பண்ணப்படுகின்றது. எந்தவஸ்துவை யறிந்தமா... த்திரத்தில் அறியப்படாதவஸ்து அறியப்படுகின்றது. அதுவே பஞ்சகிருத்... தியங்கட்காதாரபூதமான கர்த்தவ்வியமாய் விளங்குகிறதென்று பிரதிபாதி... க்கப்படுகிறதே அர்த்தவாதம்.

உற்பத்தியாவதேதெனில்.

மிருத்திகையிற்பிறந்த கடகலசாதிகளும் சொர்ணத்திற்பிறந்த கடக... குண்டலாதிகளும், இரும்பிற்பிறந்த கட்கமுதலானதுகளும், காரணத்தையன்... றிப் பிரதக்காய்த்தோற்றினபோதிலும் இந்தக் காரியாதிகளுக்கு உச்சாட்...

மாத்திரமன்றி, வேறே யர்த்தமில்லாதபடியினால் காரணவெதிருத்தமாய் காரியமில்லையென்று பிரதிபாதிக்கப்படுகிறதே உற்பத்தி. அன்றியும் வஸ்துநிச்சயஞ்செய்ய அஷ்டப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்..

அஷ்டப்பிரமாணமாவதேதெனில்.

பிரத்தியட்சம், அநுமானம், உபமானம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், சம்பவம், ஐதீகம் என எட்டுவிதமுண்டு. அவற்றுள்—

பிரத்தியட்சப்பிரமாணமாவதேதெனில்.

பிரத்தியட்சத்தில் சந்தேகப்பிரத்தியட்சம், விபரீதப்பிரத்தியட்சம், யதார்த்தப்பிரத்தியட்சமென்று மூன்றுவிதமாயிருக்கும். அவற்றுள்— கட்டையைக்கண்டு கட்டையோ கள்ளனோவென்று சங்கற்பித்தது சந்தேகப்பிரத்தியட்சம், கள்ளனென்றே-விகற்பித்தது விபரீதப்பிரத்தியட்சம், கட்டையென்றறிந்தது யதார்த்தப் பிரத்தியட்சமென்று சொல்லப்படும்.

இவற்றிற்சொரூப வபிப்பிராயமேதெனில்.

யதார்த்தப்பிரத்தியட்சத்திற் கொருபிரமாணமும் வேண்டுவதின்று, சந்தேக விபரீதபுத்தி நிவிர்த்திக்கே பிரமாணங்கள்வேண்டுவதாகையால், ஆசிரியர் பிரக்ஞானம் பிரம்மமென்று இருக்கு வேதமஹாவாக்கியத்தை யுபதேசிக்க, சீஷனும் அறிவே பிரத்தியட்சத்திற் பிரகாசிக்குமானால் தேகாதி ஜெகத்தெல்லாம் பிரத்தியட்சத்திற் காணப்படுகின்ற தாகையால்,

நான்தேகமோ	அறிவோ என்றதே	சந்தேகப்பிரத்தியட்சம்.
நான்தேகமென்	றுறுதிகொண்டதே	விபரீதப்பிரத்தியட்சம்.
நான்பிரம்மமென்று	நிலைத்ததே	யதார்த்தப்பிரத்தியட்சம்.

இதில், யதார்த்தப் பிரத்தியட்சத்திற்குவேறுபிரமாணங்கள் வேண்டுவதின்று, சந்தேகவிபரீதபுத்தி நிவிர்த்திக்கே அநுமானப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

அநுமானப்பிரமாணமாவதேதெனில்.

அநுமானத்தில், பிரதிக்கினை, ஏது, திருஷ்டாந்தமென மூன்றுவிதமுண்டு.

அவற்றுள்.

பர்வதங்களில்	அக்கினியுண்டென்பதுவே	பிரதிக்கினை.
தூமமுள்ளது	காரணமென்பதே	ஏது.
மகானசத்தில்	அக்கினியுண்டென்பதுவே	திருஷ்டாந்தமாம்.

இ வ ற் று ள்.

பிரதிக்கினையிற் சொரூபவபிப்பிராயமேதெனில்.

பூதங்களைந்து தடித்து பௌதிக சராசரமான வோர்தேகத்தைக் குறித்து இவ்வுடம்பின் கண்ணறிவாகிய பிரம்மமிருக்குமென்று நிச்சயிப்பதே பிரதிக்கினை.

ஏதுவிற் சொரூபவபிப்பிராய மேதெனில்.

தேகேந்திரியாதிகளில் அறிவுநின்று பகுத்தறிகின்றது. தேகேந்திரியாதிகள் சடமாகையால் அறியச்சக்தியில்லை. தேகேந்திரியாதிகளே அறிவதானால் சுழுத்திமூர்ச்சை சமாதியினிடத்தும் அறியவேண்டுமே, அங்ஙனம்அறியாமையினால், இந்திரியங்களில் பகுத்தறி விருப்பதுகொண்டு இவ்வறிவுக்காதாரமான பிரம்மமொன்றிருக்குமென்பதே. ஏது.

திருஷ்டாந்தத்திற்சொரூபவபிப்பிராயமேதெனில்.

பிரத்தியட்சத்தி லெழும்பினபுகையைக்கண்டு, அப்பிரத்தியட்சமான அக்கினியிருக்குமென் றறிந்ததுபோல, தேகேந்திரியாதிகளில் நின்றறியும் அறிவைப்பிரத்தியட்சத்திற்கண்டு யாவராலும் அறியப்படாததாய் அவாங்மனோதீதமான பிரம்மமொன்றிருக்கிறதென்றறிவதே, முக்கியப்பிரயோசனமென்று சொல்லப்படும். பூதபௌதிக சராசரங்களிலும் அறிவாகிய பிரம்மம் இருக்கிறதென் றனுமானத்திற் காணப்பட்டதன்றிப் பிரத்தியட்சத்திற் காணப்படவில்லை; அதென்னலட்சணமுடையதா யிருக்குமோவென்ற வித்திவிர்த்தி பரிகரிக்கவேண்டி உபமானப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

உபமானப்பிரமாணமாவதேதெனில்.

மரைமிருகமென்று ஒன்றுண்டென்று கேள்விப்பட்டவன், அதை அறியவேண்டிய ஆவலினால், அறிந்தபேர்களைவினவ, அவர்களும் ஏகதேசதிருஷ்டாந்தமாய் இந்தப்பசுபோலிருக்குமென்பது உபமானப்பிரமாணம்.

உபமானப்பிரமாணத்திற் சொரூபவபிப்பிராயமேதெனில்.

பிரம்மத்தை அறியவிரும்பினவன் பிரமசொரூப மெப்படி யிருக்குமென்று பெரியோர்களை வணங்கிக்கேட்க, அவர்கள் அதற்கோருவமையினாலும் ஏகதேசதிருஷ்டாந்தத்தினாலும், அறிவிக்கவேண்டியதினால், அந்தப்பிரமம் சச்சிதாநந்த ஸ்வரூபலட்சணமாய் இந்தப் பூதாகாசம்போல வியாபகப்பட்டிருக்குமென்று சொல்ல, ஆகாசலட்சண மென்னவென்று வினவ, நான்குபூதங்களுக்கும் ஆதாரமாய் தானொன்றேடும் பற்றுதிருக்கையாலும் நான்குபூதங்கட்கும் ஆகாசத்தைத்தவிர விருப்பிடமின்மையாலும் நான்கு பூதமு மாகாசமே ஆதாரமாயிருந்துகொண்டு அந்த ஒரு ஆகாசத்தையே கடாகாசம் - மடாகாசம் - ஜலாகாசம் - மஹாகாசமென்று உபாதிவசத்தாற்கண்டு கூறப்பட்டபோதும், அவ்வாகாசத்திற்கு இந்நான்குபூதங்களைக் குறித்துவந்தவுபாதிகள் சற்றுமின்றி, இந்நான்குபூதங்களையுங் கவளீகரித்து, அதிக்கிரமித்து, அவயவமின்றி, நிரவயவமாயிருக்கு மென்னக்கேட்டு அந்தப்பிரம்மமும் இவ்விலட்சணமுடையதாயிருக்குமென்று பரோக்ஷமா அறிந்ததே அபிப்பிராயம். இவ்விலட்சணமுடைய பிரம்மமானது இருக்குமிடந் தெரிய வில்லையேயென்ற புத்திவிருத்தி பரிகரிக்கவேண்டி, ஆகமப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

ஆகமப்பிரமாண மாவதேதெனில்.

சொர்க்கலோகத்தில் அமிர்தமிருக்கிறதென்றுங், காசியில் அரிச்சந்திரன் மயானங்காத்த பரண் காலின்னமிருக்கிறதென்று ஆகமஞ் சொல்லக் கேட்டு, அதில் நிச்சயம்வந்ததே ஆகமப்பிரமாணம்.

ஆகமப்பிரமாணத்திற் சொரூபவபிப்பிராயமேதெனில்

ஏகமேவாத்துவிதம் பிரம்மமென்றசுருதிவாக்கியமும் (ஞானவாசிட்டம் பாட்டு) மேனியிற் புறத்தினுள்ளின் மேலொடு கீழ்திக்கில், வானில்லை கத்திலெங்கும்-யானிலாவிடமுமில்லையென்ற ஸ்மிருதிவாக்கியமும், ஜோதானாயிருந்தாற் பிரமமதாமென்ற வுபநிஷத்வாக்கியமும், பிரமாணமாகச்சொல்ல சுரோத்திரவிஷயமாய்க்கேள்வியுற்று, தன்னிடத்தில் அந்தச்சச்சிதாநந்த சொரூபலட்சணமிருக்கிறதாவென்று விசாரிக்குமளவில், ஜென்மாந்தர கன்மத்தாலிந்தச்சரீரம் இப்போது வந்ததென்றும், இப்போது செய்கிறகன்மத்தினாலினிவருங்காலத்திலும் தேவ, மனுஷ, திரியக்காதி, ஜென்மங்கள் வருமென்றும் அநுபவமிருப்பதால் சத்தாயிற்று - மேலுந்திரிகாலத்தினுமுண்டான சரீராதிகளறிவதும் அவற்றால்வரும் சுகதுக்க மானுவமான ஹானி விர்த்தி லாபாலாபங்களையும் (அறிவாயிருந்தறிகின்றதால்) சித்தாயிற்று-மேலும் சத்துவேறு சித்துவேறென்று பிரித்துப்பார்க்கவிரண்டில்லாமையினால் ஆநந்தமாயிற்று - பின்னும் (அறிவானது) பற்றற்றிருக்கதே கேந்திரியாதி கரணங்கட்கு அவ்வறிவைத்தவிர விருப்பிடமின்மையாலும், அறிவே அவைகட்கு ஆதாரபூதமாயிருப்பதினாலும் இந்ததேகேந்திரியாதிகரணங்கட்கும் (அவ்வறிவே) ஆதாரமாயிருந்துகொண்டு அவ்வறிவுதானே கூடஸ்தனென்றும், ஜீவனென்றும், ஈஸ்வரனென்றும் உபாதிவசத்தினாற் பின்னமாகக்கண்டம்போலும் பரிச்சின்னம்போலுங் காண்பித்தவிடத்திலும் அவ்வறிவாகிய பிரம்மத்திற்குத் தேகேந்திரியாதிகளைக்குறித்து வரும் உபாதிகளின்றித் தேகேந்திரியாதிகரண ஜீவனையுங்கவளீகரித்து அதிக்கிரமித்தும் அவயவமின்றி நிரவயவமாயிருப்பதினாலும் முன்பரோட்சமாய் அறியப்பட்ட சச்சிதாநந்தசொரூபத்தைத் தானென்று அபரோக்ஷமாயறிந்ததே ஆகமப்பிரமாணநிர்ணயம். முற்கூறியமூன்று பிரமாணங்களினாலும் வஸ்துநிச்சயங்கூடாது. இந்தப்படி எப்போதுஞ் சச்சிதாநந்தசுபாவமாயிருக்க முன் பெத்தத் தெசையில் இந்தலட்சணமறியாமற் போனதென்னவென்று வருகிற புத்திவிர்த்தி பரிகரிக்கும்பொருட்டு அருத்தாபத்திப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

அருத்தாபத்திப்பிரமாணமேதெனில்.

திஷ்டவருத்தாபத்தியென்றும் கேள்விபருத்தாபத்தியென்றும் இரண்டுவிதம்- இதில் நித்தியவுபவாசியென்று பேரிட்டிருக்கிற ஒருவனது தேகபீனத்தைக்கண்டு இவன் ஏகாந்தத்திற் புசிப்பனென்றறிகிறதே திருஷ்டவருத்தாபத்தி.

இதிற்சொரூபவபிப்பிராய மேதெனில்.

முன்பெத்தத்தசையிலுஞ் சச்சிதாநந்தமென்றறிந்துந் தன்னைத்தெரிய வொட்டாமல்மறைத்ததே திருஷ்டவருத்தாபத்தி;அதற்குச் சகலபிராணிக ளும் அநுபவமாக நான்பூர்வஜென்மத்திற் செய்யாநின்ற புண்ணியபலத்தி னால் இந்தச்சென்மத்திலும் நல்லகுல கோத்திர வர்ண தேக ரூப ஐஸ்வரிய மனையாதி சம்பத்து முண்டாயிற்றென்றும் இப்போதுசெய்யும் புண்ணியக ன்மத்தினால் இனிமேலுந் தேவமனுஷ்யராய்ப் பிறப்பேனென்றும் முன்ஜ ன்மத்தில்கொடுத்துவைக்கா தபாவியாகையால்இப்போதுந்தரித்திரனாயிரு க்கிறேன்,இந்தச்செனமத்திலும்ஒருவருக்குங்கொடாத தரித்திரனாயிருப்ப னால்வருஞ்சென்மத்திலும் தரித்திரனாய்ப்பிறப்பேனென்றும் இன்னவருஷ ம் இன்னமாசம் இன்னதிதி நட்சத்திரயோக கரணவாரத்திற் பிறந்தேனெ ன்றும் இந்தமட்டுஞ் சவுக்கியத்தைஅநுபவித்தேன் இனிபொல்லாத கஷ்ட ம் வரப்போகிறதென்றும் அந்தகஷ்டத்துக்குமேல் இந்தச்சரீரம்நில்லாதெ ன்றும் இப்படி திரிகாலங்களினு முண்டான ஆனி விர்த்தி சுகதுக்க லாபா லாப மானாவமானங்களையும் அறிந்திருக்கிறதினால் தான் சச்சிதாநந்தலட்ச ணமாயிருந்துந் தெரியவில்லை என்றதே அஞ்ஞானம்-அதுவே அஞ்ஞானமா னால் தெரியவில்லை என்ற அறிவு வரக்கணக்கில்லை; ஈதறிவுதானென்றால் அறியேனென்றும் அஞ்ஞானம் வரக்கணக்கில்லை; ஆகையால் இந்தஅருத்தா பத்தியே சுத்தமானதன்னைத் தெரியவொட்டாது மறைத்த தலைமைபெற்ற அஞ்ஞானம், "நித்தியவுபவாசியென்பவனுடைய சரீரம் இளையாததுகண்டு ரகசியத்திற் பொசிப்பனென்றறிவதுபோல" தான் சச்சிதாநந்தலட்சணமெ ன்பது தோற்றாதிருந்தாலுந் தன்னனுபவத்தினால் ஊன்றி விசாரித்தறிந்தா ல் தானே சச்சிதாநந்த ஸ்வரூபமென்பது அநுபவமாயறிந்திருந்தும் முன் போலவே நாமரூபாதிகள் தோற்றுவதன்றி அந்தலட்சணமிருந்தால் தோற் றாதாவென்று வருகிற புத்திவிர்த்தி பரிகரிக்கும்பொருட்டு கேள்வியருத்தா பத்திப் பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

கேள்வியருத்தாபத்தி யாவதேதெனில்.

ஓர்புருஷன் அடுத்தகிராமத்திலிருக்கும் ஒருவனைக்காணவேண்டிவந்து அவன் மனைவாயில் நின்று இந்தக்கிரகவாசி யிருக்கிறாராவென்று அம்மனை யிலுள்ளவர்களை வினவ,அவனில்லையென்றுசொன்ன அபாவ சப்தங்காதிற் கேட்டும் அவனிறந்துபோகவில்லை அன்னியஸ்தானங்களிற் போயிருப்பா னென்றறிந்துகொண்டதே, கேள்வி அருத்தாபத்தி.

இதிற்சொரூப அபிப்பிராயமே தெனில்.

நாமரூபாத் மகங்களினும் ஆத்மாவில்லை யென்றறிந்த அறிவுமாத்திர மிச்சமா யிருக்கக்கண்டதே இல்லையென்றகேள்வி அருத்தாபத்தியின் பிர யோசனமாம். அவ்வறிவே வடிவாயிருப்ப தாத்மாவானால் அறிபொருளைக் குறித்தே அறிவென்றபேரிருக்கிற தாகையால், அறிபொருளாகிய ஜீவேஸ்

வரஜெகத்தும் அதன்காரணமான மாயையும் அநாதியாயிருக்கவேண்டும். அப்போது அவைகளுக்கு நித்தியத்துவம் வருமேயென்னும் புத்தி விர்த்திபரிகரிக்கும்பொருட்டு அபாவப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

அபாவப்பிரமாணமாவதே தெனில்.

பிராகபாவம் பிரத்தொம்சாபாவம் அந்நியோன்னியாபாவம் அத்தியந்தாபாவம் என நான்குவிதம். இவற்றுள்,

பிராகபாவமாவதே தெனில்.

குலாலன் சக்கரத்திருக்கு மிருத்திகாபிண்டத்தைப்பார்த்து இதிற்கடமில்லையென்றது பிராகபாவம்.

இதிற்சொரூபவபிப்பிராயமே தெனில்.

கடமில்லையென்ற அபாவத்திற்கு அநாதித்துவமனந்த கற்பங்களாயிருந்தும் நித்தியத்துவஞ்சித்திக்கவில்லை. "எப்படியென்றால் குலாலன்சக்கரத்தைச்சுற்றி மிருத்திகாபிண்டத்திற் கைவைத்தபோது முன்னில்லாதகடம் உற்பத்தியாயிற்று ஆதலால் முன்னில்லையென்ற அபாவத்திற் கநாதித்துவமிருந்தும் அநித்தியத்து வஞ்சித்தித்தது அதுபோல" மாயையும் அதன்காரியமான ஜீவேஸ்வரஜகத்தும் அநாதித்துவமென்றுசிறிது சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருந்தாலும் விசாரஞானமான விருத்திஞானத்தினாற் றகிக்கப்பட்டு அநித்தியமாய்விடுமென்பதே பிராகபாவப்பிரயோசனமாயிற்று. விர்த்தியிற் பிரதிபலிக்கும் விர்த்திஞானத்தினாற் றகிக்கப்பட்ட மாயையும் அதன்காரியமான ஜீவேஸ்வர ஜகத்தும் விர்த்திஞான மொழிந்தவிடத்து முன்போலப் பிரத்தியட்சமாய்த்தோற்றுமேயென்ற புத்திவிர்த்தி பரிகரிக்கும்பொருட்டு பிரத்தொம்சாபாவமும் விசாரிக்கவேண்டியது.

பிரத்தொம்சாபாவமாவதே தெனில்.

ஓர் தரித்திரனை யாசகன் ஓர்கடமே ஆசக்தியாய்க்கொண்டு பாபவசத்தினால் மனைகள்தோறும் இரந்துண்ணுங்காலத்தில் அம்மனைகளிலுள்ள சிறுவர்கள் அஞ்ஞானசிரேஷ்ட வுச்சாகத்தினால் கற்கொண்டெறிய, (அவ்விரப்பவன்) கடவாஞ்சையினால் அக்கல்லெறிகளனைத்தும் தன்சரீரத்திற்றாங்கி மறித்துஞ் சகிக்கமாட்டாமல் அவனுக்கேவிரக்திதோன்றி அக்கடத்தை ஓர் கற்பாறையில்மோத அக்கடமுடைந்து சில்லுகளாய்ச்சிதறிவிட்டது. பிறகு கடவாஞ்சையினால் அவன்புரண்டு புரண்டழுதாலும் உடைந்தகடம் வரமாட்டாதென்பதே பிரத்தொம்சாபாவம்.

இதற்குச்சொரூப வபிப்பிராயமேதெனில்.

முன் விசாரஞானத்தாற் றகிக்கப்பட்ட மாயையும் அதன்காரியமான ஜீவேஸ்வர ஜகத்தும் மீண்டு கற்பகாலத்தினும் உண்டாகமாட்டாதென்றறிவதேஅபிப்பிராயம். கடமுடைந்தும் அதன்காரியம் மறைந்து காரணமாகா

மல் கடஓடென்கிற காரியவுபாதி காண்பதுபோல விர்த்திஞானத்தாலழிந்த மாயையும் அதன்காரியமான ஜீவேஸ்வரஜகத்தும் காரணமான பிரம்ம மாத்திரமாய்ப்போகாமல் மாயாகாரியமான ஜீவேஸ்வரஜகத்தென்று அறிவிற்றோற்றக்கண்டிருப்பதால் அந்த மாயையும் வஸ்துத்துவயமாயிருக்கும். ஆகையால் பிரம்மத்தில் மாயையுண்டு, மாயையிற் பிரம்மமிருக்குமென்ற புத்தி விர்த்தி பரிகரிக்கும்பொருட்டு அன்னியோன்னியாபாவமும் விசாரிக்கவேண்டியது.

அன்னியோன்னியாபாவமாவதேதெனில்.

படத்திற்கடமும் கடத்திற்படமும் காலத்திரயத்திலு மில்லையென்றறிவதே அன்னியோன்னியாபாவம்.

இதிற்சொரூபவபிப்பிராயமேதெனில்.

அத்துவிதம்,அவிநாசம்,உபமானரஹிதம்,அவாங்மனோகோசரம்,மௌனதீதம்,அஸ்திபாதிப்பிரியலக்ஷணம், ஆகியகுணங்களையுடையதே பிரம்மஸ்வரூபம். துவிதம்,திரிசியம்,மனவாக்குகோசரம்,அநிர்வசனம்,ஆகியகுணங்களையுடையதே மாயாசொரூபம். அம்மாயாசொரூபத்திற் பிரம்மஸ்வரூபமில்லை, பிரம்மசொரூபத்தில் மாயாசொரூபமில்லை யென்றறிகிறதிடம் வந்ததேயபிப்பிராயம். இதுநாமரூபமென்றும் மாயையென்றும் நினைவில்தோற்றுகிறது. அந்தமாயையில்லாவிட்டால் நினைவில்தோற்றமாட்டாது. ஆகையினால் மாயையு மிருக்குமென்று வருகிற புத்திவிர்த்தி பரிகரிக்கும்பொருட்டு அத்தியந்தாபாவமும் விசாரிக்கவேண்டியது.

அத்தியந்தாபாவமாவதேதெனில்.

ஒருபுருஷன் தனது சொப்பனத்தில் தான் சாகவும் தன்னைத் தகனஞ்செய்யவும் மறுநாள் காடாற்றி அஸ்தியெடுத்துக் கும்பத்திலடக்கிக் கங்கையில்விடவும் கண்டு பிறகுவிழித்த சாக்கிரத்தில் மனத்தால் நினைக்க வாக்காற் சொல்லவந்தும் மெய்யாகாமற் பொய்யென்றறிவதே அத்தியந்தாபாவம்.

இதிற்சொரூபவபிப்பிராயமேதெனில்.

மாயையென்றும் ஜீவேஸ்வரர்களென்றும் நாமரூபங்களாய்ச்சொன்னாலும் நினைத்தாலும் சுத்தமித்தையே. (எப்படியென்றால்) ஆகாசத்தில் தாமரை பூத்ததென்று நினைவில் தோற்றினாலும் அது எப்படியில்லையோ அதுபோல மாயையென்று நினைவில்வந்தாலுங் காலத்திரயத்திலு மில்லையென்கிற திடம் வந்ததே யபிப்பிராயம். மாயையென்பது காலத்திரயத்தினு மில்லாதிருக்கச் சகல தேகிகளுக்கும் நானாவாய் பிரசித்தமாய் உண்டுபோலத் தோற்றுகிறதற்குக் காரணமேதென்று வருகிற புத்திவிர்த்தி பரிகரிக்கும் பொருட்டு ஐதீகப்பிரமாணமும் விசாரிக்கவேண்டியது.

ஐதீகப்பிரமாணமாவதேதெனில்.

ஒருவன் ஒரு ஆலமரத்திலேறி இலையும் விறகும் தனக்குப் போதுமான மட்டும் பறித்துக்கொண்டு இறங்குஞ்சமயத்தில் வேறொருவன்வந்து, ஆரடா பயித்தியக்காரா, இந்தமரத்தில் மஹாயட்சனென்னும் பசாசிருக்கின்றதே, இதனிடத்தில் ஒருவருஞ் சேருகிறதில்லையே. நீ இதிற் கால்வைத்தேறலாமாவென்ற சப்தங் கேட்டமாத்திரத்தில் மனத்திற் பயமும் சரீரத்தில் நடுக்கமுமுண்டாய் ஒடித்த விறகும் பறித்த விலைகளையு மெறிந்துவிட்டு மரத்திலிருந்திறங்கக் கால்தடுமாறிக் கீழேவிழுந்து மூர்ச்சையானதே (ஐதீகப்பிரமாணம்.)

இதிற்சொரூபவபிப்பிராயமேதெனில்.

மாயையும் மாயாகாரியங்களும் காலத்திரயத்தினுமில்லாத சுத்தமித்தையானாலும் பிரத்தியட்சமாய்க்காணுதயசுஷவிஷயம் அன்னியன்சொற்கேட்டமாத்திரத்தில் இருக்கிறதென்று சத்தியபுத்திவந்ததுபோல அந்தமாயாகாரியமான ஜீவேஸ்வரஜெகத்துக்கள் பிரசித்தமாயுண்டுபோல அசம்பாவனையாகிய பிராந்திமூலப் பிரமையால்தோற்றுமென்றறிகிறதே யபிப்பிராயம். மாயையென்பதில்லையானால், மாயாகாரியமான நாமரூப ஜகத்தென்றும் சப்த பரிச ரூப ரச கந்த கரணமென்றும் அநேகவிபரீதங்கள் தோற்றுகிறதற்குக்காரணமேதென்று வருகிறபுத்திவிர்த்திபரிகரிக்கும்பொருட்டு சம்பவப்பிரமாணமும் விசாரிக்கவேண்டியது.

சம்பவப்பிரமாணமாவதேதெனில்.

ஆயிரமென்னுங்கணக்கில் ஒன்று இரண்டு அஞ்சு பத்து நூறென்னுங் கணக்குமிருக்கிறதென்றறிவதே சம்பவப்பிரமாணம்.

இதிற்சொரூபவபிப்பிராயமேதெனில்.

சப்தமென்றறியும்போது, அவ்வறிவே சப்தரூபமாயிருப்பதன்றிப் பரிசரூப ரச கந்த கரண தேகங்களுமில்லை. கந்தமென்றறியும்போது, அவ்வறிவே கந்தரூபமாயிருப்பதன்றிச் சப்த பரிச ரூப ரச கரண தேகங்களுமில்லை. ஆகையால் (இந்திரியசபளிதமாய் சப்த பரிசரூப ரச கந்தங்களாய்த்தோற்றினவெல்லாம்) அவ்வறிவாகியபிரம்மமேஅதுவதுவாகத்தோற்றியது. ஆனபடியால், அவ்வறிவாகியபிரம்மத்தில் அநேகம்போல அவ்வறிவாகியதனக்கே தோற்றலாம். அன்றியும் தான்சர்வசக்திமானாகலின் அநேகமுமிருக்கலாம். அப்படியிருக்கையால், சர்வாதாரபூதமான நிருபாதிகப்பிரம்மமே யிருக்கிறதென்றறிகிறதே யபிப்பிராயம். இதுவே சம்பவப்பிரமாணம்; அன்றியும்.

இந்தசெகத்துக்கோர்கடவுளுண்டென்கிறசத்தியத்தைக் குறித்து பிரம்மலட்சணப் பிரதிபாத்தியஞ்செய்த மஹாரிஷிகளால் வேதசுருதியிற் சொல்லியபடி சிலஉபநிஷத்துக்களை திருஷ்டாந்தப்படுத்தல்.

தைத்தரீயஉபநிஷத்து பிருகுவல்லி, முதலாவது அனுவாகத்தில்.

𑌯𑌤𑍋𑌵𑌾𑌇𑌮𑌾𑌨𑌿𑌭𑍂𑌤𑌾𑌨𑌿𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑍇𑌨𑌜𑌾𑌤𑌾𑌨𑌿𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿
𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌭𑌿𑌸𑌂𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮. (௧)

வியாக்கியானம்.

எதினின்றும் இந்தப்பூதங்களுண்டாகின்றனவோ, எதினால் பிறந்தவை உயிர்வாழ்கின்றனவோ, எதை (வாழ்வன) முயன்று அடைகின்றனவோ, அதை அறிந்துக்கொள்ளக்கடவாய்; அது பிரம்மம் என்று சொல்லியிருக்கிறது.

புருஷசூக்தம் ௧௬-வது ருக்கில்.

𑌵𑍇𑌦𑌾𑌹𑌮𑍇𑌤𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌂𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌂 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂𑌤𑌮𑌸
𑌸𑍍𑌤𑍁𑌪𑌾𑌰𑍇𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌯𑌧𑍀𑌰𑌃 𑌨𑌾𑌮𑌾𑌨𑌿𑌕𑍃𑌤𑍍𑌵𑌾
𑌭𑌿𑌵𑌦𑌨𑍍𑌯𑌦𑌾𑌸𑍍𑌤𑍇. (௨)

வியாக்கியானம்.

எந்தப்புருஷன் சகலரூபங்களையும் விசேஷமாயுண்டாக்கி, பெயர்களையும் ஈந்து, அப்பெயர்களால் வியவஹரித்துக்கொண்டிருக்கிறானோ, அப்படிப்பட்டவன் மஹானாகியும், சூரியனைப்போல் ஜ்வலிக்கிறவனாயும், அக்கியானத்துக்குப்புறம்பாயுமுள்ள அந்தப்புருஷனை நான் (தியானமார்க்கத்தால்) அறிவேன் என்று சொல்லியிருக்கிறது.

சுவேதாச்சுவதர உபநிஷத்து ஆறுவது அத்தியாயம்,
௧௧-௧௨-வது வாக்கியங்களில்.

𑌏𑌕𑍋𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁𑌗𑍂𑌢𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀𑌸
𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾, 𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌃 𑌸𑌾
𑌕𑍍𑌷𑍀𑌚𑍇𑌤𑌾𑌕𑍇𑌵𑌲𑍋𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌶𑍍𑌚, 𑌏𑌕𑍋𑌵𑌶𑍀𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂𑌬
𑌹𑍂𑌨𑌾𑌮𑍇𑌕𑌂𑌬𑍀𑌜𑌂𑌬𑌹𑍁𑌧𑌾𑌯𑌃𑌕𑌰𑍋𑌤𑌿, 𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌂𑌯𑍇𑌨𑍁
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌧𑍀𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂𑌸𑍁𑌖𑌂𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂𑌨𑍇𑌤𑌰𑍇𑌷𑌾𑌮𑍍. (௩)

வியாக்கியானம்.

சகலபூதங்களிலும் மறைந்தும், சர்வவியாபியாயும், சர்வபூதங்களுக்கும் அந்தராத்மாகவும், தொழில்களுக்கிறைவனாகவும், சர்வபூதங்களிலும் உ

றைந்துகொண்டும், சாட்சியாகவும், கேவலம் சேதனஸ்வரூபியாகவும், குணங்களற்றும், தொழிலற்ற பலவற்றிலும் தனிமையான வசியாகவும், ஒரு வித்தைப் பலவகையாக்குவோனாகவும் உள்ள ஒருவனே தெய்வம். அவனைத் தங்களுக்குள்ளிருப்பதாய்க்காணும் தீரர்கள்மாத்திரம் நிலைத்த சுகமடைவார்களேயன்றி மற்றவர்களடையார்கள் என்று சொல்லியிருக்கிறது.

கடோ உபநிஷத்து ரு-வது வல்லி, கஉ-வது வாக்கியத்தில்.

ஏகோவஶீஸவ-பூ-தாந்தராத்மா ஏகஂரூபஂவஹுதா யஃகரோதி, தமாத்மஸ்தஂயெநு-பஶ்யந்திதீராஸ்தேஷாஂஸுகஂஶாஶ்வதஂநேதரேஷாஂ. (அ)

வியாக்கியானம்.

சர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாகவும், ஒருருபத்தைப் பலவாக்குவோனாகவும் உள்ளவனே அத்விதீயமான இறைவன். தமக்குள்ளாகவேயிருப்பதாய் அவனை யார் அறிகிறார்களோ அப்படிப்பட்ட தீரர்களுக்குமாத்திரம் நிலைத்த சுகமேயன்றி மற்றவருக்கில்லை என்று சொல்லியிருக்கிறது.

கடோ உபநிஷத்து கங-வது வாக்கியத்தில்.

நித்யோநித்யாநாஂசேதநஶ்சேதநாநாஂ ஏகோபஹூநாஂயோவிதயாதிகாமாந், தமாத்மஸ்தஂயெநு-பஶ்யந்திதீராஸ்தேஷாஂஶாந்திஃஶாஶ்வதீநேதரேஷாஂ. (ரு)

வியாக்கியானம்.

நித்தியங்களுக்குள் நித்தியமாயும், சேதனங்களுக்குள் சேதனமாயும், பலவற்றில் ஒன்றாயும் (இருந்துகொண்டு) எவன் (நமது) கோரிக்கைகளைத்தருகிறானோ அவன் தமக்குள்ளேயே இருப்பதாக அறியும் தீரர்களுக்குமாத்திரம் சாசுவதமான சாந்தியேயன்றி மற்றவருக்கில்லை என்று சொல்லியிருக்கிறது.

கடோ உபநிஷத்து மூன்றாம்வல்லி கச-வது வாக்கியத்தில்.

உத்திஷ்த ஜாக்ரத ப்ராப்யவராந்நிபோதத க்ஷுரஸ்ய தாராநிஶிதாதுரத்யயா துர்கஂபதஸ்தத்கவயோவதந்தி. (சு)

வியாக்கியானம்.

(அக்கியான உறக்கத்தினின்றும்) விழித்து எழுந்திருங்கள், சிரேஷ்டமானவர்களையடைந்து பிரம்மஞானத்தை யடையுங்கள். ஏனெனில், அவனை அறிந்துகொள்ளும் வழியானது, வெகு கூரான கத்தியின்முனையில் நடப்பதுபோல, வெகுகடினமானதென்று சான்றோர்கள் சொல்லுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறது.

கடோ உபநிஷத்து இரண்டாம்முண்டகம்,

முதல் அத்தியாயம் துவக்கத்தில்.

தததேதத் ஸத்யம் யதா ஸுதீப்தாத் பாவகாத் விஸ்புலிங்கா: ஸஹஸ்ரஶ: ப்ரபவந்தே ஸரூபா:, ததா(அ)க்ஷராத் விவிதா: ஸோம்ய பாவா: ப்ரஜாயந்தே தத்ர சைவாபியந்தி. (௧)

வியாக்கியானம்.

இது சத்தியம். ஜ்வலிக்கிற அக்கினியினின்றும் ஆயிரம்பக்கங்களில் எப்படி பொறிகள் உண்டாகின்றனவோ, அப்படியே ஓ அன்புள்ளவனே! அழிவற்ற (பிரமத்தில் நின்றும்) பலவித ஜீவாத்மாக்கள் உண்டாகி மறுபடியும் அதில் லயிக்கின்றன என்று சொல்லியிருக்கிறது.

முண்டகோபநிஷத்து இரண்டாவது அத்தியாயம்,

முதலாவது வாக்கியத்தில்.

ஆவி: ஸந்நிஹிதம் குஹாசரம் நாம மஹத்பதமத்ரைதத் ஸமர்ப்பிதம் ஏஜத் ப்ராணந்நிமிஷச்ச யதேதஜ்ஜாநத ஸதஸத்வரேண்யம் பரம் விஜ்ஞாநாத்யத்வரிஷ்டம் ப்ரஜாநாம். (௨)

வியாக்கியானம்.

ஜ்வலித்துக்கொண்டும், தியானிப்பவர்களுக்குச்சமீபமாயும், (ஹிருதய) குகையில் வசிப்பதாய்ச் சொல்லப்படும் பிரம்மமே உயர்ந்தபதமாகும். சலித்துக்கொண்டும், விழித்துக்கொண்டும், கண்களை மூடிக்கொண்டுமிருக்கிற (சகலமும்) அதையே ஆதாரமாகக்கொண்டிருக்கின்றன; இதுவே உள்ளதும் இல்லாததுமென்றும், தொழத்தக்கதென்றும், சிரேஷ்டமானதென்றும், ஜெனங்களுடைய விக்கியானத்தினாலும் அறியக்கூடாதென்றும் நீ அறிந்துகொள்ளக்கடவாய் என்று சொல்லியிருக்கிறது.

முண்டகோபநிஷத்து மேற்படிஅத்தியாயம்,உ-வது வாக்கியத்தில்.

யதர்சிமத்யதணுப்யோ(அ)ணு ச யஸ்மிம்ல்லோகா நிஹிதா லோகிநஶ்ச ததேதத்க்ஷரம் ப்ரஹ்ம ஸ ப்ராணஸ்தது வாங்மந: ததேதத் ஸத்யம் ததம்ருதம் தத்வேத்தவ்யம் ஸோம்ய வித்தி. (௩)

வியாக்கியானம்.

ஒளிபொருந்தியதென்றும், அணுவிலும் அணுவானதென்றும், உலகங்களுக்கும் அதிலுள்ளவற்றிற்கும் ஆதாரமென்றும் அறிந்துகொள்ளக்கடவாய் இதுதான் அழிவற்ற பிரம்மம். இதுதான் பிராணன். இதுதான் வாக்குமனமும். இது சத்தியம். இது நித்தியமானது. ஓ அன்புள்ளவனே! இது அறிந்துகொள்ளத்தக்கது; நீ அறிந்துகொள்ளக்கடவாய் என்று சொல்லியிருக்கிறது.

முண்டகோபநிஷத்து ஷ அத்தியாயம், ௯-வது வாக்கியத்தில்.

𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌕𑍋𑌶𑍇 𑌵𑌿𑌰𑌜𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌤𑌚𑍍𑌛𑍁𑌭𑍍𑌰𑌂
𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌸𑍍𑌤𑌦𑍍𑌯𑌦𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃. (௧௦)

வியாக்கியானம்.

பொன்போன்ற உயர்ந்தகோசத்தில், தோஷமுங் களங்கமுமற்று பிரம்மமாயிருக்கிறது. அது சுப்பிரமாயும், ஒளிகளுக்கெல்லாம் ஒளியாயுமிருப்பதாய் எதை ஆத்மதத்துவமறிந்தவர்கள் கொள்வார்களோ அதுவாகவிருக்கிறது என்று சொல்லியிருக்கிறது.

முண்டகோபநிஷத்து ஷ அத்தியாயம், ௭-வது வாக்கியத்தில்.

𑌬𑍃𑌹𑌚𑍍𑌚 𑌤𑌦𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌤𑌤𑍍𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑌰𑌂
𑌵𑌿𑌭𑌾𑌤𑌿, 𑌦𑍂𑌰𑌾𑌤𑍍𑌸𑍁𑌦𑍂𑌰𑍇 𑌤𑌦𑌿𑌹𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍇 𑌚 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍍𑌵𑌿𑌹𑍈𑌵
𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂, (௧௧)

வியாக்கியானம்.

அது (பிரம்மம்) பெரிதாயும், திவ்வியமாயும், மனதினாலும், எட்டிமுடியாத ரூபத்தையுடையதாயும், சூக்ஷ்மத்திலும் சூக்ஷ்மமாயும், பலவிதமாய் விளங்குகிறது. இது (தியானமற்றவர்களுக்கு) வெகுதூரத்திலிருக்கினும் (தியானிப்பவர்களுக்கு) தூரமற்றிருக்கிறது. (தியானமார்க்கத்தினால்) காண்போர்க்கு இவ்விடத்திலேயே (ஹிருதய) குகையில் விளங்குகிறது என்று சொல்லியிருக்கிறது.

முண்டகோபநிஷத்து ஷ அத்தியாயம், ௮-வது வாக்கியத்தில்.

𑌨 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌨𑌾𑌪𑌿 𑌵𑌾𑌚𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑍈𑌸𑍍
𑌤𑌪𑌸𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌵𑌾, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌤𑌤𑌸𑍍𑌤𑍁
𑌤𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑍇 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌮𑌾𑌨𑌃. (௧௨)

வியாக்கியானம்.

(இவன்) கண்களாலாவது, வாக்கினாலாவது, மற்ற இந்திரியங்களாலாவது, தபசினாலாவது, கர்மத்தினாலாவது கிரகிக்கப்படமாட்டான். அவனருளிய ஞானத்தின் சகாயத்தால், சித்தசுத்தியுடையவன் தியானஞ்செய்துகொண்டுவந்து, அந்த நிஷ்களமான (பரப்பிரம்மத்தை) அறிகிறான் என்று சொல்லியிருக்கிறது.

முண்டகோபநிஷத்து பிரதமமுண்டகம்,
௧ - வது அத்தியாயம் ௬ - வது வாக்கியத்தில்.

𑌯𑌤𑍍𑌤𑌦𑌦𑍍𑌰𑍇𑌶𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌮𑌵𑌰𑍍𑌣𑌮𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂
𑌤𑌦𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌵𑌿𑌭𑍁𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂𑌸𑍁𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌤𑌦
𑌵𑍍𑌯𑌯𑌂𑌯𑌦𑍍𑌭𑍂𑌤𑌯𑍋𑌨𑌿𑌂𑌪𑌰𑌿𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌧𑍀𑌰𑌾𑌃. (௧௩)

வியாக்கியனம்.

அது (பிரம்மம்) அதிருசியம் கிரகிக்கக்கூடாதது, அடியற்றது, வர்ணமற்றது, கண்காதில்லாதது, கைகாலில்லாதது, நித்தியமானது, விபுசுவரூபி, எங்கும்பரவியது, சூக்ஷமமானது, அவ்வியமானது, அதை தீரர்கள் பூதங்களுக்கெல்லாம் ஆதிகாரணமென்று நன்றாய் அறிகிறார்கள் என்று சொல்லியிருக்கிறது.

கேனோபநிஷத்து முதல்கண்டம் மூன்றாம் வாக்கியமுதல் எட்டாவது வாக்கியம்வரையில்.

𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿, 𑌨 𑌵𑌾𑌗𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑌿, 𑌨𑍋 𑌮𑌨𑍋, 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌮𑍋, 𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌮𑍋 𑌯𑌥𑍈𑌤𑌦𑌨𑍁𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌦𑌥𑍋 𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌦𑌧𑌿, 𑌇𑌤𑌿 𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂. (கச)

𑌯𑍇 𑌨𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌚𑌚𑌕𑍍𑌷𑌿𑌰𑍇, 𑌯𑌦𑍍𑌵𑌾𑌚𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌦𑌿𑌤𑌂, 𑌯𑍇𑌨 𑌵𑌾𑌗𑌭𑍍𑌯𑍁𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ()

𑌯𑌨𑍍𑌮𑌨𑌸𑌾 𑌨 𑌮𑌨𑍁𑌤𑍇 𑌯𑍇𑌨𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍋 𑌮𑌤𑌂,
𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇. (கரு)

𑌯𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌚𑌕𑍍𑌷𑍂𑌂𑌷𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿,
𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇. (கள)

𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂, 𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇. (கஅ)

𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌨 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌣𑍀𑌯𑌤𑍇
𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇. (ககூ)

வியாக்கியானம்.

கடவுள் அல்லது பிரம்மம்.

அதைக்கண்ணாவது, வாக்காவது, மனமாவது எட்டுகிறதில்லை, அதை நாம் அறியோம்.

அதைத்தெரிவிக்கும் வழியும் நமக்குத்தெரியாது.

அது தெரிந்ததற்கு வேறாயும், தெரியாததற்குப் புறம்பாயுமிருக்கிறதென்று முன்னோருரைக்கக்கேட்டோம்.

எது வாக்கினால் விளங்கவில்லையோ, எதினால் வாக்குவிளங்குகிறதோ அதுவே பிரம்மமென்று நீ அறி.

எதை இதுவென்று உபாசிக்கிறார்களோ அதுவல்ல.

எது மனத்தினால் நினைக்கிறதில்லையோ, எதினால் மன நினைக்கிறதென்றார்களோ அதுவே பிரமமமென்று நீ அறி.

எதை இதுவென்று உபாசிக்கிறார்களோ அதுவல்ல.

எதை (நமது) கண் காண்கிறதில்லையோ, எதினால் (நமது) கண்கள் காண்கின்றனவோ, அதுவே பிரம்மமென்று நீ அறி.

எதை இதுவென்று உபாசிக்கிறார்களோ அதுவல்ல.

எது காதினால் கேட்கிறதில்லையோ, எதினால் இந்தக்காது கேட்கிறதோ அதுவே பிரம்மமென்று நீ அறி.

எதை இதுவென்று உபாசிக்கிறார்களோ அதுவல்ல.

எது சுவாசத்தினால் ஜீவிக்கிறதில்லையோ, எதினால் மூச்சு ஸ்வஸிக்கிறதோ அதுவே பிரம்மமென்று நீ அறி என்று சொல்லியிருக்கிறது.

முண்டகோபநிஷத்தில் துவிதீயமுண்டகம் முதலத்தியாயம், இரண்டாவது வாக்கியத்தில்.

திவ்யோ ஹ்யமூர்த்த: புருஷ: ஸபாஹ்யாப்யந்தரோ ஹ்யஜ:, அப்ராணோ ஹ்யமநா: ஶுப்ரோ ஹ்யக்ஷராத்பரத: பர:

வியாக்கியானம்.

அவர் (பிரம்மம்) திவ்வியன், மூர்த்தியற்றவன், புருஷன், அகத்திலும் புறத்திலுமுள்ளவன், பிறப்பற்றவன், பிராணனில்லாதவன், மனமில்லாதவன், பரிசுத்தமானவன், அழிவற்ற பெரும்பொருள் என்றுசொல்லியிருக்கிறது.

சுவேதாசுவதர உபநிஷத்து கச-கரு-வது வாக்கியங்களில்.

ஸ்வதேஹமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம், த்யாந நிர்மதநாப்யாஸாத்தேவம் பஶ்யேந்நிகூடவத், திலேஷு தைலம் ததிநீவ ஸர்பிராப: ஸ்ரோத:ஸ்வரணீஷு சாக்நி:, ஏவமாத்மாத்மநி க்ருஹ்யதேऽஸௌ ஸத்யேநைநம் தபஸா யோऽநுபஶ்யதி. (உக)

வியாக்கியானம்.

(ஒருவன்) தன் தேகத்தை அரணியாக்கிக்கொண்டு, பிரணவத்தை மத்தாக்கிக்கொண்டு கடைதலாகிய தியானப்பியாசத்தால் நன்றாய் மறைந்திருக்கும் தெய்வத்தைப்பார்ப்பான். எள்ளில் எண்ணெய்போலும், தயிரில் வெண்ணெய்போலும், பூமிக்குள் நீர்போலும், அரணியில் அக்கினிபோலுமே சத்தியத்தினாலும், தபசினாலும் தேடுவோனுக்கு அவனுக்குள்ளேயே அதுவிளங்கும் என்று சொல்லியிருக்கிறது.

சுவேதாசுவதர உபநிஷத்து க௯-வது வாக்கியத்தில்.

𑌅𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑍋𑌜𑌵𑌨𑍋𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑌾, 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑍁𑌸𑍍𑌸
𑌶𑍃𑌣𑍋𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌣𑌃, 𑌸𑌵𑍇𑌤𑍍𑌤𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌨𑌚𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿𑌵𑍇𑌤
𑌤𑌾 𑌤𑌮𑌾𑌹𑍁𑌰𑌗𑍍𑌰𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌂. (உஉ)

வியாக்கியானம்.

அவர் (பிரம்மம்) கையின்றிக் கிரகிக்கிறார், காலின்றி நடக்கிறார், கண்ணின்றிக்காண்கிறார், காதின்றிக்கேட்கிறார், அறியத்தக்கனவெல்லாம் அவரறிவார், அவரையோ அறிந்தவரில்லை. அவருக்கு வேறுலட்சணமொன்றும் சொல்லக்கூடாமையால் அவரை ஆதிமஹாபுருஷனென்றார்கள் என்று சொல்லியிருக்கிறது.

சுவேதாசுவதர உபநிஷத்து ஐந்தாவது அத்தியாயம்,
கச-வது வாக்கியத்தில்.

𑌭𑌾𑌵𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌨𑍀𑌡𑌾𑌖𑍍𑌯𑌂𑌭𑌾𑌵𑌾𑌭𑌾𑌵𑌕𑌰𑌂𑌶𑌿𑌵𑌂
𑌕𑌲𑌾𑌸𑌰𑍍𑌗𑌕𑌰𑌂𑌦𑍇𑌵𑌂𑌯𑍇𑌵𑌿𑌦𑍁𑌸𑍍𑌤𑍇𑌜𑌹𑍁𑌸𑍍𑌤𑌨𑍁𑌂. (உ௩)

வியாக்கியானம்.

மனத்தினால்மாத்திரம் கிரகிக்கக்கூடியவும், சரீரமற்றவும், உளவாக்கவும், இலவாக்கவும், காரணமானவும், காலஸர்க்கங்களை யுண்டாக்குகிறவும் தெய்வத்தை அறிவார்கள் தேஹத்தைவிடுகிறார்கள் என்றுசொல்லியிருக்கிறது.

சுவேதாசுவதர உபநிஷத்து க௯-வது வாக்கியத்தில்.

𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌂𑌶𑌾𑌨𑍍𑌤𑌂𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌂𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌂
𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌪𑌰𑌂𑌸𑍇𑌤𑍁𑌂𑌦𑌗𑍍𑌧𑍇𑌨𑍍𑌧𑌨𑌮𑌿𑌵𑌾𑌨𑌲𑌂 (உச)

வியாக்கியானம்.

அவயவமற்றும், தொழிலற்றும், சாந்தமாயும், பழிப்பற்றும், மாசற்றும், பரமபதத்துக்கு ஹேதுவாயும், ஜ்வலித்துக்கொண்டும் இருக்கிற தெய்வத்தைச் சரணமடைந்து நான் முத்தியடைவேனாக என்று சொல்லியிருக்கிறது.

கடோபநிஷத்து இரண்டாம்வல்லி, கஉ-வது வாக்கியத்தில்.

𑌤𑌂𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌂𑌗𑍂𑌢𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌗𑍁𑌹𑌾𑌹𑌿𑌤𑌂𑌗𑌹𑍍𑌵
𑌰𑍇𑌷𑍍𑌠𑌂𑌪𑍁𑌰𑌾𑌣𑌂, 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌯𑍋𑌗𑌾𑌧𑌿𑌗𑌮𑍇𑌨𑌦𑍇𑌵𑌂 𑌮𑌤𑍍𑌵𑌾𑌧𑍀
𑌰𑍋𑌹𑌰𑍍𑌷𑌶𑍋𑌕𑍌𑌜𑌹𑌾𑌤𑌿. (உ௫)

வியாக்கியானம்.

தீரர்கள் ஆதியாத்மயோகத்தாலேயே காணக்கடினமாகவும், கூடமாக வும், ஆழமறியக்கூடாததாகவும், (ஹிருதய) குகையிலிருக்கிற புகவரிதான இடத்தையடையவும், அநாதியான பிரம்மத்தை தியானித்து தீரர்கள் சந் தோஷத்தையும் வியசனத்தையும் விடுகிறார்களென்று சொல்லியிருக்கிறது.

கடோபநிஷத்து மூன்றாம்வல்லி, கஉ-வது வாக்கியத்தில்.

𑌏𑌷𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁-𑌭𑍂𑌤𑍇𑌷𑍁-𑌗𑍂𑌢𑍋-𑌤𑍍𑌮𑌾𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇
𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑍍𑌯𑌯𑌾-𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾-𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌯𑌾-𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃, (உசு)

வியாக்கியானம்.

சர்வபூதங்களிலும் கூடமான ஆத்மாவாகவிருக்கும். இவன் (கண்ணுக் கு) விளங்குகிறதில்லை. நுண்ணறிவுள்ளவர்களுடைய கவனமுள்ள நுண் ணறிவுக்கு (மாத்திரம்) விளங்குவான் என்று சொல்லியிருக்கிறது.

கடோபநிஷத்து மூன்றாம்வல்லி, கரு-வது வாக்கியத்தில்.

𑌅𑌶𑌬𑍍𑌦𑌮𑌸𑍍𑌪𑌰𑍍𑌶-𑌮𑌰𑍂𑌪-𑌮𑌵𑍍𑌯𑌯𑌂 𑌤𑌥𑌾𑌰𑌸𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌗𑌨𑍍𑌧𑌵𑌚𑍍𑌚 𑌯𑌤𑍍
𑌅𑌨𑌾𑌦𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌂 𑌮𑌹𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌨𑌿𑌚𑌾𑌯𑍍𑌯 𑌤𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍁𑌖𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯
𑌤𑍇. (உஎ)

வியாக்கியானம்.

ஓசையற்றும், ஸ்பரிசமற்றும், ரூபமற்றும், அழிவற்றும், உருசியற்றும், நித்தியமாயும், நாற்றமற்றும், ஆதியற்றும், அந்தமற்றும், மஹத்திலும் (ஆத் மாவிலும்) சிறந்ததாயும், நிலையாயும் உள்ள அதை (பிரமத்தை) அறிந்தவன் மிருத்தியுவின் வாயினின்றும் தப்புகின்றான்" என்று சொல்லியிருக்கிறது.

கடோபநிஷத்து ஆறாவது அத்தியாயம், கூ-வது வாக்கியத்தில்.

𑌨𑌸𑌂𑌦𑍃𑌶𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿-𑌰𑍂𑌪𑌮𑌸𑍍𑌯 𑌨𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾𑌪𑌶𑍍𑌯𑌤𑌿𑌕𑌶𑍍𑌚𑌨𑍈𑌨
𑌮𑌂, 𑌹𑍃𑌦𑌾𑌮𑌨𑍀𑌷𑌾𑌮𑌨𑌸𑌾𑌭𑌿𑌕𑍢𑌪𑍍𑌤𑍋-𑌯𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁-𑌰𑌮𑍃𑌤𑌾
𑌸𑍍𑌤𑍇𑌭𑌵𑌨𑍍𑌤𑌿. (உஅ)

வியாக்கியானம்.

இவனுக்கு (பிரம்மத்துக்கு) ரூபம் நமது பார்வையிலில்லை, இதனை ஒரு வரும் கண்ணால் பார்க்கிறதில்லை. ஹிருதயத்தினாலும் மனத்தாலும் அறியப்ப டுகிறான். இதை அறிந்தவர் அமிர்தத் துவத்தை அடைகிறார்களென்று சொ ல்லியிருக்கிறது.

பிரஸ்னோபநிஷத்து ச-வது பிரஸ்னம், க0-வது வாக்கியத்தில்.

𑌸𑌯𑍋𑌹𑌵𑍈𑌤𑌦𑌚𑍍𑌛𑌾𑌯𑌮𑌶𑌰𑍀𑌰 𑌮𑌲𑍋𑌹𑌿𑌤𑌂 𑌶𑍁𑌭𑍍𑌰𑌮𑌕𑍍𑌷
𑌰𑌂𑌵𑍇𑌦𑌯𑌤𑍇, 𑌯𑌸𑍍𑌤𑍁𑌸𑍋𑌮𑍍𑌯 𑌸𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑌸𑌰𑍍𑌵𑍋𑌭𑌵𑌤𑌿. (உகூ)

வியாக்கியானம்.

ஓ அன்புள்ளவனே! யாரால் அதை (பிரம்மத்தை) நிழலற்றது, அசரீரி, வர்ணமற்றது, ஒளியுள்ள, அழிவற்றது என்று அறிகிறானோ; அவன் சர்வக்கியனாகவும், சகலமாகவும் ஆகிறான் என்று சொல்லியிருக்கிறது.

தைத்ரீய உபநிஷத்து சிஷாவல்லி, ௩-வது அநுவாகத்தில்.

ஸ ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶ:, தஸ்மிந்நயம் புருஷோ மநோமய:, அம்ருதோ ஹிரண்மய:. (௩0)

வியாக்கியானம்.

ஹிருதய ஆகாசத்தில், இந்தப்புருஷன் மனோமயமாகவும், சுவர்ணம் போல் ஜ்வலித்துக்கொண்டும், நித்தியனாகவும் வசிக்கிறான் என்று சொல்லியிருக்கிறது.

சாந்தோக்கிய உபநிஷத்து எ-வது அத்தியாயம், கச-வது கண்டத்தில்.

ஆகாஶோ வை நாம நாமரூபயோர்நிர்வஹிதா தே யதந்தரா, தத்ப்ரஹ்ம, ததம்ருதம். (௩௧)

வியாக்கியானம்.

பெயரும், பெயருக்குக்காரணமாகிய ரூபமும் உடையது ஆகாசம். அவற்றிற்குப்புறம்பானது எதுவோ அது பிரம்மம். அது அமிர்தம் என்று சொல்லியிருக்கிறது.

தைத்ரீய உபநிஷத்து பிரம்மாநந்தவல்லி, முதலாவது அநுவாகத்தில்.

ப்ரஹ்மவிதாப்நோதி பரம், ததேஷாऽப்யுக்தா ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந், ஸோऽஶ்நுதே ஸர்வாந்காமாந்ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதேதி தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶ: ஸம்பூத:. (௩௨)

வியாக்கியானம்.

பிரம்மத்தை அறிபவன் பரத்தை அடைகிறான். ஆகையால் இது (இந்த தோத்திரம்) சொல்லப்பட்டது. சத்தியஸ்வரூபியாயும், ஞானஸ்வரூபியாயும்; அநந்தமாயுமுள்ள (பரப்பிரம்மமானவன்) ஹிருதயகுகையிலும், சிரேஷ்டமான ஆகாசத்திலும், உறைவதாக யார் அறிகிறானோ அவன் சகலவிருப்பங்களையும் அடைகிறான்; சர்வக்கியனாகிய பிரம்மத்தையும் அடைகிறான்; அந்த ஆத்மாவினின்றே ஆகாசம் உண்டாயிற்று என்று சொல்லியிருக்கிறது.

தைத்ரீய உபநிஷத்து பிரம்மாநந்தவல்லி,

௯-வது அனுவாகத்தில்.

𑌯𑌤𑍋 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌹, 𑌆𑌨
𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌨 𑌬𑌿𑌭𑍇𑌤𑌿 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌨. (௫௫)

வியாக்கியானம்.

எதற்கு லட்சணமுரைக்கமாட்டாமல் வாக்குப்பின்னிடைகிறதோ, எதையானல் மனம் அண்டமாட்டாதோ, அப்படிப்பட்ட பரப்பிரம்மத்தின் ஆநந்தத்தை அறிந்தவன் எப்போதும் பயப்படுகிறதில்லை என்று சொல்லியிருக்கிறது.

முண்டகோபநிஷத்தில் துவிதீயஅத்தியாயம், ௭-வதுவாக்கியத்தில்.

𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌷 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌭𑍁𑌵𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌪𑍁𑌰𑍇 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃. (௫௬)

வியாக்கியானம்.

விவேகபரிபூர்ணனும், சர்வக்கியனும், திவ்வியமான பிரம்மபுரமெங்கும் பரவியிருக்கும் மகிமையுள்ளவனும் ஆகிய ஆத்மா ஆகாசத்திலிருக்கிறான், அவன் மனோமயமானவன். அன்னத்தின்மேல் சார்ந்திருக்கும் பிராணனுக்கும் தேஹத்துக்கும் கட்டளையிடுவோன் என்று சொல்லியிருக்கிறது.

சுவேதாசுவதர. உபநிஷத்து மூன்றும் அத்தியாயம்,

க0-வது வாக்கியத்தில்.

𑌤𑌤𑍋 𑌯𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌤𑌰𑌂 𑌤𑌦𑌰𑍂𑌪𑌮𑌨𑌾𑌮𑌯𑌂 𑌯 𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌰𑌮𑍃
𑌤𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌥𑍇𑌤𑌰𑍇 𑌦𑍁𑌃𑌖𑌮𑍇𑌵𑌾𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿. (௫௭)

வியாக்கியானம்.

அவரைச் சிறந்ததிலெல்லாஞ் சிறந்தவரென்றும், ரூபமும் துன்பமும் மற்றவரென்றும் யாரறிகிறார்களோ அவர்களுக்கு அமிர்தத்துவங்கிடைக்கும்; இதராளுக்கோவெனில், துன்பமே கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறது.

தைத்ரீய உபநிஷத்து சீக்ஷாவல்லி, ௬-வது அநுவாகத்தில்.

𑌸 𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯 𑌆𑌕𑌾𑌶𑌃 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌮
𑌨𑍋𑌮𑌯𑌃, 𑌅𑌮𑍃𑌤𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃, 𑌆𑌕𑌾𑌶𑌶𑌰𑍀𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌸𑌤𑍍𑌯𑌾
𑌤𑍍𑌮 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌰𑌾𑌮𑌂 𑌮𑌨 𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌂. (௫௮)

வியாக்கியானம்.

ஹிருதயமாகிய ஆகாசத்தில், அமிர்தசுபாவத்தையும், பொன்போன்ற ஞானதேஜஸையும் உடைய மனோமயமான புருஷன் இருக்கிறான். அந்தப்

பிரம்மம் ஆகாசத்தைச் சரீரமாகவும், சத்தியத்தை ஆத்மாவாகவும், லீலையைப் பிராணனாகவும், ஆநந்தத்தை மனமாகவும், உடையவராகவும்; பரிபூர்ணசாந்தியை உடையவராகவும், அமிர்தராகவும் இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறது.

கடோபநிஷத்து மூன்றாம்வல்லி, ௧௦-௧௧-௧௨-வது வாக்கியங்களில்.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌾 𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾, 𑌅𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃,
𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃, 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍𑌪𑌰𑌃, 𑌮𑌹𑌤𑌃
𑌪𑌰𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂, 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌃, 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍍𑌨 𑌪𑌰𑌂 𑌕𑌿𑌞𑍍
𑌚𑌿𑌤𑍍 𑌸𑌾 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾 𑌸𑌾 𑌪𑌰𑌾 𑌗𑌤𑌿𑌃. (௧௭)

வியாக்கியானம்.

இந்திரியங்களில் பொருள்சிறந்தது. பொருளினுஞ்சிறந்தது மனம். மனதிற்சிறந்தது புத்தி. புத்தியிற்சிறந்தது பெரிய ஆத்மா. பெரிதிற்சிறந்தது அவ்வியக்தம் (அறியப்படாதது.) அவ்வியக்தத்திற்சிறந்தவர் புருஷர் (பிரம்மம்.) புருஷரிற்சிறந்ததொன்றுமில்லை; இதுதான் முடிந்தவெல்லையும் சிறந்தபேறும் என்று சொல்லியிருக்கிறது.

வாஜஸநேய உபநிஷத்து, ௧௨-வது வாக்கியத்தில்.

𑌅𑌨𑍍𑌧𑌂 𑌤𑌮𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇𑌽𑌸𑌂𑌭𑍂𑌤𑌿𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌤𑌤𑍋 𑌭𑍂
𑌯 𑌇𑌵 𑌤𑍇 𑌤𑌮𑍋 𑌯 𑌉 𑌸𑌂𑌭𑍂𑌤𑍍𑌯𑌾𑌂 𑌰𑌤𑌾𑌃. (௧௮)

வியாக்கியானம்.

இயற்கையைத் தொழுவோர்கள் (நாஸ்திகர்) அந்தகாரத்தை அடைவார்கள். படைப்பைத்தொழுவோர், இன்னுங்கொடிய அந்தகாரத்தை அடைவார்கள் என்று சொல்லியிருக்கிறது.

தலவகார உபநிஷத்து இரண்டாவது கண்டம்,
௩-௪-௫-வது வாக்கியங்களில்.

𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑌤𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌤𑌂, 𑌮𑌤𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑍇𑌦 𑌸𑌃, 𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂
𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂, 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌮𑍍, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍋𑌧𑌵𑌿𑌦𑌿𑌤𑌂 𑌮𑌤𑌂, 𑌅
𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇. 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌵𑍀𑌰𑍍𑌯𑌂, 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇𑌽𑌮𑍃
𑌤𑌂, 𑌇𑌹 𑌚𑍇𑌦𑌵𑍇𑌦𑍀𑌦𑌥 𑌸𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿, 𑌨 𑌚𑍇𑌦𑌿𑌹𑌾𑌵𑍇𑌦𑍀𑌨𑍍𑌮𑌹𑌤𑍀 𑌵𑌿𑌨
𑌷𑍍𑌟𑌿𑌃, 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌯 𑌧𑍀𑌰𑌾𑌃, 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌦
𑌮𑍃𑌤𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿. (௧௯)

வியாக்கியானம்.

(பிரம்மத்தை) நன்றாய் அறியேனென்பவன் அறிவான்; அறிவேனென்பவன் அறியான். (பிரம்மம்) தெரியுமென்பவர்களுக்குத்தெரியாது; தெரி

யாதென்பவர்களுக்குத்தெரியும். மநத்தால் அறியத்தக்கதென்று அறிபவன் அமிர்தனுவான். ஆத்மாவால் வீரியத்தையும், ஞானத்தால் நித்தியபதவியையும் அடைவான். இப்பிறப்பிலே அறிந்துகொண்டால், பிறகு நிலையுண்டாகும். இப்பிறப்பிலே அறியாவிட்டால் பெருந்துன்பமுண்டாகும். பூதங்கள்தோறும் பிரம்மத்தைக்காண்கிற தீரர்கள் இவ்வுலகத்தைவிட்டு நித்தியபதமடைகிருர்கள் என்று சொல்லியிருக்கிறது.

கடோபநிஷத்து நான்காவது வல்லி, கக-வது வாக்கியத்தில்.

மநஸைவேதமாப்தவ்யம் நேஹ நாநாஸ்தி கிஞ்சந ம்ருத்யோஸ்ஸ
ம்ருத்யும் கச்சதி ய இஹ நாநேவ பஶ்யதி. (௯௦

வியாக்கியானம்.

மனத்தால்மாத்திரமே அவனை (பிரம்மத்தை) எட்டக்கூடும். அவ்விடத்தில் பலவென்பது எவ்வளவேனுமில்லை. இவ்விடத்தில் பலவாகப்பார்ப்பவன் மரணத்தினின்றும் மரணத்துக்குச்செல்லுகிருன் என்று சொல்லியிருக்கிறது.

மநுஸ்மிருதி கஉ-வது அத்தியாயத்தில்.

ஸர்வபூதேஷு சாத்மாநம் ஸர்வபூதாநி சாத்மநி. (௯க)

வியாக்கியானம்.

சகலபூதங்களிலும் பிரம்மத்தையும், பிரம்மத்தில் சகலபூதங்களையும் சமமாய்க்காண்கிற ஆத்மக்கியானவான் பரமபதத்தை அடைகிருன் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

காலகாலத்துக்குமுன்னம், மதவாதிகளாகிய சொபாவவாதி, நிரீஸ்வரவாதி, பிருதிவிபூதவாதி, அப்புபூதவாதி, அக்கினிபூதவாதி, வாயுபூதவாதி, ஆகாசபூதவாதி, பஞ்சகோசவாதி, நவக்கிரஹவாதி, சூரியவாதி, சந்திரவாதி, ஊழ்வாதி, காலவாதி, மந்திரவாதி, எந்திரவாதி, அவிழ்தவாதி, மாயாவாதி, உலோகாயுதவாதி, அச்சுமாருதவாதி, அநேக ஈஸ்வரவாதி, ஸப்தப்பிரம்மவாதி, காரணஅணுவாதி, காரியஅணுவாதி முதலிய இன்னும் அநேகமதங்களைக்கண்டித்து சுருதிப்பிரமாணசித்தாந்தமாய் அஷ்டப்பிரமாணங்களினுலும், ஷட்லிங்க தாத்பரியத்தாலும் வஸ்துநிச்சயஞ்செய்து சாந்தி தாந்தி விசாரணை சந்தோஷமென்னும் சாதுக்கள்கூட்டத்தால் சதா ஆத்மானுத்மவிசாரணையால் யதார்த்தக்கியானம் விளங்கின. மஹாபுருஷர்களுக்கே விளங்குமேயல்லாமல் மற்றவருக்கு விளங்காது. இன்னும் வஸ்துநிச்சயஞ்செய்திருக்கிற பிரம்மலட்சணத்தை "வேதசாரவிளக்கமாய்" சற்று விவகரிக்கிருேம். அதாவது—

வேதசாரவிளக்கம்.

அநாதிகாலமே வேதபுருஷனை வேதத்திற்சொல்லியிருக்கிற சிருஷ்டிக்கிரம எதார்த்தத்தை விளக்கல்.

இருக்வேதத்தில் கஉ - வது அநுக்கிரமணிகையில் யாதொரு முக்கிய வாக்கியத்தை எவர்சொன்னவரோ அவரேரிஷி.

அவ்வாக்கியம் யாதொருதேவதையைநோக்கிச் சொல்லுகிறதோ அந்த தேவதையே அந்த வாக்கியத்திற்குத் தேவதை.

அசைகள்சேர்ந்து தோத்திரத்தின் இசைவிகற்பமாகின்றது. யாதொரு முக்கியவிஷயத்தைக்கோரிய இரிஷிகள் இசைவிகற்பத்தில் செய்திருக்கிற தோத்திரங்களால் அந்த தேவதைகளை யடைந்திருக்கின்றார்கள்.

இருக்வேதத்தில் கங-வது அநுக்கிரமணிகையில் "கடவுளர்" மூவராகமாத்திரமிருக்கிறார்கள். அவர்களுடைய இடங்கள் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகமாக விருக்கின்றன. அவர்கள் அக்கினி, வாயு, சூரியன் என்பவர்கள். இக்கடவுளர் பலவாகவும் மறைவாகவுமிருக்கின்றபேர்களை யுடையவர்களா யுச்சரிக்கப்படுகிறார்கள். சிருஷ்டிகர்த்தாவாகிய பிரஜாபதி படைப்புக்குட்பட் டவைகட்குக் கடவுளாயிருக்கிறார். "ஓம்" என்கிற அசை அந்தக்கடவுளைக் கருதுகின்றது. மேலான இடத்தில் வசிக்கிற பரமேஷ்டிக்கு அந்த அசைச்சொல் சம்பந்தப்படுகின்றது. அது அகண்டரூபியாயிருக்கின்ற பிரம்மத்திற்கு தெய்வத்துக்கு அத்தியாத்மாவுக்கு உரித்தாகின்றது. பலதிக்குகளுக் குரியவர்களாயிருக்கிற மற்றதேவதைகள் மூன்று கடவுளருடைய அம்சமாகவிருக்கின்றார்கள். ஏனென்றால், அவர்களுடைய பல கிருத்தியங்களைப்பற்றிப் பலவாய் நாமமிடப்பட்டும் குறிக்கப்பட்டு மிருக்கிறபடியாலேதான். (ஆனால் வாஸ்தவமாய் ஒரே தெய்வமிருக்கின்றது) அதாவது (மஹாத்மா) அத்தெய்வம் சூரியனென்று சொல்லுகிறது. ஏனென்றால், அச்சூரியன் எல்லாப்பொருள்கட்கு ஆத்மாவாக விருக்கின்றானென்பதால் இது மஹாத்துக்களாற் கூறப்பட்டிருக்கின்றது. அந்தச்சூரியபகவான் சலனமாயிருக்கின்ற ஜகத்திற்கும், ஸ்தாவரமாயிருக்கின்ற தஸ்துஷத்திற்கும் ஆத்மாவாகவிருக்கிறார். மற்ற தேவதைகள் அவருடையகூறாக இருக்கின்றார்கள். இப்படி அறிஞரால் வெளிப்படையாய்க் கூறப்பட்டிருக்கின்றது. ஞானிகள், அக்கினி, இந்திரன், மித்திரன், வருணன் முதலாகியபேர்களை ஸ்தோத்திரிக்கிறார்கள். அன்றியும்—

"இருக்வேதத்தில் உடு-வது-கo-வது அநுவாகத்தில் அல்ல"
"து அநுக்கிரமணிகையில் அம்பரீஷன் புத்திரியாகிய வாக்"
"காள். அவள் தன்னைத்தானே சிரேஷ்டமாய் சமஸ்தபரி"
"பூரண ஆன்மாவாகப்புகழ்ந்து பேசியிருக்கிறாள். வாக்கு"
"என்பது பாஷையென்றருத்தமாகின்றது. பிரம்மாவினி"
"ன்றுமுண்டாகும் விவேகசத்தியாகவிருக்கிறாள், வேதங்க"
"ளின் வைதீகத்துக்குரிய சாஸ்திரங்களுக்கொத்திருப்பதா"
"க வியாக்கியானியால் வியாக்கியானஞ் செய்யப்பட்டிரு"
"க்கிற இந்தக்கீதத்திற்குச்சரியான மொழிபெயர்ப்பு இதற்"
"கடியிற் கூறப்படுகிறது."

அம்பரீஷன் புத்திரியாகிய வாக்காள்வாக்கு.

நான் உருத்திரர், வசுக்கள், ஆதித்தியர், அஸ்வினிதேவர் இவர்கள்வரிசையில்நிற்கின்றேன். மித்திரன், வருணன் என்னும் சூரியனையும், கடலையும், இந்திரனென்னும் ஆகாயத்தையும், அக்கினியையும், அஸ்வினிதேவனையும் நிலைப்படுத்துவேன். சத்துருநாசனாகிய சோமனென்னும் சந்திரனையும், துவஷ்டாரி, பூஷணன், பகன் என்னும் பட்டப்பேருடைய சூரியனையும் நிலைபெறச்செய்வேன். யாகம், அர்க்கியம், தேவர்பூசை முதலாகியவைகளைச் செய்துவருகின்ற உண்மையான அடியாருக்குச் செல்வமளிப்பேன். அரசியாயிராநின்ற நான்செல்வமளிப்பவளாகவும், கல்வியாட்சிக்குடையவளாகவும், தொழத்தகுந்தெய்வங்களில் நான்முதல்தெய்வமாகவுமிருக்கின்றேன். தேவர்கள் தொழப்பெற்றவளாகவும், எங்கும்நிறைந்தவளாகவும், எல்லாவஸ்துக்களிலும் வியாபித்தவளாகவுமிருக்கின்றேன். உண்டியையுண்ணுகிறவன் என்மூலமாயுண்ணுகிறான். பார்க்கிறவன், மூச்செறிகிறவன், கேட்கிறவன் என்மூலமாய்ப்பார்க்கிறான். என்மூலமாய் மூச்செறிகிறான். என்மூலமாய்க்கேட்கிறான். என்னையறியாதவன் இழந்தவனாயிருக்கிறான். நான் ஓதுகிற கோட்பாட்டைக்கேள். தேவர்களாலும், மக்களாலும் தொழப்படுகிற என்னையே இதுவென்று நான் விளம்புகிறேன். நான் தெரிந்தெடுக்கிறவனைப் பலவந்தனாக்குகிறேன். அவனை நான் பிரம்மா ஆக்குகிறேன். துய்யவனாக்குகிறேன். ஞானியாக்குகிறேன். பிரம்மாவுக்குச் சத்துருவாகிய அரக்கனைக்கொல்ல வுருத்திரனுக்காக வில்லைவளைத்தேன். பிரஜைகளுக்காக அவர்களுடைய சத்துருக்கள்மேல் யுத்தஞ்செய்கிறேன். மண்ணுலகத்திலும், விண்ணுலகத்திலும் வியாபகமாயிருக்கிறேன். சர்வவியாபகமனத்தின் தலையில் பிதாவைப்பெற்றேன்; நான்பிறந்தது கடலினடுவிலேயாம், ஆகையால் எல்லாவஸ்துக்களிலும் யான் வியாபகமாயிருக்கிறேன், என்னுடைய வடிவால் இந்த வானத்தைத்தொடுகிறேன். எல்லாவஸ்துக்களையும், சிருஷ்டித்து வாயுவைப்போல் சஞ்சரிக்கிறேன். நான் வானத்திற்கும் அதீதமாயிருக்கின்றேன். இந்தப் பூமியைக்கடந்துநிற்கின்றேன். பெரிதாகிய ஒன்றென்பது யானேயாம் என்று சொல்லியிருக்கிறது. இதுவுமன்றியில்,

யஜுர்வேதம் ௭௪-வது அனுக்கிரமணிகையில்.

அக்கினியானது மூலகாரணமாக இருக்கின்றது. சூரியனும் அதுவாகவேயிருக்கிறான். அந்தப்பிரகாரமே வாயு அதுவாகவே இருக்கின்றது. அப்பிரகாரமே சந்திரனும் அதுவாகவே இருக்கிறான். அதுவே சுத்தப்பிரமமாகவுமிருக்கின்றது. அந்த ஜலங்களும் சிருஷ்டிகளின் கர்த்தாவும் அதுவாக இருக்கின்றன. நிமிஷங்களும், மற்ற காலஅளவுகளும் ஜோதிவீசுகிறவனிடத்திலிருந்து பிறந்தன. அவனை ஒருவனும் ஸ்பரிசத்தில் அகப்படுகிற ஒருபொருளைப்போல் மேலேயாவது சுற்றிலுமாவது மத்தியிலாவது கண்டுபிடிக்கக்கூடாது. ஆருடைய மகிமை அவ்வளவு பெரிதாயிருக்கின்றதோ அவரிலே உருவமொன்றில்லை. யார் அநேக திவ்வியகீதங்களால் துதிக்கப்பட்டி

ருக்கிறாரோ அவர் அதுவாகவிருக்கின்றார். சகலமண்டலங்களிலும் வியாப்கமாயிருக்கின்ற கடவுளாக அவர் இருக்கின்றார் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

அதர்வணவேதம் ௧௯௩-வது அனுக்கிரமணிகையில் பிரமஞானமடைந்தவர்சொல்வது, அதிசிரேஷ்டசாஸ்திரமாவது.

எதனால் இந்த அழியாத ஸ்வபாவம் தெரிந்துகொள்ளப்படுகின்றதோ அதுவாக இருக்கிறது. அந்த ஸ்வபாவம் அதிர்சியமானதாகவும், புலப்படாததாகவும், பிடிக்கப்படக்கூடாததாகவும், கிரகிக்கப்படக்கூடாததாகவும், வருணமில்லாததாகவும், நேத்திரங்கள் செவிகளில்லாததாகவும், கரங்கள் அல்லது பாதங்களில்லாததாகவுமிருக்கின்றது. ஆகிலும் அது எப்போதும் நானாவிதமாகச் சர்வவியாபகமாயிருக்கிறதாகவும்,நுட்பாநுட்பமாகவும்,மாறாததாகவும், வஸ்துக்களுக்குக்காரணமாகவும், மெய்ஞ்ஞானிகளால் தியானிக்கப்பட்டதாகவுமிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் ௭௫-வது அனுக்கிரமணிகையில்.

யாருக்குமுன் ஒன்றும் பிறக்கப்படவில்லையோ, யார் எல்லாவஸ்துக்களுமாயிருக்கிறாரோ, அவரே பதினாறு அவயவங்களோடாகிய சரீரத்துடன் சிருஷ்டிகர்த்தாவாகி சிருஷ்டியில் ஆநந்தங்கொண்டு, சூரியன்-சந்திரன்-அக்கினி ஆகிய மூன்றுசோதிகளை யுண்டாக்கினார் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் ௭௭-வது அனுக்கிரமணிகையில்.

ஞானியானவன் அந்த இரகசியப்பொருளைப்பார்க்கிறான். அந்தப்பொருளில் இந்தப் பிரபஞ்சமுழுதும் அந்த ஆதரவினால் நித்தியமாயிருக்கின்றது. அவனிலே இந்த உலகம் அமிழ்ந்திருக்கின்றது. அவனிலிருந்து இந்தப் பிரபஞ்சம் உண்டாகின்றது. ஜீவப்பிராணிகளில் அவன் நானாவடிவங்களோடு புரிமுறுக்காகி நெசவாயிருக்கின்றான். அந்தப் பெரியகாரிய அறிவிப்பின் கருத்தை யறிந்திருக்கிற அறிஞர் அந்த நித்தியப்பொருளை, அந்த அந்தரங்கப்பொருளை, அந்தப்பலவாகிய இருப்பிடத்தைத் தீவிரமாய்க் கொண்டாடக்கடவர். அந்தரங்கத்தில் அடங்கியிருக்கிற சிருஷ்டி திதி சம்மாரமாகிய மூன்றுநிலைகளை யறிந்திருக்கிறவன், தந்தைக்குத்தந்தையாக இருக்கிறான், யாராலே தேவர்கள் மூன்றாவது உலகம் அல்லது பரமண்டலத்திலிருக்கும்போது, சாவில்லாமையைப் பெறுகிறார்களோ, அந்தப்பிரம்மா நம்முடைய வணங்கத்தக்க தந்தையாகவும், எல்லா உலகங்களையும் ஆளுகிற திருவுளச்செயலாகவுமிருக்கின்றார் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

அதர்வணவேதம் ௧௭௪-வது அனுக்கிரமணிகையில்.

சிலந்திப்பூச்சியானது அதன் நூல்களை நாற்று மறுபடியும் சேர்ப்பது, பூண்டுகள் பூமியின்மீது முளைப்பதுபோலவும், ஜீவப்பிராணிகள்பேரில் உ

ரோமங்கள் முளைப்பதுபோலவும், இந்தப்பிரபஞ்சம் அழியாத ஸ்வபாவத்திலிருந்துண்டாகின்றது. தியானத்தினால் இந்த விரிந்த ஒன்று முளைக்கின்றது. அதனிலிருந்து ஆகாரம் அல்லது சரீரமுண்டாயிருக்கின்றது. அதிலிருந்து கிரமவரிசைப்பிரகாரம் உயிர்ப்பு, அந்தக்கரணம், சத்தியபூதங்கள், உலகங்கள் நல்வினைகளால் உண்டாகிற அழிவின்மை உண்டாகின்றன. எல்லாமறிகிற அவனது ஞானத்தோடுகூடிய ஆழ்ந்த தியானத்தினால் சர்வக்கியத்துவமுள்ள வஸ்து தரிசனமாகும். அதிலிருந்து இந்தப் பிரத்தியட்சமாயிருக்கிற விரிந்த ஒன்றும், நாமரூபங்களும், ஆகாரமும் உண்டாகின்றன. இதுதானுண்மையென்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் கஉ0-வது அநுக்கிரமணிகையில்.

வருணன் சந்ததியான பிருகு என்பவர் தம்முடைய தந்தையை நெருங்கிப்போய், வணங்கப்பெற்ற தந்தையே; எனக்குப் பிரம்மத்தை தெளிவிக்கவேண்டுமென்றார். அதற்கு வருணன் இதற்கடியில் வருவதை விளக்கினார். உண்டி அல்லது (சரீரம்) உண்மை அல்லது (பிராணன்) பார்வை கேட்டல் மனது (அல்லது எண்ணம்) பேச்சு இவைகளும், மற்றெல்லாப்பதார்த்தங்களும் எவ்விடத்திலிருந்துண்டாயினவோ அதுவும், பிறந்தபோது எதனால் ஜீவித்திருக்கின்றனவோ அதுவும், அவைகள் எதைப் பராமரிக்கின்றனவோ அதுவும், எதில் அவைகள் செல்லுகின்றனவோ அதுவும், நீ தேடுகிற அதுவுமே பிரம்மமாக இருக்கின்றது என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் கஉக-வது அநுக்கிரமணிகையில்.

அவர் தபோநிஷ்டையிலிருந்து தியானதிருஷ்டியினால் உண்டி அல்லது சரீரமே பிரம்மமென்றறிந்தார். ஏனென்றால் எல்லாச்சீவர்களும் உண்டியிலிருந்தே உண்டாயினார்கள். பிறந்தபோதும் உண்டியினாலேயே பிழைத்திருக்கிறார்கள். உண்டியைப் பராமரிக்கிறார்கள். உண்டிக்குள்ளாகவே செல்லுகிறார்கள். ஆதலால் இதை அவர் கண்டறிந்தார். ஆனால் இன்னந் திருப்தியடையாமல் வருணனாகிய தந்தையைக் கிட்டிப்போய் வணங்கப்பெற்ற தந்தையே! பிரம்மத்தை யெனக்குத் தெளிவிக்கவேண்டுமென்றார். வருணன் நிஷ்டையினால் பிரம்மஞானத்தை யடையென்று மறுமொழிசொன்னார். பிரம்மம் அநுசந்தானப்பொருளாயிருக்கிறதென்றார் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் கஉரு-வது அநுக்கிரமணிகையில்.

இப்படிப்பட்டதுதான் வருணனால் போதிக்கப்பட்டுப் பிருகுவினால் அடையப்பட்ட சாஸ்திரமாக இருக்கின்றது. அது மேலான பரமாணுஸ்வரூபமாக ஆத்துமாவைக்குறித்துப் பேசப்பட்டதாக இருக்கின்றது. இதை எவன் அறிந்திருக்கிறானோ, இதை எவன் அநுஷ்டிக்கிறானோ அவன் விஸ்தாரம் போஜனமளிக்கப்படுவான். அன்னத்தை ஜீரணிப்பிக்கிற ஒளியுள்ள அக்

கினியாவான். சந்ததியினுலும், கால்நடைகளாலும், பரிசுத்த பரிபூரணங்களாலும், பெரியவனுகி மங்களகரமான கீர்த்தியினுலும் பெரியவனுயிருப்பான் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் அகூ-வது அனுக்கிரமணிகையில்.

வித்தியாரண்ணியரால் இந்த உபநிஷத்திலிருந்து முதலில் ஆராய்ந்தெடுத்தெழுதியது, விரயத்து ஆரண்ணியகத்தின் மூன்ருவது வியாக்கியானத்தின் நாலாவது பிரிவு பிராம்மணமாக இருக்கின்றது. அது விராட்டுவை இதற்கடியில் வருவதுபோல் விவரித்துக்காட்டுகின்றது என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

ஷை வேதம் கூ0-வது அனுக்கிரமணிகையில்.

இவ்வண்ணமாகச் சரீரம் பிறப்பதற்கு முன்னதாய் வேறுபாடுள்ள வடிவங்களாக இருந்தது. ஆத்மா மனுஷவடிவுகொண்டு உடனே தன்னைச் சுற்றிலும்பார்த்தான். அந்த ஆதிவஸ்து தன்னைத்தவிர மற்ருென்றுங்காணவில்லை. அவன் முதலில் நானேநான் என்று சொன்னுன். ஆகையால் அவனுடையபேர் நான் என்பதாக இருந்தது. அதன்பின்பும் இப்போதுகூட ஒருமனுஷனை அழைக்கும்போது நான்தான் என்று முதலில் மறுமொழி சொல்லுகிருன். அதன்பின்பு அவனுக்குரிய மற்ருெருபெயரைச் சொல்லுகிருன் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

ஷை வேதம் கூக-வது அனுக்கிரமணிகையில்.

மேன்மையைத்தேடுகிற இதுக்கெல்லாம் முன்பட்டவனுயிருக்கிற அவன் தன்னுடைய சொந்தமேன்மைக்குப் பாபகரமான தடங்கலாயிருக்கிற எல்லாவற்றையுந் தீயால் எரித்துவிட்டான். ஆகையால் இந்த உண்மையையறிந்த மனிதன் இதைச்செய்து தனக்கு முந்தியிருக்க வகைதேடுகிற அவனை வெல்லுகிருன் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் கஉஉ-வது அனுக்கிரமணிகையில்.

பிருகு ஆனவர் கனயோகத்திலிருந்துபார்த்து உயிர்ப்பாகிய பிராணனே பிரம்மமாகக்கண்டார். ஏனென்ருல் இந்த வஸ்துக்களெல்லாம் உண்மையாகவே உயிர்ப்பிலிருந்து உண்டாயிருக்கின்றன. பிறந்தபோது உயிர்ப்பினுலேயே அவைகள் ஜீவித்திருக்கின்றன. உயிர்ப்பையே அவையவை பரமரிக்கின்றன. உயிர்ப்பிலேயே அவைகள் செல்லுகின்றன. ஆதலால் இதை யவர் உணர்ந்தார். ஆனுல் மறுபடியும் அவர் தந்தையாகிய வருணனைக்கிட்டிப்போய் வணங்கப்பெற்ற தந்தையே! பிரம்மத்தை எனக்குத் தெளிவிக்கவேண்டுமென்ருர். அதற்கு வருணன் கனயோகநிஷ்டையினுல் தேடி அறி, அதுதான் பிரம்மமென்ருர் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் கஉங-வது அனுக்கிரமணிகையில்.

நிஷ்டையிலிருந்து தியானித்து அறிவே பிரம்மமாகக்கண்டார். ஏனென்றால், இந்த எல்லாஜீவர்களும் உண்மையாகவே அறிவிலிருந்துண்டாயிருக்கிறார்கள். பிறந்தபோது அறிவினாலே ஜீவித்திருக்கிறார்கள். அறிவை பராமரிக்கிறார்கள். அறிவிலே செல்லுகிறார்கள். ஆதலால் இதை யவர் அறிந்தார். ஆனால் மறுபடியும் அவர் தந்தையாகிய வருணனிடஞ்சென்று வணங்கப்பெற்ற என் தந்தையே பிரம்மத்தை யெனக்குத் தெளிவிக்கவேண்டுமென்றார். ஞானவனுசந்தானத்தினால் விசாரித்தால் கனயோகமே பிரம்மமாக இருக்கிறதென்றார் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் கஉச-வது அனுக்கிரமணிகையில்.

அவர் தியானித்துப்பார்த்து ஆநந்தமே பிரம்மமென்றறிந்தார். ஏனென்றால், எல்லாச்சீவர்களும் உண்மையாகவே ஆநந்தத்திலிருந்துண்டாயிருக்கிறார்கள். பிறந்தபோதும் ஆநந்தத்தினாலேயே ஜீவித்திருக்கிறார்கள். ஆநந்தத்தையே பராமரிக்கிறார்கள். ஆநந்தத்திற்றானே செல்லுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் கூஉ-வது அநுக்கிரமணிகையில்.

அவன்பயமுற்றான், அதனால்தான் மனிதன் தனியாயிருக்கும்போது பயப்படுகிறான். ஆனால், அவன்தன்னைவிட வேறொன்றுமில்லாததினால் நான்பயப்படவேண்டிய தென்னவென்று ஆலோசித்தான். இவ்விதமாக அவனுடையபயம் அவனைவிட்டுப்போய்விட்டது. பயமானது மற்றொருவனுக்காகையால் அவன் எதுக்காகப்பயப்படவேண்டும் என்றுசொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் கூங-வது அநுக்கிரமணிகையில்.

அவன் ஆநந்தப்படவில்லை. ஆகையால், மனுஷன் தனித்திருக்கும்போது ஆநந்தப்படுகிறதில்லை மற்றொருவர் இருக்கவேண்டுமென்று அவன்கோரினான். உடனே ஒரு ஆண்பிள்ளையும் ஒருபெண்பிள்ளையும் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டிருக்கும்படியான அவ்விதமாய்விட்டான், தன்னிலிருந்தேதானே இரண்டாகும்படி இதைச்செய்தான், இவ்விதமாக ஒருபுருஷனும் ஒருமனைவியுமானான். ஆகையால், இது அவ்விதமாகப்பிரிந்த சரீரமாகவிருந்தது. (அது தன்னில்தானே அபூரணமான பாதிசரீரமாக இருந்தது) யாஞ்ஞவற்கியர் அதைப்பாதிசரீரமென்றே சொல்லியிருக்கிறார். இந்தவெற்றிடம் ஸ்திரீயினால் பூரணமாயாக்கப்பட்டிருக்கிறது. அவன் அவளைச்சேர்ந்தான், அதனால் மனுஷர் உற்பத்தியானார்கள். என்றுசொல்லியிருக்கிறது. அன்றியும்;

யஜுர்வேதம் கூச-வது அநுக்கிரமணிகையில்.

அவள் அவனிடத்திலிருந்து என்னையுண்டாக்கியிருக்க முறையற்றவிதமாக அவன் என்னை எப்படிச்சேருவான், நான் இப்போது ஒருமாறுவே

ஷங்கொள்வேனென்று அநுமானத்தோடு ஆலோசித்து, அவள் ஒருபசுவா னாள்-அவன் ஒருரிஷபமாகி அவளைப்புணர்ந்தான், கன்றுகள்பிறந்தன. அவள் ஒரு கோளிகைக்குதிரையானாள், இவன் ஒருமாப்பிளைக்குதிரையானான், அவள் ஒருபெண்கழுதையானாள், இவன்ஒரு ஆண்கழுதையானான், இவ்விதமாக அவன் அவளை மறுபடியுஞ்சேர்ந்தான். ஒருகுளம்புள்ள சந்ததிகள் உண்டாயின. அவள்ஒரு பெண்வெள்ளாடானாள், இவன் ஆண்வெள்ளாடானான், அவள்ஒரு பெண்செம்மறியாடானாள், இவன்ஒரு ஆண்செம்மறியாடாகி அவளைப்புணர்ந்தான், அதனால் செம்மறி ஆடுகளும் உற்பத்தியாயின. இவ்விதமாக மஹாநுட்பமான ஜந்துக்களாகிய யாவற்றையும் ஜதைஜதையாகச்சிருஷ்டித்தான், என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

இருக்குவேதம் ௫௭-வது அனுக்கிரமணிகையில்.

இவ்வண்ணமாகச் சைதன்னியமுள்ள அசரீரியாகப்பிறந்து அவர்பூதியங்களைத்தெரிந்தெடுத்து,நானன்றி யதொன்று மிவ்விடத்திலிருக்கிறதென்று உறுதிப்படுத்தமாட்டுவேன். அவர்நினைக்கிற இந்த ஒருவனை ஆராய்ந்து, விரிந்த பிரபஞ்சத்தையும் சிந்தித்து, நானதைப்பார்த்தேனேவென்றார். ஆகையால், அவர் இதமத்திரம் அல்லது சாட்சியெனப்பெயரிடப்படுகிறார். யதார்த்தமாகச் சாட்சியென்பதுதான் அவரது நாமமாயிருக்கின்றது. சாட்சியாயிருக்கிற அவரை ஆழ்ந்த அருத்தமுள்ளபேராகிய இந்திரனென்றழைக்கிறார்கள். ஏனெனில், தேவர்கள் சாதாரணமாய்த் தங்கள்பேர் மறைவாயிருப்பதில் ஆநந்திக்கிறார்கள். தேவர்கள் மந்திரங்களில் ஆநந்திக்கிறார்கள். என்றுசொல்லியிருக்கிறது. அன்றியும்;

இருக்குவேதம் ௫அ-வது அநுக்கிரமணிகையில்.

இந்த ஆத்மா மனிதனில் மூலகாரணமாக அல்லது கருவாக அல்லது விந்துவாக இருக்கின்றது. அந்தவிந்து சரீரத்தின் எல்லா அவயவங்களிலுமிருந்து இழுத்தசத்தாக இருக்கின்றது. இவ்விதமாக மனிதன் தனக்குள் தன்னைப்போஷிக்கிறான், ஆனால் அதை அவன் ஸ்திரீக்குள் பிரயோகிக்கும்போது அந்தக்கருவை அவன்ஜனிப்பிக்கிறான், அதுவே அதன் முதற்பிறப்பாக இருக்கின்றது, என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

இருக்குவேதம் ௫௯-வது அநுக்கிரமணிகையில்.

அதுபெண்மகளோடு அபேதமாகி, அவள்சொந்தசரீரத்தைப்போல் ஆகிவிடுகின்றது. அது அவளையழித்துவிடாது, அவள் அவனைத் தனக்குள் இவ்விதமாக ஏற்றுக்கொண்டு போஷிக்கிறாள். அவனைப்போஷிக்கும்போது அவனால் அவள்போஷிக்கப்படவேண்டும். பெண்மகள் அந்தக்கருவைபோஷிக்கிறாள். ஆனால் அவன் அதற்குமுன்னமே அக்குழந்தையைப்போஷித்தான். அதுபிறந்தபின்பும் அதை யின்னம்போஷிக்கிறான். குழந்தை பிறப்பதற்கு முன்னும்பின்னும் அவன்போஷிக்கிறபடியால், அவன்தன்னையேபோஷிக்கிறான். சந்ததியைபெற்றுவரவேண்டியநிமித்தம், இவர்களும் இவ்வித

மாக நிலைபெறச்செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டதே அவனுடைய இரண்டாவதுபிறப்பாக இருக்கின்றது என்றுசொல்லியிருக்கிறது. அன்றியும்;

இருக்குவேதம் ௬௰-வது அநுக்கிரமணிகையில்.

இந்த இரண்டாவது பிறப்பான அவனே சமயாசாரவைதீககருமங்கள் செய்வதற்காக அவனுடைய பிரதிகாரியஸ்தனாகிறான். மற்றொருவனாகிய தானே அதனுடைய கடமைகளைநிறைவேற்றி ஆயுள்நாளைமுடித்து இறந்து போகிறான். இந்தப்பிறப்பைவிட்டகன்று மற்றொருவடிவாக மறுபடியும்பிறக்கின்றான். அது அவனுடைய மூன்றாவதுபிறப்பாக இருக்கின்றது என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

இருக்குவேதம் ௬௧-வது அநுக்கிரமணிகையில்.

இதுபரிசுத்தமஹாத்மாவினால் கூறப்பட்டது. கருப்பாசயத்தில் இந்தக் கடவுளருடைய தொடர்ச்சியுள்ள பிறப்புகளையெல்லாம் நான் அறிந்திருக்கிறேன். நூறுசரீரங்கள் இருப்புச்சங்கிலிகளைப்போல் என்னை அமர்த்துகின்றன. ஆகிலும் நான் ஒரு இராஜாளியைப்போல் வேகமாக எழும்புகிறேன். இவ்விதமாக கருப்பாசயத்தில் அமைதலாயிருந்த வாமதேவர்சொன்னார். இந்தநிருவிகற்பகாட்சியையடைந்து அவன் அந்தச்சரீரபந்தத்திலிருந்து நீங்கியெழும்பிச் சுவர்க்கலோகத்திற்கேறிப்போய், எல்லாக்கோரிக்கையையும் அடைந்து சிரஞ்சீவியாய்விட்டான். அவன்சிரஞ்சீவியாய்விட்டான் என்றுசொல்லியிருக்கிறது. அன்றியும்.

இருக்குவேதம் ௬௨-வது அநுக்கிரமணிகையில்.

நாம் அவனைத்தொழுலாமென்றால் ஆன்மாவென்பதென்னை? ஆன்மாவென்பதெது? ஒருமனிதன் எதினால்பார்க்கிறானோ? எதினால்கேட்கிறானோ? எதினால் வாசனைஅறிகிறானோ? எதினால்வசனிக்கிறானோ? எதினால் இனிப்புள்ள அல்லது இனிப்பற்ற உருசியைப்பிரித்தறிகிறானோ அது இருதயமா? அல்லது அறிவா? அல்லது மனதா? அல்லது உணர்வா? அல்லது மனோதத்துவமா? அல்லது பகுத்தறிவா? அல்லது கிரகிப்பா? அல்லது புலப்பாடா? அல்லது ஞாபகமா? அல்லது கவனிப்பா? அல்லது மன்றுகையா? அல்லது தீவிரமா? அல்லதுவருத்தமா? அல்லது அவதானமா? அல்லது இணக்கமா? அல்லது துணிவா? அல்லது பிராணிகள் செய்கையா? அல்லது விருப்பமா? அல்லது இச்சையா? அன்றியும்;

இருக்குவேதம் ௬௩-வது அநுக்கிரமணிகையில்.

இவைகளெல்லாம் அறிவின் பரியாயநாமங்களாக இருக்கின்றன. ஆனால் அறிவின் அந்தரிந்திரியம் அடங்கியஇந்த ஆத்துமா பிர்ம்மா வாகவிருக்கின்றது. அவரே இந்திரன், அவரேசிருஷ்டிகர்த்தாவாகிய பிரஜாபதி. இந்தத்தேவர்களெல்லாம் அவராகவேயிருக்கின்றார்கள். இந்தப்பிரிதிவி, வாயு, பர

மாணு, சலிலத்துவம் உதகம், சுடர்; ஆகிய மூலபஞ்சபூதங்களும், அவராக வேயிருக்கின்றன. இவைகளும் இவைகள்கலந்த சூக்ஷுமப்பொருள்களும் மற்றவஸ்துக்களும், மற்றவிதைகளும், முட்டைகளிலிருந்து உற்பத்தியாயும், அல்லது கருப்பாசயத்தில் பிறந்தும், அல்லது வேர்வையில் உதித்தும், அல்லது சாகங்களிலிருந்து துளிர்த்தும், அசுவங்கள் அல்லது பசுக்கள், அல்லது மனிதர், அல்லது யானைகளுமாகவுண்டாகி எல்லாச்சீவப்பிராணிகளாக இருப்பவைகள், நடப்பவைகள், அல்லது பறப்பவைகள், பூண்டுகள், விருட்சங்கள் ஆகியயாவத்து அசரங்களும், அவைகளெல்லாம் அறிவின் நோக்கமாகவிருக்கின்றன. அறிவின்பேரில் எல்லாவஸ்துக்களும் ஆதேயமாயிருக்கின்றன. உலகம் அறிவினுக்காக விருக்கின்றது. அதற்காதாரம் அறிவேயாம். அறிவே பெரியவஸ்துவாகிய பிரம்மாவாகவிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றது.

இருக்குவேதம் ௬௪-வது அநுக்கிரமணிகையில்.

இந்தஇயற்கை அறிவாகிய ஆத்மாவினல்தான் அந்தயோகி இந்தவுலகத்திலிருந்து சுவர்க்கத்திற்கு ஏறி எல்லாக்கோறிக்கையும் அடைந்து சாவில்லாதவனானன். அவன்சாவில்லாதவனானன் என்றுசொல்லியிருக்கிறது. அன்றியும்.

இருக்குவேதம் ௬௫-வது அநுக்கிரமணிகையில்.

என்னுடையபேச்சு அறிவின்மீது ஆதாரப்பட்டிருக்கலாம். என்னுடையமனது எனதுவசனிப்பினிடத்தில் கவனமாயிருக்கலாம். ஓ! சுவயம்விளக்கமாகிய அறிவே! எனக்குவிளக்கமாயிருக்கக்கடவாய் எனக்காக ஓ! பேச்சே, ஓ! மனதே, இந்தவேதத்தை யணுகுவாயாக. நான்கேள்விப்பட்டிருக்கிறது மறந்துபோகாதிருக்கக்கடவது. இரவும் பகலும் நான் அவதானித்திருப்பதை யுற்றுப்பார்த்துக்கொண்டிருப்பேனாக. உண்மையைநினைப்பேனாக. சத்தியத்தைப்பேசுவேனாக. அது என்னைக்காப்பாற்றக்கடவது. கற்பிப்போனை காப்பாற்றக்கடவது. அது என்னை தற்காக்கக்கடவது. அதைக்கற்பிப்போன் தற்காக்கக்கடவன். அதைக்கற்பிப்போன் தற்காக்கக்கடவன். கற்பிப்போனை அதுதற்காக்கக்கடவது என்றுசொல்லியிருக்கிறது. அன்றியும்;

அனுதிசிருஷ்டியை வேதத்தில்சொல்வது.

இருக்குவேதம் ஐத்திரோயவுபநிஷத்து என்றுகூறப்படுகின்ற இரண்டாவது ஆரண்ணியகத்தினுடைய பாகம் இதற்கடியில் வருவதுபோல மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது.

இருக்குவேதம் ௭௭-வது அநுக்கிரமணிகையில்.

இந்தப்பிரபஞ்சம் யதார்த்தமாக ஆதியில் ஆத்மாவாகமாத்திரமிருந்தது. சாரசரமாகிய யாதொன்றும் அதுவன்றி வேறில்லை கடவுள் உலகங்களைச் சிருஷ்டிப்பேனென்று நினைத்தார். இவ்விதமாக அவர் பலவுலகங்களைச்

சிருஷ்டித்தார். ஜலம், வெளிச்சம், சாவுக்குரிய ஜீவர்கள், ஜலங்கள் இவைகளைச் சிருஷ்டித்தார். ஜலமானது வானத்திற்குமேலும் இருக்கின்றது. அதற்கு வானம் ஆதாரமாக விருக்கின்றது. வாயுமண்டலத்தில் வெளிச்சம் அடங்கியிருக்கின்றது. பூமி அனித்தியமுள்ளதாயிருக்கிறது. அடியிலிருக்கிற பிரதேசங்கள் ஜலங்களேயாம் என்று சொல்லியிருக்கிறது.

இருக்குவேதம் ௪அ-வது அனுக்கிரமணிகையில்.

இவைகள் யதார்த்தமாகவே யுலகங்களாக விருக்கின்றனவென்று உலகங்களின் திக்குப்பாலகரைச் சிருஷ்டிப்பேனென்றார். இவ்விதமாக ஜலங்களிலேயிருந்து வலித்துப் பிண்டமான ஒருவஸ்துவை யுண்டாக்கினார். அவரதை நோக்கிப்பார்த்தார். அந்தப்படி அனுசந்தித்த வஸ்துவிலிருந்து ஒரு முட்டையைப்போல் வாய்திறந்தது. அந்த வாயிலிருந்து பேச்சுண்டாச்சு. அந்தப்பேச்சிலிருந்து அக்கினியுண்டாச்சு. நாசிகள் பரவியதுகள். நாசிகளிலிருந்து மூச்சு புறப்பட்டது. மூச்சிலிருந்து வாயு பிறந்தது. கண்கள் திறந்தன; கண்களிலிருந்து கண்ணோக்கம் பிறந்தது. அந்தக்கண்ணோக்கத்திலிருந்து சூரியன்பிறந்தான்; காதுகள் விரிந்தன. காதுகளிலிருந்து கேட்டல் வந்தது. அதிலிருந்து இடமுள்ள மண்டலங்கள் பிறந்தன. சர்மம் விரிந்தது. சர்மத்திலிருந்து உரோமம் உண்டாச்சு. அதிலிருந்து பூண்டுகளும் விருட்சங்களும் வளர்ந்தன. மார்பு திறக்கப்பட்டது. மார்பிலிருந்து மனது பிறந்தது. மனதிலிருந்து சந்திரன் பிறந்தான். தொப்புள் வெடித்தது. தொப்புளிலிருந்து விழுங்குகை பிறந்தது. அதிலிருந்து மரணம் பிறந்தது. பிறப்பிக்கிற அவயவம் வெடித்தது. அதிலிருந்து உற்பீஜம் பிறந்தது. அதிலிருந்து அதின் மூலமாகிய ஜலங்கள் பிறந்தன என்று சொல்லியிருக்கிறது. அன்றியும்;

இருக்குவேதத்தில் மூன்றுவது அனுவாகத்தில் லோகபாலர்களைச்சிருஷ்டிப்போமென்று பிரம்மம்விரும்பிமுடித்ததை வேதப்பிரமாணசித்தாந்தமாய்ச் சுருதிசொல்லல்.

𑌸 𑌈𑌕𑍍𑌷𑌤 𑌇𑌮𑍇 𑌨𑍁 𑌲𑍋𑌕𑌾 𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌾𑌨𑍍𑌨𑍁 𑌸𑍃𑌜𑌾 𑌇𑌤𑌿 𑌸𑍋𑌽𑌦𑍍𑌭𑍍𑌯 𑌏𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯𑌾𑌮𑍂𑌰𑍍𑌛𑌯𑌤𑍍 𑌤𑌮𑌭𑍍𑌯𑌤𑌪𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯𑌾𑌭𑌿𑌤𑌪𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌂 𑌨𑌿𑌰𑌭𑌿𑌦𑍍𑌯𑌤, 𑌯𑌥𑌾𑌣𑍍𑌡𑌂, 𑌮𑍁𑌖𑌾𑌦𑍍𑌵𑌾𑌕𑍍, 𑌵𑌾𑌚𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃 𑌨𑌾𑌸𑌿𑌕𑍇 𑌨𑌿𑌰𑌭𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑌾𑌂, 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑍍𑌵𑌾𑌯𑍁𑌃, 𑌅𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 𑌨𑌿𑌰𑌭𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑌾𑌂, 𑌅𑌕𑍍𑌷𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃, 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌣𑍌 𑌨𑌿𑌰𑌭𑌿𑌦𑍍𑌯𑍇𑌤𑌾𑌂, 𑌕𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂, 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌦𑌿𑌶𑌃 𑌤𑍍𑌵𑌙𑍍𑌨𑌿𑌰𑌭𑌿𑌦𑍍𑌯𑌤, 𑌤𑍍𑌵𑌚𑍋 𑌲𑍋𑌮𑌾𑌨𑌿, 𑌲𑍋𑌮𑌭𑍍𑌯 𑌓𑌷𑌧𑌿𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌯𑌃 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌨𑌿𑌰𑌭𑌿𑌦𑍍𑌯𑌤, 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌮𑌨𑌃, 𑌮𑌨𑌸𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾𑌃, 𑌨𑌾𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑌭𑌿𑌦𑍍𑌯𑌤, 𑌨𑌾𑌭𑍍𑌯𑌾 𑌅𑌪𑌾𑌨𑌃, 𑌅𑌪𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃, என்றுசொல்லியிருக்கிறது. அன்றியும்;

வேதத்தை அனுசரித்துச்சொல்லும் மனுதர்மசாஸ்திரத்தில் அனாதி சிருஷ்டி கூறல்.

௫- வது அத்தியாயம்.

இந்தவுலகமானது பிரளயகாலத்தில் மூலப்பிரகிருதியில் ஐக்கியமாய் இருளில் மறைந்தபதார்த்தம்போல கண்ணுக்குத்தோற்றாததாயும் அடையாளமில்லாததாயும் சப்தத்தாலறியப்படாததாயும் தர்க்கசாஸ்திர யுக்தியைக்கொண்டு நிச்சயிக்கத்தகாததாயும் யாவும் உறங்கினதுபோலும் இருந்தது என்றும்:

௬ - வது அத்தியாயம்.

இவ்வாறு பிரளயகாலமுடிந்தபின்பு ஜீவாத்மாக்களைப்போல கர்மத்தினாலே தேகமெடுக்காமல் தன்னிச்சையினாலே தேகமெடுக்கத்தக்க சுவயம்புவான பகவானானவர் கண்முதலான புறவிந்திரியங்களாலே கிரகிக்கப்படாதவராயும் ஒருவராலும் தடுக்கப்படாத சிருஷ்டிமுதலிய முத்தொழிலையுடையவராயும் ஆகாயமுதலிய பஞ்சமகாபூதங்களைப் பிரகாசப்படுத்துகிறவராயும் பிரகிருதிப் பிரேரகராயும் பிரகாசித்தார். சகலவேதபுராணங்களினாலே பிரசித்தராயும் மநதினாலே மாத்திரம் அறியத்தக்கவராயும் புறவிந்திரியங்களாலே அறியத் தகாதவராயும் உருவமில்லாதவராயும் சர்வாந்தரியாமியாயும் இவ்வளவென்று சிந்திக்கத்தகாத மஹிமையையுடையவராயும் பிறப்பிறப் பில்லாதவராயும் இருக்கப்பட்ட யாதொரு சுவாமியுண்டோ அவரே இந்த ஆகாயமுதலிய பூதங்களாகப் பிரகாசித்தார். என்றும்:

௮ - வது அத்தியாயத்தில்.

அந்தப்பரமாத்மாவானவர் சகல உயிர்களுக்கும் இருப்பிடமான தன் சரீரத்தினின்றும் நானாவிதமான பிரஜைகளைச் சிருஷ்டிக்க நினைத்து பிரம்மாண்ட சிருஷ்டிக்குமுன்னம் ஜலத்தையுண்டுபண்ணி, அதில் தன் சக்தி ரூபமான ஒருவிதையை விதைத்தார். என்றும்:

௯ - வது அத்தியாயத்தில்.

அவ்விதையானது சர்வேஸ்வரருடைய இச்சையினாலே தங்கநிறமான ஒரு அண்டமாயிற்று. அவ்வண்டத்தில் முன்சென்மத்தில் பிரம்மபட்டத்துக்குத் தக்க தவசுபண்ணின ஒருஜீவனை பிர்ம்மாவாகச்சிருஷ்டித்து, அவருக்குள் அந்தர்யாமியாய்ப் பிரவேசித்தார். அந்தப்பிரம்மனுக்கு சர்வலோகபிதாமகனென்றுபெயர் என்றும்:

முதல் அத்தியாயம் ௧௧ - வது ஸ்லோகம்.

பிரபஞ்சத்துக்குக் காரணராயும் சரீரமில்லாதவராயும், அழிவில்லாதவராயும், வேதாந்தத்தினால் அறியப்படுதலினாலே சத்தென்றும், கண்முதலிய புறவிந்திரியங்களினால் அறியப்படாமையினால் அசத்தென்றும் சொல்லப்ப

ட்ட சொரூபத்தை யுடையவராயுமிருக்கிற அந்தப்பரமாத்மாவினால் முன்னர் சிருஷ்டிக்கப்பட்ட ஒருஜீவனுக்குப் பிரம்மாவென்று பெயர் சொல்லப்படுகிறது என்றும்:

௧௨ - வது ஸ்லோகம்,

முன்சொன்ன அந்த அண்டத்தில் அந்தப்பிரம்மாவானவர் மேற்சொல்லும் பெயராயுடைய ஒரு பிரம்மவருஷம் வசித்துத் தன்மனதினாலேயே இந்த அண்டம் இரண்டாகப்போகும்படி நினைத்து, அதை இரண்டு கண்டமாக்கினார் என்றும்:

௧௩ - வது ஸ்லோகம்.

அவ்விரண்டு கண்டத்தினுள் மேற்கண்டத்தினாலே சுவர்க்கத்தையும் கீழ்கண்டத்தினாலே பூமியையும் நடுவில் ஆகாசத்தையும் எட்டுத்திக்குகளையும் சமுத்திரத்தையும் சிருஷ்டித்தார் என்றும்:

௧௪ - வது ஸ்லோகம்.

அந்தப்பிரம்மா பரமாத்ம ஸ்வரூபரான தன்னிடத்தில் நின்றும் வேதத்திற் சொல்லியிருப்பதினாலும் ஞானத்தையுண்டுபண்ணுகிறதினாலும் சத்தென்றும், கண்ணுக்குத்தெரியாமையினால் அசத்தென்றும் சொல்லப்பட்ட மனதையுண்டுபண்ணினார். அதற்குமுன்னம் நானென்னும் அபிமானத்துக்கு இருப்பிடமாயும், தன்காரியஞ்செய்யவல்லமையுடையதாயும் இருக்கிற அகங்காரத்தை யுண்டுபண்ணினார் என்றும்:

௧௫ - வது ஸ்லோகம்.

இந்த அகங்காரசிருஷ்டிக்கு முன்னமே மேற்சொன்ன பரமாத்மாவினின்றும் மஹதத்துவத்தையும் சத்துவமுதலிய முக்குணங்களையும் ஸப்தமுதலிய பஞ்சவிஷயங்களைக் கிரகிக்கத்தக்க பஞ்ச ஞானேந்திரியங்களையும் வேதத்திற்சொல்லியபடி கிரமமாக வுண்டுபண்ணினார் என்றும்:

௧௬ - வது ஸ்லோகம்.

முன்சொல்லிய ஆகாசாதி பஞ்சபூதங்களுடையதன்மாத்திரைகளையும் அகங்காரத்தையும் சூட்சுமமாய் அதனதனிலைகளிலடக்கி மானுஷ, விலங்கு, பட்சிமுதலிய ஜாதிகளைச்சிருஷ்டித்தார் என்றும்:

௧௭ - வது ஸ்லோகம்.

யாதொருகாரணத்தினாலே பிரம்மாவினாலே யுண்டுபண்ணப்பட்ட பஞ்சமஹாபூதமும் அகங்காரமும் இந்தத்தேகத்தை எந்தசூட்சுமரூபமா யடைகிறதோ அதினாலே இந்தத்தேகத்துக்குச் சரீரமென்றுபெயராயிற்று என்றும்.

௧௮ - வது ஸ்லோகம்.

அந்தத்தேஹத்தை ஆகாசாதி மஹாபூதங்களும் சூட்சுமரூபமாகத் தன் காரியத்தோடு அடைகிறது. ஆகாசாதி பூதங்களின்காரியம் மேலேசொல்லப்படுகின்றது. மனதின்காரியமாவது சுபாசுபத்தை நினைப்பதினாலே சுகதுக்கங்களை யுண்டுபண்ணி கண்ணுக்குத்தோன்றாமல் அழிவற்றிருக்கையென்றும்:

௧௯ - வது ஸ்லோகம்.

பஞ்சதன் மாத்திரை, மஹதத்துவம், அகங்காரம் இவ்வேழினுடைய சிருஷ்டிக்கிற வல்லமையாகிற தேஜஸையுடைய சூட்சுமரூபங்களினாலே பிறப்பிறப்பற்ற சுவாமியாகிற காரணத்தினின்றும் அழிவுள்ள இந்தலோகமாகிற காரியமுண்டாகின்றது என்றும்:

௨0 - வது ஸ்லோகம்.

இந்தப்பஞ்சமகாபூதங்களில் முதலான ஆகாசத்தின்குணமான சப்தத்தை, இரண்டாவதான வாயுவும் அதனது சப்த பரிசத்தை, மூன்றாவதான தேயுவும், அதனது சப்த ஸ்பரிச ரூபங்களை, நான்காவதான அப்புவும், அதனது சப்த ஸ்பரிச ரூபங்களை, ஐந்தாவதான பிரிதிவியும் அடைகின்றது என்று முதல்நூலை அநுசரித்துச்சொல்லும் மனுஸ்மிருதி. ஆதலால் முதல்நூலாகியவேதத்தை அநுசரித்தும், வழிநூலாகிய ஆகமத்தை அநுசரித்தும், சார்புநூலாகிய ரிஷிகளால்செய்த கிரந்தங்களை அநுசரித்தும், சர்வசித்தமாய் யுக்திசாஸ்திரானுபவ பரோட்ச அபரோட்சங்களுக்கிடமாயிருப்பதால் சகலரும் இந்தஜெகத்துக்குக் கடவுள் ஒருவருண்டென்று அநந்தசாஸ்திரங்களால் முறையிடுகிறது. அதுகளைவிரிக்கில் வெகுவாமென்று சுருக்கமாகச்சொன்னது. அன்றியும்;

காலகாலத்திற்குமுன்னம் மஹாரிஷிகள்முதலாகியபேர்களும் மற்றுமுண்டான அடியார்களும் ஆத்மானாத்மவிவேகவிசாரணையில் வஸ்துநிச்சயஞ்செய்து சாமவேதமஹாவாக்கியோபதேசம்பெற்ற லட்சணத்தையும் இந்த ஞானப்பிரகாசதீபிகையைச்செய்ய அனேகசாஸ்திரங்களிலிருந்து முக்கியாம்சங்களைமாத்திரம் எடுத்தெழுதியும் இந்தக்கிரந்தகர்த்தாவால்செய்த வேதாந்த சித்தாந்த சமரசாத்மானாத்மவிவேக மஹாவாக்கியோபதேசத்தையும் சற்றுவிவகரித்தல்.

உ

கடவுள் துணை.

வேதாந்த சித்தாந்த சமரசாத்மானாத்ம விவேகமஹாவாக்கியோபதேசம்.

பரமசிவகுருவணக்கம்.

பரசிவாநந்தம், பரமசுகம், கேவலம், க்ஞானமூர்த்திம், விஸ்வாதீதம், சிற்சொரூபம், தத்தொமசியாதிலக்ஷியம், ஏகம், நித்தியம், விமலம், அசலம், சார்வதாசாட்சிபூதம், சுசாதி, விசாதி, சுவகதபேதாபேதாரஹிதம், சிவசொரூபம், பாவாதீதம், திரிகுணரஹிதம், சிவம், சற்குருசரணம்.

தன்னை ஆவரணத்தினால் மறந்ததின்பொருட்டு ஆத்மானாத்மவிவேகவிசாரங்கூறல்.

விருத்தம்.

நாகலிங்கந்தனைமறந்ததினானாகலிங்கந்தனையறிந்தேன்
நாகலிங்கந்தனையறிந்ததினானாகலிங்கந்தனைமறந்திலன்
நாகலிங்கந்தனைமறவாததினானாகலிங்கந்தனைப்பிரிந்திலன்
நாகலிங்கந்தனைப்பிரியாததினானாகலிங்கந்தனையுமறிந்திலனே.

(இதன்பொருள்.)

நாகலிங்கந்தனை-மஹாலிங்கதேவரை, மறந்ததினால்-ஆவரணசத்தியாற்றிரோதானப்பட்டமையால், நாகலிங்கந்தனை-மகாலிங்கதேவரை, அறிந்தேன் - ஆத்மானாத்மவிசாரணையினாலறிந்தேன், நாகலிங்கந்தனையறிந்ததினால்-மகாலிங்கதேவரை ஆத்மானாத்மவிசாரணையாற் றெரிந்துணர்தலால், நாகலிங்கந்தனைமறந்திலன்-மகாலிங்கதேவரைநீங்கிலன், நாகலிங்கந்தனைமறவாததினால் - மகாலிங்கதேவரை நீங்காததினால், நாகலிங்கந்தனைப்பிரிந்திலன்-மகாலிங்கதேவரைவிட்டுநீங்கிலன், நாகலிங்கந்தனைப்பிரியாததினால் - மகாலிங்கதேவரைவிட்டுநீங்காததினால், நாகலிங்கந்தனையுமறிந்திலன் - மகாலிங்கதேவரையு மறிந்திலனென்னும் நினைப்புநீங்கினதாமென்றவாறு. ஏ-அசை.

ஆத்மானாத்மவிவேகவிசாரணையில் கிரமசிருஷ்டியையும் சாமவேதசாரமான தத்தொமசிவாக்கியத் திரயத்தையுங் கூறுகின்றது.

(விசேஷவுரை.)

நாகலிங்கந்தனைமறந்ததினாலென்பது.

நித்தசுத்தபுத்த அகண்டபரிபூரண சொரூபவியாபகத்தில் அக்கினியிற் சூடுதடித்ததுபோல அபின்னமான ஓர்சிற்சத்தியுண்டாதலினால் அச்சத்தி

அதீதப்பிரமத்திலடங்கிநிற்கும்போது அவ்வகண்டசொரூபவியாபகத்திற்குச் சுத்தப்பிரமமென்றும்பெயர். அப்படி அபின்னமான சிற்சத்திபின்னமாய் விசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது பராசத்தியென்று பெயராயிற்று. அப்பராசத்தியாகிய மகாகாரணசரீரத்துடன்கூடி அகண்டாதீதஸ்தானமாகிய துரியாவஸ்தைக்கபிமானியாயிருந்து தற்பிரகாசமாய்விளங்குகையால் பராவியாபகத்துக்குள்ளான சுத்தப்பிரமத்துக்கு பரப்பிரமமென்றுங் குருவென்றும் சிவமென்றும் பெயர்வந்தது. இது சாமவேத மகாவாக்கியமான தத்தொமசிவாக்கியத்திற் சொல்லுகிற அசிபதார்த்தமான சிவதுரியம்.

இச்சிவதுரியமான நாகலிங்கமகாதேவ பரப்பிரமசந்நிதானத்தினிடத்து அவயவரகிதமாயிருக்கின்ற பராசத்தியினிடத்தில் அச்சந்நிதானவிசேஷத்தால் சத்துவ ரஜசுதமசென்னும் அவிகிர்த திரிகுணங்களுண்டாயின.

அக்குணங்களுக்கு நாமமேதெனின்.

சத்துவத்திற்கு - ஆநந்தரூபசத்தியென்றும், ரஜசுக்குச் - சித்ரூபசத்தியென்றும், தமசுக்கு - சத்ரூபசத்தியென்றும் பெயராயின.

அப்பரப்பிரமம் சத்துவத்திற் பிரதிபலித்தபோது

நாமமேதெனின்.

ஆநந்தரூப்சத்தியாகிய காரணசரீரத்துடன்கூடி உபசாந்தஸ்தானமாகிய சர்வாநந்தசுழுத்தி யவஸ்தைக்கபிமானியாயிருந்து சர்வமுந்தானாய் விளங்குகிறோமென்பது மறந்து உபசமனமாயதீதப்பட்டு நிற்பதால் அப்பரப்பிரமத்துக்குப் பரமாநந்தரென்றும் பெயராயிற்று. இதுவே அசிபதார்த்தமானசிவசுழுத்தி.

பரமாநந்தர் ரஜசிற்பிரதிபலித்தபோது நாமமேதெனின்.

சித்ரூபசத்தியாகிய சூட்சுமசரீரத்துடன்கூடி விஸ்வக்கிராசஸ்தானமாகிய சர்வப்பிரகாச சொப்பனவஸ்தைக் கபிமானியாயிருந்து சகலபுவன சராசரப்பிரபஞ்சங்களையும் விழுங்கித் தானே ஜெகசொரூபமாகப்பிரகாசித்து நிற்பதால் அப்பரமாநந்தருக்குத் தேஜோமயரென்றும் பிரஜாபத்தியரென்றும் பெயராயின. இதுவே அசிபதார்த்தமான சிவசொப்பனம்.

தேஜோமயர் தமசிற்பிரதிபலித்தபோது நாமமேதெனின்.

சத்ரூபசத்தியாகிய ஸ்தூலசரீரத்துடன்கூடிச் சம்பூரணஸ்தானமாகிய சர்வவியாபக சாக்கிராவஸ்தைக் கபிமானியாயிருந்து சர்வசராசரப்பிரபஞ்சங்களுள்ளும் தானேதானாய் விளங்கிநிற்பதால் அந்ததேஜோமயருக்குப்பரிபூரணரென்றும் சிற்சொலிதையரென்றும் பெயராயின. இதுவே அசிபதார்த்தமான சிவசாக்கிரம்.

இனிதற்பதம்.

அந்தப்பரிபூரணநாகலிங்கமகாதேவ பரப்பிரம்மசந்நிதானத்திற் சேஷ்டித்த தென்னையெனின்.

சுத்தியில் ரஜிதப்பிராந்திதோன்றியதுபோல மூலப்பிரகிருதியென்றொரு சத்தி விவர்த்தமாகச் சேஷ்டித்தது.

அந்தச்சத்தியை பரிபூரணபரப்பிரம்மம் வியாபித்திருந்த விசேஷத்தால் அந்த மூலப்பிரகிருதியில் சத்துவ ரஜசு தமசென்னும் விகிர்த திரிகுணங்களுண்டாயின.

அவைகளின் நாமமேதெனின்.

மாயையென்றும், அவித்தையென்றும், பிரகிருதியென்றும் சொல்லப்படும். அவற்றுள், மாயையினிடத்து நிருமலமானகண்ணாடியிற் சூரியன் பிரதிபலித்ததுபோல பரிபூரண பரப்பிரம்மம், சலட்சணமாகப் பிரதிபலிக்கும். அந்தப்பிரதிபிம்ப சைதன்னியத்திற்கு ஈஸ்வரனென்றும்பெயர். அந்தமாயையாகிய மகாகாரணசரீரத்துடன்கூடி, பிரம்மாண்ட ஸ்தானமாகிய துரியாவஸ்தைக் கபிமானியாயிருந்து சகலசராசரப்பிரபஞ்சத்துடனுங்கலந்துநிற்பதால், அப்பரிபூரணபிரம்மத்துக்கு ஈஸ்வரசாட்சியாகிய பிரம்மமென்றும், சர்வஞ்ஞனென்றும் பெயராயின. இதற்குஞானசத்தி, சகுணஐயிஸ்வரிய சம்பன்னத்துவபோகம், ஓங்காரஅட்சரம், இவ்வட்சரத்திற் சகலமுமடங்கியிருக்கையால், இதையதிஷ்டித்திருந்த பரப்பிரம்ம சைதன்னியத்திற்கு மகாத்மாவென்று மொருபெயராயிற்று. இதுவே தற்பதார்த்தமான பரதுரியம்.

ஆனல் மும்மூர்த்திகளானதெப்படியெனின்.

சத்துவகுணமாயையில் சத்துவம், ரஜசு, தமசென்னு முக்குணங்களுண்டாயின. அவற்றுள், தாமதகுணப்பிரதானமாக அவ்வியாகிருதமாகிய காரணசரீரத்துடன்கூடி அக்கினிஸ்தானமான சுழுத்தியவஸ்தைக்கபிமானியாயிருந்து சகலப்பிரபஞ்சங்களையும் சங்காரம்பண்ணிநிற்பதால், அந்தவபிமானிக்கு அவ்வியாகிருதனென்றும், உருத்திரனென்றும்பெயராயின. இதற்குத்திரோதாயிசத்தி, சர்வசங்காரபோகம், மகாரஅட்சரம், இவ்வட்சரத்திலித்தனையுமடங்கியிருக்கிறபடியால், இதை அதிஷ்டித்திருந்த ஈஸ்வரனுக்கு சூத்தாத்மாவென்று மொருபெயர்வந்தது. இதுவே, தற்பதார்த்தமான பரசுழுத்தி.

சத்துவகுணப்பிரதானமாக, இரண்யகெற்பமாகிய சூட்சுமசரீரத்துடன்கூடிச் சந்திரஸ்தானமான சொப்பனவஸ்தைக் கபிமானியாயிருந்து சகலப்பிரபஞ்சங்களையும் இரட்சித்துநிற்கையால், அவ்வபிமானிக்கு இரண்யகருப்பனென்றும், விஷ்ணுவென்றும்பெயர். இதற்கு இச்சாசத்தி, சர்வகர்த்துருத்வபோகம், உகாரஅக்ஷரம், இவ்வட்சரத்திலித்தனையு மடங்கியிருக்கிற

படியால் இதை அதிஷ்டித்திருந்த ஈஸ்வரனுக்கு சூத்திராத்மாவென்று மொருபெயர்வந்தது. இதுவே தற்பதார்த்தமான பரசொப்பனம்.

இராசதகுணப்பிரதானமாக விராட்டாகிய ஸ்தூலசரீரத்துடன்கூடிச் சூரியஸ்தானமான சாக்கிராவஸ்தைக் கபிமானியாயிருந்து சகலசராசரப்பிரபஞ்சங்களையுஞ் சிருஷ்டிபண்ணிநிற்பதால் அவ்வபிமானிக்குவிராட்டென்றும் பிரம்மாவென்றும் பெயர்வந்தது. இதற்குக்கிரியாசத்தி சர்வகர்த்துருத்வபோகம் அகார அட்சரம். இவ்வட்சரத்திலித்தனையு மடங்கியிருக்கிறபடியால் இதை அதிஷ்டித்திருந்த ஈஸ்வரனுக்கு சர்வபூதாத்மாவென்று மொருபெயர் வந்தது. இதுவே தற்பதார்த்தமான பரசாக்கிரம்.

இனிதொம்பதம்.

இராசதகுணகாரிய மெப்படியெனின்.

அவித்தையினிடத்து மலினசலத்திற் சூரியன் பிரதிபலித்ததுபோல் பிரமசைதன்னியம் பிரதிபலிக்கும். அந்தப்பிரதிபலனத்திற்குச் சீவனென்று பெயர். அவ்வவித்தையாகியமகாகாரணசரீரத்துடன்கூடி லலாடஸ்தானமாகிய்துரியாவஸ்தைக் கபிமானியாயிருந்து அவஸ்தாத்திரயவிலட்சண ஞானஸ்வரூபியாயிருக்கிறபடியால் அப்பிரம்மசைதன்னியத்திற்கு சீவசாட்சியாகிய கூடஸ்தரென்றும் பிரத்தியேகாத்மாவென்றும் பெயராயின. இதற்கு ஞானசத்தி ஆநந்தபரவசயோகம் ஓங்கார அட்சரம் இவ்வட்சரத்திலித்தனையு மடங்கிநிற்கையால் இதை அதிஷ்டித்திருந்த ஈஸ்வரனுக்கு நின்மலாத்மாவென்று மொரு பெயர்வந்தது. இதுவே தொம்பதார்த்தமான சீவதுரியம்.

ஆனால் மூவகையான்மாக்களுண்டான

தெப்படியெனின்.

இராசதகுண அவித்தையில் சத்துவ ரஜசு தமசென்னுமுக் குணங்களுண்டாயின. அவற்றுள் தாமதகுணப்பிரதானமாக ஆநந்தமயகோசமாகிய காரணசரீரத்துடன்கூடி இருதயஸ்தானமான சுழுத்தியவஸ்தைக் கபிமானியாயிருந்து சுழுத்திசுகத்தை யனுபவித்திருத்தலால் அவ்வபிமானிக்குப்பிராஞ்ஞனென்றும் பாரமார்த்திகனென்றும் அபரிச்சின்னனென்றும் பெயராயின. இதற்குத் திரோதாயிசத்தி ஆநந்தபோகம் மகார அட்சரம் இவ்வட்சரத்திலித்தனையு மடங்கியிருக்கிறபடியால் இதை அதிஷ்டித்திருந்த ஈஸ்வரனுக்குப் பரமாத்மாவென்று மொரு பெயர்வந்தது. இதுவே தொம்பதார்த்தமான சிவசுழுத்தி.

சத்துவகுணப்பிரதானமாகப் பிராணாதி கோசத்திரயங்களாகிய சூட்சுமசரீரத்துடன் கூடிக் கண்டஸ்தானமான சொப்பனாவஸ்தைக்கபிமானியாயிருந்து சொப்பனப்பிரபஞ்சங்களிற் கூடியுங் கூடாதிருத்தலால்அவ்வபிமானிக்குத் தைஜசனென்றும், பிராதிபாதிகனென்றும், சொப்பன கற்பிதனென்றும் பெயராயின. இதற்கு இச்சாசத்தி, அயுக்தயோகம், ஏனென்றால்,

பேதாபேதமின்றி யனுபவிப்பன். உகார அட்சரம், இவ்வட்சரத்தி லித்தனையுமடங்கியிருக்கிறபடியால் அதை அதிஷ்டித்திருந்த ஈஸ்வரனுக்கு, அந்தராத்மாவென்று மொருபெயர்வந்தது. இதுவே தொம்பதார்த்தமான ஜீவசொப்பனம்.

இராசதகுணப் பிரதானமாக அன்னமயகோசமாகிய ஸ்தூலசரீரத்துடன்கூடி நேத்திரஸ்தானமான சாக்கிராவஸ்தைக் கபிமானியாயிருந்து பிரபஞ்சவிவகாரங்களில், முயன்றுநிற்பதால் அவ்வபிமானிக்கு விஸ்வனென்றும், விவகாரிகனென்றும், கிஞ்சிஞ்ஞனென்றும் சிதாபாசனென்றும் பெயராயின. இதற்குக்கிரியாசத்தி, லோகாபிமானத்தினால் நல்லது பொல்லாதென்றறிந் தனுபவிப்பது பற்றி, யுத்தபோகம், அகார அட்சரம், இவ்வட்சரத்தி லித்தனையு,மடங்கியிருக்கிறபடியால் இதை அதிஷ்டித்திருந்த ஈஸ்வரனுக்கு சீவாத்மாவென்று மொருபெயர் வந்தது. இதுவே தொம்பதார்த்தமான சிவசாக்கிரம்.

தாமதகுணப்பிரகிருதியின் காரியமெப்படியெனின்.

பிரகிருதியினிடத்து ஆவரணவிட்சேப மென்றிரண்டு சத்திகளுண்டு. இதில் ஆவரணமானது தத்துவஞானிகளையும் ஈஸ்வரனையுந்தவிர மற்ற ஜீவர்களுக்கெல்லாம் சரீரத்திரயம், ஜீவன், சாட்சி, சைதன்னியம், இதுகளின் பேதந்தெரியவொட்டாமல் மறைத்துநிற்கும். இவ்வாவரணம் நீங்குவதேமுத்தி. தமோகுணப்பிரதானமான விட்சேபசத்தியே மகாகாரணப்பிரபஞ்சமாய் நின்று விட்சேபசத்தியும் சத்துவ, ரஜசு, தமசென்னு மூக்குணஞ் சமமாகி நிற்கும். அவற்றுள் - தமசு பிரதானமாகும்போது காரணப்பிரபஞ்சமும், சத்துவம் பிரதானமாகும்போது சூட்சுமப் பிரபஞ்சமும், ரஜசு பிரதானமாகும்போது ஸ்தூலப்பிரபஞ்சங்களுமுண்டாயின.

சத்துவகுணமாயையிற் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் நிருமலசலத்தில் பிரதிபிம்பித்த சூரியன்போல ஏகராயும் சர்வஞ்ஞராயுமிருப்பர்: இராஜதகுணவவித்தையிற் பிரதிபிம்பித்த ஜீவர்கள் அவித்தையு மனேகமாகையால் மலினகடஜலத்தில் பிரதிபிம்பித்த அனேகசூரியர்போல் அனேகராயுங் கிஞ்சிக்ஞராகியு மிருப்பார்கள். அங்ஙனம், அவித்தையாம் பிரதிபிம்பரான ஜீவர்களுக்குச் சர்வஞ்ஞரான ஈஸ்வரன் கிருபைகூர்ந்து சரீரத்திரயங்கள்கொடுத்து முத்தியடைவிக்கும்படிகருதி, தமோகுணப்பிரகிருதியை இரண்டுபங்காக்கி முதல்பங்கில் ஆவரணசத்தியையும், இரண்டாம்பங்கில் விட்சேபசத்தியையு முண்டாக்கினார். அப்பிரகிருதியினறிவே மகாகாரணசரீரம். அதில் பிரதிபிம்பித்தஜீவனே பிராஞ்ஞன், அதினறியாமையே ஆநந்தமயகோசமான காரணசரீரம், இப்படிப்பட்ட ஆவரண சத்தியானது ஜீவனறியத்திருந்த கூடஸ்தனையும் ஈஸ்வரனையுந்தவிர மற்ற ஜீவர்களுக்கெல்லாம் ஸ்தூல, சூட்சும, காரணசரீரபேதங்களையும் அவற்றினபிமானிகளையும் சாட்சி சைதன்னியங்களையும் ஒன்றுக்கொன்று பேதந்தெரியவொட்டாமல் மறைக்கும், அதனால், மறைபட்டஜீவர்கள் இந்த இருபத்தொன்பது தத்து

வங்களையும் தானென்றபிமானிப்பர்கள். அவ்வபிமானத்தை அகங்காரக்கிரந்தியென்றும் சம்சாரபந்தமென்றுஞ் சொல்லுவார்கள்.

ஆனால் முத்திகூடுவ தெப்படியெனின்.

சற்குருகடாக்ஷத்தினால் ஆவரணநீங்கி இருபத்தொன்பது தத்துவங்களிலு மொன்றுக்கொன்றுள்ள பேதங்களைக்கண்டறிவதே முத்திகூடுமுபாயம்.

ஆனால் விட்சேபசத்தியின்காரியமேதெனின்.

விட்சேபசத்தியும் சத்வ, ரஜசு, தமசென்னும் திரிகுணசகிதமாயிருக்கும் அந்தச்சத்தியில் சத்ததன்மாத்திரையான ஆகாசமும், ஆகாசத்தில் பரிசதன்மாத்திரையான வாயுவும், வாயுவில் ரூபதன்மாத்திரையான தேயுவும், தேயுவில் ரசதன்மாத்திரையான அப்புவும், அப்புவில் கந்ததன்மாத்திரையான பிருதிவியும் உண்டாயின. இந்தப்பஞ்சதன்மாத்திரைகளுக்கு அபஞ்சீகிருத பஞ்சபூதங்களென்றும் சூட்சுமபூதங்களென்றும் சொல்லப்படும். இந்தச்சூட்சுமபூதங்களில் நின்றும் சூட்சுமசரீரங்களும் ஸ்தூலசரீரங்களுமுண்டாயின.

இதுவே இன்னுமொருவிதம்.

இச்சிவதுரியமான நாகலிங்கமகாதேவ பரப்பிரம்ம சந்நிதானவிசேஷத்தால் விகிர்ததிரிகுணங்களுண்டானதா லதினின்றும் பரப்பிரம்மம், விஞ்ஞானப்பிரம்மம், பிரம்மாநந்தப்பிரம்மம், கலாப்பிரம்மம், பிண்டப்பிரம்மம், மூர்த்திப்பிரம்மமென்றும் உண்டாயின. இதினர்த்தம் - பரப்பிரம்மத்தில் பரசிவன், க்ஷேத்திரன், கர்த்தன், பாவனன், சைதன்னியன், மகதாகாயமென்றும்.—விஞ்ஞானப்பிரம்மத்தில் - சதாசிவன், ஆகாசம், சத்தம், ஞானம், சோத்திரம், வாக்கு என்றும்.—பிரம்மாநந்தப் பிரம்மத்தில் - ஈஸ்வரன், வாயு, பரிசம், மனசு; தொக்கு, பாணி என்றும்.—கலாப்பிரம்மத்தில்- ருத்திரன், அக்கினி, ஆங்காரம், ரூபு, நேத்திரம், பாதம் என்றும்.—பிண்டப்பிரம்மத்தில் - அரி, அப்பு, ரஸம், புத்தி, ஜிங்குவை, குய்யம் என்றும்.—மூர்த்திப்பிரம்மத்தில் - சித்தம், கிராணம், குதம், பிரம்மா, பிருதிவி, கெந்தம் என்றும் விஹசித்தபடியால் நால்வகையோனி எழுவகைத்தோற்றம் எண்பத்துநான்குநூறாயிரம் ஜீவராசிகளும் ஜெகசீவப்ரமுதலாகியதுந்தோன்றி பூதாகாச மஹாகாச அண்டாண்டபிண்டப்பிரம்மாண்டாகாச மிவைகளுக்கெல்லா மாதாரமாயும் அப்பாலாயும் அப்பாலுக்கப்பாலாயும் சித் அம்பரமாய் அம்பரத்தம்பரமாய் வெறுவெளியாய் நிஸ்சூன்னியம் திவ்வியாநந்தம் திவ்விய மஹாநந்தம் திவ்வியஞ்ஞானதீதம் நிராகாரம் நிராகாராதீதம் அசலம் அசலாதீதம் நிராலம்பம் நிராலம்பாதீதம் நிர்லக்ஷியம் நிர்லக்ஷியாதீதம் நிர்பஹி நிர்பஹிராதீதம் அமலம் அமலாதீதம் குமலம் குமலாதீதம் அகண்டாநாதம் அகண்டபிந்து அகண்டசிற்கலை ஸஹஜம் ஸஹஜாநந்தம் ஸஹஜாநந்தாதீதம் ஆநந்தம் ஆநந்தாதீதம் நிர்மலம் நிர்மலாதீதம் நிர்மலாதிதோத்தரம் சிற்பிரணவும் சிற்பிரணவாதீதம் மஹாசிற்பிரணவம் மஹாசிற்

பிரணவாதீதம் சிற்கூடம் சிற்கூடாதீதம் சித்வியோமம் சித்வியோமாதீதம் நித்தியம் நித்தியாதீதம் நிராமயம் நிராமயாதீதம் அநந்தபூதம் அநந்தபூதப்பிரளயம் சர்வசூன்னியப்பிரளயம் நிர்குணம் அகோசரம் பரம்பரமாநந்தம் பராபரம் பராபராதீதம் சிவம் சிவஜ்ஜியோதிசூன்னியம் சூன்னியாதீதம் பரப்பிர்ம்மம் சிவப்பிர்ம்மம் நிருபம் நிருபாநந்தம் நிருபாதீதம் மஹாநிருபாதீதம் நிர்வாச்சியம் அநிர்வாச்சியம் கோளகாகாரம் நிரஞ்சனாதீதப்பிரணவம் நிரஞ்சனப்பிரணவம் அவாச்சியப்பிரணவம் சிற்கலாப்பிரணவம் அநாதிப்பிரணவம் ஆதிப்பிரணவம் வியோமம் வியோமாதீதம் திவ்வியகலாந்தம் நிஸ்ஸப்தப்பிரம்மம் நிஸ்ஸப்தப்பிரம்மாதீதம் அகண்டோங்காரம் மஹாதோங்காரம் சிவப்பிரணவம் சத்திப்பிரணவம் சத்திரஹிதப்பிரணவம் சிந்தாகாசம் சிதாகாசம் சுத்தாகாசம் சுவயாகாசம் சிவாகாசம் பராகாசம் நாதபிந்துகலாகாசம் பிரணவாகாசம் மஹாகாசம் சத்தியாகாச சுவயம்பிரகாசமாயும் விளங்காநின்ற நாகலிங்கந்தனை ஆவரணசத்தியானது மறைத்தது. இந்த ஆவரணத்தியினால் நாகலிங்கந்தனை மறந்து நாகலிங்கந்தனை அறியத்தடங்கினேனாதலால் நாகலிங்கந்தனை மறந்தேனென்றுங் கூறலாயிற்று.

இதற்குதாரணம்.

சொரூபாநந்த உபநிடதத்தில்.

பேசரிய பரத்தினிலாரோபமதா மூலப்பிரகிருதி தோன்று
மிதிற் சாத்திகம்மாயை
ஈசனிதிற்றோன்று மிராசதமவித்தை சீவனிதிற்றோன்றுந்
தாமதத்தாவரணவிட்சேபமதாஞ்
சூசகவிட்சேபமதிற் சூக்குமபூதமதாஞ் சூக்கவுட
லிருகுணத்தாற் றோன்றிடுந்தாமதத்தி
னுசில்பஞ்சீகரணமதா யைம்பூதவடிவாய திற்றூல
சடந்தோன்று மனைத்துமிவ்வாறடங்கும்

என்று மிருப்பதால் தத்துவவுற்பத்தி தமோகுணத்திலாவரணம் விட்சேபமென்னு மிரண்டு சத்திகளுண்டாம் இதில் ஆவரணசத்தியானது ஈஸ்வரனுக்குஞ் சீவன்முத்தருக்குந்தவிர மற்றச்சீவருக்கெல்லாஞ் சரீரத்திரய சாட்சிசைதன்னியங்களை ஒன்றற்கொன்று பேதந்தெரியவொட்டாமல்மறைக்குமென்றிருப்பதாலும் இன்னும்.

(திருமூலர் திருமந்திரத்தில்.)

பொன்னைமறைத்தது பொன்னணிபூடணம்
பொன்னுண்மறைந்தது பொன்னணிபூடணம்
தன்னைமறைத்தது தனுகரணங்கள்
தன்னுண்மறைந்தது தனுகரணங்களே.

என்றுமிருப்பதாலும்;

ஆத்மசந்நிதானத்தில் பஞ்சபூதமுண்டாய்
அதனுல் மகாலிங்க நாகலிங்கதேவரை மறைத்ததற்குச்
சில சாஸ்திரதிஷ்டாந்தங்கூறல்.

(பஞ்சபூதமுண்டான சிருஷ்டிசமுகம்.)

அதாவது.

சகலாகம சிகாமணியில் சகலசாஸ்திர சம்மத ரகஸ்ஸியலோலத்தில் சகலசாஸ்திரசம்மத சங்கற்பநிராகரணத்தில் சைவசித்தாந்தத்திலும் பூதாதி ஆங்காரத்திலே சத்தாதிதோன்றி சத்தாதியிற் கிரமமாகப் பஞ்சபூத முண்டாமென்றும் விவேகசிந்துவில் சிவமானது திரவியசத்தியைப் பார்த்தபோது தாமசாங்காரமுண்டாய் இதிலாகாசாதியும் சத்தாதியுந் தோன்றுமென்றும் திரட்டிலொருவிதம் பிரம்மத்தில் ஞானமுண்டாய் இதில் மாயையங்குரித்து மாயைதானே அஞ்சுபூதமாய்ப் பிணைத்துத் தோன்றுமென்றும் வைசேஷிகநியாயத்தில் எழுவித பதார்த்தத்திலே திரவியமாகிறதே பஞ்சபூதமென்றும் பரமஞானவிளக்கத்தில் ஞானச்சோதியில் ஒன்றிலொன்று ஆகாசமுதற் பஞ்சபூதமுண்டாயிற்றென்றும் பரிபூரணசித்தியாரில் பஞ்சமூர்த்திகளிடத்திலே சத்தாதிதோன்றி இது பஞ்சீகரித்துப் பஞ்சபூதமானதென்றும் வேதத்தில் ஆத்மாவிலாகாசமுதலா யொன்றிலொன்று பஞ்சபூதமானதென்றும் ஈசானாதிமுகங்களிலானதென்றும் அணுக்கள் கூடித்திரண்டதென்றும் வீரசைவத்தில் சோதிமுதலாறுசிருதியினும் ஆகாசாதி பூதமானதென்றும் விஞ்ஞானப்பிரம்மமுத லாறுபிரம்மத்திலும் பூதங்களுண்டானதென்றும் பராசத்தி முதலஞ்சிலு மஞ்சுபூதமானதென்றும் தமோகுணத்திற் பஞ்சபூதமென்றும் பூதாதியிற்பஞ்சபூதமென்றும் சிவாத்துவித பிரம்மந்தானே தன்னை பூதமாக்கிக்கொண்டதென்றும் பாஸ்கரியன் பிரம்மத்திற் பரிணமித்ததென்றும் சத்தப்பிரம்மவாதி சத்தப்பரிணாம விவர்த்தனம் மாயையிலானதென்றும் பாட்டன் பூமியியல்பென்றும் பிரபாகரனுமப்படியே. பாஞ்சராத்திரம் வைகாரிகத்திற் பூதமென்றும் பாசுபதி பதியின் சந்நிதியிலே பூதமென்றும் வயிரவத்தில் எட்டுவயிரவரும் எட்டுக்கலையில் அஞ்சுபூதமென்றும் சார்வாகன் நாலுபூதமு நித்தியமென்றும் சாங்கியன் விகிர்தியில் பூதமென்றும் பூர்வமீமாங்கிசை சத்தப்பிரம்ம விவர்த்தனமாயையில் பூதமென்றும் புத்தர்மதத்தில் அணுவானதே பூதமணுதியென்றும் அருகமதத்திலும், சார்வாகமதத்திலும், பூதம் நித்தியமென்றும் காரணஅணுவிற் காரியவணுவுண்டாய் பஞ்சபூதமானதென்றும் ஆகாசமுதலானதென்றும் வாயுமுதலானதென்றும் அக்கினிமுதலென்றும் அப்புமுதலென்றும் பிருதிவிமுதலென்றும் மகமதியமதத்தில் முதற்சலமும் பிறகு மண்ணும் பிறகு அக்கினியும் பிறகு வாயுவு மிப்படியானதென்றும் இன்னம் வேதாகமங்கள் பரமதங்களிலும் வெகுபேதமாகச்சொல்லும் இது சங்க்ஷேபமாய்த் தெரிந்தவரைக்குஞ் சொன்னது இப்படி பூதசிருஷ்டிகள் வெகுவிதமாவானேனெனின் யுகாந்தபேதத்தாலும் மூர்த்திகள் சிருஷ்டிபேதத்தாலுமானதென்றறியவும்.

இப்படி பலவிதமாகத்தோன்றில் எந்த சிருஷ்டியிலுண்டானதை மெய்யென்கிறதெனின், சித்தினிடத்திலே சிற்கலைதிரண்டு எல்லாமுண்டாகை யால் எந்தயுகத்திலானாலும் சித்தாலே யுண்டாகையால் எத்தனைபேதஞ் சொன்னாலும் பேதமில்லை செகத்வியாபாரமெல்லாம் சித்தினவிளையாட்டா கையால் எல்லாதத்துவங்களுஞ் சிருஷ்டிகளும் பேதமாயிருக்குமென்று நிச்சயிக்கவேண்டியது இன்னம் இலக்கமில்லாத அநேகநூல்களிலும் இந்த நூல்களுக்கு முதற்காரணமாயுள்ள வேதாகம சகலசாஸ்திர சம்மதப்பிரமாண சித்தாந்தமாயிருப்பதால் நாகலிங்கமஹாதேவனை ஆவரணசத்தி மறைத்தென்று சொல்லப்படும்.

அண்டாண்டங்களையெல்லாம் சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தியங்களைச்செய்கிற சொப்பிரகாசஸ்வயஞ் சொரூபமாயுள்ள நாகலிங்கமஹாதேவனை எப்படி ஆவரணத்தால் மறைக்கக்கூடுமென்று சங்கைவர அதற்குத்தரங்கூறல்.

ஆதித்த கிரணபரிணாமவிசேஷாதி மேகங்கள் அவ்வாதித்தன் சத்தை யுபசீவித்துக்கொண்டே தோற்றினபோது அவ்வாதித்தனை மூடிக்கொள்ளுவதுபோலும் அக்கினியினுடைய சத்தை யுபசீவித்துக்கொண்டே தோற்றப்பட்ட புகை அவ்வக்கினியை மூடிக்கொள்ளுவதுபோலும் மண்ணின்சத்தை யுபசீவித்துக்கொண்டே தோற்றப்பட்ட கடம் அந்தமண்ணை மூடிக்கொள்ளுவதுபோலும் பொன்னின்சத்தை யுபசீவித்துக்கொண்டே தோற்றப்பட்ட ஆபரணம் பொன்னைமூடிக்கொள்வதுபோலும் நாகலிங்கமஹாதேவனை யுபசீவித்துக்கொண்டே தோற்றப்பட்ட பஞ்சகோசங்களுக்கு நாகலிங்கமஹாதேவனை மறைத்ததுபோல பகிர்முகதிருஷ்டியிற் காணப்படுவதேயன்றி ஆவரித்ததன்று, அந்த ஆவரணத்தை வேதாகமசம்மதப்படி ஆத்மானாத்மவிசாரஞ்செய்தால் காலத்திரயத்திலு மில்லவேயில்லையென்றும் இப்படி அநேக திஷ்டாந்தம் சுருதிப்பிரமாணமாயிருப்பதால் நாகலிங்கமஹாதேவனை ஆவரணசத்தி மறைத்ததென்றுஞ் சொல்லலாயிற்று, மற்றும் வருவனவற்றுற் காண்க.

ஆத்மானாத்ம விவேகவிசாரலக்ஷணையில் வஸ்துநிச்சயமும் மஹாவாக்கிய தத்தொமசிவாக்கியத்திரயத்துக்கு வாச்சியார்த்த லக்ஷியார்த்த அசுத்தசுத்தங்களை நியதிகளைதலும் நிச்சயஞானமுங்கூறல்.

(நாகலிங்கந்தனை யறிந்தேனென்பது.)

வேதப்பிரமாண சித்தாந்தமாய் அஷ்டப்பிரமாணங்களினாலும் ஷட்லிங்க தாத்பரியத்தாலும் அத்தியாரோப அபவாத உபயபதார்த்தத்துவ துக்காரோப இந்திரிய இராகத்துவேஷ சரீரத்திரய அவஸ்தாத்திரய பஞ்ச கோசத்துவ ச்சிதாநந்தத்திரய அகண்டத்துவ அஞ்ஞான சொரூபத்துவ

ஞானஞ்ஞான சொரூபத்துவ சீவேஸ்வர பிம்பத்துவ பிம்பப்பிரதி பிம்பத்துவ சுவயஸ்வரூபத்துவ உபாதிபேத அத்தியாசலட்சணங்களையும் விசாரிப்பதுந்தவிர, சாமவேதமஹாவாக்கிய தத்தொமசிவாக்கியத்திரயமான சங்சர்க்கவாக்கிய விசிஷ்டவாக்கிய அகண்டவாக்கியத்துக்கு விவரலட்சணமான அயிக்கமும் விசாரிக்கவேண்டும்.

அதாவது. ஸ்தூலசிரவண சூட்சுமசிரவணமென விரண்டு. இதில்;

ஸ்தூலசிரவணமாவது.

சிரவண மனன நிருத்தியாசன சமாதி சாக்ஷாத்காரமென ஐந்தாம்.

ஸ்தூலசிரவணவிவரமாவது.

சற்குருசந்நிதானத்தில் வேதாந்தசாஸ்திரார்த்தங்களை வாசித்து மஹாவாக்கியோபதேசம்பெற்று பரமாத்வித பிரம்மஸ்வரூபத்தை உபக்கிரமமாதியாகக்கேட்டறிவது.

சூட்சுமசிரவணவிவரமாவது.

தொம்பதம்-பதார்த்தமாவது-சீவன் -முக்கியமாவது - காரியோபாதி - எ - அவஸ்தை - ங - தேகம் - ங - அபிமானி-ங - செகர்லட்ணை - க-இதுகளுடனே சீவன்கூடி சீவிக்கும்போது முக்கியனென்றும் அசுத்தனென்றும் சபளனென்றும் உபாதிகனென்றும் தொம்பதனென்றும் பேறாம்.

இனிலட்சியனுவது.

சற்குரு சந்நிதானத்தில் முன்சொன்னதெல்லாம் நேதி நேதி அன்வய வெதிரேகங்களாலே இது நீயல்ல இது நீயல்லவென்று நீக்கி அதுகளைவிடப்பட்டுச் சேஷமாய்நின்ற ஆத்மஸ்வரூபத்தைத் தனியாக முன்சமாதியில் பாழான சாக்கிராதீதத்திலே காட்டுகையால் லட்சியனென்றும் சுத்தனென்றும் சித்தென்றும் உபாதிரகிதனென்றும் தொம்பதார்த்தனென்றும் ஜெகர்லட்சணார்த்தனென்றும் ஜீவதுரியனென்றும்பேராம், இதை ஜெகர்லட்சணையாகிற சங்சர்க்கவாக்கியங்காட்டும் இது தொம்பதசுத்தியும் ஜீவசம்பந்தமுமாம்.

இனிபரசம்பந்தமாவது.

தற்பதம்-பதார்த்தமாவது - பரன்-முக்கியமாவது-காரணோபாதி-எ-அதாவது சர்வஞ்ஞன் சர்வகாரணன் சர்வேந்திரியாமி சர்வேஸ்வரன் சர்வசிருஷ்டி சர்வஸ்திதி சர்வசங்காரன். தேகம்-ங-அவஸ்தை-ங-அபிமானி-ங-அஜகர்லட்சணை-க-இதுகளுடன்கூடிப் பரன் ஜீவிக்கும்போது முக்கியனென்றும் அசுத்தனென்றும் சபளனென்றும் உபாதிகனென்றும் தற்பதனென்றும் பேராம்.

பரலட்சியமாவது.

சற்குருவினாலே முன்சொன்னதெல்லாம் நேதிநேதி அன்வயவெதிரேகங்களாலே இது நீயல்ல, இது நீயல்லவென்று நீக்கி ஜீவன்கடந்த அதீதப்

பாழிலே சேஷமாய்த் தனியாய்நின்ற பரதுரியனைக்காட்டுகையாலே லட்சியனென்றும் சுத்தனென்றும் சித்தென்றும் உபாதிரஹிதனென்றும் தற்பதார்த்தனென்றும் அஜகர்லட்சணார்த்தனென்றும் பரதுரியனென்றும் பேராம். இதை அஜகர்லட்சணையாகிற விசிஷ்டவாக்கியங்காட்டும், இதை தற்பதசுத்தி யென்றறிக. இனி.

சிவசம்பந்தமாவது.

வாசனா உபாதியோடே கூடினபோது பதமாவது அசிபதம்-பதார்த்தமாவது-சிவதுரியன்-முக்கியமாவது-வாசனாவுபாதி-எ-தேகம்-ரு-அவஸ்தை ரு-அபிமானி-ரு-ஜகத் ஜகர்லட்சணை-க-இவைகளுடனே கூடினபோது முன்சொன்ன ஜீவபரனுக்குச் சொன்னதுபோல முக்கியப்பேர்களுண்டு இந்தவாசனாதோஷமான முக்கியங்களைவிட்டபோது முன்சொன்ன லட்சியநாமமெல்லாமுண்டு இதை ஜெகத ஜெகர்லட்சணையான அகண்டவாக்கியங்கிட்டும். இது அசிபதசுத்தி இந்தவாக்கியத்துக்கே சாமானாதிகரண சம்பந்தம் விசேஷணவிசேஷியதா சம்பந்தம் லட்சணலட்சிய சம்பந்தமென்றும்பேராம்—(இந்தமூன்றுபதத்தினர்த்தம்.)

சாமானாதிகரணசம்பந்தமெப்படியெனின்.

நீலோத்பலமென்கிற வாக்கியத்தில் நீலபதமும் உற்பலபதமும் ஒரு உற்பலத்திரவியத்திலிருக்கிறதுபோலத் தத்தொம்மென்னும் வாக்கியத்தலே தற்பதமும் ஒரு சைதன்னியத்திலிருப்பது-இனி.

விசேஷணவிசேஷியதாசம்பந்தமாவது.

சுவயந்தேவ தத்தனென்னும் வாக்கியத்தில் சப்தவாச்சியமான தேசகால விசிஷ்டத்திலே தேசமுங்காலமும் விசேஷணம் (புருஷன், விசேஷியம்) அயம்சப்தவாச்சியமான ஏதத் தேசகால விசிஷ்டத்தில் ஏதத்தேசகாலம் விசேஷணம் புருஷன் விசேஷியம். இதுபோலதத்துவமென்னும் வாக்கியத்திலே தற்பதவாச்சியமான சர்வஞ்ஞத்துவம் விசேஷணம்.

இதுவேஇன்னுமொருவிதம்.

இதில்—தற்பத தொம்பதங்க ளிரண்டுக்கும் சாமானாதிகரண சம்பந்தமென்றும் தற்பத தொம்பதார்த்தாளாயிருக்கிற சிவேஸ்வரானுக்கு விசேஷண விசேஷிய தாசம்பந்தமென்றும் அதிஷ்டானமான பிரத்தியேகான்ம பரமான்மாக்களுக்கு லட்சிய லட்சண பாவசம்பந்தமென்றும் அறிஞர்களாற்சொல்லப்படும்.

இனி தொம்பதவாச்சியமான கிஞ்சிஞ்ஞத்துவ விசிஷ்டங்களுக்கு அயிக்கியங்கூடாதபடியாலே தத்துவம்-பதத்துக்கு வாச்சியமான சர்வஞ்ஞத்துவத்தைவிட்டு சைதன்னியமாத்திரத்திலே லட்சிணை தொம்பதத்துக்கும் அதின்வாச்சியமான கிஞ்சிஞ்ஞத்துவத்தைவிட்டு சைதன்னியமாத்திரத்திலே லட்சணையாகையால் அசிபதத்தினாலே தத்தொம்பத லட்சியங்களுக்கு அயி

க்கியம் போதிக்கப்படுகையினாலே அகண்ட பிர்ம்மவிஷய சாட்சாத்காரஞ் சித்திக்கும்.

இந்தலட்சியஸ்வரூபமானசைதன்னியந்தானே.

சாக்கிரசொப்பன சுழுப்திஅவஸ்தாபிமானியான விஸ்வ தைஜச பிராஞ்ஞ விராட்டு இரண்யகெற்ப ஈஸ்வரஸ்வரூபமாய் தப்தாயப்பிண்டம்போலப் பிறித்தறியப்படாதிருந்துள் ளளவிலே தத்துவமசிவாக்கியத்துக்குவாச்சியார்த்தமாகவும்) பிறித்துச் சைதன்னியமாத்திரமாக வறியப்பட்டபோது (லட்சியஸ்வரூபமான) அவஸ்தாத்திரய நிமித்தமாய் நித்திய சுத்த புத்த முத்த சத்தியஞ்ஞானனந்தாகண்டதுரிய பிர்ம்மமாத்திரமேயாம் இப்படிவேதாந்தவாக்கியங்களிலே கேட்டுத்தெளிந்து இந்தக்கிரமங்களைத் தடுமாறுமற்க்கற்கிறதே சூட்சுமசிரவணம்.

சூட்சுமமனனமாவது.

மேற்சொல்லியவாக்கியங்களைக் கேட்டுத்தெளிந்த பொருளை வரிசைதப்பாமல் மூன்றுபதத்துக்கும் மூன்றுப்தமாகிற ஜீவ பர சிவத்தை மூன்றுபாழிலுந் தெரிசித்து உபாதிகளை எல்லாம் நீக்கி நீக்கின உபாதிகளை எல்லாம் பின்னமில்லாமல் எல்லாமிந்தச் சிவமேயாயிற்றென் றறிந்தும் இஃதெல்லாஞ் சித்தினுடைய காரியமாகிற ஜீவ ஈஸ்வர கூடஸ்த பிர்ம்மமென்றறிந்துஞ் சாம்பவிமுதலான முத்திரைகளிலே ஏகமான மதியினுடைய திடப்பாடுபெறுவதே மனனம்.

சூட்சுமநிதித்தியாசனமாவது.

மனனத்தாலே நிச்சயமானபொருளை ஆசாரியர் சிஷ்யனுக்கு அனுபூதிகள்சொன்ன விடங்கள்தோறும் சிவதுரியன்முதலாய்ச் சிவாந்தமாகத் திரும்பத்திரும்ப அந்தப்பாழ்களிலே நிறுத்தி நிஷ்டைசாதித்துத் திரும்பச்சிவதுரியமுதலாய் ஜீவதுரியனந்தமாய் அந்தந்தப்பாழ்களிலே அந்தந்த உபாதிகளையும் அந்தந்தத்துரியனிலேகலாத்து அந்தந்த நிஷ்டைகளில் பழக்கம்பண்ணிவைத்து சந்தேகமறப் பாழ்கள் துரியன்கள் உபாதிகள் என்கிற நாமமொன்றுமில்லாமல் ஏகமாய் சாக்ஷாத்காரமாக நிறுத்துவது நிதித்தியாசனம்.

சமாதியாவது.

நிஷ்டையின்பங்கூடல் அதாவது சாக்கிரசொப்பனத்தில் விருத்தியுண்டானபோது துக்கமற்றவர்கள் சுழுப்தியில் அவ்விருத்தியற்றபோது சுகமடைதல்போலத் தியானிக்கின்ற விருத்தியும் பாலிற்கலந்தசலம்போற் ஸ்வரூபத்திற்கரைந்து ஆநந்தமடைதலே சமாதி. உதாரணம்-நேராகத்தோற்றுகின்றது வித்மறந்தொழியாத நிஷ்டைகூடலென்பதாம்.

சாக்ஷாத்காரமாவது.

முன்சொன்ன மூன்றுதுரியனுக்கும் மூன்றுமாயைக்கும் சித்துகாரணமென் றறிவித்ததுபோல் நீலோத்பலவாக்கி யதிஷ்டத்தில் இசைவித்து

செகசீவபரம் சிவமெல்லாஞ் சித்திலடக்கிற் சிற்சொரூபமாய் நின்றது சாக்ஷாத்காரம்—இதன்றியில்.

பிரபஞ்சவிவகாரம் பிரம்மவிவகாரஞ் சொல்லுமிடத்தில் மகரவாக்கியகிரமப்படி

தாதாத்மிய லட்சணமுஞ் சொல்லவேண்டும்.

இருக்குவேதத்தில் பிரஞ்ஞானம் பிரம்மமென்கிற வாக்கியத்தில் பிரஞ்ஞானமென்றும் பிரம்மமென்றும் இரண்டுபதம் பிரஞ்ஞானபதத்திற் கர்த்தமேதெனின் வாச்சியார்த்த லட்சியார்த்தமென் றிரண்டுவிதம் அவற்றில்.

சகசதாதாத்மியஞ் சொலல்.

வாச்சியார்த்தமானது.

பிரத்தியேகாத்மாவின் சாயைஅந்தக்கரணத்திற் பிரதிபிம்பித்துத் தற்பிரகாசத்தை அகங்காரனுக்குக்கொடுத்து அகங்காரதர்மத்தைத் தான்மேற்போட்டுக்கொண்டு சித்துஞ்சடமுமாய் அன்னியோன்னியாத்தியாசத்தைப் பண்ணிக்கொண்டு தப்தாயபிண்டம்போல நான்கர்த்தாபோக்தா சுகி துக்கியென்றபிமானிக்கிறபோது சிதாபாசனுக்கும் அகங்காரனுக்கும் சகசதாதாத்மியமென்றுஞ் சிற்சடக்கிரந்தியென்றுஞ் சொல்லப்படும்.

கர்மஜதாதாத்மியஞ்சொலல்.

ஸ்தூலசரீரத்தை யத்தியாசம் பண்ணிக்கொண்டு அதனது ஷட்பாவவிகாரங்களெல்லாந் தான்மேற்போட்டுக்கொண்டு உண்டானேன் பிறந்தேன் வளர்ந்தேன் பருத்தேன் இளைத்தேன் நசித்தேன் கறுப்பு சிவப்பு குட்டை நெட்டை யென்றபிமானிக்கிறபோது சிற்சாயை அகங்காரனுக்கும் ஸ்தூலசரீரத்திற்கும் கர்மஜதாதாத்மியமென்று சொல்லப்படும்.

பிராந்திஜதாதாத்மியஞ்சொலல்.

சரீரதர்மங்களெல்லாம் சாட்சியினிடத்தாரோபிக்கும்போது அவ்வகங்காரனுக்குஞ் சாட்சிக்கும் பிராந்திஜதாதாத்மியமென்று சொல்லப்படும்.

இந்தப்பிரகாரம் சரீரத்திரயத்திற் கூடியிருக்கிற சிதாபாசன் ஞாதுரு ஞான ஞேயமாகிய திரிபுடிவியாபாரம் பண்ணுவன்.

ஞாதுருஞானஞேயமாவதேதெனின்.

அந்தக்கரண பிரதிபிம்பசை தன்னியமே சிதாபாசன் அவனையே ஞாதுருவென்றும் அவன்விர்த்தியுடன் கூடும்போது ஞானமென்றும் அவன்விஷயங்களுடன் கூடும்போது ஞேயமென்றுஞ் சொல்லப்படும்.

இந்தத்திரிபுடியுடன்கூடியிருக்கிற சிதாபாசனே தசேந்திரியவியாபாரத்தைச்செய்வன்.

அதாவது.

யாதொருசைதன்னியம் அந்தக்கரணவிர்த்தியோடுகூடிச் சுரோத்திரேந்திரியத்துவாரா சப்தங்களையெல்லா மறிகின்றதோ அதுவே தொக்கிந்திரி

யத்துவாரா பரிசங்களையும் சட்சிந்திரியத்துவாரா ரூபங்களையும் சிங்குவை யிந்திரியத்துவாரா ரசங்களையும் கிராணேந்திரியத்துவாரா கந்தங்களையும் வாக்கிந்திரியத்துவாரா வசனங்களையும் பாதேந்திரியத்துவாரா கமனங்களையும் பாணீந்திரியத்துவாரா தானங்களையும் பாயுரிந்திரியத்துவாரா விசர்க்கத்தையும் உபஸ்தேந்திரியத்துவாரா ஆனந்தத்தையும் அறிகின்றது. இப்படித் தசேந்திரியவியாபார விஷயங்களை யறிகிற ஜீவனையே வாச்சியார்த்தமென்று சொல்லப்படும்.

இந்தவாச்சியார்த்தத்துக்கே இன்னமொருவிதம்.

பூர்வோக்த ஸ்தூலாதி தனுத்திரயமுண்டு—சமஷ்டிரூபரான விராட்புருஷன் இரண்யகர்ப்பன் அந்தர்யாமியென்னும் ஈஸ்வரர்களும் பிரம்மமுங்கூடி தப்தாயபிண்டம்போல் ஏகாகாரமாகக்காண்பதே தத்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும் முக்கியார்த்தமென்றும் அபிதார்த்தமென்றுஞ் சொல்லப்படும்.

தனுத்திரயவியஷ்டிரூபரான விஸ்வ தைஜச பிராக்ஞ சிவரூபமும் பிரத்தியேகாத்மனுங்கூடி தப்தாயபிண்டம்போல ஏகாகாரமாகக் காண்பதே துவம்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும் முக்கியார்த்தமென்றும் அபிதார்த்தமென்றுஞ் சொல்லப்படும்.

விராட்புருஷாதிகளை வேறுபடுத்தின நிருபாதிகப் பிரம்மமே தத்பதத்துக்கு லட்சியார்த்தமென்றும் சோதிதசுத்த தத்பதார்த்தமென்றுஞ் சொல்லப்படும்.

விஸ்வாதிகளை வேறுபடுத்தின நிருபாதிகப் பிரத்தியேகாத்மனே துவம்பதத்துக்கு லட்சியார்த்தமென்றும் சோதித சுத்ததுவம் பதார்த்தமென்றுஞ்சொல்லப்படும்.

இதுவுமன்றியில் சத்துத்திரயமான விவகாரிகசித்து பிராதிபாதிகசத்து பாரமார்த்திகசத்தும் அபிமானிகளான விஸ்வதைஜச பிராஞ்ஞ லட்சணமும்-அதத்துவாவிர்த்திலட்சணை தடஸ்தலட்சணை ஸ்வரூபலட்சணை விசாரபூர்வகமாய்.

சிதாபாசஸ்வரூபனான-அவித்தையா விசிஷ்ட தொம்பத கிஞ்சிஞ்ஞத்துவ அவஸ்தாவாசனான ஜீவனுக்கு வாச்சியார்த்த லட்சியார்த்த—அசுத்த சுத்தங்களையும்.

மாயாவிசிஷ்ட தற்பத சர்வஞ்ஞத்துவமான ஈஸ்வரனுக்கு வாச்சிய லட்சியார்த்த அசுத்த சுத்தங்களையும்.

தொம்பதசிவனுக்கு வாச்சியார்த்தமான அசுத்தஸ்தூலசரீரத்தில் ஞானேந்திரிய பஞ்சகம் ஒன்று, கன்மேந்திரியபஞ்சகம் ஒன்று, இவற்றைக் கூத்தறிகிற அந்தக்கரணங்கள் நாலு, இவைக்கெல்லாஞ் சேர்க்கை கொடுப்பதான பிராணாதி பஞ்சகம் ஒன்று இவ்வேழுமே காரியோபாதி.

இவ்வேழுபாதிகளையும் தானென்று ஜீவனபிமானித்ததே தொம்பத அசுத்தமென்றும்.

இதுவே யின்னுமொருவிதம்.

லட்சியார்த்த பிம்பம் வாச்சிய அகங்காரத்திற் பிரதிபலித்து இரண்டுங் கூடினபோது லட்சியமாகிய சாட்சி அசைவற்றிருக்க அகங்காரந் தொழிற்படுகிறதே—வாச்சியார்த்தமென்றும்.

இதுவே இன்னுமொருவிதம்.

மலின சத்துவம்பொருந்தி சிற்பிரதி பிம்பத்துடன்கூடி புத்திமுதல் ஸ்தூலசரீராந்தமாய்க் காரியகாரண லட்சணமாகிய வியஷ்டிரூபமான அவித்தையிற் பிரதிபிம்பித்து ஜீவனென்கிறபேரைப் பொருந்தியும் ஷட்பாவவிகாரங்களுடன்கூடி நான் பாலன் நான்கௌமாரன் நான்யௌவனன் நான்பெருத்தேன் நான்சிறுத்தேனென்கிற ஸ்தூலசரீர தர்மங்களுடனே கூடியும்—பசி தாஹ சோக மோஹசாரமான ஷடூர்மிகளைப்பொருந்தியும், நானூமை செவிடன் குருடன் மூக்கறையன் நான்போகிறேன் வருகிறேனென்கிற இந்திரியங்களுடனேகூடியும்—காமம் சங்கற்பம் பொறுமை சந்தோஷம் பயம் கவலை மறதி இதுமுதலான மனோதர்மங்களுடன் கூடியும்—நான் கர்த்தா நான்போக்தா நான்சுகி நான்துக்கியென்கிற ஆங்காரதர்மங்களுடனேயும் திரிகரணத்தினாற்பண்ணப்பட்ட புண்ணிய பாபபல போகத்தின்பொருட்டுச் சொர்க்கநரகங்களை யடைந்து அதிலுண்டான சுகதுக்கங்களை தன்னுடைய கர்ம்மத்துக்கீடாய்ப் பொசித்துக்கொண்டு பிரமையோடேகூடின புருஷனானவனே—தொம்பத வாச்சியார்த்தமென்று சொல்லப்படும்.

தொம்பதஜீவனுக்கு லட்சியார்த்தமான சுத்தம்.

மேற்சொல்லிய இவ்வேழுபாதியுந் தானல்லவென்று கழித்து அவைகளுக்குச் சாட்சியாயிருப்பதே—தொம்பதசுத்தமென்றும்.

இதுவே யின்னுமொருவிதம்.

அந்தக்கரணத்தையும் அதுகளின் விர்த்திகளையும் தேகேந்திரியாதி வியாபாரங்களாகிய வாச்சியத்தையுந்தள்ளி மஞ்சாக்குரோசவிலட்சணம்போல அவஸ்தாத்திரய சாட்சியாய் கூடஸ்தனாய் நிர்விகாரியாயிருக்கிற பிரத்தியேகாத்ம சைதன்னியமே—லட்சியார்த்தமென்றும்.

இதுவே யின்னுமொருவிதம்.

அவித்தையாலட்சணமான தேகேந்திரிய கரண மனோபுத்திப் பிராண அகங்காரரூபமான உபாதிகளில்லொட்டாததாயும் மண்ணோடு கல்லுகளுடைய மத்தியிலிருக்கிற ஓர் மாணிக்கக்கல்லானது அதுகளை எப்படி துலக்குவிக்கின்றதோ அப்படியே இந்தப்பிராணேந்திரியாதி தேகத்துக்குள்ளே சோதியாயிருந்து துலக்குவித்துக்கொண்டு அந்தத் தேகாவஸ்தைக்கெல்லாஞ் சாட்சியாய் பிரத்தியேகாத்மாவாயும் தேகேந்திரிய வியாபாரங்களைப் பார்த்

துக்கொண்டிருக்கிறதாயும் அறிகிறதாயும் ஏகமாயுஞ் சத்தியமாயும் நிர்விகாரமாயும் பூரணமாயும் சூட்சும்மாயுஞ் சர்வப்பிரகாசமாயுந் தடஸ்தமாயுங் கூடஸ்தமாயுமிருக்கிற ஆத்மாவே—தொம்பதத்துக்கு லட்சியார்த்தமென்று சொல்லப்படும்.

தற்பத ஈஸ்வரனுக்கு வாச்சியார்த்தமான அசுத்தம்.

சர்வஞ்ஞன் சர்வகாரணன் சர்வேந்திரியாமி சர்வேஸ்வரன் சர்வசிருஷ்டி சர்வஸ்திதி சர்வசங்காரன் என்னுமிவ்வேழுங் காரணவுபாதி இவ்வேழுவுபாதிகளையுந் தானென்று ஈஸ்வரன் அபிமானித்ததே—தற்பத அசுத்தமென்றும்.

இதுவே யின்னுமொருவிதம்.

உத்தமமாயிருக்கிற இந்திராதிதேவதை சரீரங்களிலும் மத்திமமாயிருக்கிற மனுஷ்யாதி சரீரங்களிலும் அதமமாயிருக்கிற பசுவாதி சரீரங்களிலும் அபஞ்சிகிருத பூதபஞ்சிகரண பூதங்களிலும் யாதொரு சைதன்னியமானது ஏகமாயிருக்கின்றதோ அதுவே—வாச்சியார்த்தமென்றும்.

இதுவே யின்னுமொருவிதம்.

சத்துவகுணமிகுத்து சிற்பிரதிபிம்பத்தோடேகூடிச் சமஷ்டிருப அஞ்ஞானமாகிற ஆகாசாதி விராட்புருஷாந்தமான காரியத்துடன்கூடி பிரதிபிம்பாவிச்சின்ன சைதன்னியமானது சச்சிதாநந்த லட்சணத்தைப் பொருந்தியுஞ் சர்வஞ்ஞத்துவம் ஈஸ்வரத்துவம் அந்தர்யாமித்துவமாகிய குணங்களோடே கூடிக்கொண்டிருக்கிறதாயுஞ் சிருஷ்டிஸ்திதி சங்கார தர்மங்களுடன் கூடினதாயுஞ் சகலப் பிரபஞ்சத்தையுந் துலக்குவிக்கிறதாயும் குணங்களினல் எண்ணத்தொலையாததாயு மிருக்கின்றது. அந்த அவ்வியக்தமான பிரம்மமே—வாச்சியார்த்தமென்று சொல்லப்படும்.

தற்பத ஈஸ்வரனுக்கு லட்சியார்த்தமான சுத்தம்.

இவ்வேழுபாதியுந் தானல்லவென்று கழித்து அவைகளுக்குச் சாட்சி சைதன்னியமாயிருப்பதே—சுத்தமென்றும்.

இதுவே யின்னுமொருவிதம்.

மாயாகாரியங்களனைத்தையுந் தள்ளிவிட்டுப் பிரபஞ்சவிலட்சணமாய் பிரபஞ்ச அதிஷ்டானமாய் மாயாதற் காரியாதீதமாய் திரிவிதபரிச்சேத சூன்னியமாய் சர்வத்திரா அநுகூதமாயிருக்கிற பரமாத்தமசைதன்யர்தானே—லட்சியார்த்தமென்றும்.

இதுவே யின்னுமொருவிதம்.

சத்த பரிச ரூப ரச கெந்தங்களில்லாததாயும் வாக்கினல் வசனிக்கப்படாததாயும் மனதினல் எண்ணப்படாததாயும் பாணியினல் கிரகிக்கப்படாததாயும் ஒன்றினலுந் தள்ளப்படாததாயும் ஒருதொழிலிலுமொட்டாததாயும் ஆத்மாவே ஏகலட்சணமாய்ப் பொருந்தினதாயும் அமனஸ்கமாயும் இந்

திரியாதீதமாயும் சத்தவாதிகுணங்களில்லாததாயும் விலட்சணமாயும் பிராந்தியினால் ஆரோபிக்கப்பட்ட வஸ்துக்களுக்கு அதிஷ்டானமாயும் சத்தாயும் அத்தொய்தமாயும் சுத்தபுத்த கேவலானந்த லட்சணமாயுமிருக்கின்ற நிர்விசேஷபரப்பிரம்மமே—தற்பதலட்சியார்த்தமென்று சொல்லப்படும்.

உபாதிநியதிகழற்றி விலட்சணஞ்சொலல்.

தொம்பதார்த்த சீவோபாதியான காரியோபாதி ஏழுடன்கூடி நின்ற ஸ்தூலதேகத்தை அபிமானித்தவன் விசுவனென்றும்—இதுவே சீவசாக்கிரமென்றும்.

இந்த ஏழுபாதியில் இருவகை இந்திரியமான இரண்டு பாதிநீங்கிக் கரணம் நாலு பிராணாதி ஒன்றுமான ஐந்து பாதியோடுகூடின சூட்சுமதேகத்தை அபிமானித்தவன் தைஜசனென்றும்—இதுவே ஜீவசொப்பனமென்றும்.

இவ்வைந்துபாதியில் கரணம் நாலுநீங்கி பிராணாதியாகிய ஒருபாதியுடனின்ற காரணசரீரத்தை அபிமானித்தவன் பிராஞ்ஞனென்றும்—இதுவே ஜீவசுழுப்தியென்றும்.

இவ்வேழுபாதிகளுமிறந்து ஜீவசாட்சிமாத்திரமாய்ச் சேஷித்துநின்ற ஜீவதுரியமும் துரியமாகிய போதமுமிறந்து விஸ்வரூபமான சர்வசாட்சியாயிருக்கும்—பரசாக்கிரமும்.

சங்கிலித்தொடர்பாகிய சகலப்பிரபஞ்சங்களையும் வேறாகக்கண்ட அறிவுமாத்திரமே தானாயிருக்கும்—பரசொப்பனமும்.

ஞாதுருக்ஞான ஞேயமான காண்பானுங் காட்சியும் காட்சிப்பொருளும் விடுபட்டு சர்வமுந் தோன்றாமலிருக்கும்—பரசுழுத்தியும்.

அந்தச்சுழுத்தியை அறிந்த அறிவாகிய—பரதுரியமும்.

கூடஸ்தரும் பிரம்மமு மொன்றென்றுணர்ந்த—சிவசாக்கிரமும்.

அநாதியாய் சகலசெகத்துந் தானாயிருந்ததும் இருந்தோமென்னும் வாசனையும் விடுபட்டிருந்தசாட்சியே தானென்றுணர்ந்த—சிவசொப்பனமும்.

காணப்பட்டஜெகமெல்லாம் அறிவுரூபமென்றறிந்து அவ்வறிவும் விடுபட்டு மனோலயமாகுமிடமாகிய—சிவசுழுத்தியும்.

இந்தச்சுழுத்தியை அறிந்த அறிவாகிய சர்வசாட்சியே தானாகக்கண்டனுபவிக்குஞ்—சிவதுரியமும்.

இந்தத்துரியமே சச்சிதானந்தமும் விடுபட்டபரையாகிய மகாகாரணசரீரமென்றும் இந்தத்துரியமு மிறந்தவிடம் சுத்தப்பிரம்மமென்றும் விசாரித்து நிச்சயஞானமுதித்துணர்தலால் நாகலிங்கந்தனை அறிந்தேன் என்றுங் கூறலாயிற்று—மற்றும் வருவனவற்றூற்காண்க.

சமாதிஞானங்கூறல்.

நாகலிங்கந்தனை யறிந்ததினு லென்பது.

உலகமுதற்பொருளா. யண்டசராசர முயிர்கட்கெல்லாமொன்றான மஹாலிங்கமாய் பின்னுபின்னமாய் அணுபட்ச சம்புபட்சாதிதராய் அதிஷ்டானமாகிய மஹாலிங்கதேவரை வேதசம்மதசித்தாந்தமாய் சமாதிஞானத்தா லறிந்ததினுல் நாகலிங்கந்தனை யறிந்ததினுலென்றுங் கூறலாயிற்று மற்றும் வருவனவற்றுற்காண்க.

சகசஞானமும் ருக்குவேத பிரக்கியான கனசொரூபலட்சணமுங் கூறல்.

நாகலிங்கந்தனை மறந்திலனென்பது.

நினைப்புமறப்பற்றமகாலிங்கதேவராருக்குவேதமகாவாக்கியத்திற்சொல்லிய பிரக்ஞானம் பிரம்மமென்ற வாக்கிய சித்தாந்தப்பிரகாரம் இமைப்பொழுதும்விட்டு நீங்காச் சகசஞானத் திருந்ததனுல் நாகலிங்கந்தனைமறந்திலன் என்றுங் கூறலாயிற்று.

பிரக்ஞையே பிரம்மமென்பதற்கு நானுவித திஷ்டாந்தங்கூறல்.

திருவாசகம்.

இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றுள்வாழ்க என்றும்.

(தத்துவராயசுவாமிகள்பாடுதுறை.)

ஊனே மறிவதென் றாதடாகாளம்
உணர்வே பிரமமென் றாதடாகாளம்
நானே யவனுமென் றாதடாகாளம்
நானுவ தில்லையென் றாதடாகாளம்— என்றும்.

(ஞானவாசிஷ்டம் தேவபூஜை கதையில்.)

தீவினையெல்லாமறுத்து மங்கலமெல்லா
 முதவுந்தேவபூசை
யாவதெனக்கேட்டலு மேயருள்செய்வான்
 றெய்வந்தா னியாதென்றோதிற்
கேவலமே யரியல்ல வரனல்ல
 பூதவுடற் கிடைத்ததல்ல
வோவுமன மன்றடியு முடிவுமிலாச்
 செயப்படாவுணர்வேதெய்வம் - என்றும்.

(அத்துவிதானுபவம்.)

மனதப்பாற் போயிருந்துந் திரும்பியுமிங்
　　கடைந்ததென்றும் வருமஞ்ஞானம்
புனையறிவு சுகதுக்க மெல்லாமுண்
　　டாயிருந்து போச்சுதென்றுந்
தினமுமிதெல்லாமறியு மவ்வறிவே
　　சீவனுந் தேகந்தோறும்
அனவரத மவ்வறிவே யெங்கும்
　　பூரணப்பிரம மாகுந்தானே- இன்னும்.

வெளியுடனே சேராத பொருளொன்று
　　மில்லையந்த மேன்மைபோலே
ஒளிர்தரு மெய்யறிவுடனே சம்பந்த
　　மிலாதபொருளொன்றுமில்லை
தெளிவுதரு மெய்யறிவு பெருவெளிபோ
　　லகண்டமெங்குஞ் சிறந்ததன்றே
எளியவர்க்கு நூல்தவிர வறிவி
　　லனுபவிக்கப் பட்டிருந்ததாமே- இன்னும்.

பார்க்கையிலுங் கேட்கையிலு முயிர்க்கையிலுந்
　　தொடுகிலுநாப் பருகும்போதும்
ஆர்க்குமதினதி னறிவிலாமலே
　　யதுநடத்தையாவதில்லை
காக்குமதி னறிவெலாமொன்
　　றகண்டபிரத்தியட்சங் ககனம்போலே
சேர்க்குமுபாதியிற் பின்னம்போ லிருப்பதறிய
　　நூற்றிரளே னிங்கே- இன்னும்.

சிறிதறியப்பட்டதாய்ச் சிறிதறியப்படாததாய்
　　செகத்திலென்னல்
அறியப்பட்டதெல்லா மென்றிருவகையி
　　னனுபவத்தினறிவதாலே
முறிவிலாமுன்னறி விப்போது
　　மினிமேலுமென்று மூக்காலத்து
நெறியறிவுமறிவுருநானே சகலசாட்சி
　　யெனநிகழ்த்தலாமே- என்றும்.

பாடுதுறை.

புத்தேந்திரியங்கள்முதற்பொறிகடன்மேற்
புணரும்போது
நித்திரையில்வந்தபோது நின்றபோது
நில்லாப்போது
மித்தனையுங்காண்கையாலே
யெங்குமுள்ளானேகமாயே
யத்தனையுமறிகையாலே
யறிவானென்றுடிருசல்- என்றும்.

குமாரதேவர் பிரமானுபூதிவிளக்கம்.

நிலைபிரிந்தபோது நிலையினில்வந்திடும்போது
நிலைபிரியாதே நிகழுநிசசொரூபமல்லவோ- என்றும்.

மகாவாக்கியம்.

அனைத்தையுங்கடந்ததாகி யனுபவத்தறிவதாகி
நினைத்ததேகத்தினுள்ளே நிச்சயப்படுவதாகி
வினைத்தசூக்குமதேகத்தை விளக்குவதாகித்தானே
தனக்கிணையென்னலாகுஞ் சைதன்னியமகங்காணென்பார் - என்றும்.

ஞானவாசிஷ்டம் சுரகுகதையில்.

வெறிதிருக்கினுந் தொழிலினை மேவினும்விடாம
லறிஞனென்றுதான்சமாதி விட்டகன்றவனருகுஞ்
செறியுஞானஞ்சேர்மனத்தினர் செகத்தொழில்செயினும்
பிறவிறத் துவநிட்டராய்ச்சமாதியிற்பெயரார்-என்றும்.

சிவவாக்கியர்பாடல்.

உறங்கிலென்விழிக்கிலென்னுணர்வுசென்றொடுங்கிலென்
சிறந்தவைம்புலன்களுந்திசைதொறுஞ்செல்கிலென்
புறம்புமுள்ளுமெங்கணும்பொதிந்திருந்ததேகமாய்
நிறைந்துநின்றஞானிகள் நினைப்பதேதுமில்லையே- என்றும்.

சுகாதீத வெண்பா.

நேரறிவில்நேரறிவாய் நீங்காதநின்மலமாய்
ஓரறிவுக்கோரறிவா யோங்கியே - நேரறிவிற்
றட்டாமற்றட்டியொன்றுந் தாக்காமலொன்றிரண்டுக்
கெட்டாமலொன்றிருந்ததே- இன்னும்.

சடங்கற்றேஞ்சாத்திரங்களற்றேஞ்சமாதி
யுடம்பற்றேமூழ்வினையுமற்றேங் — திடம்பெற்றேம்
மெய்ப்பொருளைக்கண்டு விழித்திருக்கக்கண்பெற்றேம்
எப்பொருளும்வேண்டோமினி- என்றும்,

மற்றும்வருவனவற்றுற்காண்க.

சாக்ஷாத்காரஞானங்கூறல்.

நாகலிங்கந்தனை மறவாததினுலென்பது.

அங்ஙனம்விட்டு நீங்காச் சிதாகாசஸ்வரூபரான பிரக்ஞான பிரம்மநாக லிங்கந்தனை மறவாததினல் நாகலிங்கமகாதேவரிடத்துச் சகசசாட்சாத்கா ரஞானமுறலா லதனுல் நாகலிங்கந்தனை மறவாததினுலென்றுங் கூறலாயிற் று. மற்றும் வருவனவற்றுற்காண்க.

அமனஸ்கலட்சணங்கூறல்.

நாகலிங்கந்தனைப் பிரிந்திலனென்பது.

முன்னுரைத்த நாகலிங்க மகாதேவரை சகசசாட்சாத்கார ஞானமாய் அமனஸ்கலட்சணத்தை யடைந்ததினுலும் நாகலிங்கந்தனைப் பிரிந்திலனெ ன்றுங் கூறலாயிற்று. மற்றும் வருவனவற்றுற்காண்க.

அமனஸ்கலட்சணஸ்வபாவங்கூறல்.

நாகலிங்கந்தனைப் பிரியாததினுலென்பது.

அங்ஙனஞ்சகசசாட்சாத்காரஞானமாய் அமனஸ்கலட்சணத்தையடை ந்தே யிருத்தலால் மஹாலிங்க நாகலிங்கந்தனை நீரினுள் ளுமைக்குடந்தே லிக் கொண்டிருப்பதுபோலும் ஆகாயத்துளாகாயம்போலும் சித்திரதீபம் போலும் பாராதுபார்ப்பதுபோலும் நோக்காது நோக்குவதுபோலும் மண த்தில்மணமும்போலும் நீரினுள்நிழல்போலும் அறிவும் அறிவுக்கலந்தது போலும் நாகலிங்கந்தனைப் பிரியாதிருந்ததால் நாகலிங்கந்தனைப் பிரியாத தினுலென்றுங்கூறலாயிற்று. மற்றும்வருவனவற்றுற்காண்க.

அமனஸ்கலட்சணுதீதங்கூறல்.

நாகலிங்கந்தனையுமறிந்திலன்என்பது.

சகுணவயிக்கம் நிர்குணவயிக்கம் சகசவயிக்கம் நித்தியமுத்தியயிக்க மென்னும் பிரமாணத்தா லொன்றிரண்டற்ற அத்துவிதமஹாலிங்க நாகலிங் கதேவரையு மறிந்திலன் என்னும் நினைப்புநீங்கி சாக்ஷாத்காரஞானமாய் அ மனஸ்கலட்சணத்தை யடைந்தேனென்னும் நினைப்புநீங்கினதாலும்ஞாதுரு க் ஞானஞேய இரிபுடிரகிதரான நாகலிங்கந்தனையு மறிந்திலனென்றுங் கூற லாயிற்று.

பரமசிவம் மானிடச்சட்டைசாத்தி ஆசிரியராயெழுந்தருளி ஒரு மொழி மஹாவாக்கியத்தை அடியார்களுக்குச் சொல்லாமற்சொல்லிக் காட்டாமற்காட்டி அஸ்தமஸ்தக சையோகமாய் திருவடி தீக்ஷைசெய்தவளவில் நினையாமல்நினைந்து அடியார்கள் துதிசெய்ததற்குப்பலநூல்களில் நின்றெடுத்துச்சொலல்.

ஆகையால்.

பரோக்ஷஞானத்தால் அபரோக்ஷஞானஞ் சித்திக்குமென்றுரைக்கும் வேதாகமசம்மத சித்தாந்த (பூர்வகமாய் ஆத்மாஜுத்ம விசாரணைசெய்த பரமாசாரியர்கள் சொன்னவாக்கியசித்தாந்தக் கிரமப்படி அடியேன் விசாரித்ததேயல்லாமல்) பரோக்ஷமே அபரோக்ஷ ஞானமாய்த் தெரிந்துகொள்ளக்கூடாமையாலும் பரமாசாரியர்கள் சுருதிமுன்னிலேயில் தெரிவித்ததுமாத்திரந் தெரிவதேயல்லது மலபரிபாகத்தினல் ஸாதனசதுஷ்டய சம்பன்னத்துவமுஞ் சத்திநிபாதமும்வந்த அடியார்களுக்குப் பரமசிவமே பரசிவானுபூதிவிளக்கத்தை விளக்கச் சிவகாருண்ணியம் பாசவயிராகம் ஈச்சுரபத்தி பிரமஞானம் இந்நான்குமொன்றாய்த் திருமேனியாகிய மானிடச்சட்டைசாத்தி இவ்வுலகின்கண் அனேக அடியார்களுக்குத் தெய்வீகம்விளங்கும்படி சமயதீட்சை விசேஷதீட்சை நிருவாணதீட்சை அபிஷேகதீட்சை அறியுந் திருவடிதீட்சை அறுதித்திருவடிதீட்சை ஆகிய அகத்தீட்சை மூன்றுபுறத்தீட்சை மூன்றென்றும், பறவையைப்போலும் மச்சத்தைப்போலும் ஆமையைப்போலும் சிந்தித்து ஒருசொல்லைச் சொல்லாமற்சொல்லிக் காட்டாமற்காட்டி அஸ்தமஸ்தக சையோகமாய் திருவடிதீக்ஷைசெய் துபதேசித்தும் அதனல் சுவானுபூதிவந்த அடியார்களுக்கு அபரோக்ஷஞானமுண்டாய் பிரமானுபூதியால் அருள்வாக்கைப்பெற்று அநேகவடியார்கள் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

அதாவது

சுகோபநிஷத்து.

அங்குஷ்ட ஸ்தத்பதம் புரோக்தம் தர்ஜன்னியாந்துவம்ப்தம்பவேது
தயோஸ்ஸந்திஸ்தயோரயிக்கியம் சின்முத்திராஸா: பிரகீர்த்திதா.—என்றும்,

சிவஞானவள்ளல் பசுபதிபாசவிளக்கம்.

கல்லாலின்கீழிருந்தகண்ணுதலென்போலாகிக்
கல்லாவுலகிற்கருணையொடும்வந்தெனக்குச்
சொல்லாதசொல்லையொருசொல்லாலுரைத்தார்க்குச்
சொல்லாதசொல்லானற்றோத்திரங்கள்செய்வேனே. இன்னும்,

உண்ணுதசோறும்முடுக்காதவத்திரமும்
பண்ணுதபாயும்படுக்காதநித்திரையு

மெண்ணுமனுவுமியம்பாததோத்திரமுங்
கண்ணாலளித்தார்க்குக்கைம்மாறுகாணேனே. என்றும்,

திருவிளையாடல்புராணம்.

கல்லாலின்புடையமர்ந்து நான்மறையாறங்கமுதற் கற்றகேள்வி,
வல்லார்களால்வருக்கும் வாக்கிறந்தபூரணமாய் மறைக்கப்பாலா,
யெல்லாமாயல்லவுமா யிருந்தபடியிருந்ததனை யிருந்துகாட்டிச்,
சொல்லாமற்சொன்னவனை நினையாமனினைந்துபவத் தொடக்கை
வெல்வாம். என்றும்,

கண்ணுடையவள்ளல் ஒழிவிலொடுக்கம்.

கண்மணியினாகாயநீழல்கலந்தாப்போல்
உண்மையைநீயுண்டென்றெனையுணர்த்தித்துண்ணெனவே
பார்த்திருந்தசித்திரம்போற்பார்த்தானைநாம்பாவித்
தோத்திரஞ்செய்யாப்பிறவார்ச்சொல். என்றும்,

பாடுதுறை.

கண்ணாகக்காணுங்கண் டந்தவடி கண்ணென்று
மெண்ணாதவண்ண மிருத்துமடிவண்ணந்தான்,
மாமறைகளோதரிய வாசாமகோசரத்தை
யூமைமொழியா லுணர்த்துமடியேமமுற.
வாங்கிமுழுது மலர்த்தாளிலென்னைமகிழ்
தூங்கவளித்த சொரூபனடி.
மீதாகநின்றவடி மேல்கீழிலாதவடி
யோதாமலுண்மை யுணர்த்துமடி.
ஆவாவென்றென்னை யருட்கண்ணாற்பார்த்தருளி
வாவாவென் றென்றலையில்வைத்தவடி.
கையின்மணியென்ன யாவர்க்குங்கண்ணளிக்குஞ்
செய்யசொரூபாநந்தன் செம்பொனடி.
வெள்ளவெளியாயவடி மேவுமருட்கண்ணதனாற்
கள்ளமறவெவ்வுருவுங் காணுமடி.

கொடி.

உரையுணர்வற்றதொன்றை யுள்ளங்கைநெல்லிபோலக்
குரைகழறந்தான்வரிற் கொடியேபுலகைகூறே.

கோழி.

மோனமொழியான் முழுதுமோதி
முடித்தவெங்கோமானெழுந்தருள
ஞானவினோதன் றிசையைநோக்கி
யழைத்திடாய்கோழிக்குலக்கொடியே.

செத்துப்பிறக்கக்கொடாதெங்கண்மூத்திரை
செம்பிற்செறிக்கப்படாதெங்கண்மூத்திரை
யத்தத்திலுத்தரமாமெங்கள்மூத்திரை
யாலின்கீழ்நால்வர்க்கரன்சொன்னமூத்திரை.

ஆரணமுடிவினிலசிபதப்பொருளை
யருளுமுப்பூரணபூரணாபிஷேகச்
சீரணியடிகளென்சென்னியிற்சேர்த்திச்
செறிதரவகண்டவாக்கியமதனலைப்
பூரணத்துரியமென்மோனநல்விழியாற்
புணர்குருசத்தியமாதியுற்பலத்தின்
பாரொனநடித்துனிலையிக்கியமாக்கும்
பரிபூரணனேபள்ளியெழுந்தருளாயே. என்றும்,

சொரூபசாரம்.

தேகாலயத்திற்சிதாகாசதேவதையை
வாகாயசாந்திமலராலே - யேகாந்த
மந்திரத்தாற்பூசைசெய்யுமாதவனாயாதரித்துச்
சந்ததம்வாழ்வார்க்கார்சரி. என்றும்,

சிவபோகசாரம்.

வெறும்பாழிற்பேரின்பவெட்டவெளிதன்னிற்
குறும்பாளர்காணாதகுடிலி - னுறும்பாச
மோட்டியடிவைத்தனனேயுற்றபிரபஞ்சமெலா
மாட்டியஞானப்பிரகாசன். என்றும்,

தாயுமானசுவாமிகள்பாடல்.

நிர்க்குணநிராமயநிரஞ்சனநிராலம்ப
நிர்விஷயகைவல்யமா
நிஷ்களவசங்கசஞ்சலரகிதநிர்வசன
நிர்த்தொந்தநித்தமுத்த

தற்பரவிஸ்வாதீதவ்யோமபரிபூரண
சதாநந்தஞானபகவ
சம்புசிவசங்கரசர்வேசவென்றுநான்
சர்வகாலமுநினைவனே
வற்புதவகோசரநிவிர்த்திபெறுமன்பருக்
கானந்தபூர்த்தியான
வத்துவிதநிச்சயசொரூபசாக்ஷாத்கார
வனுபூதியனுசூதமும்
கற்பனையறக்காணமுக்கணுடன்வடநிழற்
கண்ணாடிருந்தகுருவே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. என்றும்,

(கந்தரலங்காரம்.)

ஒளியில்விளைந்த வுயர்ஞானபூதரத் துச்சியின்மே
லளியில்விளைந்த தோராநந்தத் தேனையநாதியிலே
வெளியில்விளைந்த வெறும்பாழைப்பெற்ற வெறுந்தனியைத்
தெளியவிளம்பிய வாமுகமாறுடைத் தேசிகனே. அன்றியும்,

(அருணகிரிநாதர் திருப்புகழ்.)

சுட்டதுபோலாசை விட்டுலகாசார துக்கமிலாஞான சுகமே வி, சொற்கரணாதீத நற்குணமூடாடு சுத்தநிராதார வெளிகாண, மொட்டலர்வாரீச சக்ரசடாதார முட்டவுமீதேறு மதிமீதாய், முப்பதுமாறாறு மூப்பதும்வேறான முத்திரையாமோன மடைவேனோ, எட்டவொணாவேத னத்தணிகோகோ வெனப்பருவான்மேவு வளைசாய, வெற்றியவேழாழி வற்றிடமாறாத வெத்தனையோகோடி யசுரேசர், பட்டொருசூர்மாள விக்ரமவேலேவு பத்திருதோள்வீர தினைகாவல், பத்தினிதோடோயு முத்தமமாறாத பத்திசெய்வானுடர் பெருமாளே. என்றும்,

(திருவாசகம்.)

அல்லிக்கமலத் தயனுமாலு
மல்லாதவரு மமரர்கோனுஞ்
சொல்லிப்பரவு நாமத்தானைச்
சொல்லும்பொருளு மிறந்தசுடரை

நெல்லிக்கனியைத் தேனைப்பாலை
நிறையின்னமுதை யமுதின்சுவையைப்
புல்லிப்புணர்வ தென்றுகொல்லோ
வென்பொல்லாமணி யைப்புணர்ந்தே. அன்றியும்,

கரமலர்மொட்டித் திரதயமலர. அன்றியும்,

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும்பாடி
சிட்டர்கள்வாழுந் தென்றில்லைபாடி
சிற்றம்பலத்தெங்கள் செல்வம்பாடி
கட்டியமாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மே
லிட்டுநின்றாடு மரவம்பாடி
யீசற்குச்சுண்ண மிடித்துநாமே. அன்றியும்,

அருட்பெருந்தீயி னடியோமடிக்குடி
லொருத்தரும்வாழாமை யொடுக்கினன்
றடக்கையினெல்லிக் கனியெனக்காயினன்
சொல்லுவதறியேன் வாழிமுறையோ. என்றும்,

(சவுந்தரியந்தாதி.)

சதுமாமறைமுடிவாகிய தனிஞானசுகத்தைப்
பதுமாசரமதனலருள் பரிபூரணமயிலே
யிதுமாதமுனைக்குங்குறி யெந்தாயெனவந்தாள்
முதுமாதவர்துதிகாரண முடிவேதவவடிவே. அன்றியும்,

மட்மான்கரம்போபட்வரவோ மணிவட்டகையோநிதம்பமென
வகுப்பார்முனிவோர் மலரயனுமாலுஞ்சிவனுமற்றுமுள்ள
விடமானவருஞ்சராசரங்க ளிருக்கேமுதலாகமநாலு
மெல்லாம்பிறந்தும்பிறவாம லிருக்குந்திரிகோணங்களிலே
தடமானவையுந்தாமரையுந் தவத்தோர்குழுவுந்தனிமுதலுந்
தங்கச்சிகரகோபுரமுந் தயங்குங்கோயிற்சிவஞானக்
குடமாமிரண்டுகுறிகாட்டிக் குருவாழ்ந்திடத்தைக்குறிப்பறியார்
குயிலேமயிலேயெமையளித்த வுமையேயவிடங்கூட்டுவையே.
அன்றியும்,

உரைத்தாயடியேன்றுயரறவே கொடுப்பேனெனுஞ்சொல்லுறு
திபெறக், கரத்தாமரையாலள்ளியிடக் கடையேன்பேசிநீங்குதல்க

ண்டாய், சிரத்தாமரையினுயிரத்தெட் டிதழேசிறந்ததிருப்பதத்
தைத், தாத்தான்குருவாயெழுந்தருளென் முயேயதுவுந்தரும்ப
ரிசே. அன்றியும்,

பரிசமுடனைந்துபுல னுகியதறிந்தபத பங்கயமொருத்தரறியார்,
வரிசையுடனெங்கும்விளை யாடியதழித்துநிதம் வந்துபுரிகின்றம
யிலே, தெரிசனமுதற்பொரு ளுதிப்பதுமொடுங்கிய திசைப்பரம
வெட்டவெளியும், புரிகுழல்சவுந்தரி யெனக்கருள்பரம்பரம வன்
னியழிபொன்னின்முடிவே. அன்றியும்,

இழைநுழையாதிடை யழகுறுபூண்முலை யிளவெயின்மேனியிலே
நிழலுறுசாமள மணிவடமாடிய நிலவெழுபூதியினுள்
கழைபெறுதோளியை யழகொழுகாநிறை கருணையினுரமுதை
தொழுமவரேசிவனடியவர்காணது சுருதியினுலுரையே. அன்றியும்,

முத்தியளித்திடு சட்டுவவட்டகை முக்கியமுக்கியமே
நத்தியுரைப்பவர் சத்திநிமெய்ப்பத நற்சரமுற்றவரோ
பத்திநித்திய முத்தியளித்தருள் பத்மினிசர்க்குணியே
சித்திரத்தொழு சித்தியையுற்றிடு சித்துருவக்குயிலே. என்றும்,

(முத்துத்தாண்டவர்பதம்.)

தூக்கியபாதத்தி னேக்கொளிகண்டு சும்மாவிருமனமே. என்றும்,

(தாயுமானசுவாமிகள்பாடல்.)

பார்த்தவிடமெல்லாம் பரவெளியாய்த்தோன்றவொரு
வார்த்தைசொல்லவந்த மனுவேபராபரமே. அன்றியும்,

தேடாததேட்டினரே செங்கைத்துலாக்கைபோல்
வாடாச்சமநிலை வாய்க்கும்பராபரமே. அன்றியும்,

முத்தாந்தவீதி முளரிதொழுமன்பருக்கே
சித்தாந்தவீதிதருந் தேவேபராபரமே. அன்றியும,

ஒருமொழியே பலமொழிக்கு
மிடங்கொடுக்குமந்த
வொருமொழியே மலமொழிக்கு
மொழிக்குமெனமொழிந்த
குருமொழியே மலேயிலக்கு
மற்றைமொழியெல்லாங்

கோடின்றி வட்டாடல்
  கொள்வதொக்குங்கண்டாய்
கருமொழியிங் குனக்கில்லை
  மொழிக்குமொழிருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக்
  காட்டவுங்கண்டனைமேற்
றருமொழியிங் குனக்கில்லை
  யுன்னைவிட்டுநீங்காத்
தற்பரமாயாநந்தப்
  பொற்பொதுவாய்கில்லே. அன்றியும்,

கைத்தலம்விளங்குமொரு நெல்லியங்கனியெனக்
  கண்டவேதாகமத்தின்
காட்சிபுருஷார்த்தமதின் மாட்சிபெறுமுத்தியது
  கருதினனுமானமாதி
யுத்திபலவாகிரு விகற்பமேவில்லையா
  லொன்றேடிரண்டென்னவோ
வுரையுமிலைநீயுமிலை நானுமிலையென்பது
  முபாயநீயுண்டுநானுஞ்
சித்தமுளநானில்லை யெனும்வசனநீயறிவை
  தெரியார்கடெரியவசமோ
செப்புகேவலநீதி யொப்புவமையல்லவே
  சின்முத்திராங்கமரபிற்
சத்தமறவெனையாண்ட குருமௌனிகைபினுற்
  றமியனேற்குதவுபொருளே.
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
  சச்சிதாநந்தசிவமே. அன்றியும்,

தாராதவருளெலாந் தந்தருளமௌனியாய்த்
  தாயனையகருணைகாட்டித்
தாளிணையென்முடிசூட்டி யறிவிற்சமாதியே
  சாசுவதசம்ப்ரதாய
மோராமன்மந்திரமு முன்னுமன்முத்திரிலை
  யொன்றேடிரண்டெனுமை
லொளியெனவும்வெளியெனவு முருவெனவுநாதமா
  மொலியெனவுமுணர்வுறுமற்

பாராதுபார்ப்பதே யேதுசாதனமற்ற
பரமவனுபூதிவாய்க்கும்
பண்பென்றுணர்த்தியது பாராமலங்கிலே
பதிந்தவின்பழவடியர்தஞ்
சீராயிருக்கவினை தருள்வேண்டுமையனே
சித்தாந்தமூத்திமுதலே
சிரகிரிவிளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. அன்றியும்,

பிரியாததண்ணருட் சிவஞானியாய்வந்து
பேசரியவாசியாலே
பேரின்பவுண்மையை யளித்தனையென்மனதறப்
பேரம்பலக்கடவுளா
யறிவாயிருந்திடு நாதவொலிகாட்டியே
யமிர்தப்பிரவாகசித்தி
யருளினையலாதுதிரு வம்பலமுமாகியெனை
யாண்டனைபினெய்திநெறியாய்
க்குறிதானளித்தனை நன்மரவுரிகொளந்தணக்
கோலமாயசபாநலங்
கூறினைபின்மௌனியாய்ச் சும்மாவிருக்கநெறி
கூட்டினையெலாமிருக்கச்
சிறியேன்மயங்கிமிக வறிவின்மையாவனோ
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. அன்றியும்,

ஆராரெனக்கென்ன போதித்துமென்னவென்
னறிவினைமயக்கவசமோ
வண்டகோடிகளெலாங் கருப்பவறைபோலவு
மடுக்கடுக்காவமைத்து
போராமனின்றபர வெளியிலேமனவெளி
பிறங்குவதலாதொன்றினும்
பின்னமுறமருவாது நன்னயத்தாலினிப்
பேரின்பமுத்திநிலையிற்
றூராதுதள்ளவும் போகாதுனலது
தள்ளினும்போகேனியான்

றடையேதுமில்லையாண் டவனடிமையென்னுமிரு
தன்மையிலுமென்வழக்குத்
தீராதுவிடுவதில்லை நடுவானகடவுளே
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. அன்றியும்.

பாராதியண்டங்க ளத்தனையும்வைக்கின்ற
பரவெளியினுண்மைகாட்டி
பற்றுமனவெளிகாட்டி மனவெளியினிற்றோய்ந்த
பாவியேன்பரிசுகாட்டி
தாராளமாய்நிற்க நிச்சிந்தைகாட்டிச்
சதாகாலநிஷ்டையெனவே
சகசநிலைகாட்டினை சுகாதீதநிலயந்
தனைக்காட்டநாள்செல்லுமோ
காராரவெண்ணரு மனந்தகோடிகணின்று
காலூன்றிமழைபொழிதல்போல்
கால்வீசிமின்னிப் படர்ந்துபரவெளியெலாங்
கம்மியாநந்தவெள்ளஞ்
சோராதுபொழியவே கருணையின்முழங்கியே
தொண்டனாக்கூவுமுகிலே
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. அன்றியும்,

பன்முகச்சமய நெறிபடைத்தவரு
மியாங்களேகடவு ளென்றிடும்
பாதகத்தவரும் வாததர்க்கமிடு
படிறருந்தலை வணங்கிடத்
தன்முகத்திலுயிர் வரவழைக்குமெம
தருமனும்பகடு மேய்க்கியாய்த்
தனியிருப்பவட நீழலூடுவளர்
சனகனுதிமுனி வோர்கடஞ்
சொன்மயக்கமது தீரவங்கைகொடு
மோனஞானம துணர்த்தியே
சுத்தநித்தவரு ளியல்பதாகவுள
சோமசேகர கிருபானுவாய்த்

தென்முகத்தின்முக மாயிருந்தகொலு
வெம்முகத்தினும் வணங்குவேன்
றெரிவதற்கரிய பிரமமேயமல
சிற்சுகோதய விலாசமே. என்றும்,

(சிதம்பரசுவாமிகள் சந்நிதிமுறை.)

மூலநிலத்திலதோமுகமாய் முகிழ்த்துவிழியின்பொடுதுயிலு
மூரிப்பாம்பைக்காலவனல் மூட்டியெழுப்பிநிலமாறுஞ்
சீலமொடும்போய்த்தரிசித்துச் செழுமாமதியினமுதகட
லேக்கியகத்தங்கசைவறுமோர் தெய்வத்தவத்தோருளவிழியிற்
காலுந்தீபமினல்பந்தங் கடிகூர்விரிசுகதிர்மதிபோற்
காட்டுமொளியாயிவையாவுங் கடந்தாங்கழிவில்பேரொளியாய்ச்
சாலவிளங்கும்விந்துவெனுந் தடமாமயிலோய்தாலேலோ
தமரக்கடலைக்கடைந்தமுதந் தருவோன்மருகாதாலேலோ.—
அன்றியும்,

தேமாங்கனியினடுப்பமைத்துத் திகழூன்கழிந்தவலம்புரியிற்
செந்தேனுலைப்பெய்தரவீன்ற செழுமாமணிவெங்கனன்மூட்டி
பூமாத்ளையின்வித்தயரிசி புகட்டிச்சமைத்துக்கதலிமடற் [ப்
பொங்கப்பிழியுமதன்கனியும் பொருந்தவளவிக்கறியட்டுக்
காமாதவிப்பூம்பந்தரிடைக் கயற்கண்ணுயமிழைத்தவண்டல் [ரு
கருதும்புவனகோடியெல்லாங் கரந்தும்படைத்துங்காக்குமொ
சிமானுனக்கோரிலக்கோசொல் சிறியேஞ்சிற்றில்சிதையேலே
தேரூர்வீதிப்போரூரா சிறியேஞ்சிற்றில்சிதையேலே. அன்றியும்,

குலிசக்குழூச்சுலவுஞானதக்கிம்புரிக்கோடுநாலுடையவெள்ளைக்குஞ்சரக்கும்பமிசைகொட்டல்போலச் சிவன்குவவுப்புயங்கொட்டல்போன், மலைபெற்றபைம்பிடிப்பாலுண்டு முத்தமிழ்மதம்பொழியுமந்தநாளில்-மன்னுதத்துவமசியின்மும்மைப்பதங்களைவகுத்தறிவுறுத்துமுறைபோற், கலகப்பிணக்குடைச்சமயப்பெரும்பறவைகடியுமொருகருவியதுபோற் - கருதரியபதிமுதற்றிரிபொருளுநிசமெனக் கைக்குறிப்பறிவித்தல்போற், றலைமைத்தமிழ்ச்சங்க மளவிட்டவிரகருகசப்பாணிகொட்டியருளே - தடமலையைநிகர்கரிகடிரிசமரபுரிமுருக சப்பாணிகொட்டியருளே. அன்றியும்.

அடியார்நிமலத்திருவகத்து ளன்புபொறுமையவாவறுத்த - லப்பாங்கமைத்துமலக்காட்டத் ததிகஞானக்கனன்மூட்டி, மடியா

திருந்தவுயிர்க்கலசம் வழியவருட்பேருலைவார்த்து - மாறுப்பெரு மைச்சிவானந்தமதுரச்சோறுதினம்பொங்கி, விடியாச்சீவபோத விருள்வீயமவுனச் சுடர்விளக்கு - விளக்கியிருந்தபடியிருந்துமே லாஞ்சிற்றில்விளையாடுஞ், செடிதீரகத்தோர்புகழ்வாலை சிறுவாசி ற்றில்சிதையேலே - தேரூர்வீதிப்போரூரா சிறியேஞ்சிற்றில்சிதை யேலே. அன்றியும்.

வெளியில்வெளியசைவற்று நின்றவாறமலவுளமிளிர்பாத்திலய மாகி - மெய்த்தவமிழைப்பவர்க் ககல்வானநதிநீர்வியன்றுளைக்கர நிமிர்த்தங், களியொடுங்கரிமொண்டுகுண்டிகைநிறைப்பவல வற்ப கைக்கவிகடாவி - யங்கற்பகக்கனிகொணர்ந்துவந்திக்கவனு தின மும்மவரறையுமறைநூல், கிளிகள்பயிலக்ககன கந்தருவர்வந்தமுத கீதநாதம்முழக்குங் - கிளர்சந்தனப்பொங்கர் மலிசாரல்கயிலையங் கிரிவாரவளநிகர்க்குந், தெளிவுதருசமரபுரி தனிநிலவுகுமரவே ள்சிறுபறைமுழக்கியருளே - செறிகலபமயின்முதுகினுதயசின்ம யதூய சிறுபறைமுழக்கியருளே. என்றும்.

திருவாசகம்.

தினைத்தனையுள்ளதோர் பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும் பேசுந்தோறுமெப்போது
மனைத்தெலும்புண்ணெக வானந்தத்தேன்சொரியுங்
குனிப்புடையானுக்கே சென்றூதாய்கோத்தும்பி.

அன்றியும்.

நெக்குநெக்குள்ளுருகியுருகிநின்று
மிருந்துங்கிடந்துமெழுந்து
நக்குமழுதுந்தொழுதும்வாழ்த்தி
நாநாவிதத்தாற்கூத்துநவிற்றிச்
செக்கர்போலுந்திருமேனி
திகழநோக்கிச்சிலிர்சிலிர்த்துப்
புக்குநிற்பதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே. என்றும்.

சிதம்பரசுவாமிகள்சந்நிதிமுறை.

பூவேபூவிற்பரிமளமேயப்பூநிறைசுவைநறவே
பொங்குங்கடலேகடலினுதித்தெழுபுனிதத்தெள்ளமுதே

காவேகாவிற்கொஞ்சும்பஞ்சவனக்கடவுட்கிளியே
கண்ணேகண்ணுறுபாவாய்பூவாய்கனியேகனிரசமே
தேவேதேவர்சிரோமணியேயென்சிருயிரேயுயிரிற்
செம்பொருளேயருளேழுழுமணியேமணியிற்றேசிகமே
மூவாமறையேமறையின்பொருளேமுத்தந்தருளே
முத்தமிழ்நற்சமரப்பதிநாயகமுத்தந்தருளே. என்றும்.

சவுந்தரியந்தாதி.

தேனே பூவே காயே கனியே திருவே
யருவே யுருவேயென்
னூனேயுடலே யுயிரேயுயிருக்குயிரே
யருளுக்கொருவேரே
வானேநிலனே வளியேகனலே
மழையேபொழியா வரமேயென்
கோனேகுருவே குறைதீரமுதே
யெனையாளரசன் குடிவாழ்வே. என்றும்.

ஞானவாசிஷ்டம்.

தாசூரன்கதை வனதேவதைக்குப் புத்திரனளித்தல்.

என்னலுமுனிவனகைத்தொருமலரை
யீந்தொருமதியிலேயெளிதா
யன்னமேமகவைப்பெறுதியானீமுன்
னருங்கனன்மூழ்குவேனென்று
வின்னலால்வலித்துமகவுவேண்டுதலா
லினிதுநீயின்றிடுமகவும்
பின்னுறுவருத்தநெறியினன்ஞானம்
பெறுமெனப்பேசினன்பெரியோய். என்றும்,

பாடுதுறை.

சந்நியாசம்.

செந்துகிலுந்தண்டுநீர்தரித்துச்சிகைநூறெறித்துச்
செபங்கள்பண்ணி
முந்திநீர்நீரினிற்காக்கைபோலமுழுகித்
திரியும்பிடாரநீரோ

பெந்தகாயம்மலநீரின்மூழ்கிப்
பிரளயகாலஞ்செபித்தக்காலும்
வந்துணர்வாயபிரமமாமோ
மதித்துநீர்பாரீர்பிடாரநீரோ. அன்றியும்,

தண்டு.

கோணுந்தண்டன்றெங்கடண்டு குருகாட்டிற்காணலாந்தண்டு
காணுந்தண்டன்றெங்கடண்டு கண்ணுகியவேகதண்டே.
மூன்றுதண்டன்றெங்கடண்டு மூலமாந்தண்டெங்கடண்டு
தோன்றுந்தண்டன்றெங்கடண்டு சுருதிமுடிசொன்னதண்டே.
மடம்புகுதாதெங்கடண்டு வைத்துவாங்காதெங்கடண்டு
சடம்புகுதாதெங்கடண்டு சச்சிதானந்தமாந்தண்டே.
மரத்தண்டலவெங்கடண்டு மதியுள்ளவர்கொள்ளுந்தண்டு
வுரத்தண்டாந்தாங்கியதண்டு வுணர்வாகியவேகதண்டே.
சமயத்தைச்சாடியதண்டு சகலமுந்தாங்கியதண்டு
சுமையற்றிருக்கின்றதண்டு ஸ்வரூபாநந்தனார்தந்ததண்டே.
அன்றியும்,

தபோவனம்.

ஆரணக்கிளிகொஞ்சுதபோவன
மாகமக்குயில்கூவுதபோவனம்
பூரணத்தரிவாழுதபோவனம்
பொருவில்சிற்கனமாயதபோவனம். அன்றியும்,

சமயிகட்கதிதூரதபோவனஞ்
சமைதமைத்திரள்சார்வதபோவனம்
நமையுமிப்படிவைத்ததபோவனம்
நாதனாருளாயதபோவனம். அன்றியும்,

முதலியார்.

சட்டென்றுதலைபறித்திடுஞ் சழக்கறுத்தமுதலியார்
சாந்தமாகவேவாய்ந்தபாவனைத் தலைநிலென்றமுதலியார்
கட்டறுத்தெனைக்கழலிணைதந்து கண்ணளித்தமுதலியார்
காரிருளிலிரவிபோலுள்ளே கலந்துநின்றமுதலியார்.
சூறைகொள்ளும்புலன்களைந்தையுந் துணியவெட்டுமுதலியார்
சுருதிசொன்னசுகவடிவாகத் துணிவுதந்தமுதலியார்

யாறைநெஞ்சுபதஞ்செய்யும் படிபார்த்தருளியமுதலியார்
பத்தரெய்ப்பினில்வைப்பதாகிய பரிசுடையமுதலியார்.

அப்புலனுமவ்வுடலுமோர் வறமொழிந்தமுதலியார்
அடியிணைதலைமிசையினில்வைத் தாண்டுகொண்டமுதலியார்
செப்பரியசிவவடிவாகத் தெளிவுதந்தமுதலியார்
சிந்தையோடுமனமொன்றும்படி திருத்தியாண்டமுதலியார்.

அன்றியும்,

எண்ணிவிலைக்கிட்டிடா தெங்கண்மூத்திரை
யெண்ணுவாரெண்ணங் கடந்திட்டமுத்திரை
பண்ணியழிக்கப்படா தெங்கண்மூத்திரை
பார்ப்பறப்பார்க்கும் பரஞானமுத்திரை.

வெண்ணூலிற்கோவைப்படா தெங்கள்முத்திரை
வேதமாநூலின்விளக்கின்ற முத்திரை
பெண்ணுணலாதபெருமான்றன்முத்திரை
பேசற்கரியபெரியோன்றன் முத்திரை. என்றும்.

திருமூலர்திருமந்திரம்.

உணர்வுமவனே யுயிருமவனே
புணர்வுமவனே புலனுமவனே
யிணைருமவன்றன்னை யெண்ணலுமாகான்
றுணரின்மலர்க்கந்தந் துன்னிநின்றானே. அன்றியும்,

(பாடுதுறை.)

ஓங்காரத்துட்புகுந் துச்சியேறி யொன்பதுதுவாரத்துட்புகுந்து, தூங்காமைதூங்கின் றுடாய்பாம்பே தொந்தங்கடந்தாடாய்பாம்பே. அன்றியும்.

ஆருருமிங்கேயம்பலமுமிங்கே யாடரவக் கிங்கிணிக்காலுமிங்கே, பேருருமிடபவாகனமுமிங்கே பிறப்பிறப்பற்றிடந்தானுமிங்கே, சீராருஞ்சிவஞானபோதந்தன்னைத் தெளிந்துதெளிந்துநின்றாடாய்பாம்பே. அன்றியும்.

சுத்துஞ்சிலுகுமிலாதவூரெங்களூர் காண்பானுங் காட்சியுமற்றவூரெங்களூர், சுத்தவெளியிலே தோன்றுமூ ரெங்களூர் சோம்பர்சுகமென்றுணர்ந்தவூரெங்களூர். என்றும்.

(சுகாதீத வெண்பா.)

எல்லாவியாகுலமு மற்றேமிடாற்றேம்
பொல்லாப்புலன்வழியிற் போக்கற்றேம் - நல்ல
குருவருளைக்கண்டு கும்பிடவுங்கண்பெற்றே
மொருபொருளு வேண்டோமினி. என்றும்.

(சொரூபசாரம்.)

சந்ததமுநீங்காத் தனியாசுபெற்றேமே
தொந்தச்சுகாசுகமுஞ் சுட்டோமே-சிந்தனையை
வாட்டியதேகாதி வனவாசம்விட்டோமே
வீட்டிற்குடிபுகுந்தோமே. அன்றியும்,

நனவிற்றசேந்திரிய நாட்டியங்கள் பார்ப்போங்
கனவின்மனக்கூத்துங் காண்போ-நினைவிற்
சுழுத்தியிலேயில்லாத சூனியக்கூத்தாடி
விழுப்பொருளா ளாமிருப்போமே. என்றும்.

ஞானவாசிஷ்டம் முமூட்சுப்பிரகரணம்.

குருபரம்பரையையறிவித்தல்.

உலகளித்தவயன்றனேநாதனாக
வோங்கியபாரதவருடத்துயிர்களெல்லா
மலகிறுயருறக்கண்டுபுதல்வர்நோவுக்
கழுங்குபிதாவெனவழுங்கியவர்களுய்வான்
பலகருமந்தவந்தானநதிமற்றெல்லாம்
பவந்தீராஞானத்தாற்பவம்போமென்றே
கலகமெலாமனத்தளித்தானென்னைத்தன்போற்
கமண்டலமுஞ்செபவடமுங்கையிற்காண. அன்றியும்.

வந்திறைஞ்சுமென்னைத்தான்மகிழ்ந்துமேவும்
வனசத்தின்வடபாலோர்மடன்மேல்வைத்தென்
சிந்தைதனைநாழிகையோரிரண்டுமாயை
சேர்கவெனச்சபித்தலுமேதியக்கமுற்றுப்
புந்தியுடன்மெய்யுணர்வைமறந்தேன்கல்லாப்
புல்லரைப்போற்புலம்புமெனைப்போதன்பார்த்து
வெந்துயரொன்னெனமாயைவிளைந்தவாறும்
வீடுறுமாறுங்கேட்டேன்விளங்கச்சொன்னான். அன்றியும்.

பரிசுத்தமுள்ள ஸ்தானத்திருத்தல்.

தாசூரன்கதை.

கானத்திடையோர்கடப்பங்கா ரின்பதத்தைக்கடந்து
வானத்துயர்ந்ததன்மேல் வருபல்லவமென்றவிசின்
றானத்தையமின்றித்தாசூரன்றனிருந்து
மேனற்றவமேசெய்வான் மிகவும்விரும்புமனத்தால் அன்றியும்.

ஒருகணந்திசைகளனைத்தையுநோக்கி
யுரைத்தபத்மாதனத்திருந்தான்

பெருகியதிசைகண்முழுதினுந்திரும்பி
பிரமபாவனையறிவரிதாய்க்
கருமமாத்திரத்தினிற்பதாய்ப்பலமாங்
கற்கசம்விரும்புறுமனத்தால்
வருடமாறிரண்டுமகங்களேநடத்தி
வானவர்க்கவியுணவளித்தான். அன்றியும்.

தேவபூசைகதை.

பிரசன்னமான பரமேஸ்வரனைப்பூசித்தல்.

வெண்ணிறத்தமுகில்கோடி வெண்டிங்கள்கோடியென விளங்குந்தேசைக், கண்ணகத்திஞேக்கலுமே நந்திமுதல்வரவுமையாள் கைமேற்கைவைத், தெண்ணறச்சங்கரன்வாவு மாளுக்கருடன்விரைவி லெழுந்துபூசை, பண்ணுதற்கானவை கொடுபோய்ப் பன்மலர் தூய்தூரத்திற் பணிந்துபோற்றி. என்றும்,

ஆத்மாவுக்குஞ் சீவர்களுக்கு முள்ள
ஞானஞ்ஞான லக்ஷண சம்பந்த முரைத்தல்.

(மு க வு ரை.)

பரமதவாதிகளாகிய பிருதிவு பூதவாதி, அப்புபூதவாதி, அக்கினிபூதவாதி, வாயுபூதவாதி, ஆகாசபூதவாதி, பஞ்சகோசவாதி, நவக்கிரகவாதி, சூரியவாதி, சந்திரவாதி, ஊழ்வாதி, காலவாதி, மந்திரவாதி, யெந்திரவாதி, அவிழ்தவாதி, கிரீடாப்பிரம்மவாதி, லீலாப்பிரம்மவாதி, பிரதிபிம்பவாதி, மாயாவாதி, உலோகாயுதவாதி, அச்சுமாறுதவாதி, சுபாவவாதி, நிரீஸ்வரவாதி, அனேகயீஸ்வரவாதி, ஸப்தப்பிரம்ழவாதி, காரண அணுவாதி, காரியவணுவாதி முதலிய இன்னும் அநேகமதங்களைக் கண்டித்து சுருதிப்பிரமாண சித்தாந்தமாய் அஷ்டப் பிரமாணங்களினாலும் ஷட்லிங்கதாத்பரியத்தாலும் கடவுள் ஒருவருண்டென்று வஸ்துநிச்சயஞ்செய்த ஸ்ரீஅகண்ட பரிபூரண சச்சிதாநந்த நித்திய நிர்மல நிர்குணப்பிரம்ம தேஜோமய ஸ்வரூபர்களாகிய வேதாந்தமுணர்ந்த மஹான்களும் சித்தாந்தமுணர்ந்த மஹான்களும் செய்த பஞ்சீகரண சுருதிப் பிரமாணப்படி வேதாந்த சித்தாந்த அண்டபிண்ட பஞ்சீகரணத்தை முதல்நூல், வழிநூல், சார்புநூல்களை அநுசரித்து பஞ்சீகரண அபஞ்சீகரணத்தை ஸ்லோகபூர்வகமாகவும் பாடல்களாகவும் ஆப்தாள் சொன்னபோதிலும், அண்டபிண்ட பஞ்சீகரணத்தைத் தெளிவாகவும் நிஸ்ஸந்தேகமாகவும் மஹாபுருஷாள் பட

ஞ்செய்து ஆடிக்காட்டியிருந்தபோதிலும் எவர்களுக்கும் சந்தேகவிபரீதத்தை நிவிர்த்திக்கும்படி இந்த அண்டபிண்ட பஞ்சிகாணப்படத்தை மஹாபுருஷாள் சந்நிதியில் பிரசுரஞ்செய்தால் உண்மையான நியாயங்கிடைக்குமென்று இந்தப்படஞ்செய்த எம்மால் அநேகமஹான்கள் செய்த பஞ்சீகரண சாஸ்திரப்பிரமாண சித்தாந்த திஷ்டாந்தமாய் இந்தப்படத்தின்பேரில் அமூர்த்தாமூர்த்த அதிஷ்டானசைதன்னிய நாகலிங்க மஹாதேவரைக்கொண்டு ஆடுகிற விவரத்தை பரமபுருஷாள் ஒப்புக்கொள்வார்களென்று கருதி அண்டபிண்ட பஞ்சீகரணத்தெளிவென் றோர்கிரந்தம் எழுதப்பட்டது.

கடவுள் எல்லாமாயு மல்லவுமாயு மிருத்தலின்
வேதாகம சகலசாஸ்திரப் பிரமாணப் பிரமேயலக்ஷ
ணங்களுக்கெல்லாமப்பாற்பட்டவொன்
றவாது அருமையைச்சொலல்.

(அதாவது.)

இவ்வுலகின்கண் சர்வத்திர சாதாரணமாய் சர்வபிரஜைகளும் வித்தைகளுக்கெல்லாம் உயர்ந்ததாயும் ஒருலக்ஷணங்களுக்கும் அளவுபடாததாயு மிருக்கிறவித்தை பிரம்மவித்தையே அல்லது வேறில்லையென்று வழங்குகிறபடியால் இந்தப் பிரம்மலக்ஷணத்தை எளிதாக மதிப்பதற்குக் கூடாமையாலும் இந்தப்பிரம்மம் அல்லது கடவுள் யாவற்றையுஞ்செய்தும் செய்யவில்லையென்றுவேதாகம சகலசாஸ்திர ஞானவாசிஷ்டமுதலிய ஆத்மக்கியான சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது.

அதாவது.

ஞானவாசிஷ்டம் ஞானவிண்மகன் கதையில்
சொல்லுகிற ஆத்ம விவகாரம்.

(பாடல்.)

உரைபகர்வோனுசாவிடுவோன் கேட்போன் காண்போ
னுணர்பவன் சிந்திப்பவனு யுலகின்மெய்யிற்
றிரமுற மேவியு மேவாப் பொருளுனின்றுந்
தினகரன்றேசெனச் சித்தின்றிகழ்ச்சியுண்டாம்
விரைமனம்வேர் கரண மலரண்டங்காயாய்
விண்ணெழுமாயைக்கொடியை விதிர்க்குங்காற்றும்

புரைசெயுட்ற் செப்பனைத்துண் மணியாய்நிற்கும்
புணர்புரியட்டகவுடலைப்போய் மீள்விக்கும்.

அன்றியும்.

சுத்தவறிவாதலா லாகாயபாவனையாற் சூழ்விண்ணுரு, மத்திறனேயெப்பொருளும் பாவித்தபோதுள்ளததுவாமந்தச், சித்திடையே மூவுலகுந் திடர்கானலெனத்தோன்றிச் சிதையும்பல்கா, லித்தனையுஞ் செய்யவுந்தா னித்தனையுஞ்செய்யாமலிருக்குமன்றே.

என்றிருப்பதாலும்.

கடவுளுக்கும் செகஜீவர்களுக்கும் சம்பந்த முண்டில்லையென்பதைச்சொலல்.

இதுவுமன்றியில்.

(விவேகசார கிரந்தத்திற் சொல்லுகிறபடி.)

பிருதிவியொன்றே காரியரூபமாய் பரிணமித்து பர்வதங்கள், விருக்ஷங்கள், வனங்கள், கோபுரங்கள், பிராகாரங்கள், மண்டபங்கள், சுவர்கள் முதலான கடசாரரூபமாய்த் தோற்றப்படுகின்றது. ஆகாசமும் அதுகளிற்கூடி கடாகாசமென்றும், மடாகாசமென்றும், பர்வதாகாசமென்றும், விருக்ஷாகாசமென்றும், வனாகாசமென்றும், கோபுராகாசமென்றும், பிராகாராகாசஞ் சுவராகாசமென்றும்இப்படிநானுவிதாகாசங்களாய் எப்படிதோற்றப்படுகின்றதோ அப்படிபோல ஆத்மாவும் காரியரூபமாய்ப் பரிணமிக்கப்பட்ட அனாத்மபதார்த்தத்துடன்கூடித் தேவதத்தனென்றும் யெக்ஞதத்தனென்றும் ராமனென்றும்கிருஷ்ணனென்றும்கோபாலனென்றும் கோவிந்தனென்றும் மஹாதேவனென்றும் சாம்பசிவனென்றும் சதாசிவனென்றும் அனேகவிதமாய்த்தோற்றப்படுகிறார் இந்தப்பிருதிவுஆகாசதிருஷ்டாந்தம் அவிச்சின்னபக்ஷத்திற்குத் திஷ்டாந்தமென்று சொல்லப்படும்.

இனி பிரதிபிம்பபக்ஷ திருஷ்டாந்தமுஞ் சொல்லுகிறோம்.

அதெப்படியெனில்.

ஒருஜலமே உபாதிவசத்தினல் சமுத்திரமென்றும் நதியென்றும் ஏரியென்றும் தடாகமென்றும் கால்வாயென்றும் நடவாவியென்றும் பாண்டஜலமென்றும் சொல்லப்படும், அந்தச்சலத்தில் ஒருசூரியனே பிரதிபிம்பித்து அனேகவிதமாய் எப்படிதோ

ற்றப்படுகிருரோ அப்படிபோல ஆத்மாவும் அனுத்மகாரியமாயி ருக்கப்பட்ட அந்தக்கரணங்களிற் பிரதிபிம்பித்து அனேகரூபமா ய்த் தோற்றுகிருர் அப்படி தோற்றப்பட்டாலும் அனுத்மகாரிய மான வந்தக்கரணதர்மங்கள் ஆத்மாவைக் காலத்திரயத்திலும் ஸ்பரிசிக்கவில்லை.

அதெப்படியெனின்.

ஜலத்துக்கு அதிகசீதளமும் ஜலவிகாரவலேவும் அந்தச்சல த்தில் பிரதிபிம்பித்த சூரியனை எப்படி ஸ்பரிசிக்கவில்லையோ அப் படிபோல அந்தக்கரணவிகாரங்களும் அந்தக்கரணத்திற் பிரதிபி ம்பித்த சிதாபாசனையே ஸ்பரிசிக்கவில்லை அவ்வந்தக்கரணததிற் கதிஷ்டானமான பிரத்தியேகாத்மாவை ஸ்பரிசிக்காதென்பதற்குச் சந்தேகமேயில்லை. இதுமாத்திரமல்ல பிருதிவி விகாரங்களும் பி ருதிவியின் காரியவிகாரங்களும் பிருதிவுக்காதாரபூதமான ஆகாச த்தை எப்படி ஸ்பரிசிக்கவில்லையோ அப்படிபோல அனுத்மாவா ன அஞ்ஞானமும் அஞ்ஞானகாரியமான தேகேந்திரியாதிப் பிர பஞ்சதர்மமும் அஞ்ஞானத்திற்கும் அஞ்ஞானகாரியத்திற்கு மா தாரபூதமான பிரத்தியேகாத்மாவை ஸ்பரிசிக்கவில்லை.

இன்னும்.

ஓடத்திற்போகிற புருஷனுக்கு அஞ்ஞானத்தினுல் ஓடத்தி ன் சஞ்சலசுபாவமாகிற வோட்டந் திரசுபாவமாகிற விருக்ஷத்தி னிடத்திலும் கரையினுடைய விருக்ஷசுபாவமானநிலை யோடத்தி னிடத்து மெம்படி தோற்றுகின்றதோ அப்படிபோல திரிவிதகர ணசுபாவமான கர்த்ருத்வம் அஞ்ஞானத்தினுல் (ஆத்மசுபாவமாக வும்) ஆத்மசுபாவமான அகர்த்ருத்வம்திரிவிதகரணசுபாவமாகவும் தோற்றுகின்றது.

இன்னும்.

சந்திரனைப்பார்க்கப்பட்ட புருஷனுக்கு மேகசஞ்சலமான சு பாவஞ் சந்திரசுபாவமாகவும் சந்திரசுபாவமானநிலை மேகசுபா வமாகவும் எப்படி தோற்றுகின்றதோ அப்படிபோல திரிவிதகா ணசுபாவமான கர்த்ருத்வமும் ஆத்மசுபாவமாய்த் தோற்றுகின்ற து, ஆதலால் கர்த்ருத்வம் ஆத்மாவுக்கு ஆகுந்தகமென்றே சொ ல்லப்படும்.

இதுவுமன்றியில்.

குசுமப்புஷ்பத்தின் சிவப்புநிறம் ஸ்படிகத்திற் ருேன்றுவது போலவும் அக்கினியின் ஊஷ்ணமும் பிரகாசமும் இரும்பினிடத்

திலும் இரும்பினளவு நிகளங்களமுதலிய விடத்திலுந் தோன்றுவதுபோலவும் இராகத்துவேஷசுபாவமான கர்த்ருத்வம் ஆத்மசுபாவமாகவும் ஆத்மசுபாவமான அகர்த்ருத்வம் இராகத்துவேஷ சுபாவமாகவும் அஞ்ஞானத்தினுல் தோற்றுகின்றது, ஆனாலும் அசேதனங்களுக்குக் கர்த்ருத்வங்கூடுமென்பது கூடாது.

மற்றெப்படியெனின்.

ஆதித்தசந்நிதானத்தில் சமஸ்தபிராணிகளும் சர்வகாரியத்திலு மெப்படி பிரவிர்த்திக்கிறுர்களோ காந்தசந்நிதானத்தி லிரும்புகளெப்படி சேஷ்டிக்கின்றதோ அப்படிபோல ஆத்மசந்நிதானத்திலும் சமஸ்தமான ஜெகத்துஞ் சேஷ்டிக்கிறதென்றே சுருதிஸ்மிருதியாதிகளுடைய தாத்பரியம் இப்படிசொன்னால் ஆத்மாவுக்கு நிர்விகாரஞ் சித்தித்ததாவெனில் சித்தித்தது.

எப்படியெனின்.

ஆதித்தசந்நிதானத்தில் சமஸ்தபிராணிகளும் விவகாரம்பண்ணினபோதிலும் பிராணிகளது விவகாராதிகள் ஆதித்தனை எப்படி ஸ்பரிசிக்கவில்லையோ காந்தசந்நிதானத்தி லிரும்புகள் சேஷ்டித்தபோதிலும் இரும்பின்விகாரங்கள் காந்தத்தை எப்படி ஸ்பரிசிக்கவில்லையோ அப்படிபோல ஆத்மசந்நிதானத்தில் சேஷ்டிக்கப்பட்ட செகத்சுபாவமான விகாரங்கள் ஆத்மாவை ஸ்பரிசிக்கமாட்டாது.

இதுவுமன்றியில்.

பஞ்சகோசவிலட்சணமான ஆத்மாவை பஞ்சகோசங்களினுல் மறைத்ததுபோலும் மூடப்பட்டதுபோலும் அஞ்ஞானத்தால் தோற்றப்படும்.

அதெப்படியெனின்.

ஆதித்த கிரணபரிணாம விசேஷாதிமேகங்கள் அவ்வாதித்தன் சத்தை யுபஜீவித்துக்கொண்டே தோற்றினபோது அவ்வாதித்தனை மூடிக்கொள்ளுவதுபோலும் அக்கினியினுடைய சத்தை யுபஜீவித்துக்கொண்டே தோற்றப்பட்ட புகை அவ்வக்கினியை மூடிக்கொள்ளுவதுபோலும் மண்ணின்சத்தை யுபஜீவித்துக்கொண்டே தோற்றப்பட்ட கடம் அந்தமண்ணை மூடிக்கொள்ளுவதுபோலும் பொன்னின்சத்தை யுபஜீவித்துக்கொண்டே தோற்றப்பட்ட ஆபரணம் பொன்னை மூடிக்கொள்ளுவதுபோலும் ஆத்மச

த்தை யுபஜீவித்துக்கொண்டே தோற்றப்பட்ட பஞ்சகோசங்களு க்கு ஆத்மாவை மூடினதுபோல அஞ்ஞானத்தால் தோற்றும் அ தை எதார்த்தக்கியானத்தால் விசாரித்தால் இல்லவே இல்லை.

இதுவுமன்றியில்.

ஆத்மாவும் பஞ்சகோசங்களும் ஏகமாய் விவகரிக்கப்படத் தோற்றினுலும் அந்த ஆத்மா காலத்திரயத்திலும் பஞ்சகோசங்க ளுக்கு அன்னியமாய் தோற்றப்பட்டதே விலட்சணத்துவம். பஞ் சகோசங்களுக்கும் ஆத்மாவுக்கும் அன்னியோன்னிய அத்தியா சத்தினுல் கூட்டுறவுவந்தது.

அதெப்படியெனின்.

அன்னமயகோசத்திற்கும் ஆத்மாவுக்கும் சீவத்துவாரா சா மான்யசாதித்துவாரா விகாரத்துவாரா அங்கத்துவாரா வர்ணத் துவாரா விசேஷசாதித்துவாரா ஆசிரமத்துவாரா நாமத்துவாரா சமஸ்காரத்துவாரா வேஷத்துவாரா கிரியாதித்துவாரா கூட்டுற வுவந்தது.

அதெப்படியெனின்.

நான் ஜீவன் மனுஷனென்பது ஜீவத்துவாராசாமான்ய அத் தியாசம்.

நான்பிறந்தேன் இருக்கிறேன் வளர்ந்தேன் பருத்தேன் இளை த்தேன், நசித்துப்போகிறேன் என்பது விகாரத்துவாரா விசேஷா த்தியாசம்.

நான்புருஷன் நான்ஸ்திரீ நான்அலி என்பது அங்கத்துவாரா அத்தியாசம்.

நான்பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் என்பது வர்ணத்துவாரா அத்தியாசம்.

நான்தெலுங்கன் தமிழன் கணக்கன் நான்வேலிநாட்டி முழு க்குநாட்டி காசுலநாட்டி நான்யோகி குச்சிலியன் மாராஷ்டகன் காசிபகோத்திரன் பரத்துவாசகோத்திரன் ஆஸ்லாயசூத்திரன் ஆ பஸ்தம்பசூத்திரன் போதாயனசூத்திரன் காத்தியாயனசூத்திரன் என்பது விசேஷ ஜாதித்துவாரா அத்தியாசம்.

நான் பிரம்மசாரி கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் சந்நியாசி எ ன்பது ஆசிரமத்துவாரா அத்தியாசம்.

நான் கிருஷ்ணன் ராமன் எல்லாப்பட்டன் திப்பாப்பட்டன் கறுப்பன் சிவப்பன் என்பது நாமத்துவாரா அத்தியாசம்.

நான் தீக்ஷதன் சோமயாகி நான் மகாவிரதயாகி நான் பவுண்டரீகயாகி என்பது சமஸ்காரத்துவாரா அத்தியாசம்.

நான்மாயாவாதி தத்துவவாதி பாகவதன் சைவன் நான் வீரசைவன் சாஸ்திரி புராணிகன் யோகிஸ்வரன் என்பது வேஷத்துவாரா அத்தியாசம்.

நான் உபாத்தியாயன் சீஷன் பக்தன் சுரோத்திரிகன் ஞானி கலியாணமாப்பிள்ளை தச்சன் கருமான் தட்டான் குசவன் அம்பட்டன் வண்ணான் கூலிக்காரன் இடையன் குதிரைக்காரன் மணியக்காரன் கணக்கப்பிள்ளை என்பது கிரியாத்துவாரா அத்தியாசம்.

இதுமுதலான அன்னமயகோச சுபாவதர்மங்கள் ஆத்மாவினிடத்தும் ஆத்மாவினுடைய சச்சிதாநந்த சுபாவதர்மமானது அன்னமயகோசத்தினிடத்தும் தோற்றப்படுவதால் இந்த அன்னியோன்னிய அத்தியாசத்தினால் அன்னமயகோசத்திற்கும் ஆத்மாவுக்கும் மித்தியாத்தியாசக் கூட்டுறவுவந்தது ஆகையால் ஆத்மாநாத்ம விசாரணைசெய்தால் இந்த அத்தியாசம் நன்றாய்த்தெரியும்.

இதுவுமன்றியில்.

ஆத்மாவுக்குச் சத்துத்திரயத்தில் ஆத்மகாரியங்களாகிய தேகேந்திரியங்களினால் காரணபூதமாகிய ஆத்மசுகத்திற்குத் திரோதானம்வரும்.

அதெப்படியெனின்.

அக்கினிக்குப்பிரகாசம் சுதசித்தமாயிருந்தாலும் சுவயகாரியமாகிய தூமசம்பிரசத்தினால் திரோதானம் வருவதுபோலும்.

ஆதித்தனுக்குப் பிரகாசம் சுதசித்தமாயிருந்தாலுஞ் சுவயகாரியமாகிய மேகாதிகளால் அவ்வாதித்தப்பிரகாசத்திற்குத் திரோதானம் வருவதுபோலும்.

ஆத்மாவுக்கும் சார்வதா சுகசொரூபம் சுதசித்தமாயிருந்தாலும் ஆத்மகாரியமாகிய தேகேந்திரியாதி சம்பிரசத்தினால் சாக்கிரசொப்பனங்களில் அந்தச் சுகத்திற்குத் திரோதானம் வரும் பகிர்முகமானவனுக்கு இந்தச்சுகம் ஆத்மசுகமென்று சாக்கிரசொப்பனங்களிற் றோற்றாமற்போனாலும் அந்தர்முகமானவனுக்குச் சார்வதா தோற்றிக்கொண்டிருக்கும்.

இன்னும்.

பிரம்மானுபவவிவேகசமுத்திரத்தில்சொலல்.

கடதீபதிஷ்டாந்தம்.

பரிபூரணமாயிருக்கிற பிரம்மசைதன்னியத்தினிடத்தில் ஆகாசத்தினிடத்திலே நிற்கிற கடம்போலே மாயையாகிற பிரம்மாண்ட கடமுண்டாயிற்று.

கடத்துக்குள் விளக்குப்போல சூட்சும அகங்காரம் அதனுள்வெளிபோல ஈஸ்வரன் விளக்கானதை ஆகாசவெளிமறைத்து அந்தவெளியே ஆதாரமாய் அது விளங்குகின்றாப்போலே ஈஸ்வரனும் பிரம்மசைதன்னியத்தை மறைத்து அந்தப்பிரம்மத்தின் ஆதாரமாய்த் தானே பஞ்சபூதமைந்தும் சந்திர சூரியாளிரண்டும் புருஷனென்றும் ஆக எட்டுமூர்த்தமாய் கானலிலே ஜலந்தோன்றினாப்போலே விளங்குகிறார்.

அப்படிப்பட்ட ஈஸ்வரனிலிருந்து ஜீவர்களுண்டானதெப்படியெனின்.

கடத்தில் அநேகரந்திரத்தினாலே ஒருதீபமே கடரந்திராகாசத்துடனேகூடி ரந்திராகாச ஆதாரமாய் அநேக தீபங்கள் பிரகாசிக்கிறாப்போலே ஈஸ்வரனான ஒருத்தனே மாயையின் கடாவானத்தினால் விக்ஷேபமான ரந்திரங்களாலே பிரம்மப்பிரகாசத்தை அநுசரித்து ஜீவர்களென்கிற கற்பிதமுண்டாச்சுது.

கடத்தில் அநேகரந்திரத்தில் ஒவ்வொரு ரந்திரப் பிரகாசத்தினால் அது அதுகளுக்குப் பதார்த்தங்கள் காணப்படுகிறாப்போலே ஜீவர்களும் அந்தக்கரணத்தினிடமாய் தேகேந்திரிய சகிதரானார்கள்.

இப்படிப்பட்ட மாயாவிலாசத்தை யாதாமொருதீரன் சற்குருவையடைந்து அவர்கடாட்சங்கொண்டு அவயவாத்மகமா யிருக்கப்பட்டதேகம் அசத்தென்றறிந்து இந்ததேகம் எதினிடமாய்ச் சேர்ந்ததென்று விவேகம்பண்ணி அறிந்த விவேகத்தினாலே கடரந்திரத்தில்வருகிற தீபப்பிரகாசம் ஆகாசத்தை அநுசரித்து வருகிறாப்போலே அந்தக்கரணத்துக்கு ஆதாரஞ்சீவனென்றறிந்து கடரந்திரத்தில்வருகிற தீபம் ஒன்றே ஆதாரமானாப்போலே,

இந்த அநேககோடி சீவர்களுக்கு அஷ்டமூர்த்திவடிவான ஈஸ்வரன் ஒருத்தனேயென்று விவேகித்தறிந்து இந்த ஈஸ்வரனும்

வெளியில்லாமல் தீபம்விளங்காததுபோல பிரம்மசைதன்னியத்தைத்தவிர ஈஸ்வரன் விளக்கமில்லையென்று விவேகத்தினாலறிந்து கடத்துக்கும் விள க்குக்கும் ஆதாரம் ஆகாசமே யானாற்போல பிண்டபிரம்மாண்டரூபமான ஆவரணவிட்சேப சத்தியி லுண்டான நராள் திரியக்கு தாபரங்கள் சகலப் பிரபஞ்சமும் பிரம்மவிவர்த்தமென்றறிந்தவனே சீவன்முத்தனென்றும்.

இன்னும்.

சந்திரதிஷ்டாந்தம்.

அநாதிசந்திரனில் களங்கமானது சந்திரனை ஆசரித்துச் சந்திரனையு மூடாமல் சந்திரனால் விளங்குவதுபோல அப்படியே சுயம்பிரகாசமாயிருக் கப்பட்ட ஆத்மாவாகிறதன்னிடத்தில் அஞ்ஞானமானது ஆத்மாவையடுத்து ஆத்மாவைமூடாமல் ஆத்மாவினாலே தானே விளங்குகின்றது 'அதெப்படி யென்றால்) என்னை நானறியேனென்கிற உலகதிஷ்டாந்தம் என்னை நான றியேனென்கிறதும் என்னையென்ற தானென்கிறஞானமிருந்தும் ஞான மென்றறியாத மறதியே தன்னை மறைத்தது தன்னை ஞானஸ்வரூபமென்று யாதாமொருத்தன் அறிந்தானோ அவனிடத்தில் மறதியான அஞ்ஞான மொருக்காலுமில்லை, இதுவேசத்தியம்.

இன்னும்.

சிலைதிஷ்டாந்தம்.

ஒருசிலையிலே தேவர்கள் மனிதர் மிருகங்கள் பசுபட்சிகள் தாபரங் கள் முதலான சித்திரம் வகுத்திருக்கிறதை வெவ்வேறாய்ப்பார்த்தால் தேவ திரியக்கு மனுஷ்யாதிகள் வெவ்வேறாய்த்தோற்றும் ஏகமாய்பர்வதமாய்ப் பார்த்தால் பர்வதம் நீங்கலாய்ச் சித்திரபேதமில்லாததுபோல சச்சிதாநந்த நித்திய பூரணமாய் பிரமாத்மகமாயிருக்கிற தன்னிடத்தில் இந்தசெகத்து கற்பிதமேயென்றறிந்து பூதாகாசம் சிதாகாசமாகிற ஸ்தூல சூட்சும இர ண்டாகாசத்தையும் மாயையென்றுதள்ளி பர்வதத்தைத்தவிர சித்திரபேத ங்களில்லாததுபோல சிதாகாசஸ்வரூபமாயிருக்கப்பட்ட தன்னிடத்தில் சக லமானசெகத்தும் சிதாகாசமாகிற ஸ்படிகபர்வதத்தைத் தவிர வில்லையென் றறிகிறதேரகஸ்யம். ஸ்படிகபர்வதமாகிற சித்து கண்ணாலே பார்க்கவேணு மென்றால் கண்ணுக்கெட்டாது, கையினாற்பிடிக்கலாமென்றால் பிடிக்கப் படாது, காதினாற் கேட்கலாமென்றால் கேட்கப்படாது, மனதினாலறிய லாமென்றால் மனதுக்கெட்டாது. இத்தனை கருவிக்கும் அதுவே ஆதாரமா யிருக்கும். இப்படிப்பட்ட சிதாகாச ஸ்படிக பர்வதத்தைத்தவிர, செகத்தி ல்லையென்றறிகிறதே ரகஸ்யம்.

இன்னும்.

கடசலதிஷ்டாந்தம்.

கடம்போல்ஸ்தூலசரீரம் கடத்தில்சலம்போல அந்தக்கரணம் ஜல த்தில் அழுக்குப்போல் அவித்தை ஜலத்திலாகாயபிரதிபிம்பம்போலஜீவன்,

கடத்தில் ஜலம்பூரிக்கிறதற்குமுன்னிருந்த ஆகாயம்போல கூடஸ்தர், வெளி ஆகாசம்போல பிரம்மசைதன்னியம்.

இந்தஆறுக்கும் அநுபவமெப்படியெனின்.

கடத்தில் மேன்மேலும் ஜலம்விடாமல் சூரியன்முன்னேவைத்தால் ஜலமும்வற்றி அழுக்குமில்லாமல் பிரதிபிம்பாகாசமும்போம் கடமுடைந்தவுடனே உள்ளாகாசமும் வெளியாகாசமும் ஒன்றானதுபோல அப்படியே யாதாமொருவிவேகி சுத்தபிரம்மமாயிருக்கிறஎன்னிடத்தில் உபாதிகற்பிதத்தினால் கடம்போல் ஸ்தூலசரீரமும் கடத்தில் ஜலம்போலஅந்தக்கரணமும் ஜலத்திலழுக்குப்போல் அவித்தையும்ஜலத்தில் ஆகாசப்பிரதிபிம்பம்போல் ஜீவனும் இந்த நாலுங் கூடஸ்தராகிற என்னை மறைத்ததென்றறிந்து சுத்தசைதன்னியமாயிருக்கிற என்னிடத்திலில்லாத பிரதிபாசகம் உண்டாகவேயில்லையென்று நிலைத்தால் அந்த விசாரமாகிற ஞானக்கினி தீக்ஷண்யத்தினால் அந்தக்கரணமாகிற ஜலம்வற்றி அவித்தையாகிற அழுக்குமில்லாமல் ஜீவனாகிற ஆகாசப்பிரதிபிம்பமும்போம் அப்பால் கூடஸ்தப்பிரகாசமாம். கடமுடைந்து உள்ளாகாசமும் வெளியாகாசமும் ஒன்றானதுபோல் பிராரத்தநாசத்தில் பிரம்மசாக்ஷாத்காரமே யாவன் இதுவேசத்தியம்.

இன்னும்.

ஜலதிஷ்டாந்தம்.

மதுரந் திரவஞ்சயித்தியத்துடனே கூடின சமுத்திரத்தில் வாயுவினாலலைவுண்டாய் அலைவினாலே குமிழியும் நுரையும் உண்டாயிற்று அந்த அலைநுரைகுமிழியை சோதித்து அதினாகாரமென்ன வென்றறியுமளவில் மதுரந் திரவம் சயித்தியத்தைத்தவிர அலைநுரை குமிழியில்லாததுபோல் அப்படியே சச்சிதானந்தமாயிருக்கப்பட்ட பிர்ம்மசமுத்திரத்தில் ஜலம் வாயுவினால்குழம்பி அலையுண்டானதுபோல் சச்சிதானந்த சம்பந்தமாகவேவிவகாரஜீவனுண்டானான் மறுபடி அதின்வழியே நுரைகுமிழிபோல பிரதிபாசகசீவனுண்டானான் இதற்கு நிவிர்த்தியெப்படியென்றால் அந்த நுரை குமிழிலயமாகிறபோது அதிலிருந்தமதுரமுதலானதும் சலத்திலேயிருக்கும் அப்படியே பிரதிபாசக ஜீவனுண்டானான் இதற்குவாயுவில்லாமல் ஜலம்அசையாமற்போனால் அந்த அலையிலிருந்த மதுரமுதலானதும் விவகாரஜீவனிலே லயம் விவகாரஜீவன்மாயையினாலே குழம்பி சச்சிதானந்தத்திலே லயம் சச்சிதானந்தம் சுவயம்பிரமத்தினிடத்திலே யிருக்குமென்கிறதிற் கனுபவம்நித்திரைபோகையில் சொப்பனகற்பிதமாகவிருந்த பிர்திபாசகசீவனை விழித்தால் அவனே விவகாரஜீவனானான் விவகாரஜீவனுக்கு நாமரூபமிரண்டுந்தள்ளினால் சச்சிதானந்தமயமானான் சச்சிதானந்தஞ் சுவயம்பிரகாசப் பிரம்மத்தினிடத்தி லிருக்குமென்றறிவதே ரகஸ்யம்.

நாடகதீபதிஷ்டாந்தம்.

நாடகசாலையிலே நட்டுவைத்திருக்கிற தீபமானது தான் நிர்விகாரமாயிருந்தும் நானாவிதநாட்டிய ஸ்திரீதாள மத்தளக்காரர் அவரவர்கள் நாட்

டியத்தொழில் முதலானதையும் விளக்குவிக்கிறப்போல் அப்படியே நிர்விகார கூடஸ்த பிரம்மசைதன்னியமும் அகங்காரமாகிற இராஜாவையும் புத்தியாகிற கூத்தாடிச்சியையும் இந்திரியங்களாகிற தாள மத்தளக்காரரையும் இவர்கள்பண்ணுகிற இகலோக பரலோக வியாபாரத்தையும் அதது களுக்குச் சாட்சியாயிருந்து அதினதிஞகாரமாய் விளக்குவிக்கிருரென்கிறதே ரகஸ்யம்.

இன்னும்.

பஞ்சபூததிஷ்டாந்தம்.

பஞ்சபூதத்தில் ஆகாசமானது எங்கும் பரிபூரணமாய் சகலத்திற்கும் ஆகாசம் இடங்கொடுத்துக்கொண்டிருக்கிறப்போல் சுத்தசைதன்னியமாயிருக்கிற பிரம்மமும் எங்கும் பரிபூரணமாயும் சகலஜெகத்தையும் ஆகாசத்தையும் ஆநந்தமாத்திரமாய் விளக்கி வைத்துக்கொண்டிருக்கிருரென்கிறதே ரகஸ்யம்.

வாயுவானது சகலஜெகத்துக்கும் ஆதாரமாய்த்தூக்கியெடுத்து நடத்திவைத்துப்பிராணவாயுவினுல் பிராணதாரணைபொசிப்பும் பூதவாயுவினுல் சமசஞ்சாரமாகவிருக்கிறதும் வாயுவைத்தவிர அற்பமுமில்லாததுபோலும்.

அக்கினியானது சகலருக்கும் சம்மதமும் அவரவர் சித்தமே போசனமும் குழல்மருந்து பேதத்தினுல் ஒரு அக்கினியே அவரவர்களுக்குப் பேதங்களா யிருக்கிறது அக்கினியைத்தவிர பேதமில்லாததுபோல (சித்தொன்றே சகலசெகத்துமாய் சகல ஆதாரத்துக்கும் ஆதாரமாய் நடந்தாப்போலவும் இருந்தாப்போலவும் பேசினுப்போலவும் சர்வசம்பந்த ஞானத்துவமும் சின்மயமே சரி. விர்த்திபேதத்தினுல் நாலுவித வர்ணபேத ஜாதிபேத ரூபபேத நாமபேதமுஞ் சகலகாரணத்திற்கும் காரணமாகவும் வாயுவு அக்கினியினின் ஆதாரமாகவும் இதினுடைய ஆதாரங்களுக்கெல்லாம் ஆத்மா ஒருத்தரோ சித்ரூபத்தினுல் விளக்குவிக்கின்ருரென் றறிவதே ரகஸ்யம்.

ஒருஜலமே சமுத்திரமென்றும் ஆறென்றும் குளமென்றும் வாய்க்காலென்றும் அலையென்றும்நுரையென்றும் குமிழியென்றும்ஆனதுபோல ஜலத்தைத்தவிர அற்பமு மில்லாததுபோலவும் பிருதிவி யொன்றே மண் மலை விருக்ஷங்க ளானுப்போலவும் குடம் குதிர் சால் கரகம் சட்டிபானை சொப்புகளென்று மானதும் மண்ணைத்தவிர வேறில்லாததுபோலும், பொன்னொன்றே பலவித பூஷணங்களாக ரூபபேத நாம பேதங்களாக விளங்கினுலும் பொன்னைவிட அற்பமு மில்லாததுபோலவும் இரும்பொன்றே சகல ஆயுத பேதங்களாக ரூபபேத நாமபேதத்தினுல் விளங்கினுலும் இரும்பைத்தவிர அற்பமுமில்லாததுபோலும்) சகலபிரபஞ்சாகாரமாக விளங்குகிற பிரபஞ்சமும் பிருதிவி முதலான பூதங்களை அதிஞகாரமாகவும் அதின்விவகாரமாகவும் விளக்குவிக்கிற சத்ரூபமான ஆத்மாவைத்தவிர அற்பமுமில்லையென்றறிவதே ரகஸ்யம்.

இதுவுமன்றியில்.

வியாசப் புரோக்தம்.

சுத்திகாரஜிதம்போல பிரம்மத்திலே மாயையுண்டாய்மாயையாலே பஞ்சபூதமுதலான செகத்துண்டாக இதிற் சூரியன் கடோபாதிபரிச்சின்னங்களாலே அனேகராய்த் தோன்றுமிடத்தில் அந்தக்கடசலத்தில்வந்த உபாதியாலே பிரதிபிம்பித்த சூரியனுபாதிப்படுவதுபோலவும் இதுமுதற் சூரியனுக்கில்லாதுபோலும் அந்தச்சூரியனல்லாமல் அந்தப்பிரதிபிம்பம் மற்றொன்றல்லாததுபோலும் பிரம்மமும்தேகோபாதி பரிச்சின்னங்களாலேஅனேகசீவர்களாய்ப்பிரதிபிம்பித்து, அந்தந்ததேகோபாதிகளில் வந்த சுகதுக்கம் அந்தந்த சீவராசிகளுக்கே ஆக்கித் தனக்கில்லாமல் நின்றநிலையென்றிருப்பதாலும்.

இதுவுமன்றியில்.

வேதாந்தசாரம்.

சூரியன்முன்னேயிருக்கிற ஸ்படிகக்கல்லானது எப்படிப் பிரகாசிக்குமோ அப்படியே ஆன்மப்பிரகாசத்தினால் புத்தியும் அந்தப்புத்திப்பிரகாசத்தினால் மனசும் அந்தமனப்பிரகாசத்தினால் இந்திரியங்களும் அந்த இந்திரியப்பிரகாசத்தினால் தேகமும்விளங்கும் ஆகையால், தேகேந்திரியாதிகளாயிருக்கிற அனான்மாக்களிடத்தில் ஆன்மாவென்கிற புத்தி கண்ணாடியிற் காண்பித்தநிழலை பாலாள் நிஜமாகக்கண்டதுபோல மூடர்களுக்கு நிஜமாகக் காணப்பட்டிருக்கிறது.—

இதுவுமன்றியில்.

ஆசாரியசுவாமிகள் அபரோக்ஷானுபவ தீபிகை
யிலும் இன்னஞ்சில சாஸ்திரங்களிலுஞ்
சொல்வதாவது.

ஆத்மாவே தேகேந்திரியாதிகளென்றும் தேகேந்திரியாதிகளே ஆத்மாவென்றும் விவர்த்தமாகக்கண்டதே அஞ்ஞானம் அவ்வஞ்ஞானத்தினால் ஆத்மாவாகிய தன்னை அசத்தாகிய நாமரூபங்களாய்க் கண்டபோதே அத்துவிதமறைந்து துவிதபாவந்தோன்றியது.

அதெப்படியெனின்.

பித்தமேறிய கட்சுழலினால் சுழலாத வீடு வாசல் சுழல்வதுபோலும் கொள்ளிக்கட்டையை சுழற்றினால் சூரியவட்டமாய்த் தோற்றுவதுபோலும் காற்றாடி கயிறாயிருந்தும் சக்கரமாய்த் தோற்றுவதுபோலும் கானலானோடச் சலமோடுவதுபோலும்) கண்ணாடியினது ரசாரோபத்தினால் சலமிருக்குமிடம் சலமின்மையாகவும் சலமின்றியவிடம் சலமுள்ளதாகவுந் தோற்

றுகிறதுபோலும் ரசக்கண்ணாடிக் கெதிரிருந்த வீடு வாசல்கள் பிற்புறந் தோற்றுவதுபோலும் அஞ்ஞானத்தினால் நாமரூபமான துவிதபாவந் தோற்றியது. இதுவுமன்றியில்.

வேதோக்தமான மஹாவாக்கியத்தில் சார்வதா சாட்சி பூதனென்றும் யாதொரு லட்சணங்களிலும் பற்றற்றவனென்றுஞ் சொல்லுகிறவிதிப்படி திஷ்டாந்தக்கூறல்.

(அவஸ்தாத்திரய சாட்சித்வ நிருபகம்.)

நிர்விகாரனாகிய ஆத்மா நான் சாட்சி யென்றறியவில்லையே விகாரியான அவஸ்தாவாசனல்லவோ வறிகிறான் ஆதலால், நிர்விகாரனாகிய ஆத்மாவே சாட்சியென் றெப்படி யறிகிறதெனின்.

திருஷ்டாந்தமாகக் கேள் கண்ணாடியிற் பார்க்கிறபோது சுபாவமாகியமுகம் அதிற்பிரதிபிம்பித்து அந்தப்பிரதிபிம்பவழியாகவே தனது சுபாவமுகத்தின் சவுந்தரியரூபாதிகளை யறிவதுபோல நிர்விகாரமாகிய ஆத்மாவும் அந்தக்கரணத்திற் பிரதிபலித்து அந்தப்பிரதிபலன வழியாகவே கர்த்தாவாயிருந்து சுருதிசாஸ்திராதி விசாரம்பண்ணி விகாரமாகிய பிரதிபலனந்தா னல்லவென்று நிச்சயித்து அந்தப் பிரதிபலன்வழியே தானிருவிகாரனாகிய பரிபூரணனென்றும் தான் பிரம்மமென்றும் தான் சாட்சியென்றும் தனது விலட்சணாதிகளை யறிகிறான்.

இந்த திருஷ்டாந்தத்திற் றிரிசியமான கண்ணாடியும், அதிற் றிரிசியமாய்ப் பிரதிபலித்த ஆபாசமுகமும், சுபாவமுகத்தின் சவுந்தரிய ரூபாதிகளை எப்படி யறியவில்லையோ அதுபோல திரிசியவிகாரமான அந்தக்கரணமும் அதிற்பிரதிபலித்த திரிசியவிகாரியாகிய சிதாபாசனுந் தனது ஸ்வரூபமான அதிஷ்டான ஆத்மசுபாவசாட்சித்வநிர்விகார பரிபூரணத்வ சொரூபத்தை யறியவில்லை. ஆகையினால் நிர்விகார ஆத்மா சுதாவாய் நான் சாட்சியென்றறியாதிருந்தபோதும் விகார அவஸ்தாவாசன் நான் சாட்சியென்றறிந்தவனைப்போன் றிருந்தபோதும் விகாரியாகிய அவஸ்தாவாசனுக்கு சாட்சித்துவங்கூடாது. நிர்விகார ஆத்மாவுக்கே சாட்சித்துவங்கூடும் அந்த சாட்சித்வலட்சணம் நம்மிடத்திருப்பதால் நாம் சாட்சியென்பதிற் சந்தேகமேயில்லை இவ்வளவும் விவகாரநிமித்தியஞ் சொல்லவந்ததே யல்லது வேறில்லை சாட்சித்துவம் விவகார நிமித்தியார்த்தமே. எதார்த்தஞானத்தில்சாட்சித்துவமுமில்லாமையால் இவ்வளவுதூரம்விவகரிக்கமேண்டியதாயிற்று.

ஆதலால் ஆத்மாவுக்கு நிர்விகாரத்வங்கூடும்.

ஆனாலிந்த விசாரத்திற்குப் பலமேதெனின்.

தேரோட்டிவைக்குமிடத்திலும் அதற்கதிகாரிகளால் செய்யப்பட்டுத் தேரோட்டிவைக்கிறோமென்கிற வியாபார வபிமானத்தினால் அவர்

கட்கு நியமிக்கப்பட்டுச் சொஸ்தனுயிருக்கிற பிரபுவினிடத்தில் நாளிரண்டு நாழிகையில் தேரோட்டிவைத்தேனென்று எப்படி தோற்றுகின்றதோ அப்படிபோல ராகத்துவேஷ சுபாவமான கர்த்ருத்வம் அத்தியாசத்திஞல் ஆத்மசுபாவமாய்த் தோற்றுகின்றது விசாரிக்குமிடத்தில் ஆத்மாவுக்குச் சர்வாத்மனுயில்லை ஆகையால் இப்படிப்பட்ட பிரம்ம லக்ஷணத்தைப்பற்றி அநேகமஹான்களும் மஹாரிஷிகளும் விரிவாக நூல்களைச்செய்திருப்பதால் மேற்சொல்லிய பிரம்மலக்ஷணத்தை சாமான்யமாகக் கூடியவனாயில் சந்தேகத்துக்கு ஹேதுவில்லாமல் அந்தந்தக் கிரந்தங்களைச் சோதித்து அந்தப் பிரம்ம சிருஷ்டிகளை அனேக லீலைகளாகச் செய்திருப்பதால் சிருஷ்டிகள் பேதத்தையும் அபேதத்தையும் கிரமசிருஷ்டி யுகபற்சிருஷ்டிகள் முதலாகியதையும் விவரணமாக எடுத்தெழுதினுல் இந்தப் பஞ்சீகரணப் படத்தைப் பரர்த்து ஆடுவதற்கு நிஸ்ஸந் தேகமாகவும் எளிதாகவு மிருக்கு மென்று அண்டபிண்டபஞ்சீகரணப் படத்தின் லட்சனத்தை முன்னதாய் எழுதாமல் சிருஷ்டிக்கிரமங்களையும் அனுத்மவிஷயமான தேகேந்திரிய வியாபார லட்சணங்களாகிய பூதவிஷய இந்திரிய அந்தக்கரன ஜீவ சீவசாட்சிபரியந்தம் ஆத்மாக்கள் விவகரிக்கிற லட்சணமாகிய விவகாரிகசத்து பிராதிபாதிகசத்து பாரமார்த்திக சத்துத்திரயமும் விவகாரத்தில் உபநிஷத்துப் பிரமாணமாக ஒரு சைதன்னியமே சுத்தசைதன்னியம் ஈஸ்வரசைதன்னியம் சீவசைதன்னியம் பிரமாதுருசைதன்னியம் பிரமாணசைதன்னியம் பிரமேயசைதன்னியம் பலசைதன்னியமென்றிருப்பதால் இந்தச் சீவேஸ்வர கூடஸ்த பிரம்மலக்ஷணத்தை சாமான்யமாகவும் சங்க்ஷேபமாகவும் பலசாஸ்திரங்களில்நின்றும் ஆராய்ந்தெடுத்துச் சேர்த்து அண்டத்திலிருந்துவந்த கட்டளையாகப் பஞ்சீகரண அபஞ்சீகரணங்களில் நின்றும் வந்ததுபோல விவகாரம் சீவர்களுக்கு நடக்கிறபடியால் இதைமுன்னதாய் விவரித்து எழுதி பின்னர் யாம்செய்த அண்டபிண்ட பஞ்சீகரணப் படத்தின்பேரிலாடுகிற விவரத்தைக்குறித்து நிஸ்ஸந்தேகமாக முதல்நூல் வழிநூல் சார்புநூல் முதலானவைகளில் நின்றும் எடுத்தெழுதிய வேதாந்த சித்தாந்த நியாயவரிசைப்பிரகாரம் எழுதலாயிற்று.

முதல்நூலை அநுசரித்துச் சொல்லும்சகல சாஸ்திர சம்மத ரகஸ்யலோகத்தில் சிருஷ்டிக்கிரமங்கூறல்.

பரப்பிரம்மசிருஷ்டியாவது.

நிஸ்தரங்கமாய் ஒன்றுமில்லாதபோது பிரம்ம கிரணமான சித்தில் ஒருநினைவுண்டாய் அதுதானே சிற்சத்தியாய் அருள்சத்தி, இன்பசத்தி, சுகசத்தி, ஆநந்தசத்தி, விஷயசத்தி யென்றும் அனேகம் பேராம் இது பரப்பிரம்மசிருஷ்டியென்றறிக.

சத்திசிருஷ்டியாவது.

முன் சித்தில்வந்த சிற்சத்தியினிடமாகப் பராசத்தி முதற் பஞ்சசத்திகள் தோன்றி இந்த சிற்சத்தி மஹா மாயையோடே கூடிக்கலகங்களைச்செ

ய்து ஐவகை யோனிமுதல்எண்வகைத்தோற்றத்தில் (அம்சாத) மானஅச்சு பேதத்தின் தனுகரண புவனபோக மூண்டாம் இந்தச் சீவராசிகளெல்லாம் சரம் அசரம் ஆகிய இரண்டிலடங்கும் இந்தச்சத்திகளைக்கொண்டு சித்தே சிருஷ்டிக்கும் இந்தப் பிரகாரம் சத்திகளைக்கொண்டு சிவன் சர்வத்தையுஞ் சிருஷ்டிக்கையாலே இது சத்தி சிருஷ்டியென்றறிக.

மூர்த்திசிருஷ்டியாவது.

முன்சொன்ன சத்திகளிடமாகப் பஞ்சசாதாக்கியங்களுண்டாய் இதில் அஞ்சாவதான கன்ம சாதாக்கியத்தில் சதாசிவாதி பஞ்ச மூர்த்திகளொன்றி லொன்றுண்டாய் அந்தமூர்த்திகள் முன்பு சிற்சத்திமஹாமாயையாலே யுண்டான தனு கரண புவன போகங்களையும் ஜீவராசிகளையும் முன்புண்டான அச்சுப்படியே யுகாந்தங்கள்தோறும் அதுகளைத் திரும்பவுண்டாக்கிப் பஞ்ச கிருத்தியங்களைப் பண்ணுவாரென்றறிக. இவர்கள் முன்புள்ள சித்து சிருஷ்டியாகிற யுகபற்சிருஷ்டி அச்சுப்படியல்லாமல் வேறொரு அச்சைச் சிருஷ்டிக்கமாட்டார்களென்றறிக.

நவப்பிரஜாபதிகள்சிருஷ்டி.

காசிபர் முதலான ஒன்பதுபேரும் ஒவ்வொரு யுகாந்தங்கள் நடுவே இறந்துபோன விடங்களிலே பஞ்சமூர்த்திகள் அனுக்கிரகத்தாலே அவர்கள் சிருஷ்டித்தபடியே சிருஷ்டிப்பார்களென்றறிக. என்றிருப்பதாலும் இந்த வெகுவித சிருஷ்டிகளெல்லாம் யுகபற்சிருஷ்டி கிரமசிருஷ்டியென்று இரண்டுவிதமாம்.

இதில் யுகபற் சிருஷ்டியாவது.

நிஸ்தரங்க சமுத்திரத்திலே வாயுவசத்தாலே தரங்கவுற்பத்தியானாப்போல சச்சிதாநந்த ஆத்மகப் பிரம்மத்திலே சித்தின் சங்கற்பசத்தியாலே மூலமாயா விவர்த்தன ரூப நாம மயமான மாயையாலே பிரம்மா முதலான மாயாப்பிரபஞ்சங்களெண்ணிறந்த துண்டாமென்றும்.

கிரமசிருஷ்டியாவது.

தமப்பிரதான காரண மாயையி லிருந்துண்டான தத்துவங்கள் கிரமப்படியே பாரம்பரையாக வுண்டான பிரம்மாண்டபாண்ட மஹாபாண்டபாண்டரங்கள் பிண்டாண்டங்கள் முதலாக எண்ணிறந்தஜீவராசிகளு மூர்த்தி சிருஷ்டிகளும் உண்டானதென்றறிக. இது வேதாந்த சித்தாந்த முதலான வெகுவித சாத்திரம் வெகுவித சிருஷ்டிகளைச் சொல்லுமென்றறிக. இந்தச் சிருஷ்டியைச் சிற்சத்தி முதலாக ரிஷிகளந்தமாக உண்டாக்குவதென்றறிக.

கிரீடாப்பிரம்மவாதம் வியாசப்புரோக்தம்.

பிரம்மத்திலே முக்குணம் க்ஷோபித்து இந்த மூன்றுகுணத்திலுங் கூடி மும்மூர்த்திகளாய் இவர்களாலே சிருஷ்டி ஸ்திதி லயங்க ளுண்டாய்

ஜெகத் பிரவர்த்தமெல்லாம் இவர்களேசெய்ய பிர்ம்மமானதுசாட்சிபூதமாய் நித்த புத்த சுத்த முத்தனாய் தன்குணங்களிலே மூவரையு மடக்கியும்விட்டும் இந்தப்படி நிவிர்த்தி பிரவிர்த்திகளைச்செய்து தனக்கு இந்த வியாபாரமில்லாமலிருக்குமென்றறிக—என்றிருப்பதாலும்.

லீலாப் பிர்ம்மவாதம் வியாசப்புரோக்தம்.

சமுத்திரமானது தானேதரங்கமானாற்போல இப்படி ஏகமான பிர்ம்மந்தானே மாயை முதலான ஜெகத் பிரவர்த்தங்களான தனு கரண புவனபோக போக்கியங்க ளானதென்றறிக—என்றிருப்பதாலும்.

அந்தக்கரண சிருஷ்டிபேதம்.

சிவம் ஞானசத்தியைப் பார்த்தபோது சாத்வீக ஆங்காரமுண்டாய் இதில் அந்தக்கரணமுஞ்சூரியாதி தெய்வமுண்டாச்சுதென்றும் பரவஸ்துவிலே பாவமுண்டாய் இதில் ஞானமுண்டாய் இதில் மனசுண்டாய் இதில் ஆங்காரமுண்டாய் இதில் புத்தி இதில் சித்த முண்டாச்சு தென்றும் பஞ்சீகிருதத்தாலே ஆகாசசம்பந்தம் நாலுபூதக்கலப்பிலுண்டாயிற்றென்றும் இன்னம் வெகுவிதமாகவும் வேதாந்தஞ் சொல்லும் ஞானவாசிஷ்டத்தில் சத்திய ஞானனந்தப் பிர்ம்மத்தில் சிருஷ்டி சங்கல்பமே மனசென்றுசொல்லும். சித்தாந்தத்தில் அவ்வியத்தத்திலே சித்தம் இதில்புத்தி இதில் ஆங்காரம் இதில் மனசுஇப்படிச் சித்தாந்தமும் வெகுவிதமாகச் சொல்லும் பலசமயங்களிலுஞ் பல விதஞ்சொல்லும். இதுகளை விசாரிக்கில் எல்லாஞ்சரியென்றறிக. இதுகளைவிரிக்கில் விரிவாமென்றறிக—என்றிருப்பதாலும்.

சூகலசாஸ்திர சம்மத ரகஸ்ய லோலத்தில்.

அந்தக்கரணக் கிரியைசொலல்.

இதில் சித்தமாவது வாயுவின் கூறென்றும் அப்புவின்கூறென்றும் வேதஞ்சொல்லும் இதுக்குஉணர்வுதெய்வமாய் இந்திரிய கரணங்களுடனே கூடாமல் சாக்கிறத்திலாவது நித்திரையிலாவது சிந்தனை வெகுவாய்ப்பண்ணித்திரும்பி என்னவிசாரமிட்டோமென்றும் என்ன கனாக்கண்டோமென்றும் விசாரிக்கில் ஒன்றுந்தோன்றாமலும் இந்திரியங்களுடனே கூடி விஷயங்களைப் பொசிக்கும்போது அந்தவிஷயத்தில் சிந்தனையாய் அசைவு கொடுக்குமென்றறிக இந்தச் சித்தத்தை சித்தாந்தி அவ்வியத்தத்திலுண்டானதென்பான்.

புத்தியின்கிரியையாவது.

இதை அப்புவின் கூறென்றும் அக்கினியின் கூறென்றும் வேதஞ்சொல்லும் இதற்குத் தெய்வம் சந்திரனாகை உட்புறம்பு இருவகையாய் இந்திரியங்களால் வந்த விஷயத்தை முந்திச் சித்தம் அசைந்து சிந்திக்க அதைப் புத்தி நிச்சயம் பண்ணும் இது பஞ்சாசற்பாவமுமல்லாமல் சுபாசுப-பாவமா

யிருக்கும் இதைச் சித்தாந்தி சித்தத்தி லுண்டானதென்று சொல்வான் பின்னும் விஷ்ணுவே புத்திக்குத் தெய்வமென்பாருமுளர்

ஆங்காரத்தின் கிரியையாவது.

இதை அக்கினியின் கூறென்றும் மண்ணின் கூறென்றும் தெய்வம் ருத்திரன் வீமனென்றும் இந்த ஆங்காரம் புத்தி நிச்சயித்த விஷயத்தைக் கொண்டெழுந்து திடம்பண்ணும் இதைச் சித்தாந்தி புத்தியிலுண்டானதென்பான்.

மனத்தின் கிரியையாவது.

இதைப் பிருதிவியின் கூறென்றும் வாயுவின் கூறென்றும் தெய்வம் பொன்மலரோன் சந்திரனென்றுஞ் சொல்லும் இது ஆங்காரம் திடம்பண்ணினவிஷயத்தை இந்திரியங்களுடனே கூடி உட்புறம்பு இருவகையாய் வந்தவிஷயத்தைப் பற்றுவது இதைச் சித்தாந்தி ஆங்காரத்திலுண்டானதென்பான் சித்தாந்தி உள்ளமென்றதை வேதாந்தி ஞாதுருவென்பான், இது ஆத்மா அறிவு அசைந்தவிடத்தி லெழுவதாம், இது ஆத்மாவிலிருந்து பற்றியறிந்தபோது வருகிற எதிர்விஷயத்தை ஆத்மா இந்திரிய மனசு புத்தி ஆங்காரம் சித்தம் இப்படி வாங்கிக்கொண்டு வருமென்றறிக.

ஆத்மா அசைந்தெழும்பிப் பற்றும்போது சித்தம் புத்தி ஆங்காரம் மனசு பூதமந்தமாகிப் பற்றித் திரும்பி வாங்கிவருகிறபோது முன்சொன்ன பூதமுதலாக வாங்கி வருமென்றறிக—என்றிருப்பதாலும்.

சகலசாஸ்திர சம்மத ரகஸ்ய லோலத்தில்.

அந்தக்கரணமொன் றறிந்தசொன் றறியாததை விளக்கல்.

ஒருவ னொருபதார்த்தத்தை ஒருவிடத்தில் வைத்துப்போனான் பின்பு நினைத்தவிடத்தில் காணாத திகிலினாலே சடுதியிலேங்கிப் பிராணவாயு இயக்கமில்லாமல் வாயுந் திறந்து கண்ணும் நட்டுப்போய்ச் சுவாசமில்லாமல் பிரேதாவஸ்தைப்பட்டுப் பிரேதத்தைப்போல விருந்தான் அப்போது அதீதமாயிற்று. பிறகு ஒன்றுந்தோன்றாமல் பெருமூச்சுவிட்டு வாயுமூடிக் கண்ணு நிமைக்கொட்டிப் பிராணவாயுவுடனே கூடினபோது துரியமாயிற்று பின்பு எங்கெங்கே வைத்தோமென்று சித்தத்தோடேகூடிச் சிந்தித்தபோது சுழுத்தியாயிற்று, பின்பு புத்தியுடனே கூடினபோது இன்னவிடத்தில் வைத்தோமென்று நிச்சயம் பிறந்து ஆங்காரங்கூடி அவிடமாமென்று திடம்பிறந்தது சொப்பனமாயிற்று, பின்பு மனசோடே கூடி எடுத்து வருவோமென்றுபற்றி மனது இந்திரியத்துடனேகூடி இந்திரியம் பூதத்துடனேகூடி நடந்துபோய் அந்தப்பதார்த்தத்தை கண்டெடுத்தபோது சாக்கிரமாயிற்று.

ஆகையால் அந்தக்கரணம் ஒன்றறிந்ததை ஒன்றறியாதென்றறிக. அல்லது அறியுமானால் நாலுபேராய்க்கூடி ஒரு காரியமறிந்ததை அதில் மூன்றுபேரில்லாமல் ஒருவனிருந்தாலும் அவ னந்தக்காரியத்தைச் சொல்லுகிறாப்போல அந்தக்கரணம் மூன்றும்போய்ச் சித்தமொன்றுமிருக்கிறது தெரியாமல் தன்னறிவு சிந்தனைமாத்திரமாகையால் வைத்தவிடமறியாமல் சிந்தித்தும் புத்தி ஆங்காரங்கூடித் திடம்பிறந்தும் மனசுகூடாதபடியாலே போகக்கூடாமற் கூடினபின்பு எழுந்துபோயும் ஆகையால் நாலுங்கூடி ஒன்றை அறிந்தாலும் ஒன்றறிந்த தொன்றறியாதென்றறிக.—அதேனெனின்,

இந்திரியங்களைப்போல இந்தக்கரணங்களுக்குப் பூதங்கள் வேறேயுண்டாகையால் அந்தப் பூதமாத்திரங்களை அறியுமென்றறிக. இதல்லாமல் ஒன்று நினைத்தேன் அது மறந்துபோய் நினைத்தாலும் அந்த மறந்தது நினைவுக்கு வரவில்லையென்கையால் புத்திகூடி நிச்சயிக்கிற தில்லாதபடியாலென்றறிக. இதல்லாமல் கீழாலவஸ்தையில் சொப்பனத்திலே கரணம் நாலுமிருக்கையால் கண்ட சொப்பனத்தைச் சொல்லியும் இந்தச் சொப்பனத்தில் மூன்றுநின்று சித்தமொன்று மிருக்கையாலே ராத்திரி சொப்பனங் கண்டதெல்லாஞ் சொல்லத்தெரியாது கண்டது மெத்தவுண்டென்கையாலும் அந்தக்கரணம் நாலும் ஒவ்வொன்றுதானே ஒவ்வொருதிசைக்குப் பிரதான மாகையாலும் ஒன்றறிந்ததொன்றறியாதென்றறிக.—என்றிருப்பதாலும்.

சித்தாந்தி சொல்வது இந்திரியம் வேறுசெய்தல்.

பொறி பத்து மிருக்கச்சே செத்தபோது நித்திரையிலும் அறியாதிருக்கையாலும் காதுத் துவார மிருக்கச்சே காது கேளாமலும் உடம்பிருக்கச்சே உடம்பிலே ஜன்னி மூர்ச்சைதோஷம் விஷம் வந்தவிடத்தில் காச்சிச்சுட்டாலும் தெரியாமலும் விழி நன்றாயிருக்க பிறவிக்குருடனுக்கு தெரியாமலும் நீலகாசாதி வியாதியாலுங் கண் தெரியாமலும் நாக்கிருக்க நாக்கிலேதோஷம் விஷமூர்ச்சையாதிகள் வந்தவிடத்தில் கசப்புமுதலான ருசிகள் தெரியாமலும் மூக்கிருக்கப் பீனிசாதிகள் வந்தவிடத்தில் கெந்தந் தெரியாமலும் வாயிருக்க மூங்கையாகையாலும் கால்கையிருக்க முடமாகையாலும் மலத்துவாரமிருக்க மலங் கட்டுகையாலும் ஜெலத்துவாரமிருக்க ஜெலங்கட்டலாலும் அலியாகையாலும் இப்படி பத்துத்துவாரமிருக்க எதிர் விஷயங்களை அறியவில்லையே ஆகையாலே பத்துத்தானங்களிலும் விஷயங்களை அறிகிறதில்லையாலும் இந்திரியங்களே நானென்றான். குரு அதெப்படியென்ன, சீஷன்சொல்வது இந்திரியங்கள் கெடுகையாலும் நித்திரையில் ஒடுங்குகையாலும் திரும்பிச் சாக்கிரத்துக்கு வருகையாலும் இந்திரியம் இந்த ஸ்தானங்களிலிருந்தால் அறிந்தும் இதுகளில்லாவிட்டால் விஷயங்களை அறியாமலும் இப்படி ஆகையால் தேகத்தைநடத்துகிறதுஇந்திரியமேயென்றான் ஆனால் ஜீவனென்றில்லையோவென்று குருகேட்கச் சீஷன்சொல்வது ஜீவனிருந்தறிகிறதால் வாயுப்போனவிடத்திலும் இந்திரியங்கள்போ

னவிடத்திலும் சுழுத்தியிலும் ஜீவனறியவில்லையே ஆகையாலே ஜீவனில்லையென்கிறதே உண்மை யென்று சொன்னான்.

அதற்குக் குருவுத்தரம், நீ முன்பு கண்ட தேகம் பொறிகள் இந்திரியங்கள் மேற்சொல்லப்போகிற தத்துவங்கள் எல்லாத்துக்கும் ஆத்மாவானவன் தன் இச்சாஞானக்கிரியையாலே அறிவைக்கொடுத்து அதுகளைக்கொண்டு தான் அறிகிறதொழியக் கருவிகளையல்லாமல் தானே அறியமாட்டான் அந்தக்கருவிகளும் ஆத்மாவையல்லாமல் அறியமாட்டாது சிருஷ்டியாதி தொழிலைச் செய்கிற கம்மியன் குலாலன் முதலானபேர் அந்தந்த நிர்மாணங்களுக் கேத்த ஆயுதங்களால் உண்டாக்கல்போலும் பின்னும் சூரனை சேவகன் தான் கற்பித்துக்கொண்ட ஆயுதங்களைக் கொண்டு படைகளைசெயித்துத்தான்சூரனைப்போலும்ஆத்மாவும்தன்னிச்சாஞானக்கிரியைகளாகிற ஆயுதங்களாலே தத்துவங்களை யுண்டாக்கி அதற் கறிவைக்கொடுத்து அதுகளைக்கொண்டு சகல சுகதுக்கங்களையும் பொசித்துத்தான் அதற்கெல்லாம் கர்த்தாவாவன் ஆயுதங்களில்லாமல் கம்மியன், குலாலன், சேவகனுமாகாது இவர்களில்லாமல் ஆயுதங்களாலும் ஆகாது அப்படிபோல ஆத்மாவையல்லாமல் இந்திரியங்களுக்குச் சேஷ்டையில்லை இந்திரியங்களையல்லாமல் ஆத்மாவுக்குச்சேஷ்டையில்லை யென்றறிக. பஞ்சேந்திரியங்களிலும் ஆத்மா தானே இருந்துகொண்டு விஷயங்களை அறியுமென்றது ஆகையாலே பிரத்தியேகமாகச் சீவனென்றுண்டாகிலும் இதுவும் அந்தக்கரணங்களைக்கொண்டு இந்திரியத்தாலே வருகிறவிஷயத்தை அறிகிறதல்லாமல் தானே அறியானென்றறிக. அதெப்படியெனின் (மனசானது ஒருஇந்திரிய விஷயத்தில் ஒருமித்துப் பற்றும்போது மற்ற ஒன்பதுவிஷயமுந் தெரியாதென்றறிக.

அதெப்படியெனின் ஒருவனுக்குத் தேள்கொட்டி கடுக்கச்சே பாம்புவிழுந்தால் அந்தத் தேள் நோவுபோய் பாம்பின்மேற்பற்றி விஷமேற அப்போது கொள்ளைக்காரர் வந்து குத்தச்சே விஷந் தலைமண்டைக் கொண்டதை விட்டுக் கொள்ளைக்காரர்கள்மேலே அந்தக்கரணம்பற்றி ஓட்டமெடுத்தும் இதல்லாமல் வயிறுகழியவந்து புதரின்கீழிருக்கச்சே அந்தப்புதரிலிருந்து பாம்பு புலி சீறிப் புறப்படுகையில் அதைக் கண்டேங்கி வயிறு கழியவந்த தடங்கிப்போயும் வாயிலேபோட்டருசி கள்ளராலே துரைகளாலே வந்தபயத்தாலே தெரியாதிலும் இன்னம் வழிநடையில் கால்வீங்கி நடக்கமாட்டாமல் நோவெடுத்துக் காட்டு வழியிலேகிடக்கும்போது கள்ளராவது புலியாவது துரத்த கால்நோவுபோய் ஓட்டமாய்ஓடும்போது புதரிலே புகுத அப்போது காதறுந்தும் பாம்புகடித்தும் முள்ளுகள் தைத்தும் இதுகள்தெரியாமலும் துரத்துகிறவன் மேல் அந்தக்கரணம்பற்றி ஒன்றுந்தெரியாமையாலும், ஒருகடையிலே நாலுபேருஞ் சாமக்கிரிகை கொள்ளச்சே அதிலொருவன் நான்போகவேணும்எனக்குக் கொடுமென்று எத்தனைகூப்பிட்டாலுந்

தெரியாமையாலும் ஒன்றின்மேல் மனசுபதிறிப்பார்க்கையில் முன்னேபோ கிறவனும் சுற்றிலுங் கிடக்கிற பதார்த்தங்களுந் தெறியாது—ஆகையால்.

இந்திரியங்கள் அதுகளை மனசு கூடாதே அறியாமைாலும் பழுத்தமர த்தைக் கண்ணாலே பார்த்தபோது ஒன்றுந்தோன்றாமலிருந்து பின்புபற்றிப் பார்க்கப் பார்க்க பழங்களைக்கண்டும் செத்தவனுக்கு மெத்ததுக்கமாய் அழ ச்சே யின்னொருவனுக்குச் சாவுகிட்டினால் இதைவிட்டு அந்தத்துக்கத்திலே பற்றியும் அஷ்டாவதானம் பண்ணும்போது மனசு கொள்ளிவட்டம்போலச் சுழன்றால் அந்த அவதானமெல்லாஞ் செய்தும் இதிலொரு அவதானத்தில் நிமிஷம் மனசு கூடாவிடில் அந்த அவதானம் தப்பியும் இப்படி ஆகையா லே இந்திரியங்களிருக்கச்சே மனசு கூடாவிட்டால் இந்திரியங்களுக்குத் தெரியாது ஆகையால் இந்திரியங்கள் சடமாய் வேறாய்ப்போமென்றறிக. அப்போது அந்தக்கரணம்வேறு இந்திரியம்வேறாமென்றறிக இனிச்சீஷன் சொல்வது முந்த இந்திரியமே அறிவாயிருந்து எல்லா மறியுமென்றேனே அதற்கு இந்திரியஞ் சடமென்றிசைவித்து அந்தக்கரணம் அறியுமென்றீரோ இனி இந்திரியத்தின் செயலில்லையோ வென்றுகேட்க குருவுத்தரம். நீமுன் இந்திரியமே அறியுமென்றாயே இந்திரியங்களாவது தாக்கினவிஷயத்தை நாம ரூபக் கிரியைதெரியாமல் அதென்னசத்தம் அதென்னபரிசம் அதென் னரூபம் அதென்ன ரசம் அதென்னகெந்தமென்று நிச்சியமில்லாமல் ஐயப் படுகிற விஷயமாத்திரம் ஞானேந்திரியத்தின் அறிவென்றறிக. இனிகன் மேந்திரியத்துக்கும் இதென்னவசனம் என்ன கமனம் என்னதானம் என்ன விசர்க்கம் என்னஆநந்தமென்று நிச்சயமில்லாமல் ஐயப்படுகிறதுமாத்திரம் கன்மேந்திரியத்தின் அறிவென்றறிக. அந்தக்கரணங் கூடினவிடத்தில் நாம ரூபக் கிரியைகளோடே அறியுமென்றறிக. அதெப்படி பிரதிமைகளைப்ப ண்ணி அதிலொருவன் புகுந்து தானும்பேசுதுந் தானாட்டுவிக்கும்போதும் புறம்பிலே பார்த்த பேருக்கு அதுகள்தானே ஆடுவதுபோ லிருக்கிறாப் போல இந்திரியங்களில் அந்தக்கரணங்கள் புகுந்தறியும்போது இந்திரியங் களறிகிறதுபோ லிருக்குமென்றறிக.

சீஷன் இந்திரியம்பற்றி விப்ரமறியாத தெப்படியென குருவுத்தரம். ஆறுமாதத்துக் குழந்தைகளுக்குச் சத்தாதிவிஷயங்கள் தாக்குமிடத்தில் அந் தக்கரணங் கூடவும் முதிர்ந்து பற்றாமையால் இந்திரியம் இன்னதென்றறி யாது போலவென்றறிக. இதுகளெல்லாம் அந்தக்கரணங் கூடாவிடில் சட மாம் இந்த இந்திரியங்கள் பத்துக்கும் பொறி யென்று பெயராகையா லே பொறியறவுணர்தல் தெரிசனமும் இந்த இந்திரிய தெரிசனமும்ஒன்றெ ன்றறிக—இதுவுமன்றியில்.

அந்தக்கரணம்வேறு தரிசனத்தில்.

இவன் மெத்த மனசுடையவன் மனசில்லாதவன் மனசிலே கபடி, என்மனசுவரவில்லை என்மனசுவரநடந்தால் பிழைப்பான் மனசுவராவிட்

டாற் கெட்டான் என்மனசு சந்தோஷமாச்சுது பூரித்தது என்மனசு பற்றி எரியுதென்றொருவிடத்தில் மனசேபிரதானமாயும் இவன் புத்திமான் இவன் புத்தியீனன் இவன்மதிமந்திரி இவன்புத்திக்குச்சரியில்லை யென்றொருவிடத்தில் புத்தியேபிரதானமாயும் இவனுங்காரி இவனுங்காரமில்லாதவன் இவனுங்காரமேசொரூபம் இவனுங்காரமழிய வென்றொரு விடத்தில் ஆங்காரமேபிரதானமாயும் உம்முடையசித்தம் உம்முடையசித்தம்வர நடப்பேன் உம்முடையசித்தத்துக்குச் சரிப்போனபடிபார்த்துக்கொள்ளும் இவன்சித்தவிர்த்தியறிந்து நடக்கவேணு மென்றொரு விடத்திலே சித்தமே பிரதானமாயும் இப்படி நாலும் வேறுவேறாய்ப் பிரதானங்க ளாகையாலே இந்தநாலும் வேறு இதல்லாமல் யாதாமொருவிஷயம் வந்தவிடத்து இந்திரியம் என்னமோவென்று ஒன்றுந்தோன்றாமலிருந்தபோது அதை மனசுபற்றித் தலையெடுத்து உடம்போங்கி அதென்னமோவென்று தளருகையில் புத்திகூடி அது இன்ன சத்தாதி விஷயமென்று நிச்சயம்பண்ணி ஆமோ அல்லவோவென்றுதளரும் அப்போது ஆங்காரங்கூடி அந்தச் சத்தமேயல்லாமல் வேறே யில்லையென்று திடம்பண்ணித்தளரும் அப்போது சித்தம் சிந்தனுமாத்திரமாய்த் திரிம்பி அந்தச்சிந்தனமுந் தெரியாமல் சிந்திக்கு மென்றறிக. பின்பு சித்த சிந்தனையுந் தளர்ந்து ஒன்றுந் தோன்றாமற்போம் அப்போது புருடன் அதை எல்லா மேற்றுக்கொண்டறியுமென.

சீஷன் அதெப்படி புருஷனறியுமென.

குருவுத்தரம் அவஸ்தைப்படுகிற கருவி ௩௰௫-ம்ஒடுங்கிவிஷயங்களை ஒன்றுமறியாமல் அதீதமாய்க் கிடக்கும்போது அறிவுசொரூபமாய் ஞெப்தி மாத்திரமாய் மறைபட்டு அருட்பிரேரகத்தால் இச்சா ஞானக்கிரியைகளோடேகூடி அதினாலே விஷயங்கள்வந்தவிடத்தில் சூட்சும்மமாயறிந்து சுட்டறிவில்லாமல் லயமாயசைந்து அதின்பிறகு சித்தத்தை எழுப்பி அதில் ஞான சச்திப் பிரவேசித்துச் சித்தத்தைக்கொண்டு சிந்தனுமாத்திரமாய் படுத்தபடியே மூங்கைசத்தம்போலே ஆவென்றும் ஈயென்றும் வாய்பிதற்ற அப்போது சித்தத்தோடேகூடிப்புத்தியைஎழுப்பி அழைத்தவனின்னானென்று நிச்சயம்பண்ணிச் சித்தம்புத்தியோடேகூடிப் புத்தியைக்கொண்டாங்காரத்தைஎழுப்பித் திடம்பண்ணி இந்த ஆங்காரத்தைக்கொண்டுமனசை எழுப்பி மனசு பற்றிஎழுந்து இருந்துகொண்டுவந்தவனை வந்தகாரியமென்னவென்று கேட்டு மனசைக்கொண்டு இந்திரியங்களை எழுப்பி நித்திரை மயக்கந் தெளிந்து இந்திரியம் பூதத்தோடேகூடி வந்தவனோடே பேசிக்கலந்து இப்படி அதீதப்பட்டு நித்திரையிலிருந்து புருஷன் முதலாக அறிந்து அதீதமுதல் சாக்கிரமீறாக எழுந்துபற்றித் திரும்பி அந்த விஷயத்தை வாங்கிப் போகிறபோது பூதம் இந்திரியத்திலே கொடுக்க இந்திரியம் மனசிற் கொடுக்கமனசு ஆங்காரத்திலேகொடுக்க ஆங்காரம் புத்தியிலேகொடுக்க புத்திசித்தத்திலே கொடுக்க சித்தம் புருடனிலேகொடுக்க இப்படிப்பற்றி அறியுமென்றறிக.

இனிச்சாக்கிரத்திலும் பிரேரககருவியோடே மத்தியால வஸ்தைப்பட்டு ஆத்மா விஷயங்களைப் பொசிக்கும்போது சுத்தவித்தைமுதல் ௫-ங்

கலாதிக ளேழையுமெழுப்ப கலாதிகள் ஆத்மாவினுடைய இச்சாஞானக்கிரி யைகளை எழுப்ப ஆத்மாவானவன் வருகிறவிஷயங்களை முந்தச் சுட்டறிவில் லாமல் தன்னறிவிலேற்றுக்கொண்டு சித்தமுதலாகப் பூதங்கடையாக எழு ப்பி எழுந்து பற்றிப்பொசிக்கும் திரும்பிவாங்கிவரும்போது பூதமுதலாய்ப் பற்றி அறியுமென்றறிக. ஆனால் சுவாமி அந்தக்கரணமானது நிமிஷத்தி லொன்றுபோல நாலுங் கூடியிருந்து விஷயங்களைப் பற்றச்சே நாலுகரண மும் வேறு அதின்றொழிலு மொன்றறிந்த தொன்றறியாமல் நாலுதொழி லும் வேறாயிருக்குமென்று சொன்னதேது அடியேனுக்கு நாலும் ஒன்று போலத் தோன்றுகிறதல்லாமல் நாலாயிருக்கவில்லையே யென.

அதற்குக் குருவுத்தரம் ஆனால் முன்சொன்ன இந்திரியம் ௰-ம் ஒன் றறிந்த தொன்றறியாமல் வேறுவேறாய்க் காட்டினோம் அப்படியே அந்தக் கரணமும் ஒன்றறிந்த தொன்றறியாமலும் வேறுவேறாகவும் தெரிசனம் பண்ணுவிக்கிறோமெனச் சீஷன் அதெப்படியென குருவுத்தரம். கீழா லவ ஸ்தையிற் சாக்கிரத்தில் அந்தக்கரணம் நாலுமிருந்தறியும்சொப்பனத்துக்கு வருகிறபோது சாக்கிரத்திலே மனசு நிற்க மற்றமூன்றுடனே கண்டத்தி லிறங்கிச் சொப்பனத்திலே பற்றுந் தன்மையில்லாமற் சாக்கிரத்திலே கண் டவிஷயமெல்லாம் புத்தியிலே பந்தித்துச் சொப்பனங்காணும் இந்தப் புத்தி ஆங்காரம் இரண்டும் சொப்பனத்தில் நிற்க இருதயத்திலிறங்கிச் சுழு த்தியிலே சித்தமொன்றுடனே கூடிச் சிந்தனை மாத்திரமாய் இராத்திரிச் சொப்பனம் வேண்டியதெல்லாங் கண்டேன் சொல்லத்தெரியாதென்று சா க்கிரத்திலே வந்தபிறகு சொல்லப்போகாது இனிச் சித்தமும் சுழுத்தியில் நிற்கப் பிராணவாயுவுடனே நாபிக்கமலமாகிற துரியத்தி லிறங்கி வாயுவை நானாவிதமாய்க்கொண்டு சரிக்கிற அந்தக்கரணங்களெல்லாம் சுழுத்திமட்டி லே நிற்கையாலே நானாவிதமாய்ப் பிரிந்த வாயுவெல்லாம் ஒன்றாய்க்கூடி வாயு வதிகமா யியங்கும்போது கரணத்தோடே கூடிப் பிரேரகமில்லாத படியாலே துரியத்திலே வாயுவு சடமாய் அசேதனமாய்ப் படுத்ததறிவேன் எழுந்திருந்ததறிவேன் ஒன்றுந் தெரியாதென்பது துரியம்.

இனி அதீதத்திலே லிங்கபீடத்திலிறங்கி ராத்திரி பட்டபாடு படுத் தினபாடெல்லாந் தெரியாதென்றறி ஆகையாலே கீழாலவஸ்தையில் ஒன் றொன்றாய் நீங்குகையாலே நீங்கின தானத்தின்றொழில்நின்ற கரணமறியா தென்றறிக இதல்லாமல் மத்தியாலவஸ்தை சாக்கிரமா யிருக்கச்சே ஒருவிடத்தில் வைத்த உடைமையை அசந்துபோய் வீட்டுக்கு வந்தபோது நினைத்துக்கொண்டு உடைமையைக் காணாத ஏக்கத்தினாலே கண்ணு நட்டு ப்போய் வாயுமங்காந்து சுவாசமில்லாமல் அதீதப்பட்டுப் பிரேதாவஸ்தை ப்பொருந்தி நின்றான், பிறகு அதீதப்பட்டவன் திரும்பி பிரேரகத்தாலே துரியனாய்ப் பெருமூச்சுவிட்டு வாயுவோடேகூடிச் சுவாசமுநடந்து கண்ணு மிமைக்கொட்டி வாயையுமூடிக்கொண்டு அதின்பின் சுழுத்தியில்வந்து சித்

தத்தோடேகூடி அந்தவுடைமையை எங்கே வைத்தோமென்று சிந்தனை பண்ணி பிறகு சொப்பனத்தில் வந்து புத்தி ஆங்காரத்தோடுகூடி இன்ன விடத்தில் வைத்தோமென்று நிச்சயமுந் திடமுமாகுன். பிறகு சாக்கிரத் தில்வந்து மனசுகூடி இன்னவிடத்திலல்லவோ வைத்தோம் எடுத்துவரவே ணுமென்று மனசுபற்றிப் பிறகு இந்திரியத்தோடு கூடி எழுந்து பூதத்தோ டேகூடி வைத்தவிடத்துக்குப்போய் எடுத்துவந்தானென்றறிக.

சிஷன் சொல்லிது முன்னே அந்த உடைமையை ஒருவிடத்தில் வைக்கிறபோது நாலுகரணமுங் கூடித் தானல்லவோ வைத்தான். அசை வற்றஞ்சந்தபோதுஅந்தக்கரணங்கள்எங்கேபோச்சுதெனை—(குருவுத்தரம்.) நாலுகரணமுங் கூடாமல் அதீதப்பட்டதென்றறிக இதல்லாமல் நாலுகரண முங்கூடி ஒன்றை அறிந்தாலும் இதில் புத்தி நீங்கல் நிச்சயமில்லாதபடி யாலே மற்றகரணமிருந்தாலும் அறியாதென்றறிக. அந்தக்கரணத்தில் ஒன் றறிந்ததை ஒன்றறிந்தால் ஒருகரணமிருந்தாலும் அயர்ந்துபோகாதென்ற றிக இதல்லாமல்ஒன்றுநினைத்தேன் பிறகுஅசைந்தேன் திரும்பநினைத்தேன் என்கையாலும் ஒன்றறிந்ததை ஒன்றறியாதென்றறிக.

(இதற்குச்சிஷன்சங்கை.)

தேவரீர் கரணம் ஒன்றைஒன்று பிறிந்தவிடத்திலல்லவோ நினைத்த சைந்ததென்றும்ஒருஉடைமையைவைத்தவிடந்தெரியாமற்போச்சுதென்றும் சொன்னீர்அசைந்து நினைக்கிறபோதும் வைத்தஉடைமையைவைத்தவிடந் தெரியாமல் எங்கேவைத்தோமென்று தேடுகிறபோதும் அப்போதுநாலுகர ணமுங்கூடித் தானல்லவோதெரியாமல் யோசனைபண்ணுகிருன்.

அதெப்படியென.

(குருவுத்தரம்.)

அதுஞானசத்திகூடிப் பிரேரக கருவியைக்கொண்டு பிரேரித்து அந்தக்கரணத்துக்கு அந்தவிஷயத்தை அறிவியாதபடியாலென்றறிகசிஷன் சங்கை ஆனால்முன்சொன்ன திப்படியல்லவோவெனின், குருவுத்தரம்அது அந்தக்கரண சுதந்தரமும் அந்தக்கரண ஆதிக்கமும் ஒன்றைஒன்று வேறு செய்யவும் ஒன்றறிந்த தொன்றறியாதென்றும் ஒன்றைஒன்று சடம்பண்ண வும் வேண்டிச்சொன்ன தல்லாமல் ஞானசத்தி கூடில்லாமல்அந்தக்கரண ங்களுக்குத் தெரியாதென்றறிக. இதல்லாமற்சமாதியிலிருந்து தியானம்பண் ணும்போது ஒருவிஷயங்களிலே பற்றித் தியானத்திலே மனசுபற்றுமற் சஞ்சலம் பண்ணினது போனவிடம் மனசுபோனது, அந்தத்தியானத்திலே நிச்சயம்பிறந்து இப்படிகண்டேன் அப்படிகண்டேனென்பதுபோனவிடம். புத்தியும் ஆங்காரமும்போனது.

(அதிற்சிந்தியாமற்போனவிடம் சித்தம்போனது.)

இனித்தன்னுடம்பிலே தாங்கினதும் வருகிறவிஷயங்களுந் தோன் ருமல் உள்ளேசிந்தனைகளுமற்றது அந்தக்கரணம்ஒன்ருென்ருய் நீங்கிஅது

களிறந்தவிடமென்றறிக. சீஷன்சங்கை ஆனால்அந்தக்கரணமிறந்தால் அவி டத்தில் அறியுமறிவில்லையேயென்று சங்கிக்க, (குருவுத்தரம்.) அறிகிறது கரணமெனின் இது ஒன்றை ஒன்றறியாது வெவ்வேறு செயலாயிருக்கும் இந்த நாலினுடைய செயல்களை அறிந்து அதுகளை ஒடுக்கி ஆக்கி உட்கரண மாக்கிப் புறக்கருவியினும் போக்கி இத்தோடே இணையனாய் இவற்றின் வேறாய் யானெனதென்பது ஆத்மா வேறென்றுண்டென்றறிக. அந்தக்கர ணமிறந்தவிடத்திலல்லாமல் அறிவைக்காணப்போகாதென்றறிக என்றிரு ப்பதாலும் பிரம்மவிவகாரஞ் பிரபஞ்ச விவகாரமிரண்டையும் சுருதிப்பிர மாணப்படி விசாரித்தால் நன்றாய்விளங்குமென்றறிக.

ஆத்மலட்சணத்தில் ஒரு சைதன்னியமே ஏழுவிதமாய்
விவகரித்தாலும் திரிபுடிவிசேஷணத்தினாலும்
மதாந்திரங்களில் நானாவிதமாகச்சொன்னாலும் அதை
சங்கிரகமாக திருக்குவிவேக முதலாகிய நாமங்களைசொலல்.

திருக்குவிவேகம்.

திருக்குவினிடத்தில் சுகதபேதம், சுஜாதிபேதம், விஜாதிபேதமென நிராகரிக்கத்தக்க பேதத்திரயமுண்டு, அவைகட்குத்திருஷ்டாந்தம்.

ஒருவிருக்ஷத்திற்குப் பத்திரபுஷ்ப பலாதிகளே சுகதபேதம். விரு க்ஷாந்தரமே சுஜாதிபேதம்.

பாஷாணாதியேவிஜாதிபேதம்.

திருக்கானசத்ரூபபிரம்மம் சுகனம் போலநிரவயமாகையாலும், சத் துக்குவேறொரு சத்தில்லாமையாலும் சுகதபேதம், சுஜாதிபேதமில்லாதிருந் தாலும், ஜகத்காரணமாயை யுண்டாகையால்விஜாதிபேதமுண்டென்னின், சித்திரிகனை விட்டுச்சித்திரசத்திக்குவேறேதோன்றுவதில்லாததெப்படியோ அப்படிச் சின்மாத்திர பிரம்மத்தைவிட்டு, மாயைக்கு விலட்சணத்துவமி ல்லையாகையால், விஜாதிபேதமில்லையென்பதேநிச்சயம். இந்தஅர்த்தத்தில், "ஏகமேவாத்துவிதியமென்னும்" பதத்திரயத்துக்கு ஐக்கிய, அவதாரணை, துவைதநிஷேதமெனஅர்த்தத்திரயமாகையால்,அந்தக்கிரமத்தில்,சுகத, சுஜா தி, விஜாதி பேதத்திரயமில்லை யென்பதேபிரமாணம்.

கற்பிதத்துவயம்.

அத்தியாரோபம், அபவாதமெனக் கற்பிதத்துவயமுண்டு அவற்றுள், உண்டானரச்சு, சுத்தி,ஸ்தாணுவாதியில், கிரமத்தில் இல்லாதசர்ப்ப, ரஜித, சோராதிகற்பிதம்போலச் சத்ரூபப் பிரம்மத்தில் இல்லாதமாயாப்பிரபஞ்ச கற்பனையே அத்தியாரோபமாம். இதுசர்ப்பமல்ல ரச்சுவே இதுரசிதமல்ல

சுத்தியே, இதுசோரனல்ல ஸ்தாணுவேயென்பதுபோல, விசாரமுகத்தால் இதுபிரபஞ்சமல்ல பிரம்ம மென்பதே அபவாதமாம்.

உபாயத்திரயம்.

அதத்துவியாவிருத்திலக்ஷணை தடஸ்தலக்ஷணை சொரூபலக்ஷணை யெனத் திருக்குருபவஸ்து சாக்ஷாத்காரத்துக்கு உபாயத்திரியமுண்டு.

அவற்றுள்.

தேகாதி அநாத்மவர்க்கங்களையுத்தியால் நேதித்து, நின்ற ஆத்மனை அறிவிப்பதே அதத்துவியாவிருத்திலக்ஷணையாம்.

விருக்ஷத்தின்மேலேசந்திரனிருப்பானென்பதுபோலப் பூதாதிஜகத் காரணத்திருந்த, ஆத்மனை அறிவிப்பதே தடஸ்தலக்ஷணையாம்.

பிரகிருஷ் டோஷ்ணப்பிரகாசரூபமே சூரியனென்பதுபோல, ஆத் மன்நிஜரூபமறிவிப்பதே சொரூபலக்ஷணையாம்.

ஆத்மஸ்வரூபலக்ஷணபஞ்சகம்.

சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணமென ஆத்மாவின் சொரூ பலக்ஷண பஞ்சகமுண்டு.

அவற்றுள்.

அறிவேன் அறியேனென்பதிலும், காமாதிவிர்த்தி தோன்றுமிடத்தி லும், தோன்றாவிடத்திலும், ஜாக்கிராதி அவஸ்தையிலும், தனக்கொரு வா தையில்லாமலுண்டென்பதே சத்துரூபமாம்.

சர்வாவஸ்தையிலும் விஷயங்களை இடைவிடாதறிகிறதே சித்துரூபமாம்.

பரமப்பிரீதியில்விஷயமாவதே ஆனந்தஸ்வரூபமாம்.

சதோதிதமாவதே நித்தியரூபமாம் சர்வார்த்தசாதக மாகையால், சர்வசம்பந்தத்துவமே பூரணரூபமாம்.

சச்சிதானந்தமே ஆத்மஸ்வரூபமானால், சத்துஞ்சித்தும்போலச் சர் வபுத்திவிருத்தியிலும், ஆனந்தரூபத்துக்கு அபிவியக்தியுண்டாகவேண்டும் அஃதில்லாமையால்ஆனந்தம் ஆத்மஸ்வரூபமல்லவென்றால் திருஷ்டாந்தம்.

உஷ்ணப்பிரகாசமான தீபப்பிரகாசமே கிரகத்தில் வியாபித்திருக் கும் உஷ்ணம் வியாப்தமாகாது.

ஜலத்தில் உஷ்ணமேபிரகடித்திருக்கும்,பிரகாசம்பிரகடிதமாகாது.

காஷ்டத்தில்உஷ்ணமும்,பிரகாசமும்,இரண்டும்பிரகடமாயிருக்கும்

அப்படியே பிரம்மத்தின் சத்துபாஷாணாதிகளில், அபிவியக்தியாகிறதல்லாமல்சிதானந்தங்கள் பிரகாசியாது. புத்தியின்தமோகுணத்தால் அஞ்ஞானமயமானமூடவிர்த்தியிலும், ரஜோர்குணத்தால் ராகமயமானகுரோதவிர்த்தியிலும், சத்துச்சித்திரண்டும் பிரகாசிக்கிறதல்லாமல், ஆனந்தம்பிரகாசியாது, சத்துவகுணத்தால், வைராக்கியமயமானசாந்தவிர்த்தியில், சச்சிதானந்தமென்னுந்திரி ரூபத்துக்கும் ஸ்புரணை காண்பிக்கும், ஆகையாலானந்தம் ஆத்மஸ்வரூபமாம், இந்தப்பஞ்சரூபத்துக்கும் உபாதிபேதமாவது.

சத்துத்திரயம்.

வியாவகாரிகசத்து, பிராதிபாதிகசத்து, பராமார்த்திகசத்து, எனச் சத்து மூன்றாம்.

அவற்றுள்.

ஜாக்கிரத்தில் கடாதிசத்தே விதேககைவல்லியபரியந்தம் சுழுத்தி மூர்ச்சை முதலான அவஸ்தையிற்றோன்றாமல், எழுந்தபொழுது முன்போலத்தோன்றுகையால், வியாவகாரிகசத்து.

சுத்திகாரஜித சொப்பனவிஷயாதிசத்துத்தோன்றுகிற காலத்தல்லாமல், விழித்தகாலத்தில்லாமையால் பிராதிபாதிகசத்து.

சமஸ்தகற்பனைக்கும் அதிஷ்டானமாய்த் தோன்றாதடங்காதிருக்கிற பிரம்மசத்தே பராமார்த்திகசத்து.

சித்துசதுஷ்டயம்.

ஜீவ-ஈஸ்வர, கூடஸ்த-பிரம்ம-மென்னுநான்கும்சித்துசதுஷ்டயமாம்.

இதற்குதிருஷ்டாந்தம்.

ஜலப்பிரதிபிம்பாகாசம், மேஹாகாசம், கடாவச்சின்னாகாசம், மஹாதாகாசமெனக்கிரமத்தில் திருஷ்டாந்த சதுஷ்டயமாம்.

பரிச்சேதத்திரயம்.

காலபரிச்சேதம், தேசபரிச்சேதம், வஸ்துபரிச்சேத மெனப்பிரம்மபூரணபதத்துள் நிராகரிக்கத்தக்கபரிச்சேதத்திரயமுண்டு.

அவற்றுள்.

ஒருகாலத்துண்டு ஒருகாலத்தில்லையென்பதே காலபரிச்சேதம்.
ஒருதேசத்துண்டு ஒருதேசத்தில்லையென்பதே தேசபரிச்சேதம்.
ஒருவஸ்திதுவாகும், ஒருஸ்திதுவல்லவென்பதே வஸ்துபரிச்சேதம்.

ஜீவநாமரூபவிவகாரம்.

பூர்வோக்த சித்துபேதமான ஜீவ, ஈஸ்வராதிகளுக்கு நாம, ரூப, விவகார கற்பனையாவது ஜீவனே விஸ்வ, தைஜஸ பிராக்கியனெனமூன்றாம்.

அவற்றுள்.

ஸ்தூலசரீரவியஷ்டியபிமானி வியாவகாரிகஜீவ, புத்திபிரதிபலித சைதந்நியன், சிதாபாசன், விக்ஷேபரூபன், க்ஷேத்திரஞ்ஞன், சரீரி, பிரமாத்துரு, கர்த்துரு, போக்துரு, சமுசாரி, விஷயி, பாவாத்மன், விஞ்ஞானமயன், துவம்பதமுக்கியார்த்தன், முதலானவை விஸ்வனுக்குப் பரியாயநாமமாம்.

சூட்சுமசரீரவியஷ்டியபிமானி.

பிராதிபாதிகஜீவன், சொப்பன கற்பிதன், முதலானவைதைஜசனுக்குப்பரியாய நாமமாம்.

காரணசரீரவியஷ்டியபிமானி.

அவித்தியோபாதிகன், முதலானவை பிராக்கியனுக்குப் பரியாய நாமமாம்.

ஆத்துமத்திரயம்.

ஜீவாத்மா, அந்தராத்மா, பரமாத்மாவென ஆத்மத்திரயமுண்டு.

அவற்றுள்.

தப்தாயபிண்டம்போலத் தேகங்கட்குள்ளேசம்பந்தித்துச் சகலசமுசார விவகாரமுள்ளவனே ஜீவாத்மா.

கமலபத்திரோதகம்போலச் சமுசாரம்பொருந்தியும் பொருந்தாதவனே அந்தராத்மா.

லோகவிவகாரத்துக்குச் சாட்சி சூரியனெப்படியோ வப்படி ஜீவாந்திரவிவகாரசாட்சிகனே பரமாத்மா.

சமுசாரகற்பனை.

ஜலத்தின்சஞ்சலம், சூரியன்சஞ்சலமென்பதுபோலவும், மேகமோடச் சந்திரனோடுமென்பதுபோலவும் நதியிலே ஓடமோடதீரத்தின்விருக்ஷமோடு மென்பதுபோலவும், மனையின் துவாரத்திற் பிறகாசிக்கின்ற சூரியகிரணம், கையசைக்கும்போது அசையுமென்பதுபோலவும், தேகத்தின் ஜனனமரணம், ஆத்மனுக்கென்பது போலவும், நிர்விகாராத்மனுக்குத், தேகாதி யுபாதியாலான அவஸ்தாகற்பனை சமுசாரவிவகாரமாம்.

ஈஸ்வரநாமரூபவிவகாரம்.

ஈஸ்வரனே விராட்புருஷன், இரண்யகர்ப்பன், அந்தரியாமியென மூவராம்.

அவருள்.

ஸ்தூலசரீரசமஷ்டியபிமானி.

ஈஸ்வரன் தத்பதமுக்கியார்த்தன், முதலானவை விராட்புருஷனுக்குப் பரியாயநாமமாம்.

லிங்கசரீரசமஷ்டியபிமானி.

மஹாப்பிராணன்-சூத்திராத்மன் முதலானவை இரண்ய கர்ப்பனுக்குப்பரியாயநாமமாம்.

காரணசரீரசமஷ்டியபிமானி.

அக்கியானோபஹிதசைதன்னியன் காரணோபாதிகன், மாயோபாதிகன்-மாயாபாசகன், மாயாவயவி ஜகத்தியோனி, ஆனந்தமயன் அக்ஷரன், அவ்வியாக்கிருதன், சபளப்பிரம்மன், சகுணப்பிரம்மன், பரன், பரமன், பரதேவதை முதலானவை அந்தரியாமிக்குப் பரியாயநாமமாம்.

ஈஸ்வரன்

கூடஸ்தன்பரியாயநாமம்.

விஸ்வாதி ஜீவத்திரயாதிஷ்டானசைதன்னியன் துரியன், சுவயஞ்சத்தார்த்தன், சாக்ஷிகன், பாரமார்த்திகஜீவன், பிரத்தியேகாத்மன், அனுசந்தாத்துரு, அவச்சின்னஜீவன், துவம்பதலக்ஷியார்த்தன் முதலானவை கூடஸ்தன்பரியாயநாமமாம்.

பிரம்மத்தின்பரியாயநாமம்.

அந்தர்யாமியாதி, ஈஸ்வரதிரயாதிஷ்டாத்துரு பரமாத்மன் பரதத்துவம், பரப்பிரம்மம், சர்வாதிஷ்டாத்துரு, விசுத்தசித்து, தத்பதலட்சியார்த்தன், முதலானவை பிரம்மத்தின் பரியாயநாமமாம்.

மிருத்திகையொன்றே நாமரூபத்தால் கடாதிவெகுபேதமானாற்போலவும் சுவர்ன்னமொன்றே வங்கிசரம்பத்தால் கடக,மகுடாதியாபரணமானாற்போலவும், ஜலமொன்றெவாயுவசத்தால், பேனபுற்புத, தரங்காதிசமுதாயமானாற்போலவும் தீபமொன்றே கடத்தின்துவாரபேதத்தால், வெகுரூபமானாற்போலவும், மாருதமொன்றே வேணுரந்திரத்தால் மந்தர மத்திம, தாரமானாற்போலவும், ஸ்வரமொன்றே பாடுவான்குறிப்பால் நாநாராகமானாற்போலவும், ககனமொன்றே கிரகாதியுபாதியால், அநேகமானாற்போலவும், தொனியொன்றே வாத்தியாதிபேதத்தால் அநேகமானாற்போலவும், கதலீதள நீபமொன்றே கண்டத்தால், கரி துரகாதி நாநாபேதமானாற்போலவும், ரவியொன்றே ஜலகும்பாதிவசத்தால் நாநாப்பிரகாசமானாற் போலவும், இலக்கமொன்றே பிந்துபேதத்தால் தச சத சகஸ்திராதியானாற்போலவும், சித்தொன்றே பூர்வோக்த ஜீவேஸ்வராதிபேதவிகாரமாய்ச் சென்று சொல்லப்படும் இவையெல்லாந் திருக்குவிவேகம்.

திர்சியவிவேகம்.

சந்திரனிடத்தில் அநாதிகளங்கமானது எப்படிச் சந்திரனையாசிரயித்து அவனைமறையாமல் அவனால் விளங்குகிறதெப்படியோ அப்படியே நானென்னை அறியேனென்னும் லோகப்பிரசித்தவிவகாரத்தால், ஆத்மனை அடுத்து அவனைமறையாமல் அவனாலறிவித்துக்கொள்வதாகியும், அக்கினியின் சுடுந்தொழில், மணிமந்திராதிபிரயோகத்தால் பந்திக்கப்பட்டுத் தான் அக்கினிரூபமு மல்லாமல் அக்கினியைவிட்டு தோற்றுவதுஞ்செய்யாமல், ஸ்போடகாதிகாரி யோதயமெப்படியோ அப்படியே பிரம்மஸ்வரூபமுமல்லாமல், பிரம்மவிலட்சணமாயுந்தோன்றாமல் ஆகாசாதி காரியோதய முண்டாக்குகிறவளாகியும், அகடிதகடனாசமர்த்தையாகியும், சர்வதத்துவங்களுக்கும் காரணமானதே திர்ச்சியரூபமாயாசத்தி.

திரிபுடி.

ஞாதுரு, ஞானம், ஞேய மெனத்திரிபுடியுண்டு.

அவற்றுள்.

மூலாகங்காரத்தில் பிரிதிபலிக்கும் ஜீவசைதன்னியமே ஞாதுரு.
மனதிற்பிரிதிபலிக்கும் சைதன்னியமே ஞானம்.
பூதபௌதிகவிஷயங்களில் பிரிதிபலிக்கும் சைதன்னியமேஞேயம்.

அவற்றுள்.

மனமே ௨௪ஆம்-தத்துவம்

மூலாங்காரமே ௨௫ஆம்-தத்துவம்.

அகங்காரகத சிதாபாசஜீவனே ௨௬ஆம்தத்துவம்.
மாயோபாதிகனான ஈஸ்வரனே ௨௭ஆம்தத்துவம்.
அகங்காரஜீவர்க்கு அதிஷ்டானமானகூடஸ்தனே௨௮ஆம்தத்துவம்.
அந்தமாயா ஈஸ்வரருக்கு அதிஷ்டானமான பிரம்மமே ௨௯ஆம் தத்துவமாம்.

மாயாகாரியோதயசதுஷ்டயம்.

விர்த்தி, பரிணாமம், ஆரம்பம், விவர்த்தமென மாயாகாரியோதயசதுஷ்டயமுண்டு.

அவற்றுள்.

படகுடீரபாவ, க்ஷீரதத்தியாகாரதந்துபடநியாய ரச்சுசர்ப்ப ரூபமெனக்கிரமத்தில் திர்ஷ்டாந்த சதுஷ்டயமுண்டு.

சத்ரூபப் பிரம்மத்தில், மித்தியாவஸ்துகற்பனைக்கு ரச்சுசர்ப்ப ஸ்தாணுசோர சொப்பனேந்திரஜால, கந்தர்வநகர, சுத்திகாரஜித, நீல ககன,மரீசிகா ஜலமுதலானவை திர்ஷ்டாந்தசமூகமாம்.

நிர்விகார ஸ்வரூபாத்துவயனான ஆத்மனிடத்தில், மித்தையாவஸ்து கற்பிதமானால், அந்தப்பிராந்தி யாருக்குத் தோன்றினதென்றால், யாதாமொரு யோகீஸ்வரனிடத்தில் சதிரதி காங்க்ஷையென்னும்திரிவித ரூபங்களும் சொப்பனத்தில் ஏககாலத்திற் றோன்றினும், அதனால் அவனுக்கு யாதொரு ஆனியுமில்லாததுபோலச் சாட்சிகனான, ஆத்மனிடத்தில் குணத்திரயாத்துமகப் பிரகிருதியில் பிராந்திஞாதுரு, பிராந்திஞானம், பிராந்திஞேயமென்னுந் திரிபுடி மயப்பிரபஞ்சம் ஏககாலத்திற் கற்பிதமானாலும் அந்த ஆத்மாவுக்குயாதொரு ஆனியுமில்லை ஈஸ்வரனால் சிருஷ்டியான மாயாமய வியோமாதி பிரபஞ்சமானது, சொரூபத்தில் ஏகப்பிரகாரமாம்.

திருச்சிற்றம்பலம்.

சாஸ்திரப்பிரமாண பஞ்சீகரண திஷ்டாந்தம்

வைதிகவேதாந்தத்தில் பஞ்சீகரண

அபஞ்சீகரணம்.

மஹாதேவன் தன்னிச்சையாலே பஞ்சமஹாபூதத்தை உ௦-பங்காக்கி நிஜாங்கிசமே நிறுத்தி மீந்தத்தைக் கூட்டினார். அதிலே ஒருபாகத்தை இருபத்தஞ்சு களையாக்கி ஈஸ்வரனித்தை ஆரம்பித்து இந்த உரு-ம், இரண்யகெற்ப அங்கிசஸ்வயாம்சம் இது ஈஸ்வர அங்கிசம். இது பத்துதிக்குஞ் சோத்திரம் வாயுவேதொக்கு, சட்சு சூரியன், சிங்குவை வருணன்,கிராணம் அசுவனிதேவதைகள், இதி விரண்யகெற்பனிந்திரியம், இனிவாக்குவன்னி, பாணிசுரபதி, பாதமுபேந்திரன், குய்யமேபிரஜாபதி, குதமேநைருதி, இது கன்மேந்திரியம். இது பிரம்மாண்டத்தில் வர்த்தித்தது இது பிண்டத்திலும் சரியாம். இனி அந்தக்கரணம் விஷ்ணு, மனசு சந்திரன், புத்தி கமலாசனன், சித்தம் நாராயணன், ஆங்காரம் ருத்திரன், விஷயம் ௰-ம், அண்டத்திலிருக்கையால் அதுவே விஷயம். இந்த அண்டத்தில் உரு - குண தேவதையும் ஈஸ்வரன் லிங்கதேகமாம். இந்த சூட்சுமபூதமே ஈஸ்வரன் லிங்கதேகமென்று சுருதி ஸ்மிருதி பிரசித்தம். இந்த அண்டத்தில் உரு-தேவதையும் பிண்டத்திலே ஜீவராசிகளுக்கிருக்கிற தத்துவம் உரு-க்கும், அதிதேவதைகளாம். இனி ஈஸ்வரன் தூலதேகமாவது (பஞ்சீகிருதபூதமானது) அதெப்படி ஈஸ்வரன் பஞ்சபூதத்தையும் ஒவ்வொன்றாய்ப்பார்த்து ஆகாசத்திலே கரணம் ரு- முண்டாக்கி மற்ற அங்கிசம்பாதி அந்தக்கரணத்தைநிறுத்தும் மற்றநாலையும் நாலுபூதத்திற் கலப்பித்து வாயுவை ரு-ஆக்கி இதில் பாதிநிறுத்தி மற்றநாலும் நாலுபூதத்திற் கலப்பித்து மற்றபூதத்துக்கு மற்ற அங்கிசம் பாதிநிறுத்தி மற்ற நன்னாலுபங்கையும் நாலுபூதத்திற்கலப்பித்து ஆகாசகரணம் ரு - வாயுவசனாதி ரு - அக்கினிசோத்திராதி ரு-அப்பு சத்தாதி ரு - பிருதிவி வாக்காதி ரு- ஆக உரு-பஞ்சீகிருத தத்துவமாயிற்று. இதே தூலபூதபஞ்சீகிருதமாயிற்று. என்றிருப்பதாலும்.

சாஸ்திரப்பிரமாண பஞ்சீகரண திஷ்டாந்தம்.

வேதாந்தத்தில் பஞ்சீகரண அபஞ்சீகரணம்.

பஞ்சவிம்சதி தத்துவமாத்திரஞ் சொல்வது

அதெப்படி யெனின்.

மஹாதத்துவத்திலே குணபேதமாய் மூலாங்காரமுண்டாம் இதிலே சத்துவ ராஜச தாமத குணமுண்டாம். இந்த மூன்றுகுணமும் தைஜச வைகரி பூதாதியாம். சத்துவகுணமான தைஜசவாங்காரத்தில் மனசாதி அந்தக்கரணம் ௪ - ம் சுரோத்திராதி ஞானேந்திரியம் ரு-ம், இனி இராஜச குணவைகரியில் வாக்காதிகன்மேந்திரியம் ரு-பிராணாதிவாயு-ரு-தமோகுண பூதாதியில் ஆகாசாதிபூதம் ரு-இப்படி உண்டான தத்துவம் உ௪-இந்தப்பஞ் பூதமும் பஞ்சீகரணமாய்க்கூடிப் பிரம்மாண்டபுவனசரீரகடாதி விஷயங்கள் பிறக்கும். இதிற்கரணம் ௪-இந்திரியம் ௰-ஆக ௰௪-ம், அத்தியாத்மீகமாம் விஷயமயம் ஆதிபௌதீகமாம் இதுகளின் அதிதேவதைகள் ஆதி தெய்வீகம் இந்த ஆதி தெய்வீகமானது விராட்டுக்கு இந்திரியங்களாம் இந்த அதிதேவதைகளாகிற இந்திரியம் இரண்யகெற்பனுக்குச் சரீரமாம். இந்தச் சரீரம் அந்தர்யாமிக்கு ஆவரணமாம். இதில் முன்சொன்ன ஆகாசாதிபூதமஞ்சையும் ஈஸ்வரன் ஒன்றை இரண்டுபாகம்பண்ணி இதிலொருபங்கை நிறுத்தி நிறுத்தினபங்கைச் சூட்சுமமாக்கி மற்றஒருபங்கும் தூலமாய் முன்னிருத்தின சூட்சுமபூதம் ரு-யும், உரு-களையாக்கி இதை ஈஸ்வரன் தனக்குச் சூட்சுமமாகிற லிங்கதேகமாக்கிக்கொண்டான் அதெப்படி? முன்சொன்ன உரு-களையும் ஈஸ்வரனுக்கு உரு-தத்துவமாய்ச் சூட்சுமசரீரமான படிபத்துதிக்குமாகிற ஆகாசமே சுரோத்திரம் வாயுவே தொக்கு சூரியன் சம்பந்தமான அக்கினியே கண். வருணனாகிற அப்புவே ஜிங்குவைஅசுவனி தேவதைகளாகிற பிரதிவியே கிராணம், ஆக ஞானேந்திரியம் ரு-இனி அக்கினியே வாக்கு, சுரபதியே பாணி, உபேந்திரனே பாதம், பிரஜாபதியே குய்யம், நைருதியே பாயு, ஆககன்மேந்திரியம் ரு - இந்த இந்திரியம் ௰- ம். பிரம்மாண்டத்தில் வர்த்திக்கிற விஷயபோகமாகிற சத்தாதி வசனாதி ௰-இனி ஞாதுருவாகிற அந்தக்கரணமே விஷ்ணு, சந்திரனே மனசு, பிரம்மாவே புத்தி, நாராணயனே சித்தம், ருத்திரனே ஆங்காரம், ஆக ரு, இந்த உரு-ம், பிரம்மாண்டங்களுக்கும் பஞ்சீகிருத தத்துவங்களுக்கும் பிண்டத்துக்கும் அதிதெய்வமாயிருக்கும் இதுவே ஈஸ்வரனுக்கு லிங்கதேகமாகிற சூட்சுமதேகமென்றறிக. இனி ஈஸ்வரனுக்குத் தூலதேகம்வருமாறு முன்பு தூலமாய் நிறுத்தின பூதமஞ்சையும் ஒன்றை இரண்டாக்கி இதில் முன்பங்கை ஒன்றுக்கு நாலாக அஞ்சுக்கும் இருபதாக்கிப் பின்பங்கு ரு-யும்,ரு-ஆக்கி ஆக உரு - தத்துவமாக்கி இதிலே பிரம்மாண்டபுவன ஜீவராசிகளாகச்செய்து ஜீவராசிகளுக்குத் தனுகரண புவன போகஞ் செய்து இதுவே ஈஸ்வரனுக்குத் தூலதனுவென்றறிக, இது எப்படி ஒன்று அஞ்சாச்சுதெ

னின் சிற்கிரணபேதத்தாலே பஞ்சபூதமும் ஒன்றிரண்டாய் இதில் முன்ன ஞ்சையும் மஹாபூதமாய் நிறுத்திப் பின்னஞ் சையும் ஒன்றை இரண்டாக்கி இதில் முதற்பாகத்தை ஒன்று நாலாக ஐந்தையும் உ0-ஆய்ப்பகிர்ந்து இந்த உ0-ம், பிந்தினபாகமாக ரு - லே கலவாமற் பிரத்தியேகமாகப் பின்பாக மான இந்த ரு - யையும், ரு - தத்துவமாய் ஞாதுருவென்றும் வியானவாயு வென்றும் சட்சுவென்றும் ரஸமென்றும் உபஸ்தமென்றும் இப்படி ரு-பே ராச்சுது இப்படியானது பிந்தினபாகமான ரு-பூதமென்றறிக. இனிமுன்பா கம் உ0-ல், ஆகாச அங்கிசம் ச-இதாவது வாயுவோடு கூடினபங்கு மனசு, அக்கினியிற்கூடினது புத்தி, அப்புவிற்கூடினது சித்தம், பிருதிவியிற்கூடி னது ஆங்காரம் ஆக ச-பிந்தினபாகமான ஞாதுரு க-ஆகாச அங்கிசம் அந் தக்கரணம் ரு-இனி முந்தினபங்கில் வாயுவங்கிசம் ச-ம், பிராணாதி ச-வாயு பிந்தினபாகமான வியானவாயு க-ஆகவாயுசம்பந்தம் வாயு ரு-இனிமுந்தின பங்கில் அக்கினிசம்பந்தம் பங்கு ச-ம், சோத்திராதி நாலு இந்திரியம் பிந்தி னபாகம் சட்சு ஆக அக்கினிசம்பந்தம் ஞானேந்திரியம் ரு-இனிமுந்தினபங் கில் அப்பு அங்கிசம் ச-ம், சத்தாதி ச-பிந்தினபாகமான ரஸம்-க-ஆக அப்பு சம்பந்தம் சத்தாதி புலன் ரு-இனிமுந்தினபங்கில் பிருதிவிஅங்கிசம் ச-ம், வாக்காதி-ச - பிந்தினபாகமான உபஸ்தம் க-ஆக பிருதிவிசம்பந்தம் கன் மேந்திரியம் ரு-ஆக பஞ்சீகரித்த உண்ணிலைப் பஞ்சவிம்சதி உரு-இதினாலே அனேக பிரம்மாண்டபிண்டங்களாச்சுது இதில்ஒருஅண்டத்தில்காலாக்கினி ருத்திரர் புவன முதலாக அனேகபுவனங்களும் இதுகளில் அண்டஜசுவே தச உற்பீஜ சராயுஜ மந்திரஜ இப்படி ரு-வகையோனியில் நர சுர மிருகபசு பட்சி ஜலதர தாபர எழுவகைத் தோற்றமான அ0சாத-ஜீவராசிகள் ஸ்தூ லசரீரமுண்டாம் இந்தப்பிண்டஸ்தூலசரீரம் பஞ்சீகரித்து தேகத்திற் புற நிலைப்பஞ்சவிம்சதியாம், இந்தச்சிருஷ்டி விரிவுகளை விவேகசிந்தாமணியில் காண்க, என்றிருப்பதாலும்.

சாஸ்திரப்பிரமாண பஞ்சீகரண திஷ்டாந்தம்.

வேதத்திற்சொல்லிய பஞ்சீகரண அபஞ்சீகரணம் பஞ்சபூதம் காரியப்பட்ட விபரம்.

வேதத்திற் சொல்வது சத்தாதி ரு-ம் அபஞ்சீகிருதமென்று பேர் இது பத்தாகி இதில் ரு - சூக்ஷுமமாய் நிற்க மற்ற ஸ்தூலம் ரு-ம் ஒன்றை இரண்டு பங்காக்கி இதில் முதற்பாகத்தை ஒன்றை நாலாக்கி மற்றைப்பின் பாகம் ரு-ங்கூட உ0ரு-தத்துவமாய் அபஞ்சீ பஞ்சீகிருதமென்றும் பேராய் ப்பிண்டப் பிரம்மாண்டங்களாம் இந்தப் பிரம்மாண்டபூதம் பஞ்சீகரித்துக் காரியப்பட்டது பஞ்சீகிருத ஸ்தூலபூதமாம் இந்தப்பூதங்கள் கிடப்பன நெளிவன ஊர்வன தத்துவன பறப்பன நடப்பன தாண்டுவன படுப்பன இப்படி அ0சாத - அச்சுபேதமாச்சுது முன் சொன்ன சத்தாதி ரு-ம் அப

ஞ்சீகிருத காரணமென்றும் உ௫௫ - தத்துவமும் அபஞ்சீ பஞ்சீகிருத சூக்ஷ்மமென்றும் பிண்டமானது பஞ்சீகிருதஸ்தூலமென்றும் பேராமென்றறிக.—என்றிருப்பதாலும்.

சாஸ்திரப்பிரமாண பஞ்சீகரண திஷ்டாந்தம்.

நவநீதசாரத்தில் பஞ்சீகரண அபஞ்சீகரணம்.

மிஞ்சிநின்ற தாம தாமிசத்திலுள்ள ஐந்து பூதத்தையும் ஒன்றை இரண்டாகப்பகுத்து முதற்பாதி யைந்தையும் ஒன்றை நான்காக்கி இரண்டாம்பாதி யைந்தான தன்னமிசத்துடன் கூட்டாமல் மற்ற நான்கு பூதத்துடனும் பூதத்திற்கு அரைக்கா லரைக்கால் மாத்திரையாகக் கொடுப்பதே பஞ்சீகரணம் இப்படி பஞ்சீகரணப் படுத்தியதற்குப் பிரயோசன மேதெனின் பஞ்சீகரித்த ஸ்தூல பூதங்களில் ஆகாசத்திற் பரிச ரூப ரச கந்தங்களாகிய நாற்குணமும் வியாப்பியமாகையாலே அதிரிசியமாய்ப் போக நிசகுணமான சத்தம் திரிசியமாகும் வாயுவில் ரூப ரச கெந்தங்களாகிய முக்குணமும் வியாப்பியமாகையால் அதிரிசியமாய்ப்போக காரணகுணமான சத்தமும் நிசகுணமான பரிசமும் திரிசியமாகும் தேயுவில் ரச கெந்தங்களாகிய இருகுணமும் வியாப்பியமாகையால் அதிரிசியமாய்ப்போக காரணகுணமான சத்த பரிசங்களும் நிசகுணமான ரூபமும் திரிசியமாகும் அப்புவில் கெந்தகுணம் வியாப்பிய மாகையால் அதிரிசியமாய்ப்போக காரணகுணமான சத்த பரிச ரூபங்களும் நிசகுணமான ரசமும் திரிசியமாகும் பிருதிவியில் சத்த பரிச ரூப ரச கந்தங்களும் நிசகுணமாகையால் திரிசியமாகும் இதுவே ஸ்தூல பஞ்ச பூதங்களாம்.—என்றிருப்பதாலும்.

சாஸ்திரப்பிரமாண பஞ்சீகரண திஷ்டாந்தம்.

வேதாந்தசாரத்தில் பஞ்சீகரண அபஞ்சீகரணம்.

சூட்சுமமா யிருந்த ஆகாசாதி பஞ்சபூதங்கள்
ஒன்றுக்கொன்று பஞ்சீகிருதமாய்க்கலந்து
ஸ்தூலபூதங்களாயின.

அதேதெனின்.

ஆகாசாதி பூதங்க ளஞ்சும் ஒவ்வொன்றிரண்டாய்ப் பிரிந்தன, அதில் தன்னுடைய சுபாவாங்கிசம் படுபாதி வேறாய் வைத்து மற்றப்படுபாதியஞ்சும் ஒவ்வொன்று நன்னாலாய்ப்பிரிந்து சுபாவாங்கிசம் நிற்க மற்ற நாலு பூதங்களிலும் ஒன்றுக்கொன்று அரைக்கால்பங்காய்ச் சேர்ந்தன. இப்படிப்பிரிந்த ஆகாசாதியைந்தும் தன்னுடைய சுபாவாங்கிசமான படுபாதியும் மற்றநான்காய்ப்பிரிந்த பூதங்கள் படுபாதியும் ஒருமித்துக்கூடி ஒவ்வொன்று

ஐந்துபாகமாகக் கலந்து ஸ்தூலபூதங்களாயின. இந்தப் பஞ்சீகரணத்தை அப்பிரமாண்யமென்று சங்கிக்கவேண்டாம்.

சாமவேதோபநிஷத்தில் திரிவிதகரணமாய்ச்
சொல்லியிருக்கின்றதேயெனின்.

அது வாயுவு ஆகாசங்களிரண்டும் அமிர்ததிரவியங்களானதாலும் அமிர்ததிரவியங்களான பிருதிவி அப்பு தேய்வுக்கள் அதில் ஒடுக்கமாகையாலும் இந்தப்பஞ்சீகரணத்தைப் பிரமாண்யமென்று பெரியவர்களாற் சொல்லப்படும். இப்படிசொல்லப்பட்ட பஞ்சீகரணமன்றித் திரிவிதகரணஞ்செய்தாற் பிரத்தியட்சாதி விரோதம்வரும், ஆனதால் இந்த ஆகாசவாயுவுக்களுடைய தன்மம் வன்னியாதிகளில் காணப்பட்டிருக்கிறது, அந்த ஆகாசவாயுக்களில் வன்னியாதி தன்மங் காணப்படவில்லை, அதெதினலெனின் இந்தவன்னியாதி அங்கிசம் வியாப்தியானது கொஞ்சமாய்க்கலந்ததினல் இதினுடைய தர்மம் ஆகாசவாயுக்களில் காணப்படவில்லை, சமஸ்தத்திலுங் காரணத்தைப்போற் காரியமுங் காணப்பட்டிருப்பதால் இந்தப்பஞ்சீகரணம்பிரமாண்யமென்றே பெரியவர்கள் அறிந்திருக்கிருர்களென்றிருப்பதாலும்.

சாஸ்திரப்பிரமாண பஞ்சீகரணதிஷ்டாந்தம்
ஆத்மபோதப் பிரகாசிகையில் பஞ்சீகரண
அபஞ்சீகரணம்.

பஞ்சீகரணமென்பது பிருதிவிமுதலாகிய பஞ்சபூதங்களுக்
குள்ளே ஒவ்வொருபூதத்தை யையைந்து கூருக்கி
அந்தக்கூறுகளை ஒன்ருேடொன்ருக
மாறிக்கூட்டுகிறது.

ஒன்ருேடொன்ருக மாறிக்கூட்டுகிற விதம்.

பிருதிவி முதலாகிய பஞ்சபூதங்களுக்குள்ளே ஒவ்வொரு பூதத்தை முன்னே இரண்டு கூருக்கி அவ்விரண்டினுள் ஒருகூறைமாத்திரம் வேறே வைத்து மற்ருேர் கூறை நான்கு கூருகப் பங்கிட்டு அந்த நான்கு கூறையும் முன்பு வேறேவைத்த மற்ற பூதங்களுடைய கூறுகளோடே சேர்க்கிறதினலே பஞ்சீகரணமாகாநின்றது. அது எப்படியென்ருல், முன்னே பிருதிவிபூதத்தை இரண்டு கூருக்கி அவற்றுள் ஒருகூறை வேறேவைத்து மற்றக் கூறை நாலு கூருக்கி அந்த நான்கையும் முன்பு வேறே வைத்த பிருதிவி பாகத்தோடே சேர்க்காமல் சல முதலிய நான்குபூதங்களுடைய நாலாகப் பிரித்து வேறேவைத்த நான்குகூறுக்களோடே சேர்க்கவேண்டியது. இந்தக் கிரமமாகவே சலமுதலிய பூதங்களையும் பகுத்துக் கூட்டிக்கொள்ளவேண்டியது, மேலே சொல்லிய கிரமமாகவே சேர்க்கிறதினலே

யுண்டாகின்ற மனசு முதலானவைகளின் நாமங்களை விவரமாகத் தெரிவிப்பதற்காக மேலே பஞ்சீகரணப்படமெழுதப்படுகின்றது.

ஆகாச நிரூபணம்.

நாலுகூறாகப் பகுக்கப்பட்ட ஆகாசபாகங்களிலே மற்றை நாலு கூறாகப் பகுக்கப்பட்டபூதபாகங்கள் சேருகிறதினாலே யுண்டாகின்ற பஞ்சீகரண விவரம்.

முதல் ஆகாசம்-க.

நான்குகூறாகப் பகுக்கப்பட்ட ஆகாசபாகங்களி லொருபாகத்தோடே நான்குகூறாகப் பகுக்கப்பட்ட பிருதிவிபாகங்களிலே ஒருபாகஞ்சேருகிறதினாலே அகங்காரம் பிறந்தது.

ஆகாசம்-உ.

மேற்சொல்லிய பிரகாரமே ஆகாசபாகமாகிய இரண்டாவதோடே ஜலபாகஞ் சேருகிறதினாலே சித்தம்பிறந்தது.

ஆகாசம்-ங.

மேற்சொல்லிய பிரகாரமே முன் ஆகாசபாகமாகிய மூன்றாவதோடே தேயுவுபாகஞ் சேருகிறதினாலே புத்திபிறந்தது.

ஆகாசம்-ச.

ஆகாசபாகமாகிய நான்காவதோடே வாயுவு பாகஞ் சேருகிறதினாலே மனசு பிறந்தது.

இனி நான்காகப் பகுக்கப்படாதே நின்ற ஆகாசத்தினைக் கூறும் அந்தக்கரண ஸ்வரூபமாயிற்று.

இனி வாயுவுபாகங்களுடனே கூடுகிறலக்ஷணம்.

வாய்வு ச-கூறில், க-ல், பிருதிவிபாகஞ் சேருகிறதினாலே பிராணவாயுவு பிறந்தது.

வாய்வு உ-ல், சலபாகஞ் சேருகிறதினாலே அபானவாய்வு பிறந்தது.

வாய்வு ங-ல், தேய்வுபாகஞ்சேருகிறதினாலே உதானவாய்வுபிறந்தது

வாய்வு ச-ல், ஆகாசபாகஞ்சேருகிறதினாலே சமானவாய்வுபிறந்தது.

இனி பகுக்கப்படாதே நின்ற அதனைக் கூறும் வியானவாயுவாயிற்று.

இனித் தேய்வு பாகங்களுடனே கூடுகிற லக்ஷணம்.

தேய்வு ச-கூ-ல், க-ல், பிருதிவிபாகஞ் சேருகிறதினாலே கிராணேந்திரியம் மூக்கு பிறந்தது.

தேய்வு உ-கூ-ல், ஜலபாகஞ் சேர்கிறதினாலே ரசேந்திரியம் நாக்கு பிறந்தது.

தேய்வு ௩-கூ-ல், வாய்வுபாகஞ் சேர்கிறதினாலே த்வக்கிந்திரியம் தேகம்பிறந்தது.

தேய்வு ௪-கூ-ல், ஆகாசபாகஞ் சேர்கிறதினாலே சுரோத்திரேந்திரியம் செவிபிறந்தது.

இனி பகுக்கப்படாதே நின்ற அதனைக்கூறும் நேத்திரேந்திரியமாயிற்று.

இனி ஜலபாகங்களுடனே கூடுகிறலட்சணம்.

ஜலம் ௪-கூறில் க-ல் பிருதிவிபாகஞ் சேர்கிறதினாலே கந்தம் பிறந்தது.

ஜலம் உ-கூ-ல் தேயுவுபாகஞ் சேர்கிறதினாலே ரூபம் ஒளிபிறந்தது.

ஜலம் ௩-கூ-ல் வாய்வுபாகஞ்சேர்கிறதினாலே பரிசம்ஊருபிறந்தது.

ஜலம் ௪-கூ-ல் ஆகாசபாகஞ்சேர்கிறதினாலே சத்தம் ஓசைபிறந்தது

இனி பகுக்கப்படாதேநின்ற அதனைக்கூறும் ரசம் சுவையாயிற்று

இனி பிருதிவிபாகங்களுடனே கூடுகிற லட்சணம்.

பிருதிவி ௪-கூற்றில் க-ல் ஜலங் கூடுகிறதினாலே பாயுருகுதம் பிறந்தது.

பிருதிவி உ-ம் கூற்றில் தேய்வுபாகஞ் சேர்கிறதினாலே பாதம் பிறந்தது.

பிருதிவி ௩-கூற்றில் வாய்வுபாகஞ் சேர்கிறதினாலே பாணி கை பிறந்தது.

பிருதிவி ௪-ம் கூற்றில் ஆகாசபாகஞ் சேர்கிறதினாலே வாக்கு வாய்பிறந்தது

இனி பகுக்கப்படாதேநின்ற அதனைக் கூறும் உபஸ்தம் ஆண் பெண் குறிகளாயிற்று.

கலப்புப் பஞ்சீகரணம் பஞ்சபூதகதம்பம்.

(க) அந்தக்கரணமும் சமானவாயுவும் சுரோத்திரேந்திரியமும் சத்தமும் வாக்கும் ஆகிய இவை யைந்தும்—ஆகாசகதம்பம்.

(உ) மனசும் வியானவாயும் த்வக்கிந்திரியமும் பரிசமும் பாணியும் ஆகிய இவையைந்தும்=வாயுவுகதம்பம்.

(௩) புத்தியும் உதானவாயுவும் நேத்திரேந்திரியமும் ரூபமும் பாதமுமாகிய இவையைந்தும்—தேயுவின் கதம்பம்.

(௪) சித்தமும் பிராண வாயுவும் ரசேந்திரியமும் ரசமும் வாயுவும் ஆகிய இவை ஐந்தும்—அப்புவின் கதம்பம்.

(௫) ஆங்காரமும் அபானவாயுவும் கிராணேந்திரியமும் கந்தமும் உபஸ்தமுமாகிய விவ்வையைந்தும்—பிருதிவியின் கதம்பம்.

அந்தக்கரணம் மனம் புத்தி சித்தம் ஆங்காரம் இவைஐந்தும் சமஷ்டி சாத்வீகாம்சத்திஞலுண்டானது.

சமானவாயுவு வியானவாயுவு உதானவாயுவு அபானவாயுவு பிராணவாயுவு இவ்வைந்தும் சமஷ்டி ராஜதாம் சத்திஞலுண்டானது.

சோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை கிராணம் இவ்வைந்தும் ஞானேந்திரியம் வியஷ்டி சாத்வீகாம்சத்திஞலுண்டானது.

சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் இவ்வைந்தும் விஷயம் வாக்கு பாணி பாதம் குய்யம் குதம் இவ்வைந்தும் கருமேந்திரியம் வியஷ்டி ரஜோம்சத்திஞ லுண்டானது.

அந்தக்கரண பஞ்சகமனனம்.

சத்ததன்மாத்திரை சாத்வீகாம்சம்சமஷ்டியாலானது அந்தக்கரணம்.

பரிசதன்மாத்திரை சாத்வீகாம்சம் சமஷ்டியாலானது மனசு.

ரூபதன்மாத்திரை சாத்வீகாம்சம் சமஷ்டியாலானது புத்தி.

இரசதன்மாத்திரை சாத்வீகாம்சம் சமஷ்டியாலானது சித்தம்.

கந்ததன்மாத்திரை சாத்வீகாம்சம் சமஷ்டியாலானது ஆங்காரம்.

இதிலந்தக்கரணம்பாதி மற்றவை மனம் புத்தி சித்தம் ஆங்காரம் பாதி ஆக-௫-ந்துங்கூடி அந்தக்கரண பஞ்சகமாயிற்று.

இந்த பஞ்சீகரண மைந்துஞ் சாத்வீககுணமுற்பாதியி லுண்டானபடியால் ஞானசாதகமாயிற்று.

ஞானேந்திரிய பஞ்சகமனனம்.

சத்ததன்மாத்திரை சாத்வீகாம்சம் வியஷ்டியாலானது சோத்திரேந்திரியம்.

பரிசதன்மாத்திரை சாத்வீகாம்சம் வியஷ்டியாலானது தொக்கேந்திரியம்.

ரூபதன்மாத்திரை சாத்வீகாம்சம் வியஷ்டியாலானது சட்சுரிந்திரியம்.

இரசதன்மாத்திரை சாத்வீகாம்சம் வியஷ்டியாலானது சிங்குவையிந்திரியம்.

கந்ததன்மாத்திரை சாத்வீகாம்சம் வியஷ்டியாலானது கிராணேந்திரியம்.

இதில் சட்சுரிந்திரியம்பாதி சோத்திரம் த்வக்கு சிங்குவை கிராணம் இந்நாலும்பாதி ஆக-ரு-ந்துங்கூடி ஞானேந்திரியமாயிற்று.

வாயுவு பஞ்சகமனனம்.

சத்ததன் மாத்திரை ரஜோம்சம் சமஷ்டியாலானது சமானவாயுவு.

பரிசதன் மாத்திரை ரஜோம்சம் சமஷ்டியாலபனது வியானவாயுவு.

ரூபதன் மாத்திரை ரஜோம்சம் சமஷ்டியாலானது உதானவாயுவு.

ரசதன் மாத்திரை ரஜோம்சம் சமஷ்டியாலானது அபானவாயுவு.

கந்ததன் மாத்திரை ரஜோம்சம் சமஷ்டியாலானது பிராணவாயுவு.

இதில் வியானவாயுவு சுயாம்சம்பாதி மற்ற சமானன் உதானன் அபானன் பிராணன் இந்நான்கும்பாதி ஆக-ரு-ந்துங் கூடி வாய்வுபஞ்சகமாயிற்று.

என்றிறுப்பதாலும்.

அண்டபிண்டபஞ்சீகரணப்படத்தின் நாமதேயங்களுக்கு லட்சண மூைரத்தல்.

அதிஷ்டான சைதன்னியாகாசத்துக்கு லட்சணமென்னெனில்.

அண்டசராசர சமஸ்தபூத சகல ஆத்மகோடிகளுக்கும் பூத விஷய இந்திரிய அந்தக்கரண ஜீவ ஜீவசாட்சி பரியந்தம் சகலஹேதுக்களுக்கும் அகில நிகில சகலாதாரங்களுக்கும் அதுவே காரணகாரிய அகாரண அகாரியமா யிருக்கிறதெதுவோ அதுவே அதிஷ்டான சைதன்னியாகாசம்.

மாயைலக்ஷணஞ் சொலல்.

மாயைலக்ஷணம் வேதாந்தஞ்சொல்வது ஒரு அஞ்ஞானமே பிரகிருதியென்றும் மாயையென்றும் அவித்தையென்றும் தமசென்றும் அனேகவிதமாய்ச் சொல்லப்படும்.

இதுவுமன்றியில்.

வைதீகவேதாந்தஞ் சொல்வது.

ஆகாசவீதியிலே மேகசஞ்சாரங் காண்பித்தாப்போலே பிரம்மத்தில் மாயாப்படலங்காண்பித்தது இதுகெட்டால் சுயம்புவாயிருக்கும் இந்த மாயீதேவி ரஜனியிலே பிரம்மாதிதேவதை அபரிமிதபாலகர் பிறந்தார்கள். இந்தமூலமாயைக்கு பூரணசைதன்னியமே முதலென்றறிக. இந்தமாயை பிரம்மத்திலேயுள்ளது இதுவிவர்த்தனம் இதுவேதாந்தசித்தாந்த உபநிஷத்துக்களாலே நிச்சயிக்கப்பட்டது இது பிரமாணசித்தம்.

இதுவுமன்றியில்.

சுத்தவேதாந்தஞ் சொல்வது.

அஞ்ஞியான சந்திரன் களங்குபோல சந்திரனோடேகூடிச் சந்திரனைமறையாமல் சந்திரன்பிரகாசத்தாலே தானும்விளங்கி அதைவிட்டுவேறுமல்லாமல் அதனோடே தானென்றுமல்லாமலானகளங்குபோலே நானே என்னை அறியேனென்கிற லோகப்பிரசித்தமான விவகாரத்தாலே மாயையானது பிரம்மத்திலேயுண்டாய் பிரம்மத்தை மறையாமல் பிரம்மத்தாலே தன்னைப் பிரகாசிப்பித்துக்கொண்டு தான்பிரம்மத்துக்கு வேறுமல்லாமல் பிரம்மந்தானேயானதுமல்லாமல் வேறாயும் இப்படியிருக்கிறது மாயையென்றறிக. பின்னும் அக்கினியின்தாகசத்தி மணிமந்திர அவிஷதப்பிரயோகத்தாலே தானே உஷ்ணங்களைத்தன்னிலே யடக்கி உஷ்ணமில்லாமல் ஜுவாலைதோன்றித் தோன்றும்போது தான் அக்கினிசொரூபமுமல்லாமல் அக்கினியை விட்டு வேறே தோன்றாமல் இந்த வொளி உஷ்ணத்திலே தோன்றுவதல்லாமல் இதைவிட்டு வேறே தோன்றாதென்னவுமாய் போடணதிகாரிய கம்மியமாயிருக்கிறதுபோலே இனி மாயையானது லோகவிவகாரத்தாலே சித்தாகிற உஷ்ணத்தைஅடக்கிக்கொண்டு அக்கினியில்லாமல் ஒளிபிரகாசித்தாப்போலே மாயைதானே பிரகாசித்து பிரம்மமாகிற உஷ்ணத்தை அடக்கி தான்பிரம்மமுமல்லாமல் பிரம்மத்துக்கு வேறாய்த்தோன்றி வியாதாதிகாரிய கம்மியமான அகடிதகடினசமர்த்தியுமாய் சர்வார்த்தத்துக்குங்காரணமாகையாலே திரிசியரூபம் மாயாசத்தியென்றறிக.

இந்தமாயையைத்தானே சுத்தசைவ

சித்தாந்தஞ் சொல்வது

குடிலை ஊர்த்தகுண்டலி பரிக்கிரகசத்தி சிற்சத்தி சுத்தமாயை அசுத்தமாயை ஆதோமாயை என்றும், சுத்தமாயைக்கே ஓங்காரம் பரப்பிரம்மம் வயிந்துவம் மாயேயம் மஹாமாயை படங் குடிலை பிரணவம்பேரொளி நாதம், விந்து வென்றும்.

சிவனுக்கு தனுகரண புவன போகம்.

வாக்காதியான சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி நிவிர்த்தியா திஐந்து சுத்தாதி ஐந்து குண்டலி க-ஆக சுத்தமாயை பரியாயநாமம் முப்ப த்தொன்று என்றும்.

பரமசிவன்பால் பராசத்திமுதல் ஐந்து சத்தியும் ஐந்துசத்தியிலுநின் றும் அநந்தசத்திகளுந் தோன்றின.

பராசத்தியருளாலே குடிலையாகிற சுத்தமாயை கர்த்தாவினுடைய லயபோக அதிகாரங்களுக்கிடமா யசுத்தமாய்ச் சடமாய் கர்த்தாவுக்குப் பரிக்கிரகசத்தியுமாய் நித்தமாய்க் காரணமா யொன்ருய் அசுத்தா சுத்த மிர ண்டிலும் வியாப்தமாய் விஞ்ஞானகலருக்குத் தனுகரண புவனபோகமும் பிரளயாகலர் சகலருக்குச் செலுத்துந் தத்துவமுமா யிருக்கும்.

இந்த மாயையிலே சிவசத்தி அதிஷ்டிக்கையாலே சிவதத்துவம் ஐந்து கலைகள் ஐந்துந் தோன்றும்.—அதெப்படியெனின்.

பரமசிவன் பராசத்தி அங்கமாகத் தனது ஞானசத்தியைக்கொண்டு அதிஷ்டிக்கையாலே முழுக்கிரியையான சத்தி தத்துவமுந் தனது ஞானக் கிரியை யிரண்டையுஞ் சமனகக்கொண்டு அதிஷ்டிக்கையாலே ஞானக் கிரியை சமன சதாசிவதத்துவமும்.

ஞானஹீனமுங் கிரியாதிக்கமுமாக அதிஷ்டிக்கையாலே ஞான ஹீனமுங் கிரியாதிக்கமுமான ஈஸ்வரத்துவமும்.

கிரியாஹீனமும் ஞானதிக்கமுமாக அதிஷ்டிக்கையாலே கிரியா ஹீனமும் ஞானதிக்கமுமான சுத்தவித்தையும்.

இப்படி ஞானசத்தி கிரியாசத்திகளைக் கொண்டு சிவதத்துவம் ஐந் துந் தோற்றுவிப்பானென்றறிக.

இனி முன்சொன்ன பரன் பராசத்தியுஞ் சுத்த தத்துவத்திற் சிவஞ் சத்தியும் ஆக நாலுங் கர்த்தாவுக்கு நிஷ்களமான திருமேனியும் லயஸ்தான முமென்று பேராம்.

இனிச் சதாசிவன் சகளாசகளம் மஹேஸ்வரன் ருத்திரன் விஷ்ணு பிரம்மா இந்த நால்வரும் சகளமாம்.

இந்த ஒன்பதும் சிவனுக்குக் காரணசூட்சும ஸ்தூல தனுவா யிருக்குமென்றறிக.

இனி முன்சொன்ன குடிலையில் தோன்றின விந்துவிலே சூக்கு மாதி நாலு வாக்கும் அன்பத்தோரட்சரமுஞ் சத்தகோடி மஹாமந்திரங்க ளும் இருபத்தெட்டு திவ்வியாகமமும் நாலுவேதமும் தோன்றும்.

இனி முன்சொன்ன சுத்ததத்துவம் ஐந்தில் சிவதத்துவத்திற் பரனி ருக்கும், சத்தி தத்துவத்திற் பராசத்தி யிருக்கும், சதாசிவத்திற் சதாசிவ னிருப்பர், ஈஸ்வரதத்துவத்தில் மஹேஸ்வர னிருப்பர், சுத்தவித்தையிலே ருத்திரதேவரிருப்பர்.

குடிலையில் நாதம், நாதத்தில் விந்து, விந்துவில் சதாசிவம், சதா சிவத்தில் மஹேஸ்வரம், மஹேஸ்வரத்தில் சுத்தவித்தை, தத்துவந் தோன் றினது இந்த ஐந்தில் ஈஸ்வரதத்துவத்தை இச்சாசத்திசெலுத்த.

சதாக்கியத்தையுஞ் சத்தியையுங் கிரியாசத்தி செலுத்த.

சுத்தவித்தையையுஞ் சிவதத்துவத்தையுஞ் ஞானசத்தி செலுத்த.

இந்த ஐந்தும் காலதத்துவம் ஏழையுஞ் செலுத்த.

இந்தஏழும் ஆத்மதத்துவம் இருபத்துநாலையுஞ்செலுத்துமென்றறிக.

இந்தச்சுத்தம் ஐந்துக்கும் முற்பாடு சொல்லக்கூடாதென்றறிக.

இது எதினாலெனின் காலதத்துவ மில்லாதபடியாலென்றறிக.

இந்த நின்மலசத்திகள் ஐந்துஞ் சேஷ்டிக்கையாலே சுத்தமென்ற தென்றறிக.

இனி பரன், பராசத்தி, சதாசிவன், மஹேஸ்வரன், ருத்திரன்.

இந்த ஐவரும் சிவஞ் சத்தி சதாசிவம் ஈஸ்வரம் சுத்தவித்தையிலே யமர்ந்திருப்பார்களென்றறிக.

இதல்லாமல் அருவம் நாலும் சிவ பெருமானுக்கு நிஷ்களமான காரணதனுவாயும் லயஸ்தானமுமாம்.

ரூபா ரூபம் சூட்சுமதனுவாயும் போகஸ்தானமுமா யிருக்கும்.

இதில் அக்ஷர ஸ்வரூபமாய் சகளமாயிருக்கிற பரையை சந்தியான அபரநாத அபரவிந்துவும் அணுச் சதாசிவர்களு மடங்கும்.

இனி உருவம் நாலும் சிவபெருமானுக்குச் சகளமான ஸ்தூலதனு வாய் அதிகார ஸ்தானமுமா யிருக்கும்.

இதி லிவர்களும் அஷ்ட வித்தியேஸ்வரரும் ஈஸ்வர தத்துவத்தி லிருப்பார்கள்.

இனிச் சுத்தவித்தையிலே.

சப்தகோடி மஹாமந்திரங்களும் சக்தி ஸ்வரூபமாயிருக்கிற வியோம வியாபி முதலான மந்திர ஆகம வேதங்க ளடங்கும் இவிடத்திலே சிவ

பெருமானுக்கு அருவம் ரூபாரூபம் உருவம் என்று மூன்றுவிதமாம் அப்போது சக்தியும் மூன்றுவிதமாம் அதெப்படியெனின் சிவபெருமான் பரனுனபோது சக்தியும் பராசத்தியாம் சிவதத்துவத்திற் சிவம் நாதமானபோது விந்து சத்தியுமாய் நிஷ்களமாம் கர்த்தா சதாசிவமாய் சகளநிஷ்களமானபோது சத்தியும் மனோன்மணியாய் சகளநிஷ்களமாம்.

கர்த்தா மஹேஸ்வரன் ருத்திரன் விஷ்ணு பிரம்மா வானபோது சத்தி மஹேசை உமை திரு வாணி யென்று நாலாய்ச் சகளமாம்.

இனி கலை உற்பத்தி யெப்படியெனின்.

பரமா யிருந்துள்ள சைதன்னிய சத்தியில் உதிக்கப்படாநின்ற கிரணங்களானவை சென்று விழுந்து இரஞ்சித்தபொழுது மாயைக்கு குண்டலியென்று பேராய் தலையாயிருந்துள்ள சிற்சத்தியினுடைய கிரண சையோகத்தாலே செகத்தை கெற்பந் தரித்துத் தானே சைதன்னிய சொரூபமாய் நின்றது செகத்தையீன்ற மாயையென்றும்.

பஞ்சசத்தியானது விந்துவாகிற மாயாசத்தியோடேபோய்க் கூடினபோது சூரியகிரணமானது காந்தத்திலே கூடினபோதுஅக்கினிப்பொறிகளுண்டாய்ப் பிரகாசமுதித்ததுபோல நிவிர்த்தியாதிகலை அஞ்சுமுண்டாம்

அதெப்படியெனின்.

பஞ்சசத்திகள்தானே மாயையிலே பிரதிபிம்பமானதே பஞ்சகலையாச்சுதென்றறியவும் இந்தக்கலைகள் ஐந்தும் தத்துவம் புவனங்களும் அர்த்தஸ்வரூபமாயிருக்கும்.

இனி மாமாயை சத்தமாகவும் அர்த்தமாகவும் இப்படி இரண்டு வடிவாயிருக்கும் இதினுடைய விரிவை ஆகமங்களிலே கண்டுகொள்க.

இனி முன்சொன்ன விந்துவிலே வாக்குகள் தோன்றும்.

அதெப்படியெனின்.

மூலாதாரத்திலே விளங்காநின்ற விந்துவிலே சூக்குமைதோன்றி சொல்லுதற்கரிதாய் அறிவுமாய் விளக்கமுமாய் ஆத்மா பகுதியாலே ஒரு நாதமுமாய்த் துரியஸ்தானத்தைப் பொருந்திநிற்கும் இதில் நிற்கிற நாதமான சூக்குமையிலே பைசந்திதோன்றி சுழுத்தித் தானத்தைப் பொருந்தி அக்ஷரங்களை வெவ்வேருய்த் தோற்றுவித்துத் தன்னுள்ளே யொடுக்கிப் புத்தியினுற் சுட்டப்படாத அக்ஷரத்தை யுடைத்தாய் சத்தம் அர்த்தமில்லாததாய் வெவ்வேருன அக்ஷரங்கள் தோன்ருமல்மறைத்து மயிலின்முட்டையை

யிலே மயில் ரூபீகரித்துத் தோற்றச்சே உடைத்தால் ஜலமே தோன்றும் போல சித்தத்திலே அறிவாய்நிற்கும்.

இனி பைசந்தியில் மத்திமைதோன்றி பிராணவாயுவுடனே பொருந்திவரப்பட்ட அக்ஷரங்களையும் அவற்றின் பொருள்களையும் புத்தியிலே நிறுத்தி முற்பட்டுவிரச்சே செவிக்குக் கேளாமல் உள்ளே யுணரத்தக்க தொனியாகக் கண்டத்திலே முழங்கும்.

இதில் வைகரிதோன்றி உதானவாய்வு கட்டுண்டு பிராணவாயுவுங் கூடி சத்தத்தை இவனுடைய செவியிலே கேட்க நினைந்தது சொல்லும் இந்த வாக்குகள் சுத்த அத்துவாவிற் சூக்குமமாயும் மிசிர அத்துவாவிற் றூலமாயும் அசுத்த அத்துவாவில் வெகுதூலமாயுஞ் சீவிக்குமென்றறியவும்.

மாயையில் நின்றுண்டானவிவரம்.

பிரம்ம லீலாசங்கற்ப பிரதிபலன மஹாகாரண ரூபாரூப மானதை ஈஸ்வரன் சத்வகுணப் பிரதான மாயையுடனே கூடிக்கொண்டு தமோ குணப்பிரதானமாயை வீக்ஷித்தபோது அந்த தமோகுணப் பிரதானமாயை யோடு கூடின சைதன்னியத்தினால் திரிகுணாத்மகமான ஆகாசமும் அந்த ஆகாசவிசிஷ்ட சைதன்னியத்தினால் திரிகுணாத்மகமானவாயுவும் அந்தவாயு வின்விசிஷ்ட சைதன்னியத்தினால்திரிகுணாத்மகமானதேயுவும் அந்ததேஜோ விசிஷ்டசைதன்னியத்தினால் திரிகுணாத்மகமான ஜலமும் அந்தச்சலவிசிஷ்ட சைதன்னியத்தினால்திரிகுணாத்மகமானபிருதிவியுமுண்டாயிற்று. இதுஅபஞ்சீகிருதபூதங்களென்றும் சூக்ஷுமபூதங்களென்றுந் தன்மாத்திரைகளென் றுஞ் சொல்லப்படும். இந்தப்பூதங்களினால் சமஷ்டி வியஷ்டியாத்மகமாகிற லிங்கசரீரமுண்டாயிற்று.

இதுவுமன்றியில்.

இராஜத சாத்வீககுணசத்தியை இச்சித்த ஈஸ்வர சைதன்னியத்தில் நின்றும் ஆவரண விட்சேப சத்திகளுண்டாயின (தாமதகுணத்திலுண்டான விக்ஷேபசத்தியின் குணத்திரயத்தில் சாத்வீக ராசதகுணத்தில்அந்தக்கரண முதலான சூக்குமசரீரத்தினுற் பத்திபோக) மிஞ்சின தாமதகுணசத்தியை வீக்ஷித்த ஈஸ்வரசைதன்னியத்தில் நின்றும்கடினசத்தி ரசசத்திரூபசத்தி சலனசத்திநிரவயசத்திஇந்தப்பஞ்சசத்திகளுமுண்டாயின. இதுவேஜம்பூதப்பொறிகளென்றும் இதில்நின்றும்மஹாபூதங்களாகிய பிருதிவிஅப்புதேயுவுவாயுவு ஆகாசம்உண்டாயின. இந்தஐந்துபூதத்தையும்ஒன்றை இரண்டாகப்பகுத்து பகுத்த பாதியை ஒன்றைநந்நான்காக்கில் இருபதாயிற்று பகுப்பப்படாதிருந்த முற்பாதியின் சுத்தாங்கிசம்விட்டு இதா அங்கிசத்துடன்சேர்க்க இருபத்தைந்துங்கூடி வியஷ்டிஸ்தூல சரீர மாயிற்று.

வேதாந்த சித்தாந்த அங்கீகாரம்.

இதுவுமன்றியில்.

அண்டபிண்டபஞ்சீகரணப்படத்தில்.

ஐம்பூதப்பொறிக்கும் சத்த பரிச ரூப ரச கெந்தங்களுக்கும் கரணங்களுக்கும் வாயுவுகளுக்கும் வர்ணரூபலக்ஷணங்களைக்குறித்து எழுதிஞ் சில திஷ்டாந்தம்.

நவநீதசாரம் உற்பத்திப்பிரகரணத்தில்.

விக்ஷேபசத்தியும் சத்துவ ரஜசு தமசென்னுந் திரிகுணசகிதமாயிருக்கும் அந்தச்சத்தியில் சத்ததன்மாத்திரையான ஆகாசமும் ஆகாசத்தில் பரிசதன்மாத்திரையானவாயுவும் வாயுவில் ரூபதன்மாத்திரையான தேயுவும் தேயுவில் ரசதன்மாத்திரையான அப்புவும் அப்புவில்கெந்ததன்மாத்திரையானபிருதிவியும் உண்டாயின இந்தப்பஞ்சதன் மாத்திரைகளுக்கு அபஞ்சீகிருதபஞ்சபூதங்களென்றும் சூக்ஷுமபூதங்களென்றும்சொல்லப்படும். இந்த சூட்சுமபூதங்களில் நின்றும் சூக்ஷுமசரீரங்களும் ஸ்தூலசரீரங்களும் உண்டாயினவென்றும் ரூபமும் அரூபமும் ரூபாரூபமுமாயிருப்பதாலும் இன்னுமொருதிஷ்டாந்தம்.

வேதாந்தசாரத்தில் லிங்கதேகமாகிய பதினேழு

தத்துவத்தினுடைய லக்ஷணமாவது.

சுரோத்திரம் த்வக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் என்னப்பட்ட ஞானேந்திரியங்களஞ்சும் தனித்தனியே நின்ற சூக்ஷும ஆகாசாதி பூதங்களோடே சத்துவகுணங்கலந்ததில்நின்றும் பிரகாசம்பொருந்தித் தனித்தனியே யுண்டாயின இந்தச்சூக்ஷுமஆகாசாதி பஞ்சபூதங்களில்கலந்த அஞ்சுசாத்வீகாங்கிசங்கள் ஒன்றுக்கொன்று கலந்து ஒருமித்துச் சகலத்துக்குங் காரணமான அந்தக்கரணம் பிறந்தது இப்படி பிறந்த ஞானேந்திரியங்களும் அந்தக்கரணமும் பிரகாச ஸ்வரூபமானதால் சாத்வீகாங்கி சத்துவமென்று சொல்லப்படும்.

அந்தச்சாத்வீகமுஞ் சொச்சத்திரவியமானதால் அந்தக்கரண ஞானேந்திரியங்களும் பிரகாச ஸ்வரூபமென்பதிற் சந்தேகமில்லை இப்படிக் கொத்த அந்தக்கரணம் விர்த்திபேதங்களினால் நாலுவிதமாய் மனம் புத்தி சித்தம் அகங்காரங்களென்று சொல்லப்படும்.

இதுவுமன்றியில்.

சகலசாஸ்திரசம்மதரகஸ்யலோலத்தில்.

அந்தக்கரணத்தை சிவம் தன்னுடைய ஆஞ்ஞாசக்கரமாய்க்கொண்டு அம்சை - லட்ச ஜீவனையும் சக்கரத்தைப்போலத் திருப்புவார். அதெப்

படியெனின் கன்மஞ்சககாரியாக் மாயை யுபாதானமாக முப்பத்தாறு தத்துவத்துக்கும் அந்தக்கரணம் நடுவாக இந்தச்சக்கரத்து நாலுபாரிசத்திலும் நாலும் நாலுஜ்வாலையாய் மற்ற தத்துவமெல்லாம் நடுவட்டமாக இந்தச்சக்கரமாகிற அந்தக்கரணத்தாலே சிருஷ்டியாமென் றிருப்பதாலும் அந்தப்பிரகாசம் பஞ்சவன்னங்களையுமடக்கிப் பிரகாசிப்பிக்கையால் பஞ்சவன்னங்களும் ரூபங்களும் அதுஅதுகளுக்குத் தக்கபடி எழுதப்பட்டிருக்கிறது.

இதுவுமன்றியில்,

ஞானவாசிஷ்டம்.—வீதகவ்வியன்கதை.

தொழிலி னினைவிற்பொருளில் விண்ணின் மேல் கீழ் சூழ்திசையிற்புறப்போகத் தொகுதிதம்மி, விழிதருமைப்பொறிநடையிலுள்ளினிற்கு மின்னுயிரிற் சென்னியிலாநநத்தினுவி, லழியும்விழிகளின் மூக்கிற் புருவந்தன்னில கங்கரத்திற் சீவனினுள்ளாகாசத்தில், விழிநனவிற் சொற்பனத்திற் சுழுத்திதன்னில் வெள்ளைமுதனிறமைந்தின் வியன்வண்ணத்தில்.

இதுவுமது.

சலனத்திற் றிரத்திலடி நடுவிலீற்றிற் சமீபத்திற்றூரத்திற் சரீராங்கத்திற், பலபண்டந்தன்னிற் சேதனத்திற் சத்த பரிசாதிகளின் மகிமை பயின்பத்தி, லுலவுவரத்திற் போக்கிற காலப்பண்பி லொருசிறிதும் பற்றுமுணர்விலாறி. நிலவியகாண்பன சிறுதுபயின்றுமெங்கு நிராசையாய்ப் பரசுகத்தினிற்கு நெஞ்சே.

தாயுமானசுவாமிகள்பாடலில்.

தெருளாகிமருளாகி யுழலுமனமாய் மனஞ்சேர்ந்து வளர்சித்தாகியச், சித்தெலாஞ்சூழ்ந்த சிவசித்தாய் விசித்திரமாய்த் திரமாகி நானுவிதப், பொருளாகி யப்பொருளை யறிபொறியுமாகி யைம்புலனுமா யைம்பூதமாய்ப் புறமுமா யகமுமாய்த் தூரஞ்சமீபமாய் போக்கொடு வரத்துமாகி, யிருளாகி யொளியாகி நன்மை தீமையுமாகி யின்றுகிநானையாகி, யென்றுமா யொன்றுமாய்ப் பலவுமா யாவுமா யிவையல்ல வாயநின்னை, யருளாகி நின்றவர்க் களறிவதல்லா லொருவ ரறிவதற் கெளிதாகுமோ, அண்டபகிரண்டமு மடங்கவொரு நிறைவாகி யாநந்தமானபரமே.

என்றிருப்பதாலும்.

எல்லாமா யல்லவுமாயென்றும் சர்வம்பிர்ம்மங் கல்விதம் பிரம்மாவென்றிருப்பதாலும் இந்தவாக்கியமே சமஸ்தலக்ஷணங்களுக்கு மிடங்கொடுக்கிறபடியால் அனுபவஞானிகளாகிய பரிபூரணர்கள் அறியத்தக்கதே யல்லது வேறல்ல, இன்னும் இதைப்பற்றி சுருதிப்பிரமாணம் வெகுவாய்ச்சொல்லக்கூடும். சங்க்ஷேபமாய்ச் சொன்னதென்றறியவும்.

அண்டபிண்டபஞ்சீகரணப்பட்த்தின்பேரில்
பஞ்சீகரணப்படுத்தி ஆடுகிற விவரலக்ஷணத்தைத்
தெளிவுறுத்தல்.

பிரம்மலீலாசங்கற்ப பிரதிபலன மஹாகாரண ரூபாரூபமானதை ஈஸ்வரன் சத்துவகுணப் பிரதானமாயையுடனே கூடிக்கொண்டு தமோ குணப்பிரதானமாயை வீக்ஷித்தபோது.

அந்த தமோகுணப்பிரதான மாயையோடுகூடின சைதன்னியத்தி ஞல் திரிகுணாத்மகமான ஆகாசமும்.

அந்த ஆகாசவிசிஷ்ட சைதன்னியத்திஞல் திரிகுணாத் மகமான வாயுவும்.

அந்த வாயுவின் விசிஷ்டசைதன்னியத்திஞல் திரிகுணாத்மகமான தேயுவும்.

அந்த தேஜோ விசிஷ்டசைதன்னியுத்திஞல் திரிகுணாத்மகமான ஜலமும்.

அந்த ஜல விசிஷ்டசைதன்னியத்திஞல் திரிகுணாத்மகமான பிரு திவியும் உண்டாயிற்று.

இதை அபஞ்சீகிருத பூதங்களென்றும் சூட்சும பூதங்களென்றுஞ் சொல்லப்படும்.

இந்தப்பூதங்களிஞல் சமஷ்டிவியஷ்டியாகிற லிங்கசரீரமுண்டா யிற்று.

இதுவுமன்றியில்.

இராஜத சாத்வீககுணசத்தியை வீக்ஷித்த ஈஸ்வரசைதன்னித்யதில் நின்றும் ஆவரண விட்சேபசத்திகளுண்டாயின.

தாமதகுணத்தி லுண்டான விட்சேபசத்தியின் குணத்திரயத்தில் சாத்வீக ராசதகுணத்தில் அந்தக்கரண முதலான சூக்குமசரீரத்தி னுற் பத்திபோக மிஞ்சின தாமதகுணசத்தியை வீக்ஷித்த ஈஸ்வரசைதன்னிய த்தில் நின்றும் கடினசத்தி ரசசத்தி ரூபசத்தி சலனசத்தி நிரவயசத்தி இந்த ப்பஞ்சசத்திகளுமுண்டாயின. இதுவே ஐம்பூதப்பொறிகளென்றும் இதில் நின்றும் மஹாபூதங்களாகிய பிருதிவி அப்பு தேயுவு வாயுவு ஆகாசம் தாமத குணத்திலுண்டாயிற்று.

ஆகையால்,

அண்டத்துக்கும் பிண்டத்துக்கும் பூதங்கள் சரியொத்திருப்பதால் பஞ்சவன்னத்துடன் பஞ்சாட்சர மைந்தையும் பஞ்சவன்னரூபத்துடன்.

பிண்டலட்சணத்தை எழுதி அதற்கு மஹாபூதங்களை ஒப்புறச்செய்து சாக்கிரக்கருவிகள் சொப்பனக்கருவிகள் சுழுத்திக்கருவிகள் துரியக்கருவி முதலாகிய ஸ்தானங்களைக் குறிப்பித்து வர்ண ரூப கோண கருவிகளுடனெழுதப்பட்டிருக்கிறது.

அதற்கு விவரம்.

மஹாபூதங்களாகிய ஆகாசமுதலைந்துக்கும் அதற்குச் சூட்சுமதனுவான அந்தக்கரண மைந்துக்கும் அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்டவுருவாகிய இடதுபுறங் காதினிடமாகநின்றும் அந்தக்கரண நீலவர்ணவட்ட ரூப முதலாகியதுடன் எழுதப்பட்டிருக்கிறது.

மஹாபூதமான வாயுவுக்கும் அதற்குச் சூட்சும தனுவான பிராண வாயுமுதலைந்துக்கும் அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்டவுருவாகிய இடதுபுறங்கழுத்தில்நின்றும் கறுப்புவர்ண அறுகோண ரூபத்துடன் நீலவர்ணவட்ட சமானன் முதலாகியதுடன் எழுதப்பட்டிருக்கிறது.

மஹாபூதமான தேயுவுக்கும் அதற்குச்சூட்சுமதனுவான சுரோத்திர முதலைந்துக்கும் அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்டவுருவாகிய இடதுபுறமிதயத்தில் நின்றும் சிவப்புவர்ண முக்கோணரூபத்துடன் சுரோத்திர நீலவர்ணவட்ட முதலாகியதுடன் எழுதப்பட்டிருக்கிறது.

மஹாபூதமான அப்புவுக்கும் அதற்குச் சூட்சுமதனுவான சத்தமுதலைந்துக்கும் அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்டவுருவாகிய இடதுபுறம் நாபிஸ்தானத்தினின்றும் வெள்ளைவர்ண பிறைரூபத்துடன் சத்த நீலவர்ணவட்டமுதலாகியதுடன் எழுதப்பட்டிருக்கிறது.

மஹாபூதமான பிருதிவுக்கும் அதற்குச் சூட்சுமதனுவான வாக்கு முதலைந்துக்கும் அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்டவுருவாகிய இடதுபுறம் குதஸ்தானத்தினின்றும் மஞ்சள்வர்ண சவுக்க ரூபத்துடன் வாக்கு நீலவர்ணவட்ட முதலாகியதுடன் எழுதப்பட்டிருக்கிறது.

இதுகளின்பேரில் பஞ்சீகரணம்பண்ணி

ஆடுகிற விவரலக்ஷணம்.

முன்தாமத குணத்திலுண்டான ஐந்துபூதத்தையும் சர்வேஸ்வரன் இரண்டாகப்பகுத்து பகுத்தபாதியில் முதற்பாக அர்த்தபஞ்ச பூதங்களை ஒவ்வொருபூதத்தைநாலுபாகமாக்கில் ஐந்துபூதத்துக்கும் உ0-பாகமாயிற்று. பகுக்கப்படாதிருந்த பூதத்தை இரண்டாம்பாக பூதத்துடன் இந்தப்பாகங்களைச் சேர்ப்பதினால் பஞ்சீகரணமாகாநின்றது.

அதாவது.

பஞ்சவர்ண மஹாபூதங்கள்பேரில் பஞ்சவர்ணலிங்கங்களை ஆடவைத்திருப்பதால் அந்தலிங்கங்களைக்கொண்டு மஹாபூதங்களைப்பஞ்சீகரணம் பண்ணபடியாலும் அந்தந்த மஹாபூதங்களில்நின்றும் ஒன்ருெடொன்று சம்பந்தப் படுத்துவதினலும் இந்தமஹாபூதங்களுக்கும் சூட்சுமதனுவான கருவிகளுக்கும் சம்பந்தம் சரியொத்திருப்பதால் பஞ்சீகரணப்படுத்தினபங்குபடி மேற்சொல்லிய லிங்கங்களினல் இந்த விரண்டிடத்தும் ஆடிக்கூட்டிக்காட்டுகின்ற விவரமாவது.

ஆகாசபாகங்களிலே கூடுகிற லக்ஷணம்.

முதற்பாகிஜம்பூதத்தையும்ஒவ்வொருபூதத்தை நான்குபாகமாக்கின ஆகாசபாகம் நாலில் முதல்பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள்பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிற ஆகாசநீல லிங்கத்தைக்கொண்டு அண்டபிண்டபஞ்சீகரணப்படத்தில் பிண்டவுருவத்தின் மஹாபூதமான மஞ்சள்வர்ணசவுக்கரூபபிருதிவியிற்றள்ளுகையாலும் இடதுபுறக்கருவிகளாகிய காதினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத மஞ்சள்வர்ண சவுக்கரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறியமஞ்சள்வர்ண லிங்கத்தையெடுத்து வலதுபுறக்கருவிகளாகிய சூட்சுமபூத மஞ்சள்வர்ண சவுக்கரூப பிருதிவிபாகத்துடன் சேர்க்கிறதினலே அகங்காரம்பிறந்தது.

ஆகாசபாகமான இரண்டாம் பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள் பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிற ஆகாசநீலலிங்கத்தைக் கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்டஉருவத்தின் மஹாபூதமான வெள்ளை வர்ண பிறைரூப அப்புவிற்றள்ளுகையாலும் இடதுபுறக்கருவிகளாகிய காதினிடமாகவைத்திருக்கிற சூட்சுமபூத வெள்ளை வர்ண பிறைரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறிய வெள்ளை லிங்கத்தையெடுத்து வலதுபுறக்கருவிகளாகிய சூட்சுமபூத வெள்ளைவர்ண பிறைரூப அப்புபாகத்துடன் சேர்க்கிறதினலே சித்தம்பிறந்தது.

ஆகாசபாகமான மூன்ரும்பாகத்தையெடுத்து மஹாபூதங்கள்பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிற ஆகாசநீல லிங்கத்தைக்கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான சிவப்புவர்ணமுக்கோணரூப தேயுவிற்றள்ளுகையாலும் இடதுபுறக்கருவிகளாகிய காதினிடமாகவைத்திருக்கிற சூட்சுமபூத சிவப்பு முக்கோணரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறிய சிவப்பு லிங்கத்தையெடுத்து வலதுபுறக்கருவிகளாகிய சூட்சுமபூதசிவப்புவர்ண முக்கோணரூப தேயுவுபாகத்துடன்சேர்க்கிறதினலே புத்திபிறந்தது.

ஆகாசபாகமான நான்காம் பாகத்தையெடுத்து மஹாபூதங்கள்பேரில் பெரிய லிங்கமாக வைத்திருக்கிற ஆகாச நீல லிங்கத்தைக்கொண்டு

அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்டஉருவத்தின் மஹாபூதமானகறுப்புவர்ண அறுகோணரூப வாயுவிற்றள்ளுகையாலும் இடதுபுறக்கருவிகளாகிய காதினிடமாகவைத்திருக்கிற சூட்சுமபூத சிறியகறுப்புவர்ண அறுகோணரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறியகறுப்புலிங்கத்தையெடுத்து வலப்புறக்கருவிகளாகிய சூட்சுமபூத சிறியகறுப்புவர்ண அறுகோணரூபவாயுவுபாகத்துடன் சேர்க்கிறதினாலே மனம்பிறந்தது.

இனி நான்காகப்பகுக்கப்படாதேநின்றஆகாசத்தினைக்கூறும்அந்தக்கரணசுவரூபமாயிற்று. இடதுபுறக்கருவிகளாகிய காதினிடமாகவைத்திருக்கிற சூட்சுமபூத நீலவர்ன வட்டத்தின்பேரில் வைத்திருக்கிற சூட்சுமபூத சிறியநீலலிங்கத்தை யெடுத்து வலதுபுறக்கருவிகளாகிய சூட்சுமபூத சிறியநீலவர்ண வட்டரூப ஆகாசத்திற் சேர்க்கவும்.

வாயுவுபாகங்களிலே கூட்டுகிற லக்ஷணம்.

வாயுவுபாகம்நாலில் முதல்பாகத்தையெடுத்து மஹாபூதங்கள்பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிறவாயுவு கறுப்புலிங்கத்தைக் கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான மஞ்சள்வர்ண சவுக்கரூப பிருதிவியிற் றள்ளுகையாலும் இடதுபுறக்கருவிகளாகிய கழுத்தினிடமாகவைத்திருக்கிற சூட்சுமபூத சிறியகறுப்பு அறுகோணரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறிய கறுப்பு லிங்கத்தையெடுத்து வலப்புறக்கருவிகளாகிய சூட்சுமபூத சிறியகறுப்புவர்ண அறுகோணரூப வாயுவுபாகத்துடன் சேர்க்கிறதினாலே பிராணனாயிற்று.

வாயுவுபாகம் இரண்டாம் பாகத்தையெடுத்து மஹாபூதங்கள்பேரில் பெரிய லிங்கமாக வைத்திருக்கிற வாயுவு கறுப்பு லிங்கத்தைக் கொண்டு அண்ட பிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான வெள்ளைவர்ண பிறைரூப அப்புவிற்றள்ளுகையாலும் இடதுபுறக் கருவிகளாகிய கழுத்தினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத சிறிய பிறைரூபத்தின் பேரில்வைத்திருக்கிற சிறியவெள்ளைலிங்கத்தையெடுத்து வலதுபுறக் கருவிகளாகியசூட்சுமபூத சிறிய வெள்ளைவர்ண பிறைரூப அப்புபாகத்துடன்சேர்க்கிறதினாலே அபானனாயிற்று.

வாயுவுபாகம் மூன்றாம் பாகத்தையெடுத்து மஹா பூதங்கள்பேரில் பெரியலிங்கத்தை வைத்திருக்கிற வாயுவு கறுப்பு லிங்கத்தைக்கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான சிவப்புவர்ண முக்கோணரூப தேயுவிற்றள்ளுகையாலும் இடதுபுறக் கருவிகளாகிய கழுத்தினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத சிறிய சிவப்பு முக்கோணரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறியசிவப்பு லிங்கத்தையெடுத்து

வலதுப்புறக்கருவிகளாகிய சூட்சுமபூத சிவப்பு வர்ண சிறியமுக்கோணரூப தேயுவுபாகத்துடன் சேர்க்கிறதினாலே உதானனாயிற்று.

வாயுவுபாகம் நாலாம்பாகத்தையெடுத்து மஹாபூதங்கள்பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிறவாயுவு கறுப்பு லிங்கத்தை அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மாஹாபூதமான கறுப்புவர்ண அறுகோண ரூபசுயக்ஷேத்திரத்திற் சேர்க்க நித்தியமானகுணம் இடதுபுறக் கருவிகளாகிய கழுத்தினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத கறுப்பு அறுகோணரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறியகறுப்பு லிங்கத்தையெடுத்து வலதுபுறக் கருவிகளாகிய சூட்சுமபூத கறுப்புவர்ண சிறிய அறுகோணரூப வாயுவு பாகத்துடன் சேர்க்கிறதினாலே வியானனாயிற்று.—இதுவும்நித்திய குணமாம்.

இனி நான்காகப் பகுக்கப்படாதே நின்ற ஆகாசத்தினைக்கூறும் சமானனாயிற்று. இடதுபுறக் கருவிகளாகிய காதினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத சிறியநீலவர்ன வட்டத்தின்பேரில் வைத்திருக்கிற சூட்சுமபூத சிறிய நீலலிங்கத்தையெடுத்து வலதுபுறக் கருவிகளாகிய சிறிய நீலவர்ண வட்டரூப ஆகாசத்திற் சேர்க்கவும்.

தேயுவுபாகங்களிலே கூடுகிறலக்ஷணம்.

தேயுவுபாகம் நாலில் முதல்பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள் பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிற சிவப்பு லிங்கத்தைக் கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான மஞ்சள்வர்ன சவுக்கரூப பிருதிவியிற்றள்ளுகையால் இடது புறக்கருவிகளாகிய மார்பினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத சிறிய மஞ்சள் வர்ன சவுக்கரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறிய மஞ்சள் லிங்கத்தையெடுத்து வலதுபுறக் கருவிகளாகிய சிறிய மஞ்சள்வர்ண சவுக்கரூப பிருதிவி பாகத்துடன் சேர்க்கிறதினாலே ஆக்கிராணமாயிற்று.

தேயுவுபாகமான இரண்டாம் பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள் பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிற சிவப்பு லிங்கத்தைக் கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான வெள்ளைவர்ன பிறைரூப அப்புவிற் றள்ளுகையாலும் இடதுபுறக் கருவிகளாகிய மார்பினிடமாக வைத்திருக்கிறசூட்சுமபூத பிறைரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறியவெள்ளை லிங்கத்தையெடுத்து வலப்புறக்கருவிகளாகிய சூட்சுமபூத சிறிய வெள்ளைவர்ண பிறைரூப அப்புபாகத்துடன் சேர்க்கிறதினாலே ஜிங்குவையாயிற்று.

தேயுவுபாகமான மூன்றாம்பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள்பேரில் வைத்திருக்கிற பெரிய சிவப்புலிங்கத்தைக் கொண்டு அண்டபிண்ட

பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான சிவப்புவர்ண முக்கோணரூப தேயுவிற்றள்ளுகையாலும் இடதுபுறக் கருவிகளாகிய மார்பினிடமாகவைத்திருக்கிற சூட்சுமபூத சிவப்புவர்ண சிறியமுக்கோண ரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறிய சிவப்புலிங்கத்தையெடுத்து வலதுபுறக் கருவிகளாகிய சூட்சுமபூத சிறிய சிவப்புவர்ண முக்கோணரூப தேயுவுபாகத்துடன் சேர்க்கிறதினாலே நேத்திரமாயிற்று.

தேயுவுபாகமான் நான்காம் பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள்பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிற பெரிய சிவப்பு லிங்கத்தைக்கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான கறுப்புவர்ன அறுகோணரூப வாயுவிற்றள்ளுகையாலும் இடதுபுறக் கருவிகளாகிய மார்பினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத சிறியகறுப்புவர்ன அறுகோண ரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறிய கறுப்புலிங்கத்தை யெடுத்து வலப்புறக் கருவிகளாகிய சூட்சுமபூத சிறியகறுப்புவர்ன அறுகோணரூப வாயுவுபாகத்துடன் சேர்க்கிறதினாலே தொக்காயிற்று.

இனி நான்காகப்பகுக்கப்படாதே நின்ற தேயுவினைக்கூறும் இடதுபுறக்கருவிகளாகியகாதினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத சிறிய நீலலிங்கத்தை யெடுத்து வலதுபுறக்கருவிளாகிய சிறியநீலவர்ணவட்டரூப ஆகாசத்திற்சேர்க்கிறதினாலே சுரோத்திரேந்திரியமாயிற்று.

அப்புபாகங்களிற் கூடுகிறலக்ஷணம்.

அப்புபாகம் நாலில் முதற் பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள் பேரில் பெரிய லிங்கமாக வைத்திருக்கிற பெரிய வெள்ளை லிங்கத்தைக் கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான மஞ்சள்வர்ன சவுக்கரூப பிருதிவியிற் றள்ளுகையால் இடதுபுறக் கருவிகளாகிய இடுப்பினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத சிறிய மஞ்சள் வர்ன சவுக்கரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறியமஞ்சள் லிங்கத்தையெடுத்து வலதுபுறக்கருவிகளாகிய சூட்சுமபூத சிறியமஞ்சள்வர்ன பிருதிவியிற் சேர்க்கிறதினாலே கந்தமாயிற்று.

அப்புபாகம் இரண்டாம் பாகத்தையெடுத்து மஹா பூதங்கள்பேரில் பெரிய லிங்கமாக வைக்கிருக்கிற பெரிய வெள்ளைலிங்கத்தைக் கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான வெள்ளைவர்ன பிறைரூப சொக்ஷேத்திரத்திற்சேர்க்க நித்தியமான குணம் ரசம். இடதுபுறக்கருவிகளாகியஇடுப்பினிடமாக வைத்திருக்கிறசூட்சுமபூத சிறிய வெள்ளைவர்ண பிறைரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறியலிங்கத்தையெடுத்து வலதுபுறக் கருவிகளாகிய சூட்சுமபூத சிறியவெள்ளைவர்ன பிறைரூப அப்புபாகத்திற் சேர்க்கிறதினால் ரசமாயிற்று.

அப்புபாகம் மூன்ரும் பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள் பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிற பெரியவெள்ளை லிங்கத்தைக் கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப் படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான சிவப்பு முக்கோணரூப தேயுவிற்றள்ளுகையால் இடதுபுறக் கருவிகளாகிய இடுப்பினிடமாகவைத்திருக்கிற சூட்சுமபூத சிறியசிவப்பு வர்ன முக்கோண ரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறிய சிவப்பு லிங்கத்தையெடுத்து வலது புறக் கருவிகளாகிய சூட்சுமபூத சிறிய சிவப்புவர்ண முக்கோணரூப அப்பு தேயுவுபாகத்திற் சேர்க்கிறதினுல் ரூபமாயிற்று.

அப்புபாகம் நான்காம் பாகத்தையெடுத்து மஹாபூதங்கள்பேரில் பெரியலிங்கமாக வைத்திருக்கிற பெரிய வெள்ளை லிங்கத்தைக்கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப் படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான கறுப்பு அறுகோணரூப வாயுவிற்றள்ளுகையால் இடதுபுறக் கருவிகளாகிய இடுப்பினிடமாக வைத்திருக்கிற சூட்சுமபூத சிறிய கறுப்பு அறுகோணத் தின்பேரில் வைத்திருக்கிற சிறிய கறுப்புலிங்கத்தை யெடுத்து வலதுபுறக் கருவிகளாகிய சூட்சுமபூத சிறிய கறுப்புவர்ண அறுகோணரூபத்தில் அப்பு வாயுவுபாகத்திற் சேர்க்கிறதினுலே பரிசமாயிற்று.

இனி நான்காகப் பகுக்கப்படாதே நின்ற அப்புவின்ரைக் கூறும் இடதுபுறக்கருவிகளாகிய காதினிடமாக வைத்திருக்கிற் சூட்சுமபூத சிறிய நீலவட்டத்தின்பேரில் வைத்திருக்கிற சிறிய நீல லிங்கத்தை யெடுத்து வல துபுறக்கருவிகளாகிய சிறிய நீலவட்ட ஆகாசத்தில் அப்புபாகம் சேர்க்கிறதி னுல் சத்தமாயிற்று.

பிருதிவிபாகங்களிற் கூடுகிறலக்ஷணம்.

பிருதிவி பாகம் நாலில் முதற்பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள் பேரில் பெரிய லிங்கமாக வைத்திருக்கிற சவுக்கரூப மஞ்சள்வர்ண பிருதி விபாகத்திற் சேர்க்கிறதினுல் பிருதிவிக்கு நித்தியமானகுணம். உபஸ்தம் சுயக்ஷேத்திரத்திலிருத்தவும் இடதுபுறக் கருவிகளாகிய குதத்தினிடமாக் வைத்திருக்கிற சூட்சுமபூத சவுக்கரூப மஞ்சள் வர்னத்தின்பேரில் வைத்தி ருக்கிற சிறிய மஞ்சள் லிங்கத்தையெடுத்து வலதுபுறக்கருவிகளாகிய சிறிய மஞ்சள் வர்ண சவுக்கரூப பிருதிவிக்கு தனு நித்தியமானகுணம் உபஸ்தத் திற்சேர்க்கவும்.

பிருதிவிபாகம் நாலில் இரண்டாம் பாகத்தை யெடுத்து மஹாபூத ங்களாகிய சவுக்கரூப மஞ்சள்வர்ன பிருதிவி பூதத்தின்பேரில் வைத்திருக் கிற மஞ்சள்வர்ன லிங்கத்தைக்கொண்டு அண்ட பிண்ட பஞ்சீகரணப்படத் தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான பிறைரூப அப்புவிற் றள்ளுகிறதி னுலே குதஸ்தானமான இடதுபுறக் கருவிகளாகிய சூட்சுமபூத சிறியவெ

ள்ளைவர்ண பிறை ரூபத்தின்பேரில் வைத்திருக்கிற சிறிய வெள்ளை லிங்கத்தையெடுத்து வலதுபுறக் கருவிகளாகிய சூட்சுமபூத சிறிய பிறைரூப பிருதிவிபாகம் அப்புவிற்சேர்க்கிறதினால் பாயுராயிற்று.

பிருதிவிபாகம் நாலில் மூன்றும்பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள் பேரில் வைத்திருக்கிற சவுக்கரூப மஞ்சள்வர்ன லிங்கத்தைக் கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான சிவப்புவர்ண முக்கோணரூப தேயுவிற்றள்ளுகையினால் குதஸ்தானமான இடதுபுறக் கருவிகளாகிய சூட்சுமபூத சிறிய சிவப்பு முக்கோணரூபத்தின் பேரில் வைத்திருக்கிற சிறிய சிவப்பு லிங்கத்தையெடுத்து வலதுபுறக்கருவிகளாகிய சூட்சுமபூத சிறிய சிவப்புவர்ண முக்கோணத்தை பிருதிவிபாகத்தில் தேயுவுசேர்க்கிறதினாற் பாணியாயிற்று.

பிருதிவிபாகம் நாலில் நான்காம்பாகத்தை யெடுத்து மஹாபூதங்கள் பேரில் வைத்திருக்கிற சவுக்கரூப மஞ்சள்வர்னத்தை கொண்டு அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின் மஹாபூதமான கறுப்புவர்ன அறுகோணரூப வாயுவு பூதத்திற்றள்ளுகையால் குதஸ்தானமான இடதுபுறக் கருவிகளாகிய சூட்சுமபூத சிறிய கறுப்பு அறுகோணரூபத்தின் பேரில் வைத்திருக்கிற சிறிய கறுப்பு லிங்கத்தையெடுத்து வலதுபுறக்கருவிகளாகிய சூட்சுமபூத சிறிய அறுகோணரூபத்தில் பிருதிவிபாகம் வாயுவிற்சேர்க்கிறதினால் பாதமாயிற்று.

இனி நான்காகப் பகுக்கப்படாதே நின்ற பிருதுவியினைக் கூறும் குதஸ்தானமான இடதுபுறக் கருவிகளாகிய சூட்சும பூத சிறிய நீலவர்ன வட்டரூபத்தின்பேரில் வைத்திருக்கிற நீலலிங்கத்தையெடுத்து வலதுபுறக் கருவிகளாகிய சூட்சும பூத சிறிய நீலவர்ன வட்டரூப பிருதிவிபாகம் ஆகாசத்திற்சேர்கிறதினால் வாக்காயிற்று.

அண்டபிண்ட பஞ்சீகரணப்படத்தில் பிண்ட உருவத்தின்பேரில் சாக்கிர சொப்பன சுழுத்தி துரிய கருவிகளின்பேரில் வைத்திருக்கிற சிவலிங்கங்களுக்கு விவரலக்ஷண மூனாத்தல்.

சாக்கிராவஸ்தையில் ஜீவன் விவகரிக்கும்போது ஞானேந்திரிய பஞ்சக, கன்மேந்திரிய பஞ்சக, அந்தக்கரண சதுஷ்டயமாகிய இந்த பதினாலிந்திரியங்களுடன் விவகரிக்கிறான்.

சொப்பனத்துக்கு வரும்போது சாக்கிரத்தில் பத்துகருவி நிற்க மற்ற நாலு கருவியும் சொப்பனத்துக்கு வருகிறது.

சொப்பனத்தில் இரண்டு கருவி நிற்க சுழுத்திக்கிரண்டு கருவிவருகிறது.

சுழுத்தியிலொரு கருவிநிற்க துரியத்துக்கொரு கருவிவருகிறது.

துரியாதீதத்திற் கொன்றுமில்லை யென்றறிக. அந்தந்தஸ் தானங்களில்சிவ்லிங்கங்களை வைத்து விவகரித்துக் கொள்ளவும்.

அல்லது.

அந்தந்த அடையாளப்படி பஞ்சவர்ன லிங்கங்களைச் செய்தும் ஆடிக்கொள்ளலாம் அல்லது, சொக்கட்டான் காய்களைக் கொண்டும் ஆடிக் கொள்ளலாம்.

அண்டத்திலும், பிண்டத்திலும், சூரியசந்திரா ளிருக்கிறபடி இந்தப் படத்திலும் குறிப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

அண்ட பிண்ட பஞ்சீகரணத் தெளிவு

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

பிரம்மசந்நிதானத்திலுண்டான

அத்தியாரோப லக்ஷணத்தை

சற்றுவிவரித்துச்சொல்லல்.

சகலசாஸ்திரசம்மத ரகஸ்ஹியலோலத்தில்

நின்றும் எடுத்தெழுதியது.

அத்தியாரோபயுக்தியாவதேதெனின்.

அகண்டபரிபூரண சச்சிதாநந்த சொரூபவியாபகத்தில் ஜெக-ஜீவ பரந்தோன்றிய தெப்படியெனின்.

சுத்தப்பிரம்மமாகிய சர்வசாட்சியினிடத்து ரச்சுவினிடத்திற் சற்பமும் ஸ்தாணுவிற்சோரனும் கானலினிடத்தில் ஜலமும் சுத்தியினிடத்தில் ரஜிதமும் ஆகாயத்தினிடத்திற் கறுப்பும் எப்படி ஆரோபித்ததோ அப்படி போல மூலப்பிரகிருதி யென்றொரு சத்தி விவர்த்தமாகச் சேஷ்டித்தது.

ஆனால்மூலப்பிரகிருதியில் உண்டாகியதென்னையெனின்

பிரம்மசந்நிதான விசேஷத்தால் - சத்துவரஜசு தமசென்னும் அவிகிர்த திரிகுணங்களுண்டாயின.

அக்குணங்களுக்குநாமமேதெனின்.

சத்துவகுணத்துக்கு மாயை யென்றும், ரஜோகுணத்துக்கு அவித்தை யென்றும், தமோகுணத்துக்கு பிரகிருதி யென்றும்.

இன்னும் இதற்கே.

சத்துவ குணத்துக்கு சுத்ததத்துவ மென்றும், ரஜோ குணத்துக்கு அசுத்த தத்துவமென்றும், தமோ குணத்துக்கு மலினத்துவ மென்றும் சொல்லப்படும்.

ஆனால் அக்குணங்களின் நிறமியாதெனின்

சத்துவகுணமாயைவெளுப்பு நிறமும்மிசிரமுமாம், ரஜோகுண அவித்தை சிவப்பு நிறமும், தமோ குணப்பிரகிருதி கறுப்பு நிறமுமாயிருக்கும், ஆயினும் இந்தமூன்று நிறமும் ஒன்றாகக்கூட்டினால் கறுப்பு நிறமாத்திரந் தோன்றும் மற்றநிறம் அதில் மிசிரமாயிருக்கும் இந்தமூன்று குணமுஞ்சேர்ந்து கறுப்பு நிறத்தையே காட்டுகையால் மாயைக்கு கறுப்பு நிறங்குறிப்பித்திருக்கிறது.

சத்துவகுணமாயையி லுண்டாகிய தென்னையெனின்.

சத்துவகுண மாயையில் நிர்மலமான கண்ணாடியில் சூரியன்பிரதிபலித்ததுபோல பிரம்மசைதன்னியம் சலட்சணமாகப் பிரதிபலிக்கும் அதில் பிரதிபிம்பிதமான சைதன்னியத்துக்கு ஈஷ்வரனென்றுபெயர்.

மும்மூர்த்திகளுண்டான தெப்படியெனின்.

அந்தச்சத்துவ குணமாயையி னிடத்திலே சத்துவத்திற் சத்துவம் சத்துவத்தில் ரஜசு சத்துவத்தில் தமசு என்றுமூன்றுகுணங்களுண்டு.

இதில் சத்துவத்திற் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரனுக்கு சகத்தை ரட்சிக்கையினாலே விஷ்ணு வென்று பெயராம்.

சத்துவத்தில் ரஜசு பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரனுக்குச் சகத்தை சிருஷ்டிக்கையினாலே பிரம்மனென்று பெயராம்.

சத்துவத்தில் தமசுபிரதான மாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரனுக்கு சகத்தை சங்காரம் பண்ணுகையினாலே ருத்திரனென்று பெயராம்.

இந்த ஈஸ்வராதிகளுஞ் சத்துவகுண மாயையே காரணசரீரமென்று சொல்லப்படும்.

அம்மாயையாகிய காரணசரீரத்தை அபிமானிக்கும் ஈஸ்வரனுக்கு அபிமானநாமம் ஈஸ்வரன் அந்தர்யாமி அவ்வியாக் கிருதனென்று மூன்று நாமதேயங்களுண்டு.

ஆனல்மும்மூர்த்திகளின் குணங்கள்யாதெனின்.

சர்வஞ்ஞத்துவம் சர்வசுவாதீனத்துவம் சாத்வீகத்துவம் நிர்மலத்துவம் சாட்சித்துவம் ஜகத்கர்த்தத்துவம் அகர்த்தத்துவம் அன்னியதா கர்த்தத்துவம் மாயாவசியத்துவம் முதலான குணங்களுண்டென்று சொல்லப்படும் இதுவே சத்துவகுணமாயையி லுண்டாகிய கற்பனையாம்.

இராஜதகுண அவித்தையிலுண்டாகிய தென்னேயெனின்.

இராஜதகுண அவித்தையினிடத்து மலினசலத்திற் பிரதிபலித்த சூரியன்போல பிரம்மசைதன்னியம் பிரதிபலிக்கும் அந்தப்பிரதிபலனத்திக்கு ஜீவனென்றுபெயர்.

ஆனல்மூவகை ஆத்மாக்களுண்டான தெப்படியெனின்.

இராஜதகுண அவித்தையில் ரஜசில் சத்துவம் ரஜசில் ரஜசு ரஜசில் தமசு என்று மூன்று குணங்களுண்டு.

இதில் ரஜசில் சத்துவம் பிர்தானமாகும்போது அதிற்பிரதிபிம்பித்த சிதாபாசர் ஞானநிஷ்டா பரர்களென்றும்.

ரஜசில் ரஜசு பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசர் கர்மானுஷ்டான பரர்களென்றும்.

ரஜசில் தமசு பிரதானமாகும்போது அதிற்பிரதிபிம்பித்த சிதாபாசர் சோம்பல் நித்திரை மயக்கமுடைய வர்களென்று சொல்லப்படும்.

இந்த ஜீவர்களுக்கு இராஜதகுண அவித்தையே காரணசரீரமென்றும் ஆநந்தமயகோசமென்றும்சொல்லப்படும்.

அவித்தையாகிய காரணசரீரத்தை அபிமானிக்கும் ஜீவனுக்கு அபிமானநாமம் பிராக்ஞியன் பாரமார்த்திகன் அவிச்சின்னனென்றும் மூன்றுநாமதேயங்களுண்டு.

ஆனல்ஜீவர்களின் குணமேதெனின்.

அவித்தையின் வசமானதினல் கிஞ்சிக்ஞிய னென்றும், சாத்வீகமில்லாததினலே அவிவேகியென்றும், ஆபாசர்களானபடியால் அனேகரென்றும், காரியவுபாதிகரென்றும், கர்த்தா வென்றும், போக்தா வென்றும், சுகியென்றும், துக்கி யென்றும், நான் எனதென்னும் மோகத்தையடைகின்றதே அவர்களது குணங்களென்று சொல்லப்படும்.

அவர்களடையும் பலன்யாதெனில்.

ஞானநிஷ்டாபரர்கள் மோக்ஷத்தை அடைவார்கள்.

கர்மானுஷ்டான பரர்கள் இகபரங்களில் போக்குவரத்தா யிருப்பார்களு.

சோம்பல் நித்திரைமயக்க முடையவர்கள் இகலோகத்திலிருந்து துக்கத்தையடைவார்கள்.

இதுவேஇராஜதகுணஅவித்தையின்கற்பனையாம்

தாமதகுணப் பிரகிருதியி லுண்டாகிய தென்னையெனின்.

சத்துவகுணமாயையில் பிரதிபிம்பித்த சர்வக்கியரான ஈஸ்வரன் கிருபை கூர்ந்து இராஜதகுண அவித்தையாப் பிரதிபிம்பரான ஜீவர்களுக்குத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்து முத்தியடைவிக்கும் படிக்கு திதமோகுணப்பிரகிருதியை இரண்டுபங்காக்கி முதற்பங்கில் ஆவரணசத்தியையும் இரண்டாம்பங்கில் விட்சேபசத்தியையு முண்டாக்கினர்.

ஆனல்ஆவரணசத்தியின் காரியமேதெனில்.

ஆவரணசத்தியானது ஈஸ்வராதிகளையும் ஞானநிஷ்டாபரர்களையும் தவிர மற்ற ஜீவர்களுக்கெல்லாம் சரீரத்திரயம் ஜீவசாட்சி சைதன்னியமாகிய அதுகளின் பேதந்தெரியவொட்டாமல் மறைத்துநிற்கும் இவ்வாவரணம் நீங்குவதே முத்தி.

விட்சேபசத்தியிலுண்டாகிய தென்னையெனின்.

விட்சேபசத்தியினிடத்தில்ச த்ததன்மாத்திரையான ஆகாசந்தோன்றிற்று- ஆகாசத்தில் பரிசதன்மாத்திரையான வாய்வுதோன்றிற்று- வாயுவில் ரூபதன் மாத்திரையான அக்கினிதோன்றிற்று- அக்கினியில் ரசதன்மாத்திரையான அப்புதோன்றிற்று- அப்புவில் கந்ததன் மாத்திரையான பிருதிவி தோன்றிற்று- அந்தச் சூட்சும பஞ்ச பூதத்திற்குக் காரணமாக விருக்கிற விட்சேபசத்தியினிடத்திலே தமசிற் சத்துவம், தமசிற் ரஜசு, தமசில் தமசு, என்னு முக்குணங்களும் அடங்கியிருக்கிற படியினலே அதன்காரியமான அந்தப்பஞ்சபூதங்களும் அம்முக்குணங்களுடனே தோன்றின அந்தப்பஞ்ச பூதங்களுக்குத் தன்மாத்திரைக ளென்றும் அபஞ்சீகிருத பூதங்களென்றும் சூட்சுமபூதங்களென்றும் பெயர்.

இந்தச் சூட்சும பூதத்தினலுண்டாகிய தென்னயெனின் சூட்சுமசரீரங்களும் ஸ்தூலசரீரங்களு முண்டாயின.

சூட்சுமசரீரமுண்டாயின விபரமெப்படியெனின்..

இந்த ஆகாசமுதலான சூட்சும பூதங்களில் முக்குணங்களுந்தொடர்ந்து நிற்கின்றபடியால்.

அதில் சத்ததன்மாத்திரையான சாத்வீகாம்ச சமஷ்டியில் கூடினது ஞானம்- சத்ததன்மாத்திரை ரஜோம்சசமஷ்டியில் கூடினது சமானவாய்வு- சத்ததன்மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியில் கூடினது சுரோத்திரேந்திரியம்- சத்ததன்மாத்திரை ரஜோம்ச வியஷ்டியில் கூடினது வாக்கிந்திரியம்.

பரிசதன் மாத்திரை சாத்வீகாம்ச சமஷ்டியில் கூடினது மனது- பரிசதன்மாத்திரை ரஜோம் சசமஷ்டியில் கூடினது வியானவாய்வு- பரிசதன் மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியில் கூடினது தொக்கிந்திரியம்- பரிசதன்மாத்திரை ரஜோம்ச வியஷ்டியில் கூடினது பாணீந்திரியம்.

ரூபதன்மாத்திரைசாத்வீகாம்ச சமஷ்டியில் கூடினது புத்தி-ரூபதன் மாத்திரை ரஜோம்ச சமஷ்டியில் கூடினது உதானவாய்வு- ரூபதன்மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியில் கூடினது நேத்திரேந்திரியம்- ரூபதன் மாத்திரை ரஜோம்ச வியஷ்டியில் கூடினது பாதேந்திரியம்.

ரசதன்மாத்திரை சாத்வீகாம்ச சமஷ்டியில் கூடினது சித்தம்-ரசதன்மாத்திரைரஜோம்ச சமஷ்டியில் கூடினது அபானவாயுவு- ரசதன்மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியில் கூடினது சிங்குவேந்திரியம்-ரசதன் மாத்திரை ரஜோம்ச வியஷ்டியில் கூடினது குய்யேந்திரியம்.

கந்ததன்மாத்திரை சாத்வீகாம்ச சமஷ்டியில்கூடினது அகங்காரம்- கந்ததன்மாத்திரை ரஜோம்ச சமஷ்டியில் கூடினது பிராணவாய்வு - கந்ததன்மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியில் கூடினது கிராணேந்திரியம்-கந்ததன்மாத்திரை ரஜோம்ச வியஷ்டியில் கூடினது குதேந்திரியம்.

இந்தச் சாத்வீகாம்ச சமஷ்டியினலுண்டான அந்தக்கரணமைந்தும் வியஷ்டியினலுண்டான ஞானேந்திரியங்களைந்தும் ஆகப்பத்தும் ஞானசாதானமாகையால் அறிகருவிகளாம்.

அந்தக்கரணத்தில் ஆகாசங்கூடினதற் கடையாளமேதெனின்.

அந்தக்கரணம் ஆகாசம்போல் சகலசத்தத்திற்கு மிடங்கொடுத்துத்தரிப்பதே அடையாளம் அப்படிதரிக்கின்ற விருத்திக்குத் தேஜசான அறிவென்றுபெயர்.

(வாயுவினமிசங் கூடினதற் கடையாளமேதெனின்)

வாயுவைப்போல அலைகின்றதே அடையாளம்.

இப்படி அலைகின்ற விருத்திக்கு மனமென்றுபெயர்.

(தேயுவினமிசங் கூடினதற் கடையாளமேதெனின்)

தேயுவைப்போல விடயங்களை இன்னதின்னதென்று விளக்கிவைக்கின்றதே யடையாளம் இப்படி விளக்கிவைக்கின்ற விருத்திக்கு புத்தியென்றுபெயர்.

(அப்புவினமிசங் கூடினதற் கடையாளமேதெனில்)

அப்புவைப்போல சகலவிஷயங்களிலும் பற்றிநிற்கிறதே யடையாளம் இப்படிபற்றிநிற்கும் விர்த்திக்கு சித்தமென்றுபெயர்.

பிருதிவினமிசங் கூடினதற் கடையாளமேதெனில்.

பிருதிவியைப்போல சகலவிஷயங்களிலுங் கடினமாயபிமானித்திருப்பதே அடையாளம் "இப்படி அபிமானித்திருக்கும்," விர்த்திக்கு, அகங்காரமென்றுபெயர்.

ஞானேந்திரியங்களின் குணமேதெனில்.

சுரோத்திரம் ஆகாசத்தினம்சமாகையால் ஆகாசத்தின்குணமான சத்தமாத்திரமறியும்.

தொக்கு வாயுவினம்சமாகையால் வாயுவின்குணமான பரிசமாத்திரமறியும்

சட்சு தேயுவினம்சமாகையால் தேயுவின்குணமானரூபமாத்திரமறியும்

சிங்குவை அப்புவினம்சமாகையால் அப்புவின்குணமான ரசமாத்திரமறியும்

கிராணம் பிருதிவினம்சமாகையால் பிருதிவியின்குணமான கந்தமாத்திரமறியும்.

இதுநிற்க இராஜதகுண சமஷ்டியினாலுண்டான வாயுக்களைந்தும் வியஷ்டியினாலுண்டான கன்மேந்திரியங்களைந்தும் ஆகப்பத்தும் கிரியாசாதனமாகையால் தொழிற்கருவிகளாம்.

பிராணாதிபஞ்சவாய்வுக்களின்குணமேதென்னில்.

சமானவாய்வு ஆகாசத்தினம் சமாகையால் ஆகாசம்போற் சரீரநடுவான "நாபிஸ்தானத்தினின்று" அன்னபானாதிகளைச் சகலநாடிகளிலு நிரப்பிநிற்கும்.

வியானவாய்வு வாய்வினம்சமாகையால் வாயுவைப்போற் சரீரமுழுதும் வியாபித்திருக்கும்.

உதானவாய்வு அக்கினியி னம்சமாகையால் அக்கினியைப்போல் கண்டஸ் தானத்திலிருந்து சடராக்கினியாகச் சொலித்து அன்னபானாதிகளை உள்ளே செலுத்திக்கொண்டிருக்கும்.

அபானவாய்வு அப்புவினம்சமாகையால் அப்புவைப்போல குதஸ்தானத்தினின்று மலஜலங்களை நீக்கிக்கொண்டிருக்கும்.

பிராணவாய்வு பிருதிவியி னம்சமாகையால் பிருதிவியைப்போலஇருதயஸ்தானத்திலிருந்து உஸ்வாசம் நிஸ்வாசஞ்செய்துக்கொண்டிருக்கும்.

இந்தப்பஞ்சவாய்வுக்களல்லாமல்வேறுவாய்வுகளுண்டோவெனில்.

வாந்திபண்ணுகிறது நாகனென்றும், இமைத்துவிழிக்கின்றது கூர்மனென்றும், தும்முகிறது கிரிகரனென்றும், கொட்டாவிக்கொள்ளுகிறது தேவதத்தனென்றும், வீங்குகிறது தனஞ்செயனென்றும், சொல்லப்படுகிற ஐந்துவாய்வுக்களுண்டென்று சிலர்சொல்லுவார்கள்.

இவ்வைந்தும் பிராணவாயுவின் றொழிலேயன்றி வேறல்ல.

கன்மேந்திரியங்களின் குணமேதெனில்

வாக்கு ஆகாசத்தினம்சமாகையால் ஆகாசத்தினிடமாய்நின்று வசனிக்கும்.

பாணி வாயுவினம்சமாகையால் வாயுவினிடமாகநின்று ஏற்றலிடுதல் செய்யும்

பாதமஅக்கினியினம்சமாகையால்அக்கினியினிடமாய்நின்றுநடக்கும்

குய்யம்அப்புவினம்சமாகையால்அப்புவினிடமாய்நின்றுஆநந்திக்கும்

குதம் பிருதிவினம்சமாகையால் பிருதிவினிடமாய்நின்று மலவிசர்க்கம்பண்ணும்

இந்த இருபதுதத்துவமும் சூட்சுமசரீரமென்று சொல்லப்படும்.

இந்தச் சூட்சுமசரீரம் பிராணமயகோசம் மனோமயகோசம் விஞ்ஞானமயகோசமென மூன்றுகோசங்களாம்.

பிராணமயகோசமாவதேதெனில்.

பிராணபஞ்சகமும் கன்மேந்திரிய பஞ்சகமுங்கூடினது பிராணமயகோசம்.

மனோமய கோசமாவதேதெனில்.

மனதும் ஞானேந்திரிய பஞ்சகமுங்கூடினது மனோமயகோசம்.

விஞ்ஞானமய கோசமாவதேதெனில்.

புத்தியும் ஞானேந்திரியபஞ்சகமுங்கூடினது விஞ்ஞானமயகோசம்

இந்தக்கோசத் திரயமான சூட்சுமசரீரத்தை மாயாப்பிரதிபிம்பனு கிய ஈஸ்வரன் அவித்தியாப்பிரதிபிம்பராகிய ஜீவர்கள் அனேகராகையால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருசரீரமாக சிருஷ்டித்துஅளித்தார். இதில் சமஷ்டிசூட்சும சரீரத்தையபிமானிக்கும் ஈஸ்வரனுக்குஅபிமானநாமங்கள், இரண்யகர்ப்பன், சூத்திராத்மா, மஹாப்பிராணனென்று மூன்றுண்டு.

இதில் வியஷ்டிசூட்சுமசரீரத்தை அபிமானிக்கும் ஜீவனுக்கு அபிமானநாமங்கள், தைஜசன் பிராதிபாதிகன், சொப்பனகற்பிதன், என்றுமூன்றுண்டு.

இந்தசூட்சும சரீரத்திற்குத்தானே சுவர்க்க நரக நரகானுபவமும் பரலோககமனமும் அங்கே கர்மபலானுபவத்துவாரா புனர்ஜனனமும் உண்டென்று சுருதிகளில் சொல்லப்படுகின்றது இதுவே சூட்சுமசரீரகற்பனையாம்.

இப்படியே பஞ்சபூதங்களின் சத்துவாம்சமும் இராஜதாம்சமும்கழிந்து மிஞ்சிநின்ற தாமதாம்சத்திலுள்ள ஐந்துபூதத்தையும் ஒன்றிரண்டாய்ப் பகுத்து முதற்பாதியைந்தையும் ஒன்றை நான்காக்கி இரண்டாம்பாதியைத்தான் தன்னம்சத்துடன்கூட்டாமல் மற்றநான்குபூதத்துடனும் பூதத்திற்கரைக்கால் அரைக்கால் மாத்திரையாகக் கொடுப்பதேஸ்தூல்பஞ்சீகரணம்.

ஆனல் பஞ்சபூதங்களுக்கு தசவிதகுணங்க ளுண்டென்று சுருதிகளில் சொல்லப்படுகின்றதே அதின்விவரம் எப்படியெனில்.

பிருதிவியின்விவரம்.

நாமம் பிருதுவி, ரூபம் சதுஷ்கோணம், வர்ணம் சுவர்ணம், சொபாவம் கடினம், குணம் கந்தம், கிரியை சிருஷ்டி, முகம் சத்தியோசாதம், தேவதை பிரம்மா சத்தி சரஸ்வதி, அக்ஷரம் அகாரம்.

அப்புவின் விவரம்.

நாமம் அப்பு, ரூபம் அர்த்தசந்திராகாரம், வர்ணம் சுவேதம், சொபாவம் சீதளம், குணம் மாதுரியம், கிரியை பாலனம், முகம் வாமதேவம், தேவதை விஷ்ணு, சத்தி இலட்சுமி, அக்ஷரம் உகாரம்.

தேயுவின்விவரம்.

நாமம் அக்கினி, ரூபம் திரிகோணம், வர்ணம் சுரோணிதம், சொபாவம் உஷ்டணம், குணம் தேஜசு, கிரியை சம்ஹாரம், முகம் அகோரம், தேவதை ருத்திரன், சத்தி சுவாஹா, அக்ஷரம் மகாரம்.

வாயுவின் விவரம்.

நாமம் வாய்வு, ரூபம் ஷட்கோணம், வர்ணம் தூம்ரவர்ணம், சொபாவம் சலனம், குணம் ஸ்பரிசம், கிரியை திரோதானம், முகம் தத்புருஷம், தேவதை மயேஸ்வரன், சத்தி பார்வதி, அக்ஷரம் நாதம்.

ஆகாசத்தின் விவரம்.

நாமம் ஆகாசம், ரூபம் வட்டம், வர்ணம் நீலவர்ணம், சொபாவம் வெளி, குணம் ஸப்தம், கிரியை அநுக்கிரகம், முகம் ஈசான்னியம், தேவதை சதாசிவம். சத்தி பராசத்தி, அக்ஷரம் பீந்து.

இதுவே, பஞ்சபூதங்களின் தசவித குணங்களென்று, சுருதிகளில், சொல்லப்பட்டது.

பஞ்சபூதங்களின் தாமதாம்சத்திலுள்ள ஐந்துபூதத்தையும் ஒன்றொன்றிரண்டாகப்பிரித்தது யாதுக்கெனில்.

ஜீவகோடிகளினுடைய நன்மைக்காகவேயென்க.

அதின்விவரம் எப்படியென்னில்.

ஆகாசத்தினுடைய அர்த்தாம்சம் பூதப்பிசாசங்களுக்கு, அர்த்தாம்சம் ஏனைய ஜீவகோடிகளுக்கு.

வாயுவினுடைய அர்த்தாம்சம் பட்சிஜாதிகளுக்கு, அர்த்தாம்சம் ஏனைய ஜீவகோடிகளுக்கு.

அக்கினியினுடைய அர்த்தாம்சம் தேவதைகளுக்கு, அர்த்தாம்சம் ஏனைய ஜீவகோடிகளுக்கு.

அப்புவினுடைய அர்த்தாம்சம் சகலஜெந்துக்களுக்கு, அர்த்தாம்சம் ஏனைய ஜீவகோடிகளுக்கு.

பிருதிவினுடைய அர்த்தாம்சம் ஸ்திரீ ஜாதிகளுக்கு, அர்த்தாம்சம் ஏனைய ஜீவகோடிகளுக்கு.

இப்படி அவரவர்களுக்குத் தக்கப்படி அநுபவிக்கச் செய்ததே அதனால்வந்த நன்மை யென்று சொல்லப்படும்.

அரைபாகம் அரைக்கால்பாகமாக பஞ்சீகரணஞ் செய்துஇதரபூதங்களில் கலக்கச் செய்ததில் பிரயோஜன மேதெனில்.

ஆகாசத்திலே ஸ்பரிச ரூப ரச கந்தமாகிய நான்குகுணமும் வியாப்பியமானபடியினாலே அதிரிசியமாய் நிற்க நிஜகுணமாகிய சத்தந் திரிசியமாய்த் தோன்றிநிற்கும்.

வாயுவிலே ரூப ரச கந்தமாகிய மூன்றுகுணமும் வியாப்பியமான படியினாலே அதிரிசியமாய் நிற்க காரணகுணமாகிய சத்தமும் நிஜகுணமாகிய ஸ்பரிசமும் திரிசியமாய்த் தோன்றி நிற்கும்.

அக்கினியிலே ரச கந்தமாகிய இரண்டு குணமும் வியாப்பியமான படியினாலே அதிரிசியமாய் நிற்க காரணகுணங்களாகிய ஸப்த ஸ்பரிசமும் நிஜகுணமாகிய ரூபமும் திரிசிமாய்த் தோன்றிநிற்கும்.

அப்புவிலே கந்தகுணம் வியாப்பியமான படியினாலே அதிரிசியமாய்நிற்க காரணகுணங்களாகிய ஸப்த ஸ்பரிச ரூபமும் நிஜகுணமாகிய ரசமும் திரிசியமாய்த் தோன்றிநிற்கும்.

பிருதிவியிலே காரண குணங்களாகிய ஸப்த ஸ்பரிச ரூப ரசமும் நிஜகுணமாகிய கந்தமும் திரிசியமாகத் தோன்றிநிற்கும், இதுவே அதின் பிரயோசனமென்று சொல்லப்படும்.

சூட்சும பூதத்திலிருந்து சூட்சுமசரீரந் தோன்றினதுபோல பஞ்சீகரித்த ஸ்தூலபூதத்தினின்றும் ஸ்தூலசரீரங்கள் தோன்றின.

ஆனால்ஸ்தூலமுண்டான முறைமை எப்படியெனில்.

பிருதிவியில் தன்னம்சம்பாதி அஸ்தி, பிருதிவியில் அப்பு அரைக்கால்பங்கு கூடினது மாம்ஸம், பிருதிவியில் அக்கினி அரைக்கால் பங்கு கூடினது சர்மம், பிருதிவியில் வாயு அரைக்கால்பங்கு கூடினது நரம்பு, பிருதிவியில் ஆகாசம் அரைக்கால்பங்கு கூடினது ரோமம்.

அப்புதன்னம்சம்பாதி மூத்திரம், அப்புவில் பிருதிவி அரைக்கால் பங்கு கூடினது வாய்நீர், அப்புவில் அக்கினி அரைக்கால்பங்கு கூடினது வியர்வை, அப்புவில் வாயுவு அரைக்கால்பங்கு கூடினது இரத்தம், அப்புவில் ஆகாசம் அரைக்கால்பங்கு கூடினது சுக்கிலம்.

தேய்வு தன்னம்சம்பாதி பசி, தேயுவில் பிருதிவி அரைக்கால்பங்கு கூடினது நித்திரை, தேயுவில் அப்பு அரைக்கால்பங்கு கூடினது தாகம், தேயுவில் வாய்வு அரைக்கால்பங்கு கூடினது மைதுனம், தேயுவில் ஆகாசம் அரைக்கால்பங்கு கூடினது சோம்பல்.

வாய்வு தன்னம்சம்பாதி ஓடல், வாயுவில் பிருதிவி அரைக்கால் பங்கு கூடினது படுத்தல், வாயுவில் அப்பு அரைக்கால்பங்கு கூடினது நடத்தல், வாயுவில் அக்கினி அரைக்கால்பங்கு கூடினது உட்காருதல், வாயுவில் ஆகாசம் அரைக்கால்பங்கு கூடினது தாண்டல்.

ஆகாசம் தன்னம்சம்பாதி மோஹம், ஆகாசத்தில் பிருதிவி அரைக்கால்பங்கு கூடினது இராகம், ஆகாசத்தில் அப்பு அரைக்கால்பங்கு கூடினது துவேஷம், ஆகாசத்தில் அக்கினி அரைக்கால்பங்கு கூடினது பயம், ஆகாசத்தில் வாய்வு அரைக்கால்பங்கு கூடினது வெட்கம்.

இந்தஸ்தூலபூதங்களிலுண்டாகிய தென்னையெனில்.

ஸ்தூலபூதங்களினால் அண்டமும், அந்த அண்டத்தில் கீழேழுலகமும் மேலேழுலகமும், அந்தந்த லோகங்களுக்கு உசிதமான நால்வகை யோனி எழுவகைப் பிறவிகளாயுள்ள ஸ்தூலசரீரங்களு முண்டாயின.

நால்வகை யோனியாவதேதெனின்.

அண்டஜம் உற்பீஜம் ஸ்வேதசம் சராயுஜம் இவைகளாம்.

ஏழுவகைப்பிறவிகளாவதே தெனின்.

தேவர் மக்கள் புள் விலங்கு நிலத்திலூர்வன ஜலத்தில்வாழ்வனஸ்தாவரம் இவை எண்பத்து நான்குலட்சம் பேதங்களாயிருக்கும் இத்தனையுங் கூடிஸ்தூலப் பிரபஞ்ச மென்னப்படும்.

இதில் முன்சொன்ன இருபத்தைந்து தத்துவமாகிய ஸ்தூலசரீரத்தை மாயாப்பிரதிபிம்பனாகிய ஈஸ்வரன் அவித்தையாப் பிரதிபிம்பராகிய ஜீவர்கள் அனேகராகையால் ஒவ்வொரு வருக்குஞ் செனனந்தோறும் ஒவ்வொருசரீரத்தை சிருஷ்டித்துக் கொடுத்தருளுவார்.

இதில் சமஷ்டிஸ் தூலசரீரத்தை அபிமானித்த ஈஸ்வர னுக்கு அபிமானநாமம் விஸ்வன் விவகாரிகன் சிதாபாசனென்னு மூன்றுநாமதேயமுண்டு. இந்தஸ்தூலசரீரத்துக்குத்தானே மூன்று பிரளயமுண்டு.

அதெப்படியெனின்.

நித்திரையானது தினப்பிரளயம், மூர்ச்சையானது அவாந்திரப்பிரளயம், சரீரநாசம் மஹாப்பிரளயம், இப்படிக்குமூன்றுபிரளயமுண்டு. இந்தஸ்தூலசரீரத்துக்கு அடிக்கடி உற்பத்தியும் நாசமும் உண்டு.

சூட்சும காரணதேகம் இருக்கிற வரையில் வட்பீஜந்யாயம் இது வேஸ்தூல சரீரகற்பனையாம்.

இப்படிக்கு அகண்டபரிபூரண சச்சிதாநந்த ஸ்வரூப வியாபகத்தில் ஜெக ஜீவபரம் உண்டான முறைமையென்று அத்தியாரோப யுக்தியால் சொல்லப்பட்டது.

இனி அபவாதயுக்தி யாவதேதெனின்.

இது சர்ப்பமல்ல ரச்சுவே, இது சோரனல்ல ஸ்தாணுவே, இதுஜலமல்ல கானலே, இதுரஜிதமல்ல கிளிஞ்சலே, இதுகறுப்புநிறமல்ல ஆகாயமே என்றறிவிப்பது போலும் ஒருவிருட்சத்தில் இலை பூப் பிஞ்சு காய் பழம் பட்டை நார் வேர்கிளைகொம்பு ரூசிகளாகிய இதுகள் பேதமானாலும் காரணமாகிய வித்து ஒன்றே யென்றறிவிப்பது போலும்.

இது ஜெக ஜீவ பரமல்ல சச்சிதாநந்த ஸ்வரூபமே யென்றறிவிப்பது அப்வாத யுக்தியென்று ஸ்ருதிகளிற் சொல்லப்படுகின்றது.

ஆனால்ஸ்தூல சரீர லயமெப்படியெனின்.

அஸ்தி, மாம்சம், சர்மம், நரம்பு, ரோமம், இந்த ஐந்தும் பிருதிவினம்சமாகையால் பிருதிவில் லயம்.

வாய் நீர், மூத்திரம், வெயர்வை, இரத்தம், சுக்கிலம், இந்த ஐந்தும் அப்புவினம்சமாகையால் அப்புவில் லயம்.

நித்திரை, தாகம், பசி, சோம்பல், மைதுனம், இந்த ஐந்தும் அக்கினியினம்சமாகையால் அக்கினியில் லயம்.

படுத்தல், நடத்தல், உட்காருதல், ஓடல், தாண்டல், இந்த ஐந்தும் வாயுவினம்சமாகையால் வாயுவில் லயம்.

இராகம், துவேஷம், பயம், வெட்கம், மோஹம், இந்த ஐந்தும் ஆகாயத்தினம்சமாகையால் ஆகாயத்தில் லயம்.

இவ்விதமாகஸ்தூலதேக தத்துவம் இருபத்தைந்தும் ஸ்தூலபஞ்ச பூதங்களில் லயமென்று சொல்லப்படும்.

ஸ்தூலபஞ்ச பூதங்களின் லயமெப்படியெனின்.

பிருதிவு, அப்பு, தேய்வு, வாய்வு, ஆகாசம், இந்த ஐந்தும் பஞ்ச தன்மாத்திரைகளின் தமோகுணத்தில் லயம்.

இவ்விதமாக ஸ்தூலதேகம் லயமானவுடன் இதைக் குறித்துவந்த நால்வகையோனி எழுவகைத் தோற்றமாயுள்ள ஸ்தூலங்களும் அன்னமய கோசமும் அபிமான நாமங்களும் லயப்படும்.

ஆனால்சூட்சுமசரீர லயமெப்படியெனின்.

சத்ததன்மாத்திரை ரஜோம்ச வியஷ்டியினா லுண்டான வாக்கிந்திரியம் சத்ததன்மாத்திரை யோடு கூடினால் லயம்.

பரிசதன்மாத்திரை ரஜோம்ச வியஷ்டியினாலுண்டான பாணீந்திரியம் பரிசதன்மாத்திரையோடு கூடினால் லயம்.

ரூபதன்மாத்திரை ரஜோம்ச வியஷ்டியினாலுண்டான பாதேந்திரியம் ரூபதன்மாத்திரையோடு கூடினால் லயம்.

இரசதன்மாத்திரை ரஜோம்ச வியஷ்டியினாலுண்டான குய்யேந்திரியம் இரசதன்மாத்திரையோடு கூடினால் லயம்.

கந்ததன்மாத்திரை ரஜோம்ச வியஷ்டியினாலுண்டானகுதேந்திரியம் கந்ததன்மாத்திரையோடு கூடினால் லயம்.

சத்ததன்மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியினாலுண்டான சுரோத்திரேந்திரியம் சத்ததன்மாத்திரையோடு கூடினால் லயம்.

பரிசதன்மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியினாலுண்டானதொக்கிந்திரியம் பரிசதன்மாத்திரையோடு கூடினால் லயம்.

ரூபதன்மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியினாலுண்டான நேத்திரேந்திரியம் ரூபதன்மாத்திரையோடு கூடினால் லயம்.

இரசதன்மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியினாலுண்டான சிங்குவேந்திரியம் இரசதன்மாத்திரையோடு கூடினால் லயம்.

கந்ததன்மாத்திரை சாத்வீகாம்ச வியஷ்டியினாலுண்டான கிராணேந்திரியம் கந்ததன்மாத்திரையோடு கூடினால் லயம்.

சத்ததன்மாத்திரை ரஜோம்ச சமஷ்டியினாலுண்டான சமானவாய்வு சத்ததன்மாத்திரையோடு கூடினால் லயம்.

பரிசதன்மாத்திரை ரஜோம்ச சமஷ்டியினாலுண்டான வியானவாய்வு பரிசதன்மாத்திரையோடு கூடினால் லயம்.

ரூபதன்மாத்திரை ரஜோம்ச சமஷ்டியினாலுண்டான உதானவாய்வு ரூபதன்மாத்திரையோடு கூடினால் லயம்.

இரசதன்மாத்திரை ரஜோம்ச சமஷ்டியினாலுண்டான அபானவாய்வு இரசதன்மாத்திரையோடு கூடினால் லயம்.

கந்ததன்மாத்திரை ரஜோம்ச சமஷ்டியினாலுண்டான பிராணவாய்வு கந்ததன்மாத்திரையோடு கூடினால் லயம்.

சத்ததன்மாத்திரை சாத்வீகாம்ச சமஷ்டியினுலுண்டான ஞானம் சத்ததன்மாத்திரையோடு கூடினுல் லயம்.

பரிசதன்மாத்திரை சாத்வீகாம்ச சமஷ்டியினுலுண்டான மனம் பரிசதன்மாத்திரையோடு கூடினுல் லயம்.

ரூபதன்மாத்திரை சாத்வீகாம்ச சமஷ்டியினுலுண்டான புத்தி ரூபதன் மாத்திரையோடு கூடினுல் லயம்.

இரசதன்மாத்திரை சாத்வீகாம்ச சமஷ்டியினுலுண்டான சித்தம் இரசதன்மாத்திரையோடு கூடினுல் லயம்.

கந்ததன்மாத்திரை சாத்வீகாம்ச சமஷ்டியினுலுண்டான அகங்காரம் கந்ததன்மாத்திரையோடு கூடினுல் லயம்.

இப்படி வாக்காதி கன்மேந்திரியங்களைந்தும் சுரோத்திராதி ஞானேந்திரியங்களைந்தும் பிராணுதி வாயுக்களைந்தும் ஞானமுதலான அந்தக்கரணங்களைந்தும் ஆகிய சூட்சும சரீரதத்துவமிருபதுந் தனக்குக் காரணமான பஞ்சதன் மாத்திரைகளில் சத்வ ரஜசில் லயமாகுமென்று சொல்லப்படும்.

பஞ்சதன் மாத்திரைகளில் லயமெப்படி யெனின்.

(பிருதிவு தனக்குக் காரணமான கந்ததன் மாத்திரையோடு கூடி) அப்புவில் லயம்- அப்பு தனக்குக் காரணமான ரசதன்மாத்திரையோடு கூடி தேயுவில் லயம்- தேய்வு தனக்குக் காரணமான ரூபதன் மாத்திரையோடு கூடி வாயுவில் லயம்- வாய்வு தனக்குக் காரணமான பரிசதன் மாத்திரையோடுகூடி ஆகாசத்தில்லயம்- ஆகாசம் தனக்குக்காரணமான சத்ததன் மாத்திரையோடுகூடி விட்சேப சத்தியில் லயம்- விட்சேப சத்தியும் ஆவரண சத்தியும் தனக்குக் காரணமான தமோகுண பிரகிருதியில் லயப்படும்.

ஆனுல் ஜீவனுடைய காரண சரீர லயமெப்படியெனின்.

சற்குரு கடாக்ஷத்தினுல் மஹாவாக்கியார்த்தங்களில் சொல்லியிருக்கிற நிச்சயப்படிக்கு தான் பரிபூரண சொரூபனென்றும் தனது சொரூப வியாபகத்தில் சகலபுவன சராசரப் பிரபஞ்சங்களும் ஆரோபிதமாகக் காணப்படுகின்றதென்று மிருக்கிற அநுபவ திடப்பிரக்ஞையினுல் காரணதேகமும் லயமாம்.

இப்படிக்கு இராஜதகுண அவித்தையென்னுஞ் சீவர்களது காரண சரீரம் லயமானவுடனே இதிற் பிரதிபிம்பித்த மூவகை ஆன்மாக்களும் அபிமானிகளும் லயம். இப்படியே சத்துவகுண மாயையில் பிரதி பிம்பித்து

திரிமூர்த்திகளும் அபிமானிகளும் தனக்குக் காரணமான சத்துவகுண மாயையில் லமம்.

சத்துவ ரஜசு தமசென்னுந் திரிகுணங்களும் மூலப்பிரகிருதியில் லயப்படும். மூலப்பிரகிருதியும் தனக்கதிஷ்டானமான அகண்டபரிபூரண சச்சிதாநந்த ஸ்வரூபத்தில் லயமாம்.

சச்சிதாநந்த ஸ்வரூபமும் தனக்கன்னியமின்றி சுவயமாய் விளங்குகின்றதென்று வேதசுருதி சொல்லுகின்றது.

பிரம்மாண்ட புவன சரீரகடாதி பிரபஞ்சோதய சிருஷ்டிக்கிரம அத்தியாரோப அபவாத விளக்கப்படத்துக்கு ஞானப்பிரகாச தீபிகை.

முற்றிற்று.

உ

சிவமயம்.

சாமவேத மஹாவாக்கிய தத்தொமசி வாக்கியத்திற்குத் தத்துவவிளக்கக் கட்டளை.

நீலகண்டசுவாமிகள்

விசுவாமித்திர வசிட்டாதி

இவர்களுக்கு

அனுக்கிரகம்பண்ணின

தத்துவஞானம்.

தத்தொமசிவாக்கியம்,

குருசாம்பிரதாயம்

அந்த தத்தொம சிவாக்கியத்துக்கு

விபரம்

இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்கிற நாலு வேதமும் இரண்டு பிரகாரமாயிருக்கும்

அதெப்படி யெனின்

அற்பசுருதி வாக்கியமென்றும்,

பிரபல சுருதிவாக்கியமென்றும்

சொல்லப்படும்.

அற்பசுருதிவாக்கியங் கருமகாண்டத்தைச் சொல்லும்

பிரபல சுருதிவாக்கியம் அத்தியாற்றுமத்தைச் சொல்லும்.

அது முப்பத்திரண்டு உபநிடதமா யிருக்கும்,
அதில் நாலு வாக்கியங்களைப் பிரதி பாதிக்கும்,
அந்த வாக்கியத்தில் சீவபரவயிக்கியத்தைச்சொல்லும்,

அந்த நாலு வாக்கியத்திலுந் தத்தொமசி வாக்கியமே முக்கியமென் றுசொல்லும்,

அதேதென்றால்

தொம்பதம், தற்பதம், அசிபதம், என மூன்று

இதில்

{ தொம்பதம், / சீவன் லக்ஷணம், }

அத்தொம்பதத்துக் கவஸ்தை நாலு.

அதாவது

சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம்,

சாக்கிராவஸ்தைக்குள் மூன்றுதேகங் காண்பிக்கவேண்டும்,

அதெப்படியென்றால்,

அனுபோகத்தினாற் காண்பிக்கும்.

சாக்கிராவஸ்தை.

சாக்கிரம்..........................தூலதேகம்

இந்த

சாக்கிராவஸ்தைக்குள் தூலதேகமுண்டு அதற்கு விபரம்
பிருதிவு, அப்பு, தேயுவு, வாயுவு, ஆகாசம், ஆகரு-ந்தும்
இதுவே சாக்கிராவஸ்தைக்குள் தூலதேக மாயிற்று.

இது ஒவ்வொன்றுக்கு ஐந்து கூறுண்டு,

அதெப்படி யெனின்.

பிருதிவின்கூறு உரோமம், நரம்பு, சர்மம், மாமிசம், அஸ்தி, ஆக ரு,
அப்புவின்கூறு சுக்கிலம், ரக்தம், வேர்வை, உமிநீர், மூத்திரம், ஆக ரு,
அக்கினியின் கூறு ஸ்ரீசங்கம், ஆலஸ்சியம், தாகம், நித்திரை, பசி, ஆக ரு,
வாயுவின் கூறு தாண்டல், உட்காருதல், நடத்தல், படுத்தல், ஓடல் ஆக ரு,
ஆகாசத்தின்கூறு த்வேஷம், பயம், ருஜை, மோகம், ராகம், ஆக ரு,

ஆக உய-கூடி தூலதேகத்தில் தூலதேகமாயிற்று.

இந்த தூலதேகத்தில் சூக்ஷமதேகமேதெனின் பஞ்சீகரணமென்று சொல்லும். இந்ததூலதேகத்தில் சூக்ஷமதேகத்துக்குப் பஞ்சபூதமுண்டோ வென்றாலுண்டு.

அதெப்படியெனின்

காரணரூபமாயிருக்கும்,

அதற்கு விபரம்.

ஆகாசத்தில் வாய்வு வுண்டே அதுவே வாயுவாயிற்று.
ஆகாசத்தி லக்கினி யுண்டே அதுவே அக்கினியாயிற்று.
ஆகாசத்தில் மழையுண்டே அதுவே அப்புவாயிற்று.
ஆகாசத்தில் கடினமுண்டே அதுவே பிருதிவியாயிற்று.
ஆகாசமிருக்கிறதே ஆகாசமாயிற்று.

ஆக ரு-கூடி இதுவேதூலதேகத்தில்சூக்ஷமதேகம்காரணபஞ்சபூதமாயிற்று.

இதுகளொவ்வொன்றுக்கு ஐந்துகுண முண்டு.

அதெப்படி யெனின்,

ஆகாசத்தின் குணம் அந்தக்கரணம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆக ரு.

வாயுவின் குணம் சமானன், வியானன், உதானன், அபானன், பிராணன், ஆக ரு.

அக்கினியின் குணம் சிரோத்திரம், தொக்கு, சக்ஷு, சிங்குவை ஆக்கிராணம், ஆக ரு.

அப்புவின்குணம் சத்த, பரிச, ரூப, ரச, கெந்தம், ஆக ரு.
பிருதிவின் குணம் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம், ஆக ரு.

ஆக உரு-கூடி தூல தேகத்தில் சூக்ஷமதேகம் காரணபஞ்சபூதம்.

இதுகளொன்றோடொன்று கூடுகிறவகை பஞ்சீகரணகதம்ப மென்றுசொல்லப்படும்

அதெப்படியெனின்

ஆகாசத்துக்குத்தனு நித்தியமானகுணம்......அந்தக்கரணம்.
வாயுவுக்குத்தனு நித்தியமானகுணம்......வியானன்.
அக்கினிக்குத்தனு நித்தியமானகுணம்......நேத்திரம்.
அப்புவுக்குத்தனு நித்தியமானகுணம்......இரசம்.
பிருதிவிக்குத்தனு நித்தியமானகுணம்......உபஸ்தம்.

அதின் நித்தியமானகுணத்தை நிறுத்திக்கொண்டு மற்ற நாலு பூதத்திலுங் கூடும்வகை.

{ ஆகாசத்தின்குணம் கூடுகிறவகை. }

ஆகாசம் பிருதிவியிற்கூடினால்......அகங்காரமாயிற்று.
ஆகாசம் அப்புவிற்கூடினால்......சித்தமாயிற்று.
ஆகாசம் அக்கினியிற் கூடினால்......புத்தியாயிற்று.
ஆகாசம் வாயுவிற் கூடினால்......மனதாயிற்று.
ஆகாசத்துக்குத்தனு நித்தியமானகுணம்...அந்தக்கரணமாயிற்று.

{ வாயுவின்குணம் கூடுகிறவகை. }

வாயுவு......பிருதிவிற் கூடினால்......பிராணனாயிற்று.
வாயுவு......அப்புவிற்கூடினால்......அபானனாயிற்று.
வாயுவு......அக்கினியிற்கூடினால்......உதானனாயிற்று.
வாயுவுக்குத்தனு நித்தியமானகுணம்......வியானனாயிற்று.
வாயுவு......ஆகாசத்திற் கூடினால்......சமானனாயிற்று.

{ அக்கினியின்குணம் கூடுகிறவகை. }

அக்கினி......பிருதிவிற் கூடினால்......ஆகிராணமாயிற்று.
அக்கினி......அப்புவிற் கூடினால்......சிங்குவையாயிற்று.
அக்கினிக்குத்தனு நித்தியமானகுணம்......நேத்திரமாயிற்று.
அக்கினி......வாயுவிற் கூடினால்......தொக்காயிற்று.
அக்கினி......ஆகாசத்திற் கூடினால்......சுரோத்திரமாயிற்று.

{ அப்புவின்குணம் கூடுகிறவகை. }

அப்பு......பிருதிவிற் கூடினால்......கெந்தமாயிற்று.
அப்புவுக்குத்தனு நித்தியமானகுணம்......இரசமாயிற்று.
அப்பு......அக்கினியிற் கூடினால்......ரூபமாயிற்று.
அப்பு......வாயுவிற் கூடினால்...... பரிசமாயிற்று.
அப்பு......ஆகாசத்திற் கூடினால்......சப்தமாயிற்று.

{ பிருதிவின்குணம் கூடுகிற வகை. }

பிருதிவுக்குத்தனு நித்தியமானகுணம்......உபஸ்தமாயிற்று.
பிருதிவு......அப்புவிற் கூடினால்......பாயுருவாயிற்று.
பிருதிவு......அக்கினியிற் கூடினால்......பாணியாயிற்று.
பிருதிவு......வாயுவிற் கூடினால்......பாதமாயிற்று.
பிருதிவு......ஆகாசத்திற் கூடினால்......வாக்காயிற்று.

இதுவே சாக்கிராவஸ்தைக்குள் தூலதேகத்தில் சூக்ஷமதேகமாயிற்று.

தூலதேகத்தில் காரணதேகமேதெனின்.

பிருதிவும் அப்புங்கூடி தூலதேகத்தில் காரணதேகமாயிற்று.

அதெப்படியெனின்.

மண்ணும் தண்ணீருங் கூடினபடியினாலே சுவராயிற்று.

அதற்கு மண்ணேது தண்ணீரேதெனின்.

எலும்பு தசைமுதலான கடினமெல்லாம் மண்ணும் ரத்த மூத்திரமுதலானதெல்லாந் தண்ணீர் இரண்டுங்கூடி தேகமாயிற்று.

தேகமுண்டானபோதே கருவி கரணங்களுண்டாயிருக்கின்றது,
இதுவே தூலதேகத்தில்......காரணதேகமாயிற்று.

இப்படி,

தூலதேகத்தில்......தூலதேகமும்,
தூலதேகத்தில்......சூக்ஷமதேகமும்,
தூலதேகத்தில்......காரணதேகமும்,

இந்த மூன்று தேகமுங்கூடி ஒருதூல தேகமாயிற்று.

இதற்கவஸ்தை......சாக்கிராவஸ்தை,
இதற்கபிமானி......விசுவன்.

விஸ்வனென்கிறபேரேதெனின்.

இந்தப் பிரபஞ்சத்தில் செய்கிற காரியமெல்லா மறிவன். இனிமேல் செய்யவேணுமென்கிற காரியமு மறிவன். ஆகையினால் விஸ்வனென்கிற பேருண்டாயிற்று.

இதற்குக் குணம்......இராசதகுணம்,
இதற்குச் சத்தி......கிரியாசத்தி,
இதற்கு ஸ்தானம்......நேத்திர ஸ்தானம்,

அதேதெனின்,

சகலமும் பார்த்துச் செய்வன்.

இதற்குப் போகம்......யுக்தபோகம்.

அதேதென்றால்,

நல்லதை யனுபவிப்பன் பொல்லாததை விட்டுவிடுவன்.
அதெப்படியெனின் லோகத்தபிமானத்தினா லறிந்து போசிப்பன்

இதற்கட்சரம்......அகாரம்.

அகாரமென்கிற அட்சரத்தினு ,வித்தினையும் நின்று வர்த்தித்தபடி யினுல்சீவாத்மாவென்கிற பேருண்டாயிற்று.

இதுவெல்லாங்கூடி தூலதேகத்தில் மூன்றுதேகமும்

சாக்கிராவஸ்தையும் முகிந்தது

முற்றும்.

சொப்பனுவஸ்தை.

சொப்பனம்..............சூக்ஷமதேகம்,

சொப்பனத்தில்.........சூட்சுமதேகமேதெனில்,

முன்சொன்ன தூலதேகத்திலிருந்து யனுபவித்த வாசனையைப் பிடித்துக்கொண்டு புத்தியென்கிறது தலையிலேறி பார்த்த பார்வைபோலேயிருந்தது- அதெப்படி யென்றுலதற்கொருதிருட்டாந்தஞ்சொல்லுகிறேம். ஒரு புருடன் படுத்திருந்து பார்த்தபார்வையை இரண்டாவது பிரண்டுபார்த்தாப்போலே சூட்சும சரீரத்தைப் பார்க்கிருன்.

அந்தசூட்சுமதேகத்துக்கு விவரம்.

அஷ்டபுரிலிங்க தேகமென்றுபேர்

அதெப்படியெனின்

சுரோத்திராதி ஞானேந்திரிய மைந்துங்கூடி.........க,
அதின்விடயமானசப்தாதி யைந்துங்கூடி..........க,
வாக்குமுதலான கன்மேந்திரிய மைந்துங்கூடி........க,
பிராணுதி ஐந்துங்கூடி...............................க,
அந்தக்கரணுதி ஐந்துங்கூடி...........................க,
காமம்...... ......க,
கருமம்...... ......க,
அவித்தை...... ......க,

ஆக இந்த எட்டுங்கூடி அஷ்டக உடலமாயிற்று. இதுவே சூட்சும தேகத்தில் தூலதேகமாயிற்று.

தூலதேக முண்டானபோதே பஞ்சபூதமுண்டு.

அதெப்படியென்றுல்,

வாக்குமுதலான கன்மேந்திரிய மைந்தும் பிருதிவியாயிற்று,
சப்தாதிவிடய மைந்தும் அப்புவாயிற்று,
சுரோத்திராதிஞானேந்திரியமைந்தும் அக்கினியாயிற்று,

பிராணாதி வாயுவு மைந்தும் வாயுவாயிற்று,
அந்தக்கரணாதி ஐந்தும் ஆகாசமாயிற்று,

இதுவே பஞ்சபூதம்.

சூட்சுமதேகத்தில் சூட்சுமதேக மேதென்றால் அது பதினேழு தத்துவமாயிருக்கும்.

அதெப்படியெனின்,

பிராணாதிவாயுவு ஐந்தும்,
மனம் புத்தி இரண்டும்,
ஞானேந்திரியம் ஐந்தும்,
கன்மேந்திரியம் ஐந்தும், } ஆக கஎ.

இதில் மனம் புத்தி இரண்டுகாரியம் பண்ணித்திரியும். இதுவேசூட்சுமதேகத்தில் சூட்சுமதேகமாயிற்று,

சூட்சுமதேகத்தில் காரணதேக மேதென்றால்,

அக்கினி வாயுவு இரணடுங்கூடி சூட்சுமதேகத்தில் காரணதேக மாயிற்று.

அதெப்படி யெனின்,

அக்கினியாதாரத்தினால் புத்தியும்,
வாயுவினாதாரத்தினால் மனசும்

இந்த இரண்டினாலே வர்த்திக்குது.

இதுவே சூட்சுமதேகத்தில் காரணதேகமாயிற்று,

இப்படி

சூட்சுமதேகத்தில் தூலதேகமும்,
சூட்சுமதேகத்தில் சூட்சுமதேகமும்,
சூட்சுமதேகத்தில் காரணதேகமும்,

இந்த மூன்றுதேகமுங்கூடி ஒரு சூட்சுமதேகமாயிற்று.

இதற்கவஸ்தை சொப்பனாவஸ்தை,

இதற்கபிமானி தைசதன்,

தைசதனென்கிற பேரேதெனின்

அதே ஈஸ்வரஸ்வரூபமாய் சகல தேசங்களும் சொப்பனத்தினால் திரிவன்,

இதற்குக் குணம் சாத்வீககுணம்,
இதற்குச்சத்தி இச்சாசத்தி,

இதற்கு ஸ்தானம்	கண்டஸ்தானம்,
இதற்குப் போகம்	பரிசுத்தபோகம்,
அதேதெனில்	பேதமில்லாமற் கொள்வன்,
இதற்கட்சரம்	உகாரம்,

உகாரமென்கிற அட்சரத்தி லித்தனையும் நின்று வர்த்தித்தபடியினுல் அந்த ராத்மாவென்கிற பேருண்டாயிற்று.

இதுவே சூட்சுமதேகத்தில் மூன்றுதேகமுஞ்சொப்பனுவஸ்தையுமுகிந்தது முற்றும்.

சுழூப்திய வஸ்தை.

சுழுப்தி..............காரணதேகம்

சுழுத்தியிற் காரணதேகஞ் சொல்லுகிறேனென்று குருநாதன் சீடனைப்பார்த்து முன்சொன்ன தூலதேகமும் சூட்சுமதேகமும் நீ அறிந்தாயோவென்னில் தேவரீர் கிருபையினுலே அறிந்தேனென்ருன். நீ ஆனென்று குருநாதன் சீடனைக்கேட்டார், சீடன் நன்ருய் விசாரித்துப்பார்த்து நானறியேனென்ருன். நானறியேனென்று சொன்னதே ஆணவமலம். அந்த ஆணவமலமே "காரணதேகமாச்சுது" அதுவே ஆணவமல தெரிசனமென்று அனுக்கிரகம்பண்ணி நீ அறியேனென்று சொன்னது அறிந்து சொன்னுயோ யறியாமற் சொன்னுயோ வென்று குருநாதன் சீடனைக்கேட்டார். அப்போது சீடன் நன்ருய்விசாரித்துப்பார்த்து அறிந்தும் அறியேனென்று சொன்னேனென்ருன். நீ அறிந்துசொன்னவனே ஞானசொரூபம். அறியேனென்றுசொன்ன ஆணவமலமே காரணதேகமாயிற்று.

அந்தக்காரணதேகத்துக்குப் பஞ்சபூத முண்டோ வென்ருலுண்டு.

"அதெப்படியென்ருல்"

நீ சுழுப்திய வஸ்தையில் ஒன்றுமறியாமற் கிடக்கையில் வாயுவுண்டோ வில்லையோ வென்று குருநாதன் சீடனைக்கேட்டார். வாயுவ உண்டென்ருன் அதுவே வாயுவாச்சுது அந்த வாயும் வெளியு மில்லாமல் நடவாது வாயுவு நடந்தபோதே வெளியுண்டு. அந்த வெளியே ஆகாசமாயிற்று. நீ அசனம் பண்ணினது அக்கினியுந் தண்ணீருங் கூடி அன்னஞ் செரிக்கவேணும். அன்னஞ் செரித்தபோதே அதுவே அக்கினியும் அப்புமாச்சுது. நீசுழுப்தியில் ஒன்றுமறியாமற் பூமிபோல்கிடந்ததே பிருதிவியாயிற்று. ஆக-ரு-பஞ்சபூதமுண்டானபோதே-உரு-குணங்களும்அதிலடங்கியிருக்கும்.

இதுவே காரணதேகத்தில் தூலதேகமாயிற்று,

"காரணதேகத்தில் சூட்சுமதேக மேதென்றால்"

ஆகாசமும் அந்தக்கரணமு மிரண்டுங்கூடி காரணதேகத்தில் சூட்சுமதேகமாச்சுது,

காரணதேகத்தில்......காரணதேகமேதெனின்,

சுழுப்தியில் சகலமான இந்திரியங்களும் பிரளயமான இடத்தில் அந்த காரணமானயாணவமலமே காரணதேகத்தில் காரணதேகமாயிற்று.

இப்படி

காரணதேகத்தில்..................தூலதேகமும்,
காரணதேகத்தில்..................சூட்சுமதேகமும்,
காரணதேகத்தில்..................காரணதேகமும்,

இந்த மூன்றுதேகமுங் கூடி ஒரு காரணதேகமாயிற்று.

இதற்கவஸ்தை..............சுழுப்தியவஸ்தை,
இதற்கபிமானி..............பிராக்ஞன்,

பிராக்கியனென்கிற பேரோதெனில். முன்சொன்ன சாக்கிரமுஞ் சொற்பனமுமறிவன். தான்சுழுப்தியிலிருக்கிறதுமறிவன். இனிவருகிற துரியமுந் துரியாதீதமு மறிய சாமர்த்திய முண்டென்று குருநாதன் சொன்னார். குருநாதனேசீடன் ஒரு சந்தேகங் கேழ்க்கிறான். அதாவது, அடியேன் சாக்கிரமுஞ் சொப்பனமுஞ் சுழுப்தியுமறிந்தே னினிவருகிற துரியமுந் துரியாதீதமுந் தேவரீர் கிருபையினாலே அறியசாமர்த்திய முண்டிங்கே சுழுப்தியி லெப்படி யிருந்ததென்று குருநாதனை சீடன்கேட்டானதற்கு குருநாதன் இருட்டுவீட்டிலிருந்தாப்போ லிருந்தாயென்றுதிருவுளம்பற்றினா ரதற்குச் சீடன் இருட்டுவீட்டி லிருக்கிறேனென்று சொல்லாமல் சந்தேகமாக நின்றானதைக்கண்டு குருநாதன் ஒரு திருட்டாந்த மனுக்கிரகம் பண்ணுகிறார்.

அதெப்படியென்றால்,

ஒருபுருடன் கையிலிருந்து சருவங்கிணத்தில்விழுந்துவிட்டது. அதை ஒருபுருடன், எடுக்கிறேனென்று? தண்ணீரில் மூழ்கையில், அந்தச்சருவம் யகப்பட்டது. அந்தச்சருவமுடையவன் மேலேயிருந்து என்சருவம் அகப்பட்டுதாவென்று கேட்டான். அகப்பட்டிருந்தும் தண்ணீரில் மூழ்கியிருந்தபடியினாலே பேசப்போகாது அதனாலென்ன அறிவுண்டாயிருக்கும் சுழுப்தியிலிருந்து முழித்தெழுந்திருந்தவுடனேகனவுஒன்றுங்காணாமல் சுகமாநித்திரை போனேனென்றுசொல்வன். அதனால் சுழுப்தியில்கிடக்கையில் ஞானமுண்டு, ஆகையினால்பிராக்கியனென்கிறபேருண்டாயிற்று. அதேனென்றால் சுழுப்தியிலொன்றுங்காணாத படியினாலே தாம்தகுணமாயிற்று.

இதற்குக் குணம்............தாமதகுணம்,
இதற்குச் சத்தி..............திரோதாயிசத்தி,
இதற்கு ஸ்தானம்...........இருதயம்,
இதற்குப் போகம்...........ஆநந்தபோகம்,

இதற்கு அட்சரம்........மகாரம்,

மகாரமென்கிற அட்சரத்திலித்தனையும் நின்று வர்த்தித்தபடியினால் பரமாத்மா வென்கிற பேருண்டாயிற்று.

இதுவே காரணதேகத்தில் மூன்றுதேகமுஞ்சுழுப்தியவஸ்தையும்முகிந்தது.

முற்றும்.

துரியாவஸ்தை.

துரியம்.......................மகாகாரணதேகம்.

இந்த மூன்றவஸ்தையுமறிந்து தானொருவன் வேறேநின்றதே துரியம்,

இந்த மகாகாரண தேகத்துக்குப் பஞ்சபூத முண்டோவென்றாலுண்டு.

அதெப்படி யென்றால்,

பரமசிவனுக்குப் பஞ்சமுகமுண்டு. அந்த முகத்தில்பஞ்சபூத முற்பத்தி யாயிற்று.

அதற்கு விபரம்

சத்தியோசாதம்,
வாமதேவம்,
அகோரம்,
தற்புருடம்,
ஈசானம்,

ஆக ரு.

சத்தியோசாதத்தில்...............பிருதிவி உற்பத்தி,
வாமதேவத்தில்.................அப்பு உற்பத்தி,
அகோரத்தில்...................அக்கினி உற்பத்தி,
தற்புருடத்தில்..................வாயு உற்பத்தி,
ஈசானத்தில்....................ஆகாசம் உற்பத்தி,

பஞ்சபூதமுண்டானபோதே கருவிகரணங்க ளுண்டாயிருக்கும்,

இதுவே மகாகாரணதேகத்தில் தூலதேகமாயிற்று,

மகாகாரணதேகத்துக்கு சூட்சுமதேகமேதெனின்,

பஞ்சாட்சரியே பஞ்சபூதமாயிற்று,

அதெப்படியெனின்,

நகாரமே...................... பிருதிவி,
மகாரமே...................... அப்பு,
சிகாரமே...................... அக்கினி,
வகாரமே...................... வாயுவு,
யகாரமே...................... ஆகாசம்,

இந்த பஞ்சபூதம் யனுபோகத்திலைறியவேணும்.

அதெப்படியெனின்

மூலாதாரம்

சுவாதிஷ்டானம்

மணிபூரகம்

அனாகதம்

விசுத்தி

ஆக்கினை

இதில்

மூலாதாரத்தில்.........நகாரமும் பிருதிவும் உற்பத்தி.
சுவாதிஷ்டானத்தில்.......மகாரமும் அப்பும் உற்பத்தி.
மணிபூரகத்தில்.........சிகாரமும் அக்கினியும் உற்பத்தி.
அனாகதத்தில்.........வகாரமும் வாயுவும் உற்பத்தி.
விசுத்தியில்.........யகாரமும் ஆகாசமும் உற்பத்தி.

இதுவே பஞ்சபூதமாயிற்று.

ஆக்கினைசக்கரத்தில்

ஓங்காரரூபம்

நாதரூபம்

அறிவுரூபம்

இந்த பஞ்சாட்சரியாலே அறிந்தபஞ்சபூதம் மகாகாரண தேகத்தில் சூட்சும தேகமாயிற்று.

மகாகாரண தேகத்தில் காரணதேக மேதென்னில்

முன்சொன்ன ஆக்கினை சக்கரத்தில் ஓங்காரமென்கிற பிரணவத்தில் சூட்சும பஞ்சாட்சரியா யிருக்கும்.

அதெப்படி யென்றால்

அகார..........................ம்
உகார..........................ம்
மகார..........................ம்
ஓங்கார........................ம்
சுத்தப்பிரசாத................ம்

இந்த ஐந்தில் சிருட்டி பிறக்கிறதற்குக் காரணமாயிற்று

இதுவே மகாகாரண தேகத்தில் காரணதே மாயிற்று.

இப்படி

மகாகாரண தேகத்தில்......தூலதேகமும்,
மகாகாரண தேகத்தில்......சூட்சுமதேகமும்,
மகாகாரண தேகத்தில்......காரணதேகமும்,

இந்த மூன்று தேகமுங் கூடி ஒரு மகாகாரண தேகமாயிற்று,

இதற்கவஸ்தை.........துரியாவஸ்தை
இதற்கபிமானி..........பிறதேகன்.

பிறதேக னென்கிற பேரோதெனின்.

முன்சொன்ன சாக்கிரமுஞ் சொற்பனமுஞ் சுழுப்தியும் அதுகளுடைய குணமும் மூன்று தர்மமும் மூன்று லட்சணமும் அறிந்து இதுகளுக்குச் சாட்சியாய் இதுகளில் அகப்படாமல்தானொருவன் வேறே ஞானசொரூபமாய் சகலத்திலேயும் வியாபித்து நின்றபடியினாலே பிறதேக னென்கிற பேருண்டாயிற்று.

இதற்குக் குணம்......சுத்தசாத்வீககுணம்,
இதற்குச்சத்தி.........ஞானசத்தி.
இதற்குஸ்தானம்......லலாடஸ்தானம்.
இதற்குபோகம்......ஆநந்தபோகம்.

இதற்குஅட்சரம்......ஓங்காரம்.

ஆனந்தபோகத்தை தானறிந்து வேறேநின்றபடியினால் ஆநந்தபாசபோகமாயிற்று.

ஓங்காரமென்கிற அட்சரத்தினின்று யித்தனையும் வர்த்தித்தபடியால் நின்மலாத்மா வென்கிற பேருண்டாயிற்று.

இதுவே மகாகாரண தேகத்தில் மூன்றுதேகமுந் துரியாவஸ்தையும் முகிந்தது.

முற்றும்.

உ

துரியாதீதம்.

துரியாதீதத்துக் கவஸ்தையில்லை.

அதெப்படி யென்றால்.

சுத்தமான அறிவே பிரகாசமாக நின்றது. அதற்குநாமரூபமில்லை. அதுவே ஆத்மதெரிசனம். அவ்விடத்தில் குருநாதனுக்குச் சீடன் தெண்டம் பண்ணி என்னை நானறியாதபடியினால் எனக்குப்பசுவென்கிற பேருண்டாயிற்று. தேவரீர் கிருபையினாலே என்னை நா னறிந்தேனென்றான். அதுவே பசுநீங்கினவிடம்.

அவ்விடத்தில்

தொம்பத—லக்ஷணம்

முற்றும்.

அதுவேறே......நிற்க

அவ்விடத்தில்......................ஒருபாழாயிற்று.

அந்தப்பாழே சிவப்பாழ்.

தொம்பத...லக்ஷணம்

முற்றும்.

உ

தற்பதம்.

ஈஸ்வரன்..........................லக்ஷணம்

தற்பதத்துக்கு நாலுதேகமுண்டு.

அதில் தூலதேக மேதெனின்

அந்த

தூலதேகமேபிரமாண்ட......ம்

அந்த

பிரம்மாண்டமே

சிவனுக்கு

அஷ்ட தனுவாச்சுது

அதற்கு விபரம்.

பிருதி..................வி
அப்பு...................
தேயுவு..................
வாயுவு..................
ஆகாசம்..................
சந்திரன்..................
சூரியன்..................
துரியத்தில்நின்ற நின்மலாத்மா (க)

ஆக எட்டுங்கூடி சிவனுக்கு அஷ்டதனுவாயிற்று.

இதுவேதூலதேகமான விராட்டுதேகமாயிற்று.

இதற்கவஸ்தை..............	உற்பத்தியவஸ்தை.
இதற்கபிமானி	பிரம்மா.
இதற்ககங்காரம்	இராசதகங்காரம்.
இதற்குச்சத்தி	கிரியாசத்தி.
இதற்குஸ்தானம்	சூரியஸ்தானம்.
இதற்குப்போகம்	சர்வகர்தத்துருத்வமானபோகம்.
இதற்கட்சரம்	அகாரம்.

அகாரமென்கிற அட்சரத்தி லித்தனேயும் நின்று வர்த்தித்தபடியினு லே சர்வ பூதாத்துமாவென்கிற பேருண்டாயிற்று.

இதுவே தூலதேகமான விராட்டுதேகம் முகிந்தது.

முற்றும்.

இந்தப் பிரம்மாண்டம்பிறப்பதற்குக்காரணமான ஒரு இர ண்ணிய கெற்பமுண்டு.

அதேதெனின்

தேவதா சக்கரமே இரண்ணிய கெற்பமாயிற்று.

அதற்குச் சகலமான இந்திரியங்களும் அதிதேவதையா யிருக்கும்.

அதெப்படி யென்றால்,

அவர்	அந்தக்கரணமே	விஷ்ணுவாயிற்று,
அவர்	மனமே	சந்திரனாயிற்று,
அவர்	புத்தியே	பிரம்மாவாயிற்று,
அவர்	சித்தமே	நாராயணனாயிற்று,
அவர்	அகங்காரமே	ருத்திரனாயிற்று,

இவை ஐந்தும் ஆகாச பஞ்சகம்.

முக்கிய	ம்
வயிரவ	ம்
பிரபஞ்சன	ம்
அந்திரியா	மி
மகாப்பிராண	ன்

இவை ஐந்தும் வாயு பஞ்சகம்

திக்கே	சுரோத்திரமாயிற்று.
வாயுவே	தொக்காயிற்று,
சூரியனே	நேத்திரமாயிற்று,
வருணனே	சிங்குவையாயிற்று,
அசுவனி தேவதையே	ஆக்கிராணமாயிற்று,

இவை ஐந்தும் அக்கினிபஞ்சகம்

அதின்விடயமேதெனின்.

ஆகாசத்தி லிடியிடிக்கிறதே	சப்தமாயிற்று,
ஆகாசத்தில் சயித்தியமே	ஸ்பரிசமாயிற்று,
ஆகாசத்தில் பிரகாசமே	ரூபமாயிற்று,
ஆகாசத்தில் ரச்சுவே	வேர்வையாயிற்று,
அகாசத்தில் சர்வவாசனையே	கெந்தமாயிற்று,

இவை ஐந்தும் அப்புபஞ்சகம்.

அவரவர்வக்கே	அக்கினி தேவதை
அவரவர் பாணியே	இந்திரிய தேவதை
அவரவர் பாதமே	திருவிக்கிரம தேவதை
அவரவர் குய்யமே	பிரசாபதி தேவதை
அவரவர் பாயுருவே	நைருதி தேவதை

இவை ஐந்தும் பிருதிவு பஞ்சகம்.

ஆக உகு-குணங்கூடி சூட்சுமதேகமான இரண்ணிய கெற்பமாயிற்று.

இதற்கவஸ்தை	திதியவஸ்தை
இதற்கபிமானி	விஷ்ணு

இதற்ககங்காரம்	சாத்வீதாங்காரம்
இதற்குச்சத்தி	இச்சாசத்தி
இதற்குஸ்தானம்	சந்திரஸ்தானம்
இதற்குப்போகம்	சர்வகர்த்துருத்வமானபோகம்
இதற்கட்சரம்	உகாரம்

உகாரமென்கிற அட்சரத்தி லித்தனேயும் நின்று வர்த்தித்த படியி ஞல் சூத்திராத்மா வென்கிற பேருண்டாயிற்று.

இதுவே சூட்சுமதேகமான இரண்ணிய கெற்பம் முகிந்தது.

முற்றும்.

குருநாதன் சீடனைப்பார்த்து தொம்பதத்தில் சாக்கிராவஸ்தை யும் சொற்பன வஸ்தையும் அறிந்து சுழுப்தியவஸ்தையில் ஒன்று மறியா மல் மயங்கி யிருந்தாப்போல தற்பதத்தில் விராட்தேகமும் இரண்ணியகெ ற்பமும் அறிந்தாலும் அவ்வியாக்கிருதம் அறியப்போகாது அந்த அவ்வியாக் கிருதம் சுத்தமாயை யாகையினல் அறியப்போகாது.

அதெப்படியெனின்

அதுவே	திரோதாயிசத்தி
அதுவே	குணசோபினி
அதுவே	உற்பனவஸ்தை
அதுவே	ஆணவம்

அதுவே மூன்றுகுணத்தையுங் கெற்பமா யடக்கிக்கொண்டிருக்கும்.

அதேதெனின்

சாத்வீக ஆங்காரம்
இராசத.........ஆங்காரம்
தாமத...........ஆங்காரம்
(சாத்வீக.............ஆங்காரத்தில்.)

அந்தக்கரணபஞ்சகமும்
ஞானேந்திரியபஞ்சகமும்
சூரியாதித்தர்முதலான
தேவதைகளுமுற்பத்தியாயிற்று.

இராசத........................ஆங்காரத்தில்

கருமேந்திரிய பஞ்சகமும்

பிராணாதி பஞ்சகமும்

உற்பத்தியாயிற்று.

தாமத ஆங்காரத்தில்

சப்தாதி பஞ்சகமும்

பஞ்சபூதமும்

உற்பத்தியாயிற்று

இதுகளெல்லாம் வித்திலே மரம் அடங்கி யிருக்கிறாப்போல் அவ்வியாக்கிருதத்தி லடங்கி யிருக்கும் அதனால் விஸ்வக்கிராச மென்று வேத வசனஞ் சொல்லும்.

இதுவே காரணதேகமான அவ்வியாக்கிருத மாயிற்று.

இதற்கவஸ்தை	பிராணாவஸ்தை
இதற்கபிமானி	ருத்திரன்
இதற்ககங்காரம்	தாமதகங்காரம்
இதற்குச்சத்தி	திரோதாயிசத்தி
இதற்குஸ்தானம்	அக்கினிஸ்தானம்
இதற்குப்போகம்	சர்வசம்மாரபோகம்
இதற்கட்சரம்	மகாரம்.

இந்த மகாரமென்கிற அட்சரத்தி லித்தனையும் நின்று வர்த்தித்தபடியினால் சுத்த ஆத்மாவென்கிற பெயருண்டாயிற்று.

இதுவே காரணதேகமான அவ்வியாக்கிருதம் முகிந்தது.

முற்றும்.

இந்த மூன்றுதேகத்துக்கு மூலமேதென்னில்

நாதரூபமான மூலப்பிரகிருதியின் மூலமாயிற்று.

இதுவே மகாகாரணமான மூலப்பிரகிருதியாயிற்று.

இதற்கவஸ்தை	சர்வசாட்சியவஸ்தை
இதற்கபிமானி	ஈஸ்வரன்
இதற்குக்குணம்	சுத்தசாத்வீகருணம்
இதற்குச்சத்தி	ஞானசத்தி
இதற்குஸ்தானம்	பிரம்மாண்டத்துக்குமதீதஸ்தானம்
இதற்குப்போகம்	ஷாட்குணைசுவரியசம்பன்னத்துவமானபோகம்
இதற்கட்சரம்	ஓங்காரம்

ஓங்கார மென்கிற அட்சரத்தி லித்தனேயும் நின்றுவர்த்தித்தபடியினுல்

மகாத்மா வென்கிற பெயருண்டாயிற்று.

இதுவே மகாகாரண தேகமான மூலப்பிரகிருதி முகிந்தது.

முற்றும்.

மூலாதீதத்துக் கவஸ்தையில்லை.

அதெப்படி யென்றுல்

சுத்தமான அறிவே பிரகாசமாக நின்றது அதற்கு நாமரூபமில்லை,

அதுவே பரைதெரிசனம்

அவடத்தில் குருநாதனுக்குச் சீடன் தெண்டஞ்செய்து பிண்டாண்டமும் பிரம்மாண்டமும் சகலமுந் தேவரீர் கிருபையினுலே அறிந்தேனென்றுன்.

இதுவே பாசம் நீங்கின இடம்.

அவடத்தில்

தற்பதலக்ஷணம் முற்றும்.

அதுவேநேநிற்க

அவடத்தில் ஒருபாழாயிற்று.

அந்தப்பாழே பரப்பாழ்.

திருச்சிற்றம்பலம்.

௳

அசிபதம்.

பிரம்மத்தின்.........லக்ஷணம்.

அதெப்படியெனின்

தொம்பதத்தில்	நாலுதேகமும்	அந்த	அறிவும்
தற்பதத்தில்	நாலுதேகமும்	அந்த	அறிவும்

ஒன்றே

அந்த அறிவே அசிபதம்.

அந்த அசிபதமே அது நீயாக நின்றுயென்றும் நீயே அதுவாக

நின்ருயென்றும் சொன்னவாக்கியம் அகண்டவாக்கியமென்று குருநாதன் சீடனுக்குச் சொன்னார்.

அவடத்தில் குருநாதனுக்கு சீடன் தெண்டம்பண்ணி தேவரீர் கிருபையால் தொம்பதமும் தற்பதமும் அசிபதமும் இந்த மூன்று பதமும் வெவ்வேறே காண்பித்தீர்கள். இப்போதிந்தமூன்றுபதமும் நன்ருகக் கூட்டி அகண்டமா யிருந்ததென்று திருவுளம்பற்றினீர்கள் அதெப்படி அகண்டமா யிருந்துதென்று குருநாதனை சீடன்கேட்டான்.

அதற்கு குருநாதன் சொல்லுகிருர்.

பிண்டமும் பிரம்மாண்டமும் அறிந்து அதிலுள்ளும் புறம்பும் வியாபகமாய் ஏகமாய் நின்றவன் நீ ஒருவன்.

அதெப்படி யெனின்.

பிண்டமே தொம்பதம்
பிரம்மாண்டமே தற்பதம்

இந்த விரண்டிலும் பரிபூரணமாக நின்ற அறிவே அசிபதம்.

இந்த பிண்டமும் பிரம்மாண்டமும் அயிக்கியம் ஒன்றென்கிறது சாட்சி சொல்லுகிருர்.

அதேதென்னில்

தொம்பதத்தில் தூலதேகத்துக்கும்
தற்பதத்தில் விராட்டுதேகத்துக்கும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் தூலதேகத்துக்குச் சாக்கிராவஸ்தையும்
தற்பதத்தில் விராட்டுதேகத்துக் குற்பத்தியவஸ்தையும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் தூலதேகத்துக் கபிமானி விசுவன்
தற்பதத்தில் விராட்டுதேகத்துக்கபிமானி பிரம்மாவும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் தூலதேகத்துக்கு இராசதகுணமும்
தற்பதத்தில் விராட்டுதேகத்துக்கு இராசதகங்காரமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் தூலதேகத்துக்குக் கிரியாசத்தியும்
தற்பதத்தில் விராட்டுதேகத்துக்குக் கிரியாசத்தியும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் தூலதேகத்துக்கு நேத்திர ஸ்தானமும்
தற்பதத்தில் விராட்டுதேகத்துக்கு சூரியஸ்தானமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் தூலதேகத்துக்கு யுக்தபோகமும்
தற்பதத்தில் விராட்டுதேகத்துக்கு சர்வகர்த்துருத்வமான
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று. (போகமும்

தொம்பதத்தில் தூலதேகத்துக் கட்சரம் அகாரம்
தற்பதத்தில் விராட்டுதேகத்துக் கட்சரம் அகாரமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் தூலதேகத்துக்கு சீவாத்மாவும்
தற்பதத்தில் விராட்டுதேகத்துக்கு சர்வபூதாத்மாவும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

அதுவுஞ் சடமாயிற்று
இதுவுஞ் சடமாயிற்று.

இந்த யிரண்டுக்குஞ் சுபாவத்தில்............ஏகமாய்நின்றது
இதற்குச் சாட்சியாக நின்றவன் நீ யொருவன்.

தொம்பதத்தில் சூட்சுமதேகத்துக்கு பரிசுத்த போகமும்
தற்பதத்தில் இரண்ணிய கெற்பத்துக்கு சர்வகர்த்துருத்வமான
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று. (போகம்

தொம்பதத்தில் சூட்சுமதேகத்துக்கட்சரம் உகாரமும்
தற்பதத்ததில் இரண்ணியகெற்பத்துக் கட்சரம் உகாரமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் சூட்சுமதேகத்துக்கு அந்தராத்மாவும்
தற்பதத்தில் இரண்ணியகெற்பத்துக்கு சூத்திராத்மாவும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

அதுவுஞ் சடமாயிற்று
இதுவுஞ் சடமாயிற்று,

இந்த விரண்டுக்குஞ் சுபாவத்தில்.........ஏகமாய் நின்றது
இதற்கு சாட்சியாக நின்றவன்............நீ யொருவன்,

தொம்பதத்தில் காரணதேகத்துக்கும்
தற்பதத்தில் அவ்வியாக்கிருதத்துக்கும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று,

தொம்பதத்தில் காரணதேகத்துக்குச் சுழுப்தியவஸ்தையும்
தற்பதத்தில் அவ்வியாக்கிருதத்துக்குப் பிரளயா வஸ்தையும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பத்தில் காரணதேகத்துக்கபிமானி பிருக்கியனும்
தற்பதத்தில் அவ்வியாக்கிருதத்துக்கபிமானி ருத்திரனும்
இரணடுக்கும் ஐக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் காரணதேகத்துக்குத் தாமதகுணமும்
தற்பதத்தில் அவ்வியாக்கிருதத்துக்குத் தாமதகங்காரமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று,

தொம்பதத்தில் காரணதேகத்துக்குத் திரோதாயிசத்தியும்
தற்பதத்தில் அவ்வியாக்கிருதத்துக்குத் திரோதாயிசத்தியும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று,

தொம்பதத்தில் காரணதேகத்துக் கிருதைய ஸ்தானமும்
தற்பதத்தில் அவ்வியாக்கிருதத்துக்கு அக்கினிஸ்தானமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் காரணதேகத்துக்கு ஆநந்தபோகமும்
தற்பதக்தில் அவ்வியாக்கிருதத்துக்கு சர்வசம்மாரபோகமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் காரணதேகத்துக் கட்சரம் மகாரமும்
தற்பதத்தில் அவ்வியாக்கிருதத்துக் கட்சரம் மகாரமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் காரணதேகத்துக்குப் பரமாத்மாவும்
தற்பதத்தில் அவ்வியாக்கிருதத்துக்கு சுத்தாத்மாவும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

அதுவுஞ் சடமாயிற்று
இதுவுஞ் சடமாயிற்று.

இந்த விரண்டுக்குஞ் சுபாவத்தில்.........ஏகமாய்நின்றது
இதற்குச் சாட்சியாக நின்றவன்.........நீ ஒருவன்.

தொம்பதத்தில் மகாகாரண தேகத்துக்கும்
தற்பதத்தில் மூலப்பிரகிருதிக்கும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று,

தொம்பதத்தில்மகாகாரணதேகத்துக்குத்துரியாவஸ்தையும்
தற்பதத்தில் மூலப்பிரகிருதிக்குச் சர்வசாட்சிய வஸ்தையும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் மகாகாரண தேகத்துக் கபிமானி பிரதேசனும்
தற்பதத்தில் மூலப்பிரகிருதிக்கு யபிமானி ஈஸ்வரனும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் மகாகாரண தேகத்துக்குச் சுத்தசாத்வீகுணமும்
தற்பதத்தில் மூலப்பிரகிருதிக்கு சுத்தசாத்வீதகுணமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் மகாகாரணதேகத்துக்கு ஞானசத்தியும்
தற்பதத்தில் மூலப்பிரகிருதிக்கு ஞானசத்தியும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் மகாகாரணதேகத்துக்கு லலாடஸ்தானமும்
தற்பதத்தில் மூலப்பிரகிருதிக்கும் பிரமாண்டத்துக்கும் யதீதஸ்தானமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் மகாகாரண தேகத்துக்கு ஆநந்த போகமும்
தற்பதத்தில் மூலப்பிரகிருதிக்கு ஷாட்குணைச்சரிய சம்பன்னத்துவமானபோ (கமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் மகாகாரண தேகத்துக் கட்சரம் ஓங்காரமும்
தற்பதத்தில் மூலப்பிரகிருதிக் கட்சரம் ஓங்காரமும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

தொம்பதத்தில் மகாகாரணதேகத்துக்கு நிர்மலாத்மாவும்
தற்பதத்தில் மூலப்பிரகிருதிக்கு மகாத்மாவும்
இரண்டுக்கும் அயிக்கியம் ஒன்று.

அதுவுஞ் சடமாயிற்று
இதுவுஞ் சடமாயிற்று

இந்த விரண்டுக்குஞ்சுவாபத்தில் ஏகமாய் நின்றது
இதற்குச் சாட்சியாக நின்றவன் நீஒருவன்
தொம்பதத்தில் துரியாதீதத்துக்கும்
தற்பதத்தில் மூலாதீதத்துக்கும்
அயிக்கியம் ஒன்று.

இப்பிரகாரம்

பிண்டமே பிரம்மாண்டமாயிற்று
பிரம்மாண்டமே பிண்டமாயிற்று.

அதெப்படி யென்றால்,

காரியமே	காரணமாம்
காரணமே	காரியமாம்.

இந்த விரண்டுக்கும் பேதமில்லை.

இதை பேதமாய்க் கண்டதே உபாதிகளாயிற்று.

{ இதுவே பசுவென்றும் பாசமென்றும் பேருண்டாய்
அதனால் தன் சொரூபம் மறைந்தது }

இந்தமறப்பே.

மூலமலமென்றும்
கேவலமலமென்றும்
குடிலைமலமென்றும்
ஆணவமலமென்றும்

இந்தநாலு முதலாக ஒருமலத்துக்கே அனேகம் பேருண்டாயிற்று,

இந்தமலம் நீ நன்று அறிந்தாய்.

அதெப்படியென்றால்,

தரையாதி குடிலையந்தமான முப்பத்தாறுதத்துவமு மழிந்துப்போகு மென்றறிந்தாய் மேல்நின்றது.

அதுவே	அசிபதம்
அதுவே	பதிதெரிசனம்

அதுவே சத்தாமாத்திரமான பொருள்.

அதுவே அவாங்மனோ தீதமானபொருள். அதுவே நித்திய சுத்தமுத்த சத்திய பரிபூரணம். அதுவே நீயாக நின்றுயென்றும் நீயே அதுவாக நின்று யென்றும் சொன்னவாக்கியம். அதுவே ஏகமான ரகசியம். அதுவே தத்தொம சிவாக்கியம்.

மூன்றும் ஒன்றானது.
அதுவே ரகசியம்.

அதேதென்னில்

பிண்டமும் பிரம்மாண்டமுந் தேகமானபடியினாலே அதுவே சத்தியமாய் இந்தவிரண்டிலும் பரிபூரணமா நின்ற அசிபதமே சிவமாம்.

இந்தவிரண்டும் ஒன்றானபடியினாலே அதுவே ரகசியம்.

அவடத்தில் அசிபதலக்ஷணம்.

முற்றும்.

அதுவேறே நிற்க
அவடத்தில் ஒருபாழாயிற்று
அந்தப்பாழே சிவப்பாழ்
அதீதபதி தெரிசனஞ் சொல்லுகிறேன்

அதேதென்னில்.

அதை நன்றாய் சாவதானமாய்க்கேள் அதற்குச்செலவில்லை. முன்சொன்னத்துக்கெல்லாம் ஒருசெலவுண்டு அந்தச்செலவே பஞ்சப்பிரளய மாயிற்று.

அதெப்படியென்றால்

பிண்டத்துக்கிரண்டு பிரளயமுண்டு
பிரம்மாண்டத்துக்கு மிரண்டுபிரளயமுண்டு.

அதேதெனின்.

குருநாதன் முன்சீடனுக்குச் சொன்ன நாலுபிரளயத்தையும் மும்மலத்தையும் சகலமானதையும் பிரளயம்பண்ணி தற்சொரூபமான வஸ்துவைக் காட்டிக்கொடுக்கிறதே அத்தியாற்றுமமான பிரளயம். ஆக பிரளயம் ரு.

இதற்குவிபரம்.

பிண்டத்துக்கு நித்திய சுழுத்தியிலே மக்கினமாகிறதே ஒரு பிரளயம்
அந்தப்பிண்டம் விழுந்து போகிறதே ஒரு பிரளயம்.

ஆக பிரளயம் - இரண்டு.

பிரம்மாண்டத்துக்கு பிரம்மா நித்திய சுழுத்தியிலே மக்கினமாகிறதே ஒருபிரளயம்
அந்த பிரம்மா விழுந்து போகிறதே ஒருபிரளயம்.

ஆக பிரளயம் ச.

அத்தியாற்றுமமான பிரளயமேதென்னில்.

பிருதிவு	அப்பிலொடுங்கும்
அப்பு	அக்கினியிலொடுங்கும்
அக்கினி	வாயுவிலொடுங்கும்
வாயுவு	ஆகாசத்திலொடுங்கும்.

ஆகாசம் விராட்டிலொடுங்கும்.

விராட்டு மகதாங்காரமென்கிற இரண்ணிய கெற்பத்தி லொடுங்கும் மகதாங்காரமென்கிற இரண்ணியகெற்பம் மகதத்துவமென்கிற அவ்வியாக்கிருதத்தி லொடுங்கும்

அவ்வியாக்கிருதம்	மூலப்பிறகிருதியி	லொடுங்கும்
மூலப்பிரகிருதி	விந்துவி	லொடுங்கும்
விந்து	பரநாதத்தி	லொடுங்கும்
பரநாதம்	சிற்சத்தியி	லொடுங்கும்
சிற்சத்தி	சுத்தப்பிரகாசத்தி	லொடுங்கும்
சுத்தப்பிரகாசம்	ஆவியி	லொடுங்கும்
ஆவி	ஆநந்தோபிரம்மத்தி	லொடுங்கும்

இப்படியாக குருநாதன் சீடனுக்கு அனுக்கிரகஞ்செய்தார்.

பிண்டமும் பிரம்மாண்டமும் சகலமும் நஷ்டம் பண்ணி தற்சொருபமான வஸ்துவைக்காட்டிக் கொடுக்கிறதே அத்தியாற்றுமமான பிரளயம். ஆக ஐந்தும் முகிந்தது.

இந்தப்பஞ்சப் பிரளயத்துக்கு மிஞ்சினதே

அதீதபதி தெரிசனம்.
அதுவே வெறும்பாழ்.
அதற்குமேல் பாழில்லை.
அதுவே வஸ்து இரண்டும் ஒன்று.

தத்தொம சிவாக்கியம்.

குருசம்பிரதாயம்

முற்றும்.

இன்னும் பரமசிரேஷ்டரான ஆசாரியபுருஷரான அடியார்கள் மேற் சொல்லிய பிரம்மானுபூதியின் விளக்கத்தை அடியேனுக்குச் சுவானுபூதியாக விளக்குவார்களென்று பயபக்தியுடன் அஷ்டாங்க பஞ்சாங்க திரியாங்க துவ யாங்க ஏகாங்கத்துடன் அஞ்சலியஸ்தனாய் கேட்டுக்கொள்ளும் அடியேனுக் கு கடவுளின் அற்புதங்களையும் அடியார்கள் திருவாய்மலர்ந்தருளிய கிரந்த ங்களைப்பார்க்க வாசிக்க பக்திசக்தியில்லாத அஞ்ஞான நிரக்ஷரகுக்ஷியாய் வேதனப்பாடல்களைச்செய்யத் தெரியாமலும் எழுத்துச் சொற்பொருளியாப் பலங்காரமாகிய பஞ்சலக்ஷணங்களி லொன்றேனு மறியாதவனுதலாலடியே னிப்பாட்டெழுதி அதற்குரையிட்டதற்கு எவ்வித குற்றமிருந்தபோதினும் அங்கீகரிக்கவேண்டியது.

இதற்குதாரணம்.

குமாரதேவர் சாஸ்திரக்கோவையுள்,

பிரம்மானுபூதிவிளக்கம்.

வடிவினைநோக்காதுளத்தின் வண்மையைத்தேருதலினெனந்தன்,
கொடியவுரைபாராது கொள்ளுவர்மேலோரருத்தம்.

அன்றியும்,

அறிவறியாக்குழந்தை தனதன்னைமுன்னேகுழறுதலின்
பிறிவறியாதவர்முன்னே பேசுகேனனுபூதி.

அன்றியும்,

குழந்தைகுழறும்மொழிக்குக் கொண்டாடுமன்னைபோல
விழந்தவுயர்ஞானிகளு மென்னுரைகேட்டுண்மகிழ்வர்.

என்று மிருப்பதால் எவ்விதகுற்ற மிருந்தபோதினும் ஆப்தாளங்கீகரி த்து மேற்சொல்லிய அடியார்கள் ஞானவாசிஷ்டமுதலாகிய சுவானுபூதியின் பாடல்களுக்கு உண்மையான லட்சணத்தைப் போதிப்பார்களென் றிரங்கிக் கேட்டுக்கொள்ளுமோ ரெளியவடியான்.

ஸ்ரீகயிலாசபதிமடம்

அகிலாண்டஸ்வரூபாநந்தரால்

இயற்றியது.

தியாகசபக்கவத்பாதர்சுவாமிகள் கிருபையுண்டாகவும்.

முற்றிற்று.